
www.tamilarangam.net



# டானியலின் குறுநாவல்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# டானியலின் குறுநாவல்கள்

[முருங்கையிலைக் கஞ்சி, மையக்குறி, இருளின் கதிர்கள் ஆகிய மூன்று குறு நாவல்கள் அடங்கி உள்ளன.]

கே. டானியல்

விடியல் பதிப்பகம்
கோவை — 641 015

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூலைப் பற்றி


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | டானியலின் குறுநாவல்கள் |
| முதல் பதிப்பு | : | மே, 1994. |
| ஆசிரியர் | : | கே. டானியல் |
| விலை | : | ரூ. 35-00 |
| அட்டை முகப்பு | : | புகழேந்தி |
| வெளியீடு | : | விடியல் பதிப்பகம்<br>3, மாரியம்மன் கோவில் வீதி<br>உப்பிலிபாளையம்<br>கோவை — 641 015 |
| அச்சிட்டோர் | : | அலைகள் அச்சகம்<br>36, தெற்குச் சிவன்கோயில் தெரு,<br>கோடம்பாக்கம்,<br>சென்னை-600 024. |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

NORWAY SIGNATURE BOOKS

# பதிப்புரை

ஈழத்தமிழ் எழுத்தாளர் கே. டானியலின் மூன்று குறுநாவல்கள் அடங்கிய தொகுப்பாக இந்நூல் உருவாகியுள்ளது.

அவரது எல்லாக் கதைகளையும் போலவே இந்தக் கதைகளிலும் சாதி மறுப்பு, ஆதிக்க எதிர்ப்பு, மனித நேயம் ஆகியப் பண்புக் கூறுகள் இறுக்கமாகப் பின்னப்பட்டுள்ளன. கதைக்குள் கதையாக அவர் சொல்லும் பல செய்திகள் பழந்தமிழ் ஈழமக்களின் படிக்க வழக்கங்கள், பண்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றன.

இக்கதைகளை படிக்க நேரும் தமிழக வாசகர்கள், இலங்கைத் தமிழரின் சமூகஅமைப்பு, தொழில், அரசியல், இன மோதல் என அனைத்துச் செய்திகளையும் அறியலாம்.

டானியலின் அனைத்து எழுத்துகளையும் வெளிக் கொணர நாங்கள் முடிவெடுத்துள்ளபடி இந்நூலையும் வாசகர் முன் வைக்கிறோம்.

— பதிப்பகத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின்கதவு வழியாகவேனும் மூத்தவளை கந்தரோடைப் பாடசாலைக்குத் தள்ளிவிட ஆறுமுகத்தார் பட்டபாடு! நல்லவேளையாக அப்போது போடிங் மாஸ்ரராக இருந்த தாடிக்காரக் கந்தசாமி மாஸ்ரரை இவரின் சிநேகிதன் ஒருவன் கூட்டிச் சென்று அறிமுகப் படுத்தி விட்டமையால், ஒருமாதிரி அவனை உள்ளே தள்ளியும் விட்டார்.

இணுவில் நாலாம் கட்டையடியில் இருந்து கந்த ரோடைப் பாடசாலைக்குச் சுமார் ஐந்து மைல் வரை போக வேண்டும். பஸ் எடுப்பதானால் சுன்னாகம் வரை ஒன்றும் அப்பால் ஒன்றுமாக இரண்டு பஸ்களைப் பிடிக்க வேண்டும். சுன்னாகம் பஸ் கிடைப்பது எளிதாகினும் கந்தரோடை பஸ் கிடைப்பது கடினம். சந்தை முறை நாட்களில் என்றால் கிடைத்துவிடும். ஆனாலும் மகனை பஸ்ஸில் விடுவதற்கு வள்ளிப்பிள்ளை மறுத்தாள்.

"இவ ஒரு கண்டறியாத பிள்ளையைப் பெத்துப் போட்டுப் படுகிற பாடு!"—என்று சொல்வது இவருக்கும் விருப்பமில்லாத ஒன்றாகவே இருந்தது.

இறைப்புக் காலம் என்றால் விடிவெள்ளி காலிப்பதற் கிடையில் தண்ணீர்ப் பம்பை உருட்டிக்கொண்டு தோட் டத்திற்குப் போய், பல பலவென்று விடிவதற்கிடையில் ஒரு பக்கத்து இரண்டாயிரம் கண்டும் பாய்ச்சி முடித்து அவசர அவசரமாக அவர் ஓடிவந்து செம்பாடு படிந்த 'கேக்கிளிஸ்' சைக்கிளை உருட்டவும் மகன் புத்தகங் களுடன் வந்து பின் கரியரில் ஏறவும் நேரம் சரியாக இருக்கும்.

கொத்துக் காலம், குழை தாழ்ப்புக் காலம், பாத்தி கட்டுக் காலம், கண்டு நடுவைக் காலம், சீவல் எடுக்கும் காலம், புகை போடும் காலம், பாடம் போடும் காலம் இப்படியான அந்த நாலாயிரம் கண்டு புகையிலைச் செய்கைக்கு ஏற்றபடி நேரத்தைச் சமன் செய்துகொண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூத்தவனின் பதினைந்தாவது வயது வரை சைக்கிளில் ஏற்றி இறக்கியே கொண்டு திரிந்தார்.

ஆறுமுகத்தாரின் செம்பாட்டுப் புழுதிச் சைக்கிள் இணுவில் ஆஸ்பத்திரியைத் தாண்டுமென்றால் அது சரியாக எட்டேகாலாகவும் சுன்னாகம், சந்தைச் சந்தியில் திரும்புமேயானால் எட்டரையாகவும், பாடசாலை வாயிலில் அவர் பெடல் கட்டைக்கு மேலான சைக்கிளின் நடு அச்சில் காலை வைத்துச் சீற்றைவிட்டு சற்று மேலெழுந்து நிலத்தில் குதிக்கும் போது மணி எட்டு நாற்பதாகவும் தான் இருக்கும். கீழே இறங்கிய பின்தான் மகன் கீழே இறங்க வேண்டுமென்பது அவரின் கண்டிப் பான கட்டளை. இந்தக் கட்டளையை வீசமும் பிசக விடாமல் அவனும் நடந்து கொள்வான்.

பின்னேரம் ''டாங் டாங்'' என மணியடிக்கும்போது ஆறுமுகத்தார் மகனை ஏற்ற திரும்பி வந்து சைக்கிளில் குதிப்பார். அன்றெல்லாம் ஆறுமுகத்தாரின் அன்றாட நேர சூசி அப்படி. இடையிடை வீட்டுத் தேவைகள் சந்தை கண்ணி என்பதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப்படு வதில்லை. எல்லாவற்றிற்கும்தான் வள்ளிப்பிள்ளை இருக்கிறாளே!

இவருக்கு 'அகிளான்' ஆறுமுகம் என்று பட்டப்பெயர் வந்தது ஒரு பெரும் கதையல்ல. ஆனால் அந்தப் பட்டம் பெரிதாகி அவருடன் தொற்றிக் கொண்டு விட்டது.

தாவடிப் புகையிலை என்றால்தான் ஊர் உலகத்துக் குத்தெரியும். அந்தத் தாவடிப் புகையிலைச் செய்கைக் காரருக்கு இணையாகப் புகையிலைச் செய்கையில் இணு விலுக்குள்ளும் ஒருவர் இருக்கிறாரென்றால் அது அகிளான் ஆறுமுகத்தார்தான்.

வருடம் முழுவதும் புகையிலையும் அதோடு ஒட்டிய வேலைகளும்தான். இவருடைய புகையிலையைக் கட்டு வதற்குகென்று காலியிலிருந்து இரண்டு வேலணை

www.tamilarangam.net



வியாபாரிகள் போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள். ஏனெனில் இவர் பாணிப் புகையிலைக் கென்று போடும் பாணியில் அவ்வளவு மகிமை.

"மாத்தையா, ஆறுமுகத்தாரின்றை போயிலை குடுங்கோ" என்று சிங்களப் பாவனையாளர்கள் அந்த வியாபாரிகளை நச்சரிப்பர். அவர்கள் சொன்னதுதான் விலை. ஆனால் ஆறுமுகத்தாரும் இங்கு சொன்னதுதான் விலை.

புகையிலை விற்பனையைப் பற்றி ஆறுமுகத்தார் என்றுமே கவலைப்படுவதில்லை. ஆனால் புகையிலை நடாத ஓய்வு காலத்தில் தோட்டக் காணிக்குள் ஊன்றப்படுகின்ற சிறுதாவர மரக்கறி வகைகளைக், குறிப்பாக இராசவள்ளிக் கிழங்குகளைத் தின்று தீர்க்கும் அகிளான் எலிகளைப்பற்றியதுதான் இவர் கவலையெல்லாம்.

தோட்டத்தில் எங்கேயாவது ஓரிடத்தில் அகிளான் புற்று வாயில் அரிமண்ணுடன் கிடந்து விட்டால் ஒரு கண்டிலும் நோப்படாமல் அந்தப் புற்றுப்போகும் வழிகளை கிளைகிளையாக வகிர்ந்து வகிர்ந்து அகிளான் வெடிப்புற்றுக்கால் வெளியே எங்கு சென்றாலும் அதைக் கொன்று விட்டுத்தான் அவர் மறுவேலை பார்ப்பார். இது தான் ஆறுமுகத்தாருக்கு "அகிளான் ஆறுமுகம்" என்று பெயர் வந்த சிறுகதையாகும்.

மூத்தவனுக்கு பதினைந்தாவது வயது வந்தபோது பாடசாலை ஓய்வு நாட்களில் நந்தாவில் தரவைக் காணிக்குள் தன் சைக்கிளிலேயே அவனை ஏற்றிக் கைத்தாங்கலாகப் பிடித்து, சுற்றிச் சுற்றி நடந்து ஓடி, களைத்து மறுபடியும் நடந்து நடந்து பெருமுயற்சி எடுத்து அவனை சைக்கிள் ஓடப் பழக்கி விட்டார்.

வள்ளிப்பிள்ளை தனது சம்பாத்தியத்தில் அவனுக்கு இருபது இஞ்சிச் சைக்கிள் ஒன்றைப் பட்டணத்து நயினாக் கண்டன் கடையில் ஆறுமுகத்தாரையும் அழைத்துச்

www.tamilarangam.net



சென்று தன் கையாலேயே எழுபது ரூபா எண்ணிக் கொடுத்து, புத்தம் புதிதாக எடுத்து அப்போதுதான் பட்டணத்துக்கு வந்திருந்த செல்லர் 'ரக்சி'யில் வீடுவரை கொண்டுவந்து சேர்த்துவிட்டாள்.

அன்றிரவு பாடசாலைப் பாடத்தை நிறுத்திவிட்டு ஆறுமுகத்தார் சைக்கிள் ஓடும்போது கவனிக்க வேண்டிய வீதி ஒழுங்கு முறைகளை மகனுக்குப் படிப்பித்து முடிக்கவே நேரம் ஒன்று பாதிக்கு மேலாகிவிட்டது.

விடிந்ததும் தாய், சகோதரர்கள் அயலவர்கள் மூக்கில் விரலை வைத்துப் பார்க்க ஆறுமுகத்தார் சைக்கிளில் தொற்றி ஏறி வழிகாட்ட மூத்தவன் தனது சைக்கிளில் தகப்பன் போலல்லாமல் போல் கட்டையில் கால்வைத்துத் தொற்றி, பிரிவில் சத்தம் கிண் கிணிபோட ஸ்ரைலாக அரைக் களிசான் காலை பின்பக்கமாக அகல விரித்து ஏறிக் கொண்டான். பின்னங்கரியலில் இருந்த ஸ்பிறிங் கிளிப்புக் குள் புத்தகத்தைக் கெளவக் கொடுத்திருந்தான்.

பாடசாலைவரையில் மகனைக் கொண்டு வந்து விட்டு விட்டுத்தான் ஆறுமுகத்தார் திரும்பினார். பின்னேரம் மறுபடியும் அவனை அழைத்துவர சென்றார். மகன் செவ்வையாக நிதானப்பட்டு விட்டான் என்பதைத் தெரிந்து கொள்ள பத்து நாட்கள் ஆகிவிட்டன. அதற்குப் பின் அந்த நேரத்தை ஆறுமுகத்தார் வேறுவேலைகளில் செலவழித்தார். எனினும் மாலை அவன் வந்து சேரும் வரை அவரின் நெஞ்சு அடித்துக் கொண்டே இருக்கும். அவருக்கு மட்டுமல்ல வள்ளிப்பிள்ளைக்கும் அப்படித்தான். மற்றப்பிள்ளைகள் விவரம் தெரியாததுகள். கடைசிப் பெடியன் அப்போது பிறக்கவில்லை. □

www.tamilarangam.net



## 2

மூத்தவன் பாடசாலையில் சிறப்பான மாணவன் என்று சொல்லி விடமுடியாது. அது ஆறுமுகத்தாருக்குத் தெரியும். கந்தசாமி வாத்தியாரைப் பிடித்து அவனைப் பாடசாலைக்குள் தள்ளிவிட அவர் பட்டபாடு மறக்கக் கூடியதல்ல. அதனால் எப்படியும் அவனைக் கெட்டிக் காரன் ஆக்கி விடுவதாக அவர் மனது சபதம் ஏற்றிருக்க வேண்டும். அவன் முக்கித்தக்கி எட்டாம் வகுப்பை எட்டிப் பிடித்துவிட்டபோது, அவனுக்கு ஆங்கிலப் பாடமும் கணக்குப் பாடமும் சொல்லித்தர உள்ளூரில் இருந்த பென்சன்காரர் இராமசாமி வாத்தியாரை ஏற்பாடு செய்து விட்டார்.

மூத்தவனை முதன் முதலாக இராமசாமி வாத்தியாரிடம் பாடம் படிக்கக் கூட்டிச் சென்றது, நன்றாக ஆறுமுகத்தாரின் மனதில் நிற்கிறது.

அன்று தைப்பூசம். மாரி மழை பின்கூற்றாக அடைத்துக்கொண்டிருந்த வேளை. ஆறுமுகத்தார் கொழுந்து வெற்றிலைக்குள் ஒரு பத்து ரூபா நோட்டை மடித்து குருதட்சணையாக இராமசாமி வாத்தியாரின் கைக்குள் பவ்வியமாக வைத்தபோதுதான் ஆறுமுகத்தாருக்கு மன நிறைவு ஏற்பட்டது.

சொல்லி வைத்தாற்போல் முப்பதாவது நாள் மூத்தவனிடம் ஒரு பத்துரூபாவைக் கொடுத்தனுப்பினார். அந்தப் பத்துரூபாவை இராமசாமி வாத்தியார் வாங்க மறுத்துத் திருப்பி அனுப்பியதும், அவர் நினைவுக்கு இன்று போல் தான் இருக்கிறது. அடுத்தநாள் மருதனாமடச் சந்தியடியில் வாத்தியார் ஆறுமுகத்தாரைக் கேட்டாரே...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''என்ன ஆறுமுகத்தார் உங்கினேக்கை இந்த நானைய கஞ்சல் சட்டம்பிமாரைப்போல என்னையும் நினைச்சுப் போட்டீர் போல கிடக்கு? காசுக்காக சரசுவதியை விக்கி றவனெண்டே என்னை நினைச்சுப்போட்டீர்?'' என்ற இரண்டு கேள்விகளை. இன்றும் அந்தக் குரல் அவரின் காதுகளுக்குள் கேட்கின்றது.

இராமசாமி வாத்தியாரிடம் படித்ததில் மூத்தவன் சற்று முன்னேறி வருவதை ஆறுமுகத்தார் அவதானிக்கத் தவறவில்லை. வீட்டில் அவன் ஆங்கிலப் புத்தகங்களைக் கரைத்துக் கரைத்துக் குடிப்பதைக் கண்டார்.

மூத்தவன் எட்டாவதில் சோதனை எழுதுவதற்காக முழுசாகப் படித்துக்கொண்டிருந்த காலம். மார்கழி முதல் வாரத்தில் சோதனை தொடங்க இருந்தது. அப்பொழுது தான் ஆறுமுகத்தாருக்குக் கண்டு நடுகைக்காலம்.

உயிலங்குழை உருவி வந்து தூவிப்போடப்பட்ட நாற்றுகள். இரண்டு, மூன்று இலைகளாகிக் கூட்டான வாழ்க்கையை விட்டுப் பிரிந்து தனிக்குடித்தனம் செய்யத் துடிப்பதைப் போல ஆறுமுகத்தாரை ஏக்கத்துடன் பார்த்தன.

அந்த நாலாயிரம் கண்டுத் தரையையும் இரண்டு பொழிவரைத் தாளக்கொத்தி, நடுவைக் கொத்திக் கொத்தி, பலுவடித்து. சாறி முடித்துவிட்ட கையோடு கயிறு பிடித்து கண்டு நடும்வேலை என்பது லேசுப்பட்ட தல்ல. அத்துடன் கண்டுநடுகை முடிந்து, அதை மூடி மறைப்பு நடுவதற்கு கொய்யா, கிஞ்ஞாஓதி ஆகிய குழைக் கொப்புகளை முறித்து நடும் வேலையை வள்ளிப்பிள்ளை பொறுப்பேற்காதிருந்தால் அது ஆறுமுகத்தாரை வாட்டி வதைத்திருக்கும். அத்துடன் ஆறுமுகத்தார் வாய்க்கால் தண்ணீர் பாய்ச்சத்தொடங்கும் காலம் வரை பட்டைத் தண்ணீர், உச்சித் தண்ணீர் தெளிக்கும் வேலைகளையும்

www.tamilarangam.net



அவனே பொறுப்பேற்றுவிட்டாள். அது வழமையானது. இது அவருக்குப் பெரும் ஆறுதல்.

இம்முறை பசளை எரு, வீடு வேய்ந்த பனம் ஓலை குழை ஆகியவைகளைப் பேறுவதற்கு அவர் மிகவும் சிரமப் பட்டு விட்டார்.

கடைசியாக அவர் சிரமப் பட்டதெல்லாம் சேர்த்து இணுவில் மருதனாமடச் சந்தியில் வண்டில்காரர்களிடம் தலைத்தெரிவான பசளை இலைகளான காய்விளாய், ஆவரசு, பன்னை ஆகியவை சேர்ந்து ஒரு பாரம் அகப் பட்டதில் அவருக்குப் பரம திருப்தி. அந்தத் திருப்தியோடு உற்சாகமாகக் குழை தாழ்ப்பு, எருப்போடல் எல்லாவற் றையுமே முன்கூட்டியே முடித்து வைத்திருந்தார்.

இப்போது கண்டு நடுகை முடிந்துவிட்டது. இந்த வேலைப்பளுவிலும், மூத்தவன் படிப்பைப் பற்றிய விஷயத்தில் அவர் விழிப்பாகவே இருந்தார்.

பரீட்சையும் எழுதிமுடிந்து விடுதலையுமாகி, பாட சாலை தொடங்கியபோது முதல்நாள் பாடசாலைக்குச் சென்றவன் இரவு சாப்பிடும்போது அடுக்களைக்குள் இருந்து தாயுடன் எதைப்பற்றியோ பேசிக் கொண்டி ருந்தது வரிச்சுமட்டை இடையூடாகத் தாழ்வாரச் சாக்குக் கட்டிலில் படுத்திருந்த ஆறுமுகத்தாரின் கண்களுக்கு இலேசாகத் தெரிந்தது. மற்றப் பிள்ளைகள் இரண்டும் தூங்கி விட்டன.

''உவன் மூத்தவன் என்னவாமடியப்பா?... ஏதோ ரெண்டுபேரும் கனக்க கதைக்கிறியள்... எனக்கும் சொல்லுங்கோவன்'' ஆறுமுகத்தார் கேட்டார்.

''அது ஒண்டுமில்லையப்பா... மூத்தவனைப் பள்ளிக் கூடத்திலை சட்டம்பிமாரும் பிள்ளையளும் பகிடி பண்ணு னமாம். அதுதான்...''

www.tamilarangam.net



வள்ளிப்பிள்ளை ஒரு மாதிரி பதில் சொல்லிவிட்டு எதையோ பேச வாயுன்னி நிறுத்திக்கொண்டாள்.

"என்ன... பகிடி பண்ணிறாங்களாமே...?"

"ஓமப்பா! மூத்தவன் எண்ட பேர் கூடாமல் கிடக்காம்."

"என்னடி, நான் பெத்த பிள்ளைக்கு ஆசைக்கு நான் வைச்சபேர் கூடாமல் கிடக்காமாடி. என்ரை பிள்ளையின்ரை பேர் கூடாது எண்டு சொல்ல உவங்களார்? இல்லை தெரியாமக் கேக்கிறன்."

"உள்ளத்தைச் சொன்னால் உனக்கேனப்பா பத்துது; உதுகும் ஒரு பேரே! எளியஞ் சாதியளின்ரை பேர்மாதிரிக் கிடக்கு. உதுகும் ஒரு பேரெண்டு பதிஞ்சு வைச்சிருக்கிறியே."

ஆறுமுகத்தார் மேலே ஒன்றும் பேசாமல் அட்டணக் காலைக் குலைத்துக் கொண்டு மறுபக்கமாகப் புரண்டு கொண்டார்.

மூத்தவன் உணவருந்தி முடிந்து வெளியே வந்ததும்;

"இஞ்சேர், என்ரை சோத்தையும் போடு" என்று சொல்லிக் கொண்டே ஆறுமுகத்தார் அடுக்களைக்குள் போனார். உணவருந்தி முடியும் தறுவாயில், "இஞ்சேர், வெள்ளாப்போடை என்னை ஒருக்கா அரட்டிவிடு. நாளைக்கு நாலாங்கால் இறைப்புமுறையும் இல்லை, நான் எப்பன் விதானை வீட்டை மட்டும் போட்டு வாறன். மூத்தவன்றை பேர் மாத்திறத்துக்கு என்ன செய்ய வேணுமெண்டு கேட்டு வாறன். எக்கணம் பேர்மாத்தினாலும் கூப்பிட்டுப் பழகினவங்கள் மூத்தவன் எண்டு கூப்பிடாமல் விடப் போறாங்களே? ஒரு மாதிரி மூத்தவன் எண்ட பேரோடை சேரக்கூடிய விதமாய் வைச்சுப் போட்டா நாளாந்தம் பழக்கத்திலை வந்தாலும் வந்திடும் எண்டுதான் நினைக்கிறன்."

www.tamilarangam.net



ஆறுமுகத்தார் பேசி முடித்துவிட்டு, சற்று நேரம் சோற்றில் கையை வைத்துக் கொண்டே யோசித்தபடி இருந்தார்.

''முகுந்தன் எண்டு வை ஐயா!'' என்று அடுக்களை வாயிலில் நின்றபடி மூத்தவன் சொன்னான்.

''என்ன மோனை அது... முகுந்தனோ, அதிலையும் 'இன்' எண்டுதானேடா கேக்குது'' ஆறுமுகத்தார் தன் அதிருப்தியைக் காட்டிக் கொண்டார்.

''இன்னெண்டு வந்தாலும் ஐயா அது மூத்தவன் எண்டதோடை சேராது இன்னெண்ட பேரிலையும் நல்ல பேர் இருக்கு. இந்தியாவிலை பேரெடுத்த விஞ்ஞானிக்கு ராமன் என்டு இன்னிலைதானே முடியுது'' மூத்தவன் கூறி முடித்து விட்டான்.

''இஞ்சரப்பா...! தம்பி ஆசைப்படுகிறான். அதைத் தானப்பா விதானையிட்டை சொல்லு'' என்று வள்ளிப் பிள்ளை தருணம் பார்த்துக் கூறிவிட்டாள்.

ஆறுமுகத்தார் இதற்குமேல் எதுவும் பேசவில்லை. கையலம்பி விட்டு எழுந்து சென்று, சிமினி விளக்குவெளிச்சத்தில் ஒரு புகையிலைக் கீலத்தை எடுத்துச் சுருட்டாக்கி, லாம்பின் சிமிலியை உயர்த்தி, ஈக்குச்சியால் கொளுத்தி சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, படுக்கையில் சரிந்தபோது அவரின் வாயிலிருந்து ''அப்பனே முனியப்பா'' என்ற குரல் இலேசாகக் கிளம்பியது. □

## 3

மூத்தவனாகிய முகுந்தனை இம்முறை பாடசாலையின் உதைபந்தாட்டக் குழுவில் சேர்த்திருந்தார்கள். ஆறுமுகத்தாருக்கு ஏற்கெனவே உதைபந்தாட்டம் என்றால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உயிர். பண்ணைத் துறைமுகத்துக்குப் பக்கத்தே இருந்த முற்றவெளி அடைப்புக்குள் நடக்கும் பிரசித்திப் பெற்ற பாடசாலைகளின் மோதல்களில் அவர் பார்க்காத மோதல்கள் மிகச் சில தான்.

அதிலும் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி என்றால் அவருக்கு அபிமானம் அதிகம். அந்த அபிமானத்தினால் தான் மகனை அந்தக் கல்லூரில் சேர்க்க மனம் அவரைத் தூண்டியிருந்தது. அத்துடன் தனது மகனும் ஓர் உதை பந்தாட்ட வீரனாக வரவேண்டுமென்ற அவா இருந்த தாயினும் அதை அவர் மனதுக்குள்ளேயே அடக்கிக் கொண்டார்.

இம்முறை மகனின் கோஷ்டி என்ற பெருமிதத்துடன் தோட்டத்து வேலைகளையெல்லாம் அவ்வப்போது முடித்து விட்டுச் சகல ஆட்டங்களையும் பார்த்து தீர்த்து விட்டார். மகனின் கோஷ்டி ஒரு பக்கத்து இறுதி ஆட்டக் கோஷ்டியாகத் தெரிவு செய்யப்பட்டு விட்டது. மறுபக்கத்திற்கு கொக்குவில் இந்துக் கல்லூரி வந்திருந்தது. கொக்குவில் இந்து அடிப்படலைக்குள் இருக்கும் பாடசாலை — அதில் இவரது உறவினர்களின் பிள்ளைகளும் பலர் விளையாடுகிறார்கள். இருந்தாலும் அவர் மனமெல்லாம் மகனின் கோஷ்டிபக்கமே.

இறுதி ஆட்டத்திற்கு நாளும் குறிக்கப்பட்டுவிட்டது. பத்தாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நாலரை மணி!

மூன்று மணிக்கெல்லாம் ஆறுமுகத்தார் அடைப்புக் குள் போய்விட்டார். இவர் நுழைந்தபோது யாருமே உள்ளே இல்லை. இவர்தான் முதலாவது பார்வையாளன்.

நேரம் போகப் போக ஜனக்கூட்டம் கிடுகு அடைப்புக்குள் நிறைந்து விட்டது. வெடிச்சத்தங்களை அடுத்து இரு கோஷ்டிகளும் மைதானத்துக்குள் வந்து விட்டன.

www.tamilarangam.net



ஆறுமுகத்தாரின் கண்களுக்கு முகுந்தன் மட்டுமே கம்பீரமானவனாகத் தெரிந்தான்.

அங்குமிங்கும் இருகோஷ்டிகளுக்குமாகப் பார்வை யாளர்கள் நின்றனர். ஆரவாரித்தனர்.

ஆறுமுகத்தார் வேளையோடையே வந்து, கயிற்றுக்கு முன்வரிசையில் குந்திக்கொண்டு விட்டமையால், அவருக்குப் பின்னால் வந்து சேர்ந்த யாவரும் எதிர்க்கட்சியினராகவே இருந்தனர். ஆறுமுகத்தாரால் தனது கோஷ்டியினருடன் சேர்ந்து கொள்ள முடியவில்லை.

நடுவாளர் விசில் ஊதினார். இரு பகுதியினரும் குழுமினர். இரு பக்கத்துத் தலைவர்களுக்கும் முன்னால் நடுவாளர் பூவா, தலையா போட்டுப் பார்த்தார். பின்பு எல்லாருமே அவரவர் இடங்களுக்குப் போய் நின்று கொண்டனர்.

நடுவாளர் நேரத்தைச் சரியாகக் கணக்கெடுத்துக் கொண்டு விசிலை ஊதினார்.

ஆட்டம் தொடங்கி விட்டது.

முகுந்தன் முக்கியமான இடமான நடுவாளனுக்குப் பின் நடுவாளனாக நின்றான். ஆட்டம் விறு விறுப்பாக இல்லை.

ஆட்டத்தை விறுவிறுப்பாக்க இரு கோஷ்டியினரதும் கோஷ்டிக்காரர்களே விறு விறுப்பாக இருந்தனர்.

''கந்தரோடை பனங்கொட்டை தின்னிக்கு அடியடா மச்சான்.''

இப்படி ஒரு குரல்!

''கொக்குவில் கொக்குக்காலன்ரை காலை முறியடா மச்சான்!''

www.tamilarangam.net



இப்படி ஒரு பதில் குரல்!

"டேய் அம்பயர்! கந்தரோடையான் இடிக்கிறான்ரா எங்கையடா மிலாந்திறாய்'" இப்படி நடுவரை எச்சரிக்கும் குரல்!

''டேய் பரதேசி! வெற்றி கொக்குவிலாங்களுக்குத் தானடா... கந்தரோடையான் பவுளடா ஏன்ரா ஊதையில்லை.''

இது நடுவருக்கு மேலான வேறொரு குற்றச்சாட்டு.

பாதி வேளை முடிந்தது!

யாருக்குமே ஒரு கோலுமில்லை!

ஆறுமுகத்தாருக்கு மனம் அலைந்தது. இடைவேளை, மடிக்குள் இருந்த வல்லுவத்தை அவிழ்த்து ஒரு வாய் வெற்றிலை போட்டுக்கொண்டார். மறுபடியும் ஆட்டம் தொடங்கியது.

இப்போதுதான் ஆட்டம் சற்றுச் சூடு பிடிக்கத் தொடங்கியிருந்தது.

பந்தில் படும் அடிகளுக்குப் பதிலாக விளையாட்டாளர்களின் கால் அடிகள் கேட்டுக் கொண்டிருந்தன. என்றாலும் விளையாட்டுக் குழம்பவில்லை. நடுவர் இடையிடையே ஓரிரு விளையாட்டுக்காரர்களை எச்சரித்தார். இந்த எச்சரிப்புக்கு உட்பட்டவர்களில் முகுந்தனும் ஒருவன்.

அப்போது ஆறுமுகத்தாரின் உடம்பு துடிதுடித்தது. உச்சியிலிருந்து நடுக்கம் ஒன்று எழுவதுபோலிருந்தது. எப்படியோ அவர் சமாளித்துக் கொண்டார்.

நேரம் போய்க் கொண்டிருந்தது. யாராவது ஒரு கோலாவுதல் போடவில்லை. இன்னும் இருப்பதுவோ ஐந்து நிமிடங்கள்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்போது முகுந்தனின் காலில் பந்து ஒன்று வந்து விட்டது. இரண்டுபேரை மடக்கி அடித்து, வெட்டி எடுத்துவிட்டு, இடதுபக்க எல்லைக்காரனுக்குப் பந்தை அனுப்பினான். அவனோ அதைப் பக்குவமாகக் கால்களால் அடக்கி இடது பக்கக் கரையோரம் கொண்டு சென்று மூலையில் வைத்து இரண்டு நபர்களை வெட்டி மடக்கி நிமிர்ந்து ஒன்றரை ஆள் உயரத்தில் பந்தை வீசி அடித்தான். அந்த அடியின் வயப்பட்ட பந்து சுருண்டு கோல் எல்லைக்கு நடுவாக வீழ்ந்தபோது எழுந்தானே முகுந்தன்.

மேலே எழுந்து,

புழுப்போல நெளிந்து,

தலையை சரித்து விட்டானே ஓர் இடி தலையால்.

மின்னல் போல அது கோல் முகத்துக்குள் புகுந்து விட்டது. பந்து கோல் முகத்துக்குள் புகுந்த அதே வேளை ஆறுமுகத்தாரின் உயர்ந்த கரம் படாரென்று முன்னே இருந்நவனின் தோள் மூட்டைத் தட்டி விட்டது.

வந்ததே வினை!

ஆறுமுகத்தாரை ஒருவன் பின்நின்று தாக்கினான்.

இன்னொருவன் அவரைத் தலைமயிரில் பிடித்து வெளியே இழுத்தான்.

அப்புறம்......

அடி உதை!

அங்குமிங்குமாகப் பலர் ஓடி வந்தனர்.

இரு கோஷ்டிகளுக்குமிடையே கைகலப்பு. கூட்டம் மைதானத்திற்குள் குதித்து விட்டது.

ஏகக்கலவரம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆறுமுகத்தாருக்கு அறிவில்லை, நினைவில்லை.

''ஐயோ என்ரை மோன் ஐயோ என்ரை மூத்தவன்'' என்று மட்டும் வாய் பிதற்றியபடி யாரோ ஒரு பார்வையாளனால் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

நினைவுத் தொடர்கள் ஒன்றாகி இரண்டாகி மூன்றாகி...

''ஆறுமுகத்தாருக்கு வாறான அடியாம்'' இந்தச் சத்தம் ஊரெல்லாம் பரவி விட்டது.

வள்ளிப்பிள்ளை கூக்குரல் இட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினாள். ஆறுமுகத்தார் நினைவிழந்து கிடந்தார். அவள் உள்ளே சென்றபோது கங்காணிதான் ஆறுமுகத்தாருக்குப் பக்கத்தில் நின்று வேண்டியதைச் செய்து கொண்டிருந்தான்.

''ஐயோ, என்ரை ஐயா... மனிசனைக் காப்பாத்திப் போடுங்கோ ஐயா...'' என்று கங்காணியின் கால்களைத் தொட்டுக் கொண்டே வள்ளிப்பிள்ளை சத்திவிட்டாள். கங்காணிக்குச் சங்கடமாகிவிட்டது. 'அவள் தன்னைத் தான் டாக்குத்தர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள்' என்று கங்காணிக்குத் தெரிந்து விட்டது. இருந்தாலும் தன்னைப் பற்றிய உண்மையைச் சொல்லிவிடாமல் —

''எணை அவருக்கு ஒண்டுமில்லையணை... சும்மா நாலைஞ்சு அடிதான் பட்டிருக்கு, படாத இடத்திலை ஒரு அடி பட்டதாலைதான் அவருக்கு எப்பன் மயக்கமாகக் கிடக்கு. பயப்படாதை, எல்லாம் நான் சுகப்படுத்தித் தாறன். கொஞ்சம் முந்தித்தான் கண்முழிச்சுப் பார்த்தவர்'' என்று அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டுக் கங்காணி அப்பால் போய்விட்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆறுமுகத்தார் மனைவியின் குரலை இனங்கண்டு கொண்டார். டாக்குத்தர் பேசியது போன்ற குரலும் கேட்டது. ஆனாலும் உடலை ஆட்டி அசைக்க முடிய வில்லை.

ஆறுமுகத்தார் இலேசாகக் கண் விழித்தார். மனைவி கண்ணீர் விட்டபடி வெயர்வையைச் சவுக்கத்தால் ஒற்றி எடுப்பதைக் கவனித்தார்,

''ஏன்னப்பா அழுகிறாய்! மூத்தவன் வந்திட்டானே? அவனுக்கும் அடிச்சுக்கிடிச்சுப் போட்டாங்களே? என்ரை பிள்ளை...'' ஆறுமுகத்தாரினால் தொடர்ந்து பேச முடிய வில்லை. அழுகைதான் வந்தது. வள்ளிப்பிள்ளை கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

''அவன் பள்ளிக்குடத்துப் பொடியன்களோடை சேர்ந்து பள்ளிக்கூடத்துக்குப் போட்டான்போலை கிடக்கு! தேப்பன் ஆக்களோட அடிபட்டதெண்டு தெரியா தெண்டு நினைக்கிறன்'' வள்ளிப்பிள்ளை பேசி முடித்தாள்.

''என்ன, நான் அடிப்பட்டனானோ... நீயும் அப்படிச் சொல்லுறியோ? என்ரை பிள்ளை கோல் அடிச்சுப் போட்டான் எண்டதாலை எல்லாருமாகச் சேர்ந்து என்னை அடிச்செல்லோ முறிச்சவங்கள்!'' ஆறுமுகத்தாருக்கு அவ்வளவுதான் தெரியும். மகன் கோல் அடித்தபோது தான் விசுக்கிய கை முன்னுக்கு இருந்தவனுக்குப் பிடித்தது அவரது நினைவில் இல்லை.

''இருட்டிப் போட்டுது போலைகிடக்கு. நீ தனியாகத் தான் வந்தனியே'' என்று மனைவியைப் பரிவோடு கேட்டார்.

''ஓமோம், கேள்விப்பட்ட உடனை எல்லாத்தையும் விட்டிட்டு சந்தியிலை வசுவைப் பிடிச்சுக் கொண்டு ஓடியாறன். கொட்டடப்பெட்டி சின்னையற்றை பேரப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொடியன் அடிபடேக்கை நின்டவனாம். வந்து சொன்னவன்.''

வள்ளிப்பிள்ளை அப்போதுதான் தோட்டத்திற்குள் நின்று வந்திருக்க வேண்டும். அவளின் உடம்பில் செம்பாட்டு மண் தூள்கள் அங்குமிங்குமாக ஒட்டிக் கிடந்தன. மேல் சட்டை எங்கும் செம்பாட்டுப் புழுதி. ஒழுங்கின்றி அள்ளி மேலுக்கு முடித்த குடுமி!

மனைவியானவளை இந்தக் கோலத்தில் காண ஆறுமுகத்தாருக்குப் பெருமையாகவும் வெட்கமாகவும் இருந்தது. அப்போது அவருக்கு வயது நாற்பதுக்குள் தான் இருக்கும்.

இதுவரை அவளுக்கு இளையவனுக்கு அடுத்த இரண்டு பிள்ளைகள் மட்டுமே!

''வீட்டிலை பெட்டையள் கத்துவாளவை. மூத்தவனும் வந்து கேட்டுப் போட்டு வில்லங்கப்படுவான். சுணங்காமல் போ! எனக்கொண்டுமில்லை. நாளைக்கு டாக்குத்தர் துண்டு வெட்டினாலும் வெட்டுவார்'' என்று அவர் கூறியபோது கங்காணி வந்து கொண்டிருந்தான்.

''உங்கை டாக்குத்தரும் வாறார். எப்ப துண்டு வெட்டிறியள் எண்டு கையோடை கேப்பம்!'' என்றாள் வள்ளிப்பிள்ளை.

ஆறுமுகத்தாரின் கண்களுக்கு அடுத்த கட்டிலடியில் நின்று ஏதோ செய்து கொண்டிருந்த கங்காணி பட்டான்'

''இஞ்சரப்பா, அது கங்காணி! டாக்குத்தர் இல்லை'' என்று தாழ்ந்த குரலில் கூறினார் ஆறுமுகத்தார். வள்ளிப் பிள்ளைக்கு வெட்கமாக இருந்தது. சற்று முன்னம் சங்காணியின் காலை டாக்குத்தர் என நினைத்துப் பிடித்தது நினைவுக்கு வந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''இஞ்சர், குடிக்கிறதுக்கு ஏதும் வாங்கித் தந்திட்டுப் போகட்டே'' என்று அவள் கதையை மாற்றினாள்.

''மடியிக்கை கிடந்த சில்லறையள் சண்டையிலை கொட்டுண்டு போச்சு. முடிச்சிலை கிடக்கிறதை எப்பன் அவிட்டுக் கையிலை தா. நான் கங்காணியை விட்டு சோடாப் போத்தில் வாங்குவிக்கிறன்'' என்று மனைவி முடிச்சு அவிழ்க்க வசதியாக வேட்டிக்கட்டு வயிற்றை எக்கிக் கொடுத்தார். வள்ளிப்பிள்ளை முடிச்சு அவிழ்த்தாள். அதில் பத்து ரூபா நோட்டொன்று சுற்றி மடங்கி இருந்தது.

பணத்தை அவர் கைமேல் வைத்து ''பத்திரமா, பத்து ரூபா கிடக்கு'' என்று எச்சரிக்கை செய்துவிட்டு அவள் போகப் புறப்பட்டாள்.

''இஞ்சேர், நாளைக்கு இறைப்பு நாலாங்கால் முறை, அவனுக்கும் பள்ளிக்கூடம் லீவு! மூத்தவனையும் கூட்டிக் கொண்டு தோட்டத்துக்கை விட்டுத் தண்ணி இறைக்க மறந்திடாதை. அவன் தண்ணியை பாத்தி வழிய,வழியக் கட்டிப் போடுவான் நீ பாத்தியளுக்குத் தண்ணியைக் கட்டு. கவனமடியாத்தை, இளங்கண்டுகள் பாவம்! கண்டு களைத் தட்டி உளக்கிக்கிளக்கிப் போடாதை. இஞ்சர் அவனுக்கு வினை ஒண்டைச் சொல்ல மறந்து போனன். நல்லா இடிச்சுப் போட்டடங்கள் பேரனை யாடேக்கை பரதேசிப் பொடியள். ராவைக்கும் கிடக்கு, கொக்குவில் முட்டைக் கோப்பி அடிச்சுக் வெள்ளணவும் எப்பன் குடுக்க வேணும் மறந்திடாதை!''

அவர் பேசிக்கொண்டிருந்தபோது அந்த வாட்டில் இருந்த எல்லோர் பார்வையும் அவரைச் சுற்றியே வந்தது.

''பாவம் உந்த மனிசி, உள்ளுக்கு வாறதுக்கு வெளிபிலை வாச்சரோடை சண்டை பிடிச்சுக் கொண்டுதானாம் வந்தது. நாட்டுப் புறத்து மனிசியெண்டாலும் வலு சூரி!''

www.tamilarangam.net



என்று கங்காணி பக்கத்துக் கட்டில்காரருக்கு கூறியது ஆறுமுகத்தார் காதிலும் விழுந்தது.

பெருமையால் அவர் நெஞ்சு உயர்ந்தது.

வள்ளிப்பிள்ளை போய்க் கொண்டிருந்தாள். ஆறுமுகத்தார் எதையோ நினைத்துக் கொண்டு "இஞ்சேரப்பா" என்றார். குரல் கேட்டு வள்ளிப்பிள்ளை திரும்பி வந்தாள். குரலைக் கீழாகத் தாழ்த்திக் கொண்டு, "மூத்தவன்ரை தேகத்திலை நல்லா நோப்பட்டிருக்கும் போலை... வீட்டுக்கை கொப்பர் பெட்டிக்காலோடை உரும்பிராயன் அரைப்போத்தில் கிடக்கு அதிலை எப்பன் எடுத்து நோப்பட்ட இடத்திலை உரஞ்சி விடு! மறந்திடாதை" என்று சொல்லி முடித்தார். வள்ளிப்பிள்ளை தலையசைத்து விட்டுப் போய் விட்டாள்.

## 4

மூன்றாண்டுகள் வழமையான வாழ்க்கை! மாசிப் பனி முடிந்து வரும் காலம். புகையிலைக்கன்றுகளின் குருத்துப் பச்சை நிறம் சிறிது, சிறிதாகக் கறுத்து வரும் வேளை. இப்போதுதான் இடைச் செருகல் சிறு பசளைகளை நாலு இஞ்சிக் கனத்துக்கு மேற்படாத ஆழத்தில் பக்குவமாகப் பரவி நோகாமல் சாறிவிட வேண்டும். ஆறுமுகத்தார், தன்னந்தனியாகவும், சனி ஞாயிற்றுக் கிழமைகளில் மூத்தவனுடன் கூட்டுச் சேர்ந்தும் இடைப் புற்களை அரித்தெடுப் பதில் வள்ளிப்பிள்ளையும், சின்னஞ் சிறிசுகளாக இருந்தாலும் உள்ளூர்ப் பாடசாலை முடிய மிகுதி வேளைகளில் பெட்டைகளும் உதவி செய்ய, கூட்டாக ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடை உரல் புல்லரிப்பு வேலைகள் முடிய பதினைந்து நாட்களுக்கு மேலாகிவிட்டன. செடிகள் சராசரி பத்திலைக் கன்றுகளாகிவிட்டன.

நடுப்பகல் வேளை பார்த்து ஆறுமுகத்தாரும் வள்ளிப்பிள்ளையும் தலைப்புகளைக் கிள்ளத் தொடங்கி அந்த வேலையை மூன்று நாட்களில் முடித்தும் விட்டனர். இந்த வேளைதான் கடந்த வருடத்து அறுவடையான தலைத்தெரிவு 'சாற்று' இலைகள் நடு வீட்டுக்குள் பாடத்தில் அடக்கமாக இருந்து விட்டு விற்பனையானது.

இம்முறை ஒரு புங்குடுதீவுப் புது வியாபாரி ஆறுமுகத்தாரின் இலையைப் பற்றிக் கேள்விப்பட்டு அதை நல்ல விலைக்குக் கொள்முதல் செய்து மாத்தளைக்குக் கொண்டு சென்று விட்டான்.

கடந்த போகத்தில் இரண்டாம் தெரிவான கொச்சியையும், மூன்றாம் தெரிவான பழுத்தலையும், நாலாம் தெரிவான அடிச்சல்லி இடைக் கொட்டுகளையும் சற்றுச் சகாய விலைக்குக் கொள்முதல் செய்த வேலணைக் காலிக் கடைக்காரன் தலைத்தெரிவான சாற்றுப் புகையிலைக்கு விலை அதிகரித்து விடவே, ''ஆறுமுகத்தார் எனக்குத் தராமல் ஆருக்குக் குடுக்கப் போறார்'' என்று எண்ணிக் கொண்டுவிட்டுப் போய்விட்டான். நல்ல ஆறுமுகத்தார்தான், ஏமாந்து போவார்! நடுவீட்டுக்குள் ஒரு வருடம் சாற்று இலைகளைப் பாடத்தில் அடை வைத்து விட்டு, இப்போது நல்ல விலைக்கு விற்று விட்டார்.

''குடுக்கிற தெய்வமெண்டால் கூரையைப் பிய்ச்சுக் கொண்டெண்டாலும் குடுக்கும்'' என்று ஆறுமுகத்தார் மனத்துக்குள் எண்ணிக் கொண்டபோது அந்தத் தெய்வம் மேலும் ஒன்றைக் கொடுத்து விட்டது. முகுந்தன் சோதனையில் தேறி விட்டான். இதைவிட இனிப்பான நிகழ்ச்சி அவரின் வாழ்வில் வந்ததாக ஞாபகமில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆயினும் ''கண்டிச் சர்வகலாசாலைக்குப் போக இது போதும் எண்டு நான் நினைக்கேல்லை'' என்று இராம சாமி வாத்தியார் இரண்டு நாட்களுக்கு முன் சொன்னது அவர் மனதை நெருஞ்சி முள்ளாகக் குத்தியது. இருந்தும் அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை.

''ஆறுமுகத்தார், கொழும்பிலை உந்தப் பட்டப் படிப்புத் தெரியலைப் பற்றி ஏதோ ஏதோ எல்லாம் யோசிக்கிறாங்களெண்டு பேப்பருகளிலை அடிபடுகுது. என்ன நடக்குமெண்டு சரியாகச் சொல்லேலாமல் கிடக்கு. சில வேளை அதிர்ஷ்டம் அவன்ரை பக்கமாய் நிண்டாலும் நிக்கும்'' என்று இராமசாமி வாத்தியார் சொன்னது ஆறுமுகத்தாருக்குச் சிறிது நம்பிக்கையைக் கொடுத்தது. ''குடுக்கிற தெய்வமெண்டாக் கூரையைப் பிய்ச்சுக் கொண்டெண்டாலும் குடுக்கும்'' என்று மறுபடியும் அவர் மனதை ஒரு நிலைப் படுத்திக் கொண்டார்.

இராமசாமி வாத்தியார் இலேசுபட்டவர் அல்ல, இந்த முறை சோதனைக்கு இன்ன இன்ன கேள்விகள் வரும் என்று அவர் சொல்லி விட்டால் பெரும்பாலும் அப்படியேதான் வரும். உலகத்துப் புதினங்கள் நிறையத் தெரிந்தவர். எம். பி. மார் எல்லோருடனும் நிறையத் தொடர்புள்ளவர். அவர் சொல்வது பொய்யா காது என்பது ஆறுமுகத்தாருக்கும் தெரியும். அரசியல் விவகாரமென்றால் வாத்தியார் எந்தப் பக்கமோ ஆறு முகத்தாரும் அந்தப் பக்கம். வேறு எந்த விவகாரமாக இருந்தாலும் சரி கண்களை இறுக மூடிக்கொண்டு அவர் காட்டிய வழியில் சென்று விடுவார்.

முகுந்தன் இப்போது வீட்டோடும் வாத்தியார் வீட்டோடும் தந்தையோடு தோட்டத்தோடும்தான். கண்டி அழைப்புக்காக காத்திருக்கின்றான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கன்றுகள் தொப்பி போலக் குமுள் வைத்து வளர்ந்து விட்டன. இலைகள் தடித்து முறுக்கேறி மேலும் மேலும் கறுத்து வந்தன.

மூன்று தடவைகளும் இடைக்கெட்டுகள் நுள்ளியாகி விட்டன.

ஒரு நாள் காலை தோட்டத்தை அலசி நோட்டம் விட்டார் ஆறுமுகத்தார். துறையின் நட்டுக்கு நடுவே இடையே வெளிரல் தெரிந்தது. வாய்க்கால் ஓடைகளை மளமளவெனத் தாண்டி அந்த வெளிரல் பகுதிககு அவர் வந்து... அவர் நெஞ்சு குளிர்ந்து விறைத்தது. சில செடிகளை அழுக்கணவன் நோய் பிடித்துக்கொண்டது. இதை அவர் எதிர்பார்க்கவில்லை. அழுக்கணவன் நோய் பிடிப்பதென்றால் பத்து நாட்களுக்கு முன்னாலேயே கன்றுகள் சோர்ந்து அழுது குறிப்புக் காட்டிவிடும். கடந்த நாட்களில் எந்தக் கன்றும் அழுததாக அவருக்குத் தெரிய வில்லை.

வாடிப்போன சோர்ந்துபோன மரணக்கோல மடைந்த செடிகளை அவர் கரங்கள் தாங்கலாகவே தடவிக் கொடுத் தன. பின்பு அவசர அவசரமாக வீட்டுக்கு வந்துவிட்டார். "இஞ்சேரப்பா, ஐஞ்சாறு வருஷமாய் இல்லாமல் இருந்த ஆறுமுகத்தான்ரை தோட்டத்துக்குள்ளை அழுக்கணவன் எல்லே வந்திட்டுது" அழாக் குறையாக அவர் வள்ளிப் பிள்ளைக்குக் கூறினார். வள்ளிப்பிள்ளைக்கும் கவலை வந்துவிட்டது. இருந்தாலும் அவரைச் சமாளிக்க எண்ணி "அது ஏதோ வண்டோ, கிண்டோ மேஞ்சிருக்கும்" என்று கூறினாள்.

"இந்த ஆறுமுகத்தாருக்கு நீ அழுக்கணவனைப் பற்றிப் படிப்பீக்கிறாய் என்ன? பொயிலைக் கண்டிலை பழமும் திண்டு கொட்டையும் போட்ட எனக்கு நீ சொல் லுகிறாய்."

www.tamilarangam.net



ஆறுமுகத்தாரின் இந்தக் குத்தல் பேச்சுக்குப் பிறகு வள்ளிப்பிள்ளை எதுவும் பேசவில்லை. இறப்பில் சொருகி இருந்த பெரிய பல்லுக் கொம்புச் சீப்பால் தலையை இரண்டு இழுவை இழுத்து அள்ளி முடிந்து கொண்டு அவள் புறப்பட்டு விட்டாள்.

''கண்டுகளிலை அழுக்கணவன் பிடிச்சுட்டுதெண்டு நான் அழுகிறன். நீ எங்கையடிப்பா வெளிக்கிட்டுப் போறாய்? எப்பனும் மயின் பண்ணாமல்'' ஆறுமுகத்தார் பேசினார்.

''அழுக்கணவன்ரை அலுவல் பாக்கத்தான் போறன், உதிலை சுதுமலைப் பனங்கட்டிப் பொன்னியிட்டை பினாட்டுத் தட்டு ஐஞ்சாறு வேண்டியருவம் எண்டிட்டுப் போறன்'' என்றாள் வள்ளிப்பிள்ளை.

ஆறுமுகத்தாருக்கு விஷயம் விளங்கி விட்டது. முன்பு அழுக்கணவன் பிடித்தபோதெல்லாம் பனாட்டுத் தட்டி னால் அழுக்கணவன் பிடிச்ச கன்றுகளை தடவித்தான் அவைகளையும் காப்பாற்றியது மல்லாமல் அத்துடன் சாம்பலைத் தூவித்தான் மற்றக் கன்றுகளுக்கும் தொற் றாமல் பாதுகாத்ததென்பதை அவர் மறந்து விடவில்லை. மனைவியைப் பனங்கட்டிப் பொன்னியிடம் பனாட்டு வாங்க அனுப்ப வேண்டுமென்றுதான் அவர் தோட்டத்தி லிருந்து அவசர அவசரமாக வந்திருந்தார். இப்போது வள்ளிப்பிள்ளை அவரை முந்தி விட்டாள்.

பொழுது சரிவிலிருந்து நிமிர்ந்து மேலே ஏறுவதற் இடையில் வள்ளிப்பிள்ளை எட்டுப் பத்துப் பனாட்டுத் தட்டுடன் வந்து சேர்ந்து விட்டாள். அவள் வந்ததும் வராததுமாக அதில் இரண்டு தட்டுப்பனாட்டை எடுத்துக் கொண்டு அவர் ஓட்டமும் நடையுமாகத் தோட்டத்திற் குப் போய் விட்டார்

இந்த நோய் நிமிடங்களைக் கணக்கிட்டுக் கொண்டே பரவிவிடக் கூடியது என்பது அவருக்குத் தெரியும்.

www.tamilarangam.net



எட்டுப் பத்து நாளாக அடுப்புப் புகட்டு மூலையில் தேக்கி வைத்திருந்த சாம்பலைக் குஞ்சுக் கடகம் ஒன்றில் போட்டு இடுப்பில் ஏற்றிக் கொண்டே வள்ளிப்பிள்ளையும் ஆறுமுகத்தாரின் பின்னால் கிளம்பி விட்டாள்.

நான்கைந்து நாட்கள் தொடர்ச்சியான பனாட்டுத் தடவலாலும் சாம்பல் தெளிப்பாலும் அழுக்கணவன் கட்டுக் கடங்கி இலைகள் மறுபடியும் பச்சையாகித் தென் படைந்தன. இப்போதுதான் ஆறுமுகத்தாருக்கு மூச்சு ஒழுங்காக வந்தது.

பங்குனி முடிந்து வரும்போது இலைகள் முறுகித் தடித்து அடி இலைகள் பழுப்பு மஞ்சள் நிறம் காட்டி அறுவடைக்காக ஆறுமுகத்தாரை அழைத்தன.

ஆறுமுகத்தார் மூத்தவனுடன் இன்னும் இரண்டு ஏபரை கூலிக்குச் சேர்த்துக் கொண்டு கன்று வெட்டத் தொடங்கி விட்டார். கன்றுகளை அடியோடு வெட்டி, ஒரு நாள் பங்குனி வெயிலுக்கு வாட விட்டுத் தெரிவு நறுக்கு வேலை ஆரம்பமாகி விட்டது.

சராசரி சாற்றிலைகளாக கன்றுக்கு ஐந்து தேறின. பாணி இடுவதற்காக அவைகள் தோட்டு வெட்டு வெட்டப்பட்டன.

அடுத்து கொச்சி இலைகள் குடி இலைக்காகச் சீவல்கள் ஆக்கப்பட்டு சராசரி கண்டுக்கு மூன்று இலைகள் தேறின.

பழுத்ததில் இரண்டு மூன்று வீதம். மிகுதி அலி சல்லியாகவும் தரம்பிரிக்கப்பட்டு, பனை ஓலைக் கீறாலால் ஐவ்வைந்தாக இணைக்கப்பட்டு வாடல் கயிற்றுக்குத் தூங்க விடப்பட்டன. இன்னும் இருப்பது மூன்றே மூன்று பெரிய வேலைதான். வாடிய இலைகளை குடிலுக்குள் தூக்குதல், பொச்சு மட்டையோ ஊமலோ கங்கு மட்டையோ போட்டுப் புகைத்தல். வேண்டுமானால் மூன்றையும் ஒரே தடவையில் சேர்த்துப் புகைத்தல். ஆறுமுகத்தார் தனக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கென்று கற்று வைத்திருந்த கருப்பணி தோய்த்தல், கண்டல் பட்டைப் பொருக்குக்குப் புகைகாட்டல் அவ்வளவுதான். அப்புறமென்ன அவை நடுவீட்டுக்குள் தனித்தனிப் பாடமாக ஏறிவிடும். ஆறுமுகத்தார் எல்லா வேலைகளையும் கட்டிய நொடுக்கு அவிழ்க்க நேரமின்றிச் செய்து முடிக்க வள்ளிப்பிள்ளைக்கு நாலாவது பிள்ளையும் ஜனிக்க நேரம் சரியாக இருந்தது.

வள்ளிப்பிள்ளை சத்தி, சத்தியாக எடுத்தாள் ஆறு முகத்தார் மிகவும் வெட்கப்பட்டார். இப்போது புகை யிலைப் பாடமேற்றியதால் ஒரு சிறு ஓய்வு, ஒரு மாதம் போனால் நாலாயிரம் கன்றுகளின் அடிக்கட்டைகளில் முளையிடும் கெட்டுகளையும் சுருட்டு உள்ளுடனுக்காக உலர்த்தி காசாக்க வேண்டும். இடையே ஒரு தடவை பாடங்களைப் பிரித்து ஐவ்வைந்து இலைகள் கொண்ட பத்துக் கட்டுகளை இணைத்து பெரு ஓலைக் கீற்றால் பெருங்கட்டுக்களாக்கி மறுபடி பாடம் வைத்து விட்டால் அப்புறம் என்ன, உரிய காலத்திற்கு மாத்தளை வியாபாரி களும் காலி வியாபாரிகளும் வந்து காசை அள்ளிப்போட்டு எடுத்துச் செல்வார்கள்.

சொல்லி வைத்தாற் போல மூத்தவனுக்கு அடுத்தவள் சரஸ்வதியும் புத்தி அறிந்து விட்டாள். வள்ளிப்பிள்ளைக் குத்தான் வேலை. அடிக்கடி வரும் குமட்டலை அடக்கிக் கொண்டு கத்தரிக்காய் சாறு, முட்டை வெள்ளைக்கரு என் றெல்லாம் பக்குவப்பட்ட மகளை வீட்டு மூலைக்குள் வைத்து பாகம் பண்ணிக் கொடுக்க வேண்டும். தான் பிராக்காக இருக்கும் போது சரஸ்வதி தண்ணீர்க் குடத் தடிக்கு போய்த் தண்ணீர் குடித்து விடாதபடி இளைய வளைப் பாடசாலையால் மறித்து அக்காள்காரிக்கு காவலும் வைத்து விட்டாள்.

தோட்ட வேலைப்பளு, வீட்டு நிகழ்வுகள் எல்லாம் சேர்ந்து நீண்ட இரண்டு மாத காலம் ஆறுமுகத்தாரை

www.tamilarangam.net



இராமசாமிச் சட்டம்பியாரிடம் போகவிடாது தடுத்து விட்டன.

வாத்தியாரைப் பார்க்கும் சோட்டை அவருக்கு வந்து விட்டது. ஒரு நாள் பொழுது கருகி விட்ட பின்பு அவர் வாத்தியாரிடம் போனார்.

''வாரும், வாரும் ஆறுமுகத்தார். என்ன கண்டு கன காலம்? முந்தநாள் சொன்னவன் தங்கச்சியும் புத்தி அறிஞ்சிட்டாளெண்டு. அதுதான் உம்மை இங்கினேக்கை காணக் கிடைக்கேல்லை'' என வாத்தியார் ஆறுமுகத்தாரை வரவேற்றார்.

''ஓமோம் வாத்தியார். தோட்டவேலைகளும் ஒரு மாதிரி ஒப்பேறியிட்டுது. திங்கக்கிழமைதான் நாள் பார்த்து பாடம் போட்டனான். அதோடை மனிசிக்கும் எப்பன் சுகமில்லை...''

ஆறுமுகத்தார் மேலே பேசமுடியாமல் வெட்கப்படுவதை வாத்தியார் புரிந்து விட்டார்.

''ஆறுமுகத்தார் நீர் விழுங்கிறதைப் பார்த்தால் மனிசிக்கு...'' வாத்தியாரும் மேலே கேட்க முடியாமல் வெட்கப்பட்டார்.

''ஓம் வாத்தியார், அதுதானாக்கும். சத்தி எடுக்கிறாள் பாவி.''

ஆறுமுகத்தாரும் எப்படியோ விஷயத்தைக் கக்கிவிட்டார்.

''அதுக்கேன் ஆறுமுகத்தார் வெட்கப்படுகிறீர்? இப்ப என்ன உமக்கு வயசா போட்டுது? வேறை ஊருகளிலை அறுவது வயதுவரை பெறுகிறவளவை தங்கப் பதக்க பெல்லே வேண்டுகினம். நீர் வெட்கப்படுகிறீர்.''

அந்தப் பேச்சு அத்துடன் நின்றது. அதை நீட்ட வாத்தியார் விரும்பவில்லை.

www.tamilarangam.net



"ஆறுமுகத்தார் பொடியன்ரை காரியம் சரிவராது போலைக் கிடக்கு. கொழும்பிலை உள்ளுக்கு ஏதோ வில்லங்கப்படுகிறாங்கள்போலை கிடக்கு. எங்கடை எம்பீயளும் விடுகிறாங்கள் இல்லையாம். அதுதான் இந்தக் கோசு வண்டிக்குக் கூப்பிடுகிற பொடியளின்ர காரியத்தைப் பின் போடுறாங்களாம்."

வாத்தியார் பேசும்போது ஆறுமுகத்தாரின் நெஞ்சு இடித்துக் குழம்பியது.

"அப்ப வாத்தியார் என்ன செய்வம்?" ஆறுமுகத்தார் மொட்டையாகக் கேட்டார்.

"எங்கடை எம்.பீயிட்டை முகுந்தனைப் பற்றிக் கதைச்சனான். உந்தப் படிப்போடை ஏதெண்டாலும் வேலை தேடலாம் எண்டும் சொன்னவர். உங்கடை விலாசமும் குடுத்திருக்கிறன்" வாத்தியாரின் இந்தப் பேச்சு ஆறுமுகத்தாருக்கு நிம்மதியைக் கொடுத்தது.

ஆறுமுகத்தார் வாத்தியாருக்குப் பயணம் சொல்லி விட்டு சைக்கிளோடு வெளியேறிய போது வாத்தியாரின் கல்லு ஒழுங்கைக்குள் மக்கி ஏற்றிய வண்டி ஒன்று வந்து மக்கி பறித்துக் கொண்டிருந்தது.

"என்ன ஆறுமுகத்தார்... துலையாலையே?" என்ற குரல் ஒன்று கேட்டுத் திரும்பிப்பார்த்தார். குணைப் புறோக்கர் கந்தப்பு தாடியைத் தடவிக் கொண்டே அருகே வந்தார்.

"இல்லைக் காணும், வாத்தியார் வீடு மட்டும் போட்டு வாறன்" என்று ஆறுமுகத்தார் சொல்லி முடிக்கு முன்—

"இம் முறைக்கு எங்கையெண்டாலும் குழை கிளை தீர்த்திருக்கிறீரோ?" எனக் கேட்டார் கந்தப்பு.

www.tamilarangam.net



ஆறுகத்தார் அதற்குப் பதிலாக "இல்லைக் கந்தப்பர், வாற பறுவத்துக்கு குழை தாழ்ப்பு துவங்க வேணும். ரெண்டு வண்டில் குழை அடுக்குப் பண்ணும்" என்றார்.

"என்ன காணும் வண்டிலோ...? இப்ப ரைக்ரரெல்லோ வந்திருக்கு" என்று சொன்னபோது, ஆறுமுகத்தாருக்கு சிறிது வெட்கம் வந்துவிட்டது.

"நீர் போங்காணும் ரெண்டு ரெக்ரர் குழை அனுப்பி விடுகிறன்" என்று கூறியபடி கந்தப்பர் பிரிந்து விட்டார். □

## 5

அடுத்த புகையிலைக் கண்டுப் போகமும் வந்து விட்டது. வாத்தியார் சொன்னது போல இந்த இடைக் காலத்துள் கண்டிக்கான அழைப்போ வரவில்லை. வாத்தியாருக்கு மதிப்புக் கொடுக்கும் எம்பியிடமிருந்து எந்தத் தகவலுமே வரவில்லை.

மூத்தவனும் ஆறுமுகத்தாரும் வேறு நான்கு பேர்களும் தோட்டக்கரைக் குழை தாழ்ப்பில் ஈடுபட்டிருந்தனர். இந்தத் தடவை தடித்த முறுக்கெடுத்த வேலணைக் குழையை புறோக்கர் கந்தப்பு அனுப்பி வைத்திருந்தார். இரண்டு நாட்களுக்கு முன்புதான் உடுவில் தாமோதிரியான் ரைக்ரரில் உடுவில் குழை பறிபட்டிருந்தது.

பொழுது கிளம்பி நெற்றிக்கு மேலாக உயர்ந்துவிட்ட வேளை குழை தாழ்ப்புக்காரர்களுக்குக் குரக்கன் ரொட்டியும் அலுமினியப் பாத்திரத்தில் தேநீரும் கொண்டுவந்த வள்ளிப்பிள்ளை வயிற்றையுந் தள்ளிக் கொண்டு வந்தான். முந்தானைக்குள்ளிருந்து அவசர அவசரமாக மூத்தவனிடம் கடிதம் ஒன்றைக் கொடுத்தாள். அதில் ஆறுமுகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முகுந்தன், முனியப்பர் கோவிலடி இணுவில் என விலாசமிடப் பட்டிருந்தது. ஒரு மூலையில் எம். பீயின் முத்திரையும் பொறிக்கப்பட்டிருந்தது.

மூத்தவன் அவசர அவசரமாகக் கடிதத்தை உடைத்துப் படித்தான்.

''ஐயா, எம். பீயின்றை கடிதம் வந்திருக்கு உடனடியாக வந்து காணட்டாம்,'' வாய் நிறைய மூத்தவன் கூறினான்.

ஆறுமுகத்தாரின் மநஞ்சுக்குள் ''வாத்தியார் சொன்னது போலை மூத்தவனுக்கு உத்தியோகம் வந்திருக்கு'' என்ற எண்ணம் கூத்தாடியது.

''அப்ப நீ போய் மேலைக் கழுவிப்போட்டு வெளிக்கிடு. நான் இந்த வரிசை சால் மறைஞ்சாப்போலை வாறன்'' என மூத்தவனைப் பார்த்துக் கூறினார் ஆறுமுகத்தார்.

''இப்ப அவர் எங்கையெண்டாலும் வெளிக்கிட்டுப் போயிருப்பார். பொழுது படேக்கை போவம் ஐயா!'' மூத்தவனின் இந்தப் பேச்சு அவருக்குச் சரியாகவே பட்டது.

மத்தியானப் பொழுது நான்றாகச் சரிவுக்கு வந்து விட்டதுடன் குழை தாழ்ப்பை நிறுத்திவிட்டு ''தம்பி நீ போய் குளிச்சுக் குளிச்சிப்போட்டு வெளிக்கிட்டு நில். இந்த மண் வெட்டியளையும் கொண்டு போய்வை. நான் ஒருக்கா வாழையனிட்டை போட்டோடியாறன்'' என்று கூறிக் கொண்டே வாழையன் வீட்டுப் பக்கமாக ஆறுமுகத்தார் போனார்.

வாழை வளர்ப்பில் விண்ணனாகவும் வாழை வியாபாரத்தையே தனியச் செய்யபவனாகவும் இருந்தபடியால் அவனுக்கு வாழையன் என்ற பட்டப் பெயர் வந்திருக்க வேண்டும்.

www.tamilarangam.net



வாழையனுடன் வாழைத் தோட்டத்துக்குள் நுளைந்து நல்ல இடைப் பழம் பழுத்த ஆமான கப்பல் குலை ஒன்றை வெட்டி எடுத்துக் கொண்டார் ஆறுமுகத் தார்.

குறைத்துக் கணக்கிட்டாலும் உத்தேசத்திற்கு நூறு காய்களுக்கு மேல் தேறும்! கப்பல் வாழை அப்படிக் காய்ப்பது இல்லை. அது இளம் ஈத்துக் குட்டையாக இருந்தபடியால் தலை ஈத்தை அப்படிப் பெற்றுவிட்டது.

குலையை வாழைச் சருகினால் நன்றாக மூடிக்கட்டி குலைச்சுமையோடு ஆறுமுகத்தார் வீட்டுக்கு வர இருட்டி விட்டது.

மூத்தவன் தகப்பனுக்காகக் காத்திருந்தான். கிணற் றடிக்குச் சென்று நாலு வாளி ஊற்றிவிட்டு வரவும் வள்ளிப்பிள்ளை கோப்பியைக் கலக்கி வைக்கவும் சரியாக இருந்தது.

கோப்பி நல்ல இளம் சூடு!

குடிப்பதற்கு இதமாகத்தான் இருந்தது. ஆனால் அதைப் பொச்சடித்து, பொச்சடித்து உறிஞ்சிக் குடித்து உருசி பார்க்க அவருக்கு நேரம் இல்லை. ஓர் இழுவையி லேயே இழுத்துவிட்டு வாழைக் குலையை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டு விட்டார். பின்னால் மூத்தவனும் தனது சைக்கிளில் சென்றான்.

எம் பீயின் வீட்டுக்கு ஏறக்குறைய ஐந்து மைல்வரை போக வேண்டும். போகும் வழியில் தான் இராமசாமி வாத்தியாரின் வீடும் இருந்தது. வாத்தியார் வீட்டுக்குப் பெரு வீதியில் இருந்து ஒரு குச்சொழுங்கைக்குள் போக வேண்டும். சமீபத்தில் கிராமசபைத் தேர்தல் வர இருந்த தால் இப்போதைய கிராமசபை உறுப்பினர் நான்கைந்து வண்டில் மக்கிகளைக் கொண்டு வந்து கொட்டி அரையும் குறையுமாகப் பரவி விட்டிருந்ததால் வாழைக் குலை

www.tamilarangam.net



பாரத்துடன் சைக்கிளை அப்பால் கொண்டு செல்ல முடிய வில்லை.

றோட்டுக் கரையில் வாழைக் குலைச் சைக்கிளை ஸ்ராண்டில் விட்டு மூத்தவனைக் காவலுக்கு விட்டு விட்டு வாத்தியார் வீடு வரை ஆறு முகத்தார் நடந்தே போனார். அவரின் கால்களில் கற் கூர்கள் குத்தி அவரைப் படாதபாடு படுத்தின.

ஆறுமுகத்தார் சென்றபோது வாத்தியார் வீட்டில் இல்லை. உடனேயே திரும்பி விட்டார். 'பரவாயில்லை. திரும்பி வரும்போது வரலாம்' என்பது அவர் எண்ணம்.

எம். பீ. வீட்டில் நிறையச் சனமாக இருந்தது. சனம் கலைந்து போகும் மட்டும் ஆறுமுகத்தாரோ, மூத்தவனோ அல்லது வாழைக்குலையோ எம். பீ கண்ணில் படவில்லை.

மணி பத்துக்கு மேலாகி விட்டது.

'அதிலை வந்து நிக்கிறது ஆறுமுகத்தார் போலை கிடக்கு?'

எம். பீ. கண்டுவிட்டார், கேட்டார்.

ஆறுமுகத்தாரும் மூத்தவனும் வெளிச்சத்துக்கு வந்தனர். வாழைக் குலை இன்னும் வெளிச்சத்துக்கு வர வில்லை.

"உதுதானே உம்மடை மோன்? ஸ்கந்தாவிலை பந்தடியிலை வலு கெட்டிக்காரன் எண்டு பேர்! வாத்தி யார் எல்லாம் எனக்குச் சொன்னவர்... யூனிவசிற்றித் தெரிவை இம்முறை நிறுத்திப் போட்டாங்கள். எங்கடை சீமெந்துப் பக்ரறிக்கந்தோர் ஒண்டு கொழும்பிலை இருக்கு. அதிலை வேலையள் கிடக்கெண்டு கேள்வி. அதுதான் வரச் சொல்லிக் கடிதம் போட்டனான். எல்லாத்துக்கும் பேந்து நாளைக் கொருக்கா என்னை வந்து சந்தியுமன். உமக் கெண்டபடியாத்தான் பொடியனை அதிலை சேத்து விட

www.tamilarangam.net



லாமெண்டு தெண்டிக்கிறன். எக்கணம் இஞ்சினியர்மார் அஞ்சைப் பத்தைக் கேப்பாங்கள். பிறகொருக்காச் சந்தியுமன்."

எம். பீ. தொடர்ச்சியாகப் பேசி முடித்து விட்டார். ஆறுமுகத்தாரும் தலையசைத்துச் சம்மதம் தெரிவித்து விட்டார்.

"போகயுக்கை வெறும் கையோடை போறதோ எண்டு என்ரை மனிசி விடமாட்டனெண்டிட்டு...மூத்தவன் அதை ஒருக்கா அவிட்டு உள்ளுக்குக் கொண்டு போய் அம்மாட்டைக் குடு" என்று கூறிக்கொண்டே ஆறுமுகத்தார் தயங்கி நின்றார்.

"ஆரும் கண்டா என்ன நினைப்பினம்? எண்டாலும் மனிசி குடுத்து விட்டதைத் திருப்பி அனுப்பிறதும் சரியில்லை" எம். பீயும் நாசுக்காக நடந்து கொண்டார்.

மூத்தவன் வாழைக் குலையுடன் விறாந்தையைத் தாண்டி உள்ளே சென்று திரும்பினான். "அப்ப நாங்கள் வாறம் ஐயா."

ஆறுமுகத்தார் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

"முகத்தார் நில்லும், ஒரு கதை" என்று கூறிக் கொண்டே எம். பீயும் முற்றத்துக்கு இறங்கி விட்டார்.

"தம்பி, நீ முன்னுக்குப் போ வாறன்" என்று கூறிக் கொண்டே ஆறுமுகத்தார் சற்றுத் தாமதித்தார்.

"முகத்தார், அஞ்சைப் பத்தைக் குடுக்கிற விஷயத்தை அடுக்குப் பண்ணு... வாத்தியாருக்கு மூச்சு விட்டிடாதையும். பிறகு அந்தாளோடை அண்டவிக்க ஏலாது" என்று ஆறுமுகத்தாரின் காதுக்குள் பக்குவமாகப் போட்டு வைத்தார் எம். பீ.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆறுமுகத்தாரும் மூத்தவனும் வீட்டுக்கு வந்துசர மணி பதினொன்றுக்கு மேலாகிவிட்டது. வள்ளிப்பிள்ளை அவர்களுக்காகக் காத்திருந்தாள்.

"என்னவாமப்பா எம். பீ." என வள்ளிப்பிள்ளை முந்திக்கொண்டு கேட்டாள்.

"அதெல்லாம் ஒரு மாதிரி ஒழுங்கு பண்ணித்தாறன் எண்டு சொல்லிப் போட்டார். மனிசன் சொன்னாச் சொன்னதுதான். ஓமெண்டு சொல்லாது சொன்னா உயிர் போனாலும் செய்யாமல் விடாது."

ஆறுமுகத்தார் அவருக்குப் புகழ் பாடினார். மூத்தவன் உணவருந்தி விட்டுப் படுக்கப்போன பின்புதான் ஆறுமுகத்தார் அடுக்களைக்குள் போய் உணவருந்தினார்.

"கொழும்பிலை எங்கடை சீமெந்து பைக்ரறியிலை இடம் கிடக்காம். அதிலை சேர்க்கலாமாம். அவங்கள் இஞ்சினியர் மாருக்குத்தான் அஞ்சைப் பத்தைக் குடுக்க வேண்டி வருமாம். அடுக்குப் பண்ணட்டாம். வாத்தியாருக்குத் தெரியப் படாதாம்!"

இதை ஆறுமுகத்தார் சொல்லி முடிக்கு முன்,

'அதுக்கென்ன அஞ்சு பத்துத்தானை' வள்ளிப்பிள்ளை அநாயாசமாகக் கூறிவிட்டாள்.

ஐஞ்சு பத்தென்றால் ஐந்தோ பத்தோ, அல்லது ஐம்பதோ நூறோ... அல்லாவிட்டால் ஐநூறோ ஆயிரமோ... அதுவுமில்லாவிட்டால் ஐயாயிரமோ பத்தாயிரமோ... இவைகளில் எது என்பதை அறியும் உலக ஞானம் வள்ளிப்பிள்ளைக்கு இல்லை.

அப்பாடா! ஒரு மாதிரி விஷயம் ஒப்பேறி விட்டது! புகையிலைத் தரைக்கு வாய்க்கால் தண்ணீர் விடத் தொடங்கிய காலத்தில் அகிழான் ஆறுமுகத்தாரிடி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிரேஷ்ட புத்திரன் முகுந்தன் என்ற மூத்தவனுக்கு சீமேந்து பக்ரறி தலைமைக் கந்தோரில் வந்து வேலையை ஒப்புக் கொள்ளும் நாள் குறித்து கடிதம் கிடைத்து விட்டது.

ஆறுமுகத்தாரின் வீடே மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தது. ஆறுமுகத்தாருக்குத் தோட்டத்திற்குப் போவது, முறைப்படி வேண்டியவைகளைச் செய்வது, வருவது சாப்பிடுவது எதுவுமே இப்போது மனதுக்குள் தெரிந்து செய்யப் படுவதாக இருக்க வில்லை.

இதுவரை எந்த உறவினர் உதவி பெற்றோ அவர் வாழவில்லை. அவரின் சுபாவம் அப்படி.

அவரின் நெருங்கிய இரத்த உறவினர்களாகவும் மனைவி வழி வந்த உருத்தினராகவும் பலர் கொழும்பில் இருந்தனர். யாரிடமும் கடமைப்பட அவருக்கு மனது வர வில்லை. மாத்தளையிலும் கொழும்பிலும் கடை வைத்துக் கொண்டு கொழும்பிலே குடித்தனம நடத்தும் புகையிலை வியாபாரத்தின் பிற்பகுதி வாடிக்கைக்கார ரான புங்குடுதீவு வீரசிங்கத்திற்கு மூத்தவனைக் கொண்டு கடிதம் எழுதுவித்தார்.

'நந்தாவில் முனியப்ப சாமியின் கிருபையை முன்னிட்டு என்மேல் பட்சம் மறவாத திரு வீரசிங்கத்திற்கு...' என்று ஆரம்பித்து வீட்டுச் சுகங்கள் எழுதி அவ் வீட்டுச் சுகங்களை கேட்டு விசாரித்து 'எனது மகன் முகுந்தனுக்கு உங்குள்ள சீமேந்துப் பக்ரறி தலைமைக் கந்தோரில் வேலை கிடைத்திருக்கிறது. இந்த மாதம் இருபத்தி ஓராம் திகதி இரவு றெயிலில் புறப்பட்டு காலை கொழும்புக்கு வருகிறோம். கொழும்பு ஸ்ரேசனில் எங்களைச் சந்திக்கவும்...' என்று எழுதி முடிப்பித்து வீரசிங்கத்தின் விலாசத்திற்கு நான்கு நாட்களுக்கு முன்னதாகவே அனுப்பி வைத்து விட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆறுமுகத்தார் தலைநகருக்குப் போகப் போகிறார். மூத்தவனாகிய முகுந்தனுக்குத் தைக்கப்பட்ட உடுப்புகளுடன் இவருக்குமாக வெள்ளை வெளேரென்ற துணியில் அரைக்கை நேஷனலும் ஒன்று தைக்கப்பட்டது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் வள்ளிப்பிள்ளையுடன் மணவறையில் கட்டியிருந்த மாறுகரைச் சேலம் பட்டு வேட்டியையும் விசிறிமடிப்பு மாறுகரைச் சால்வையும்தான் அரைக்கை நேஷனலுக்கு இணையாக அணிந்து கொள்ள வேண்டுமென்பது வள்ளிப்பிள்ளையின் ஆசை. அந்த ஆசை மூத்தவனுக்குப் பிடிக்கவில்லை. அவர் வழக்கமாக நல்ல காரியங்களுக்கு இரண்டாக மடித்து உடுக்கும் சருகையால் ஆன ஆயிரத்து எழு நூற்று மூன்று போட்ட வேட்டியையும் அதற்கிணையாக பரமாஸ் சால்வையையும் அணிந்துவர வேண்டுமென அவன் பிடிவாதம் பிடித்தான்.

'ஏன்டாப்பா, நான் மாறுகரை உடுக்கிறது உன்ரை நீளக் களுசானுக்குப் பொருத்தமில்லையெண்டு நீ வெக்கப்பட்டா எனக்கும் ஒரு நீளக் களுசானைத்தாவன் போட்டுக் கொண்டு வாறன்" என ஆறுமுகத்தார் மன வேக்காட்டுடன் சொன்னார். ஆயினும் இறுதியில் மகனின் விருப்பப் படியே ஆயிற்று.

மனைவிக்கும் பெட்டைகளுக்கும் கண்ணீர் மல்க பயணம் சொல்லிவிட்டு புறப்பட்டபோது மனைவியின் வயிற்றைப் பார்த்து பரிதாபமும் ஏக்கமும் அடைந்தார்.

'இஞ்சேர், நான் வாறதுக்கிடையிலை வயித்துக்கை ஏதெண்டாலும் செய்திட்டா முனியப்ப கோவிலடியிலை ஆரையும் விட்டு காரைப் பிடிச்சுக் கொண்டு இணுவில் ஆசுப்பத்திரிக்குப் போப்பா! கிட்டடி எண்டிட்டு நடந்து போயிடாதை!' என்று கூறிக்கொண்டே ஆறுமுகத்தார் புறப்பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொழும்பு ஸ்ரேசனுக்கு வரும்படிதான் ஆறுமுகத்தார் வீரசிங்கத்திற்குக் கடிதம் எழுதினார். இதனால் வீரசிங்கத்திற்குப் பெரும் இடைஞ்சலாகி விட்டது. கொழும்பென்றால் மருதானையையோ, கோட்டையோ என்பது பெரும் பிரச்சினையாக விட்டது. என்றாலும் அவர் அதை ஒருமாதிரிச் சமாளிக்க கொழும்புக் கடையில் மனேச்சராக இருந்த மைத்துனனுக்கு ஆறுமுகத்தார் பற்றிய உருவ அமைப்பை மனத் திரையில் பதியவைத்து அவனை மருதானை ஸ்ரேசனில் நிற்கவைத்து தான் கோட்டை ஸ்ரேசனில் நின்று கொண்டார்.

ஆறுமுகத்தார் கையில் தகர ட்றங்குப்பெட்டி சகிதம் இறங்க, மூத்தவன் பின்னால் இறங்கி வந்தான். ஆறுதலாகத் தனக்குப் பின்னால்தான் இறங்க வேண்டுமென்பது அவரின் கண்டிப்பான உத்தரவு.

வீரசிங்கத்தார் தனது போட் காரிலேயே வந்திருந்தார். அது வசதியாகி விட்டது. அவர்களைச் சுமந்து கொண்டு கார் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டது.

வீரசிங்கத்தாரின் வீடு வசதியான சிறிய மேல் அடுக்குக் கொண்ட வீடு.

மறுநாள் வீரசிங்கத்தாரின் காரிலேயே மூத்தவன் இராசா போலச் சென்று வேலையைப் பொறுப்பேற்றுக் கொண்டான். ஆறுமுகத்தாருக்கு இப்போதுதான் மனதிற்கு நிம்மதியாக இருந்தது. கடைசி நேரத்தில் வேலை கிடைக்காமல் போய்விடுமோ? என அடித்துக் கொண்டிருந்த அவர் மனம் அமைதியடைந்தாலும் அந்த அமைதிக்குள்ளும் பெறுமாதக்காரியான வள்ளிப்பிள்ளையை அவரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

'இஞ்சரும் முதலாளியார் வந்தவேலை முடிஞ்சது. நான் ராவைக்கே ரயில் ஏறவேணும்... நான் உம்மோடை ஒரு விஷயம் கதைக்க வேணும் எண்டு நினைச்சனான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உமக்கேன் ஒளிப்பான். நான் சொந்தக்காரர் ஆரிட்டை யும் வாய்விட மாட்டன். கனபேர் கொழும்பிலை இருக் கிறாங்கள். பொடியன் கடைச் சாப்பாடு திண்டு பழக்க மில்லாதவன். கைத்தீனிலை வளர்ந்தவன். அதுதான் நல்ல இடமாப் பாத்து சாப்பாட்டுக்கும் அறைக்கும் ஒழுங்கு செய்ய உம்மைக் கேக்க வாய் உன்னிப்போட்டு விட்டிட்டன்...!'

ஆறுமுகத்தார் ஒரு மாதிரி சுற்றி வளைத்துப் பேசி முடித்து விட்டார்.

''நல்ல கதைதான் ஆறுமுகத்தார்! கப்பல் போலை மேல்வீடு, கீழ்வீடு நான் வைச்சிருக்கிறன். பொடியனை வேறை எங்கையேனும் விடுவனோ, கேக்கிறன்...? பொடியன் மேல் வீட்டு அறையிலை தங்கட்டும். சாப்பாடும் வீட்டிலைதான். உமக்குச் செய்யாமல் வேறை ஆருக்குச் செய்யப்போறன்...''

## 6

வீரசிங்கத்தாரும் தன் முடிவைச் சொல்லிவிட்டார். வீரசிங்கத்தாரின் வீட்டில் அவரின் மகள் இருவரும் மரு மகள் ஒருத்தியும் இருப்பதை இந்த ஒரு நாள் இடை வெளிக்குள் அவதானித்துக் கொண்ட ஆறுமுகத்தாரின் மனத்திற்குள் 'குமர்ப்பிள்ளையள்' இருக்கிற இடத்திலை ஒரு இளந்தாரியை விடுகிறதோ? என்ற எண்ணம் கன வேளைதான் ஓடியது. ஆனாலும் அவர் அதைப் பொருட் படுத்த விரும்பவில்லை.

மகனை விட்டுப் பிரியும்போது அவனைக் கட்டித் தழுவிக் கொஞ்சிய ஆறுமுகத்தார் அழுதுவிட்ட காட்சியை அவ்வீட்டில் எல்லோரும் கண்டு விட்டார்கள் என்பதை நினைக்க மூத்தவனுக்கு வெட்கமாக இருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'ஏன் முகத்தார், தம்பியும் கவலைப்படுகுது, ரெண்டு நாளைக்குத் தம்பியோட நிண்டிட்டுப் போமன்' என்ற வீரசிங்கத்தாரின் கேள்விக்கு 'அங்கை தோட்டம் துரவுகள் அலக்கழிச்சுப் போம்! பேந்து ஒரு நேரத்திலை வந்து ஆறுதலாய் நிக்கிறன்' என்று பதில் கூறிவிட்டார் ஆறுமுகத்தார். வள்ளிப்பிள்ளை பெறுமாதம், நாளைக்குக் கனத்த நாள் என்பதைப்பற்றி அவர் மூச்சுக்கூட விடவில்லை.

அன்றே றயிலிலும் ஏறிவிட்டார்.

வள்ளிப்பிள்ளை கடைக்குட்டியனைப் பிரசவித்து விட்டாள்.

பக்தத்தில் இணுவில் வைத்திய விடுதி இருந்தும் உள்ளூர் மருத்துவச்சிக் கிழவி நாகாத்தையின் உதவியுமின்றியே அவளுக்குச் சுகப்பிரசவம் நடந்தது.

பொழுது கருகிய வேளை தோட்டக்கரைக்கு உள வாரம் புல்லுக்கட்டுடன் சென்று திரும்பி வந்தவளுக்கு இடுப்பு வலி காணவே, கோடிப்புறம் சென்று அழுக்குகளைப் புதைக்க பாரையால் சிறு கிடங்கொன்றைத் தோண்டி விட்டு ஆறுமுகத்தாரையும் மருத்துவிச்சி வீட்டுக்கு அனுப்பி விட்டு அடிவீட்டுக்குப் போனவள் மருத்துவிச்சி வரும் முன்னே பிரசவித்து விட்டாள். கையோடு மருத்துவிச்சியும் ஆறுமுகத்தாரும் வந்து சேர்ந்து விட்டனர்.

ஐந்துக்கு வெந்நீர் வார்க்க வேண்டும். பருத்தி, ஆடாதோடை ஆகியவைகளின் குழைகள் தோட்டத் தரைப் பக்கத்திலேயே கிடந்தன. நொச்சி மட்டும் கிடைக்கவில்லை. மூன்று மைலுக்கு அப்பால் உள்ள மூக்கிரான் பிட்டிக்குச் சென்று அதைப் பிடிங்கிவந்து ஒரு மாதிரி வெந்நீர் வார்வை முடிந்தது.

ஏழுக்கும் ஒன்பதுக்கும் இலை குழைகளின் வெந்நீர் வார்வை போக, பதின்ஒன்றுக்கு வேப்பம் பட்டைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தண்ணீர் வார்வைடும் முடித்துக் கொண்ட போதுதான் சடைக் குட்டியானுக்கு இன்னும் பிள்ளைப்பதிவு செய்ய வில்லை என்ற எண்ணம் அவருக்கு வந்தது.

முதலில் விதானையாரிடம் பதிந்து துண்டு வாங்கிச் சென்றுதான் பதிவுகாரனிடம் பெரும் பதிவு செய்ய வேண்டும்.

"இஞ்சை கேள், மூத்தவனுக்குப் பேர்வைச்சுப் பேந்து இடையிலை மாத்தினது போலை மாத்தாமை எப்பன் நல்ல பேராவை! இளையவன் எண்டு வைச்சுப்போடாதை ...சந்திரன் எண்டு வைக்கச் சொல்லித்தான் பெட்டையள் சொல்லுறாளவை." என வீட்டுக்குள் இருந்து அவருக்குக் கேட்கும் விதத்தில் வள்ளிப்பிள்ளை குரல் வைத்தாள்.

இந்தப் பதினொரு நாள் வரை மருத்துவிச்சிக் கிழவி பாகம் செய்து கொடுக்க அரைத்து வந்த மூத்த மகள் சரஸ்வதிக்குக் காய்ச்சல் வந்து விட்டமையால் ''உதென்ன பெரிய வேலையோ...?'' என்று கேட்டுவிட்டு, அம்மியடியில் உட்கார்ந்து காயம் அரைத்து அதை உடம்பில் பல இடங்களிலும் புரளவைத்த புனித வாசனையோடுதான் ஆறுமுகத்தார் பிள்ளைப் பதிவுக்குப் புறப்பட்டார்.

''மூத்தவன் பெயர் முருந்தன். அடுத்தவள் பெயர் சரசு. அதற்கு அடுத்தவள் பெயர் மல்லிகா. இளையவன் பெயர் சந்திரன்.'' பிள்ளைப் பதிவுக்காரன் வீட்டிலிருந்து திரும்பும் போது தனது பிள்ளைகளின் பெயர் இலட்சண வரிசையை மனதில் சொல்லிப் பார்த்துக் கொண்டு ஓடி வந்து சேர்ந்தார் ஆறுமுகத்தார்.

அடுத்த போகக் காலமும் தன்னாலேயே ஓடி வந்து விட்டது. வள்ளிப்பிள்ளை குழந்தைப் பிள்ளைக்காரி என்பதால் இம்முறை இடைக்காலக் காய் கறிகளைச் சுன்னாகம் சந்தைக்கும் மருதனாமடம் சந்தைக்கும் உரும்பிராய் சந்தைக்கும் திருநெல்வேலிச் சந்தைக்குமாக

www.tamilarangam.net



தாலா பக்கமும் நாள் பார்த்து, மாறி, மாறிக் கொண்டு செல்வதில் ஆறுமுகத்தாரே பெரும் பங்கினை எடுத்துக் கொண்டார்.

கோவா, போஞ்சி, லீக்ஸ், கரட், பீட்றுட் போன்ற பிற பிரதேசக் காய் இலை வகைகளுடன் போட்டி போட முடியாத நிலை ஒன்று ஏற்பட்ட போதும் நிலைமைக்கு ஏற்றபடி கூடிய குறைந்த விலைகளில் விற்றுக் கெட்டித் தனமாக நிலைமையைச் சமாளித்து வந்தார் ஆறுமுகத் தார்.

புகையிலைக் கண்டுப்போகம் வந்தது. காய்பிஞ்சுபடி முறைகளைப் முறைப்படியே முடித்துவிட்டு தரையை லீவாக்கி புகையிலை போகத்திற்கான முதல் கொத்துத் தொடக்கம், குழை தாழ்ப்பு வரையில் செய்து முடிக்க ஆறுமுகத்தாருக்குக் களை தட்டிவிட்டது.

வயதும் உடம்பின் பலத்தை இலேசாகத் தின்று கொண்டு வந்தது. கை உதவிக்கு மூத்தவனும் இல்லை. மனைவியும கைக் குழந்தையோடு!

மூன்று வருடத்திற்கு முன்னம் பந்து விளையாட்டுப் பார்வையின்போது வாங்கிய அடியினால் ஊமைக்காயங் களாகியிருந்த சில இடங்களில் வலியும் உளைவும் தோன்றி வதைத்தன. அதற்காக அவர் ஒட்டகப்புலம் முறிவு, தறிவு வைத்தியரிடம் சென்றார்.

'பழம்நோ கொஞ்சம் கொஞ்சமாகத்தான் எடுபடும் என்று ஒட்டகப்புலத்தான், நோவெண்ணெயை மட்டும் போட்டு உரசி அவரைக் குழற வைத்துவிட்டு எண்ணெ யையும் கொடுத்தனுப்பினார்.

இம்முறை புகையிலைக் கன்றுகள் சரியாகப் பலன் தரும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. செய்கை அப்படி. போதாக் குறைக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய் யப்பட்ட சேர்வைப் பசளையை ஊரில் உள்ள கமக்காரர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களெல்லாம் அள்ளி வந்து தங்கள் தோட்டங்களை நிரவி விட்டபோது ஆறுமுகத்தார் மட்டும் அதற்குப் பிடிவாத மாக மறுத்துவிட்டார்.

உடல் சுகமும் இருந்திருந்தால் அவர் தனது பிடி வாதத்தில் வென்றிருப்பார். ஆனால் இப்போது அவை இரண்டும் கிடையாததனால் அவரின் தரைகள் விழுக்காடு கண்டன.

மூத்தவனிடமிருந்து வாரம் தவறாமல் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. மாத முடிவில் இங்கே பணத்தைக் கையில் பெற்றுவிடும் வசதிக்காக சீலை ஒட்டப்பட்ட கவரில் பணத்தை வைத்து இன்ஸ்சூரன்ஸ் செய்து அனுப்பி வைத்தான், தோட்டத்தின் விழுக்காட்டை அவனின் பணம் ஓரளவு நிவர்த்தி செய்தது.

முதல் சம்பளத்தில் சகோதரங்களுக்கு உடு புடைவை களும், ஆறுமுகத்தாருக்கு வேட்டி, சால்வையும், வள்ளிப் பிள்ளைக்கு நீலநிற லங்காச் சேலையும் வாங்கி அனுப்பி யிருந்தான்,

ஆறு மாதங்கள் ஓடி விட்டன.

அவன் போனது நேற்றுப் போலத்தான் எல்லோருக் கும் தெரிந்தது.

'அண்ணை போயும் கன நாளாய்ப்போச்சு. ஒருதடவை தைப்பொங்லோடை வந்து தம்பி சந்திரனை ஒருக்காப் பார்த்துக் கொண்டு போங்கோ' என்ற விதத்தில் மகளைக் கொண்டே ஒரு கடிதத்தை மூத்தவனுக்கு எழுதிப்போட்டு விட்டார். உண்மையிலேயே அவருக்குத்தான் மூத்தவனை ஒரு தரம் பார்க்க வேண்டுமென்ற துடிப்பு, சோட்டை! மூத்தவன் பொங்கலுக்கு வந்தான்.

தோட்டத்தரையைப் பார்த்து விறைத்துப் போனான். அவனுக்கு அறிவு தெரிந்த காலத்திலிருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படி ஒருவறண்ட கோலத்தில் தோட்டம் இருந்ததை அவன் கண்டதில்லை, தந்தையிலும் இவ்வளவு விரைவில் ஓர் உடல் மாற்றத்தை அவன் எதிர்பார்க்கவில்லை.

''அம்மா, இதென்னம்மா ஐயாவின்ரை கோலம்?'' என அவன் தாயைக் கேட்டான்.

''நான் என்னடா தம்பி செய்யிறது? முந்திப் பந்தடி பாக்கேக்கை அடி வாங்கின உள் காயங்களாம்! எங்கை யெண்டாலும் ஆமான டாக்குத்தரிட்டைக் காட்டச் சொல்லி எத்தனை தரம் சொல்லிப் போட்டன். அதெல் லாம் ஒட்டகப் புலத்தான்ர எண்ணெயிலை சரிவருமெண்டு மனிசன் சொல்லுது. நீயும் சொல்லிப்பாரன் மோனை!'' வள்ளிப்பிள்ளை மகனிடம் சொன்னாள்.

அன்று மாலைபோல் மூத்தவன் தகப்பனிடம் சொன் னான்.

''ஐயா, பொயிலைக் கண்டுகளுக்கு அளுக்கணவன் நிறையப் புடிச்சுப் போச்சு. இண்டைக்குத் தோட்டப் பக்கம் போனனான். பக்கத்துப் பக்கத்துத்தோட்டக்காரர் எல்லாம் பம்பாலை தங்கடை தோட்டங்களுக்கு மருந்தடிக் கிறாங்கள், நான் நாளைக்கு பட்டணம் போய் மருந்து களும் பம்பும் வாங்கியாறன். நாங்களும் மருந்தடிப்பம்'' என்ற மூத்தவனின் பேச்சுக்கு ''என்ன நீர் இந்த ஆறுமுகத் தானுக்கு மருந்தடிச்சுக் காட்டப் போறீர் என்ன? சும்மா விசர்க்கதையை விட்டிட்டு உன்ரை வேலையைப்பார். உந்த கண்ட, கண்ட நஞ்சு மருந்துகளை அந்த வாயிலாச் சீவனுக்கு மேலை அடிச்சு அதுகளை வதைக்கிறதைவிட தோட்டச் செய்கையை நிறுத்தினாலும் பரவாயில்லை. இந்தக் கதையை என்னட்டைக் கதைக்காத'' என்று ஆறு முகத்தார் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். இது சட்டத் தமாக மூத்தவன் இதற்கு மேல் பேசவில்லை. தந்தையின் சுபாவம் அவனுக்குத் தெரியும்.

www.tamilarangam.net



''தோட்டம் போனாப் போகட்டுக்கு. நாளைக்குக் காலமை டாக்குத்தர் பீ. எஸ். சிட்டை உங்களைக் காட்டிக்கொண்டு வருவமே ஐயா?'' மூத்தவன் அழாக் குறையாகக் கேட்டான்.

''எட, தம்பி. இது அடிகாயமடா! விலா எலும்பிலை நோப்பட்டுப் போச்சு. இங்கிலீசு மருந்திலை எடுபடாது கண்டியோ. தமிழ் மருந்துதான் சரி. கொஞ்ச நாளெடுத்தாலும் ஒட்டகப்புலத்தான் மாத்திப் போடுவான்'' மகனின் மறுகோரிக்கையையும் ஆறுமுகத்தார் தட்டிக் கழித்து விட்டார். ஊர் வந்ததில் மூத்தவனுக்கு மனக் கவலைதான் அதிகரித்தது. ஆயினும் மூத்த தங்கச்சியின் மளமளவென்ற வளர்ச்சிதான் சற்றுத் திருப்தியைத் தந்தது.

சாமர்த்திய வளர்ச்சி என்பார்கள். அப்படி அவள் வளர்ந்து விட்டாள். அடுத்தவளும் இன்றோ நாளையோ புத்தி அறியும் பருவத்துக்கு வருகிறாள். தாயானவள் பிள்ளைத்தொல்லையுடன் சோர்ந்து போனாள்.

''தம்பி எப்படியடா வீரசிங்கத்தார் வீட்டுச் சாப்பாடு? கொம்மா சமைக்கிற மாதிரிக் கிடக்கே?'' ஆறுமுகத்தார் அவன் உணவுபற்றி விசாரிக்கத் தொடங்கி விட்டார்.

''இஞ்சத்தையப்போலை அம்மி குளவி எல்லாம் வைச்சு அரைக்கிறவை. உரலுக்கை பொரிமா இடிக்கிறவை. எல்லாம் இஞ்சத்தையத் தீன் மாதிரிதான். என்னிலை வலுவாரப்பாடு! தேத்தண்ணி, கோப்பி கூட நான் கடையிலை குடிக்கிறதில்லை. மத்தியானம் சாப்பாட்டுப் பொடியனிட்டை கந்தோருக்குச் சாப்பாடு அனுப்பிறவை. வேலைக்குப் போகேக்கை சுடுதண்ணி போத்தலுக்கை விட்டுத் தாறவை, என்னை ஒரு சதமும் சிலவழிக்க விடாயினம்'' மூத்தவனின் இந்தப் பதில் ஆறுமுகத்தாருக்கு மனநிறைவைத் தந்தது.

www.tamilarangam.net



'வீரசிங்கமெல்லோ மனிசன்!' என்று அவர் மனம் வீரசிங்கத்தை வாழ்த்திக் கொண்டது. மூத்தவன் வந்ததும் ஒரு தடவை இராமசாமி வாத்தியாரிடம் போய் வந்தான். போகும் போதும் அவரிடம் பயணம் சொல்லிவிட்டுத்தான் மூத்தவன் புறப்பட்டான்.

நான்கு ஆண்டுகள் கண்களை இறுக மூடிக்கொண்டு ஓடிவிட்டன. இந்த நான்கு ஆண்டுகால இடைவெளிக்குள் மூத்தவன் ஐந்து தடவைகள் ஊருக்கு வந்து போனான்.

தந்தையின் நோய் தீர்ந்து போனதிலும் அவர் பழைய பிடிவாதத்தை விடுத்து ஊரோடு ஒத்த விதத்தில் சேர்வை உரம் போட்டும் மருந்தடித்தும் தோட்டத்தை செய்கை பண்ணியதிலும் அவனுக்குப் பரமதிருப்தி. ஆனால் ஆறு முகத்தாருக்கோ தனது புகையிலை பழைய தரத்திற்கு இல்லை; பொதுவில் எல்லோருடையது போலத்தான் என்ற அதிருப்தி.

இப்போது அகிழான் ஆறுமுகத்தின் காணிப் புகையிலையை வியாபாரிகள் தேடிவந்து விலை கொடுக்கும் நிலை மாறி விட்டது.

கடைசியாக மூத்தவன் வந்திருந்த போது சகோதரி சரசுவதிக்கு ஒரு கலியாணப் பொருத்தம் வந்தது. பத்தாயிரம் ரூபா சீதனம் பேசிப் பொருத்தப்பட்டது.

கையோடு நின்று சீதனப் பிசகுகளைத் தீர்த்து அதிக ஆடம்பரமின்றி வீட்டோடுமட்டு மட்டாக மூத்த தங்கையின் கல்யாண வைபவத்தை முடித்து விட்டுக் கொழும்புக்குப் போன அடுத்த வாரமே இரண்டாவது தங்கை மல்லிக்கும் திருமணம் ஒன்று பொருந்தியிருப்பதாகக் கடிதம் வந்திருந்தது. பணமாக ரூபா இருபத்தையாயிரம் கேட்டிருக்கிறார்களாம். அவ்வளவு பணத்துக்கு மூத்தவன் எங்கே போவான்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''என்னவாம் பொடியன் மூஞ்சையைச் தொங்கப் போட்டுக் கொண்டு திரியிறான்?'' என்று வீரசிங்கத்தார் மனைவியைக் கேட்டார். அடுத்த நாள்காலையே வீரசிங் கத்தாருக்கு மனைவி காரணத்தைக் கூறிவிட்டு, ''பொடியன் காசுக்குத்தான் யோசிச்சுக் கொண்டு திரியுது அதுதான்—'' என்று இழுத்தாள்.

''அதென்னவும் இழுக்கிறீர் சொல்லுமன்!'' வீரசிங்கத் தார் கேட்டார்.

''இல்லை, கஷ்டப்பட்ட பொடியனாய் இருந்தாலும் நல்ல பிள்ளை! வீட்டிலையும் நாலு வருசம் இருந்து போட்டான். வேறை விதமாய் கதையள் வாறதுக்கிடை யிலை, இருவத்தையாயிரம்தானே குடுத்துப் போட்டு ஆறு முகத்தாரிட்டை கேட்டு வைப்பமெண்டு யோசிக்கறன். அவளும் இனிப் படிக்காள் போலைகிடக்கு...'' மனைவி மனதில் உள்ளதை அப்படியே சொல்ல முடிவில் மகளுச்கும் இனிப் படிப்பு ஓடாது என்று குறிகாட்டி முடித்து விட்டாள்.

மறுநாளாயிற்று.

மாலை மூத்தவன் வேலையிலிருந்து வந்து கோப்பி அருந்திக் கொண்டிருந்த போது,

''தம்பி முகுந்தன், நாளைக்கு லீவைப் போட்டிட்டு நீர் ஒருக்கா ஊருக்குப் போட்டுவாரும். குமர் காரியத்தைப் பதம் பார்க்கக் கூடாது. உங்கை காசு இருபத்தி ஐயா வீரத்துக்குச் சொல்லி இருக்கிறன் வாங்கிக் கொண்டு போய் கொய்யாவிட்டை குடுத்து இளையவளின்ர காரி யத்தையும் ஒப்பேத்திப்போட்டு வாரும். நாங்கள் பிறகு கொய்யாவோடையும் கொம்மாவோடையும் ஆறுதலாக் கதைக்கிறம்.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வீரசிங்கத்தாரின் இந்தப்பேச்சு மூத்தவனைத் திடுக்கிட வைத்தது. இப்படி ஒரு வழி பிறக்கும் என மூத்தவன் எதிர்பார்க்கவில்லை.

அந்த இருபத்தையாயிரத்திற்காகவும் தன்னுடன் வேலை செய்யும் நான்கு ஐந்து பேர்களிடம் மாறிப் பிரிக்கும் முயற்சியில் ஓரளவு வெற்றி கண்டிருந்தான். சுனித்திரா ஐந்தாயிரமும் ராகுலன் ஐந்தாயிரமும் மைக்கல் ஐந்தாயிரமும் தர ஒப்புக் கொண்டிருந்தனர். இன்னும் பத்தாயிரத்திற்குத்தான் வழிகாணவேண்டியிருந்தது வீரசிங்கத்தாரே முழுதையும் தர ஒப்புக் கொண்டதை அவனால் முதலில் நம்பமுடியாமல் இருந்தது.

வீரசிங்கத்தாரின் பெருந்தன்மையை அவன் யோசித்து யோசித்துப் பார்த்தான் அந்தப் பெருந்தன்மைக்கான மூல காரணத்தை அவனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. வயது இருபத்தெட்டு ஆயினும் அவன் இன்னும் மனதால் குழந்தை!

அவசரமாக உடுப்பை மாற்றிக் கொண்டு அவன் புறப்பட்டான்.

''நான் பெரிய தபால் கந்தோர் மட்டும் போட்டு வாறன்'' என்று மட்டும் எல்லோரும் கேட்கக் கூடியதாகக் கூறிவிட்டு வெளியே வந்த அவன் இரட்டைத்தட்டு பஸ்ஸைப் பிடித்துக் கொண்டு தபால் கந்தோருக்கு வந்து விட்டான்.

''கலியாண ஏற்பாடுகளை உடனே செய்யவும். நாளை நான் பணத்துடன் வருகிறேன்'' இப்படித் தந்தி ஒன்றினைக் கொடுத்து விட்டு படிக்கட்டுகளில் இறங்கிக் கொண்டிருந்தபோது. சுனித்திரா வயதான ஒரு பெண்ணுடன் எதிரே வருவது தெரிந்தது. இவனுக்கு முன்னால் வந்து விட்ட அவள் நின்று நிதானித்து அந்த வயதான பெண்ணுக்கு இவனைச் சிங்களத்தில் அறிமுகம் செய்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வைத்தாள். மற்றவளை அவள் தன் தாய் என்றாள். இவர் என்னுடன் வேலை செய்பவர் எனக் கூறினாள்.

இந்த நான்கு ஆண்டு காலத்தில் சரளமாக சிங்களம் பேச மூத்தவன் கற்றிருந்தான். அந்த வயதான பெண் இவனைக் கரம் கூப்பி வினயமாக வணங்கிக்கொண்டாள். இவனும் பதிலுக்கு வணக்கம் செலுத்திக் கொண்டான்.

இருவரும் கைத்தோள் மூட்டில் பொங்கி நின்ற மேற் சட்டைகளின் கீழ் நாட்டுப்புறக் கொய்யகூ வீசிறிகள் வழிய சேலை கட்டியிருந்தனர்.

மூத்தவன் அதிக நேரம் நிற்கவில்லை. அவனுக்கு மனதிற்குள் வெட்கமாக இருந்தது. அந்த வயதான பெண்ணுக்கு முன்னால் சுனித்திராவுடன் பேசுவதற்கு ஏன் இவன் அப்படி வெட்கப்படுகிறான்!

விடை பெற்றுக்கொண்டு அவன் வந்து விட்டான். வெகு விரைவிலேயே அவன் வீட்டுக்கு வந்து சேர்ந்ததைக் கண்ட வீரசிங்கத்தார், "இந்தப் பொடியன் குடத்து விளக்கு மாதிரிக் கிடக்கு. வெளியிலை சுத்திற ஆசைகூட எப்பனும் இல்லாத பொடியனாய் கிடக்கு" என மனதிற் குள் நினைத்துக் கொண்டார். அவரின் இந்த நினைப்பு களையடித்துச் சுழியோடி அவர் சொண்டுகள் வரை வந்து கொடுப்புக்குள் அடங்கி முடிவுற்றது.

## 7

தந்தியில் காட்டப்பட்டிருந்தபடி மூத்தவன் மறு நாளைக்கு மறுநாள் இணுவிலுக்கு வந்து சேர்ந்து விட்டான்.

ஆறுமுகத்தாருக்கு அவன் இவ்வளவு விரைவில் பணத் துடன் வந்து சேருவான் என்பதில் நம்பிக்கை வரவில்லை.

www.tamilarangam.net



தாயிடம் அவன் கைப்பையைக் கொடுத்து ''அம்மா, காசு கிடக்குப் பத்திரம்!'' என்று சொன்னபோதுதான் அவருக்கு நம்பிக்கை வந்தது.

''தம்பி, எங்கையடா காசு மாறுன நீ? மூத்தவனுக்கும் மாறிக்கொண்டு வந்து செலவழிச்ச கையோடை இளைய யவனுக்கும் எங்கை மாறுன நீ?'' ஆறுமுகத்தார் மனக் கசிவுடன் கேட்டார்.

''நான் வேறை சிநேகிதரிட்டைக் கேட்டு ஒழுங்கு பண்ணிக் கொண்டிருக்கேக்கை வீரசிங்கத்தார் வலியத் தந்தவர். எல்லாம் நாங்கள் வந்து ஐயா அம்மாவோடை கதைக்கிறம். முதலிலை இதைக் கொண்டு போய் கலி யாணத்தை ஒப்பேத்தச் சொல்லித் தந்தவர்!''

மூத்தவன் சொல்லி முடித்துவிட்டான். அவன் அடி வளவில் புதிதாகக் கட்டப்பட்ட கக்கூஸ் பக்கம் சென்று விட்டபோது,

''பாவம் அந்த மனிசன். ஒரு நல்ல இரக்கமுள்ளது! வேறை ஆரும்மண்டா இப்பிடிச் செய்வினமே? அவர் எங்கடை ரத்த உருத்துக்காரரும் இல்லையப்பா!'' வள்ளிப்பிள்ளை ஆறுமுகத்தாரைப் பார்த்துக் கூறினாள்.

''ஓமோம், முந்தி இனசனமும் இல்லைத்தான். இப்ப இனசனமா வரத்தான் காசு குடுத்திருக்கிறார் எண்டு தான் நினைக்கிறன். ஒண்டுக்குரெண்டு பெட்டையள் எல்லே அந்நாளுக்கு இருக்குது''

ஆறுமுகத்தார் புதிர் போட்டுப் பேசினார். இது இப்போது வள்ளிப்பிள்ளைக்கு இலேசாக விளங்கி இருக்க வேண்டும்!

''அப்பிடியெண்டாலும் தான் என்ன? இப்பிடிப்பட்ட மனிசன் மூத்தவனுக்கு மாமனாரா வரக் குடுத்துக் கிடக்கே?'' என்று அவள் கேட்டாள்.

www.tamilarangam.net



"உனக்கு விளங்கீட்டது என்ன? பார் அவவின்ரை புன்சிரிப்பை!" என்று கூறிக்கொண்டே சூரி மண்வெட்டியைத் தொட்டுக்கொண்டு "அவனுக்கு ரெண்டு முட்டை பொரிச்சு புட்டைக் குடடப்பா?" என்று கூறினார்.

"என்ன, இண்டைக்கு வெள்ளிக்கிழமையிலையோ...? முட்டை பொரிக்கிறதோ..." என்றாள் வள்ளிப்பிள்ளை.

"ஊர் தேசத்திலை இருந்து பிள்ளை அவசரப்பட்டு ஓடியாறான். இவ வெள்ளிக்கிழமை எண்டு விண்ணாணம் கதைக்கிறா...! எடி, இளையவள், கொக்கா வீட்டிலை இருந்தா இத்தறிதியிலை கொண்ணனுக்கு முட்டை அவிச்சுக் குடுத்திருப்பாள். கொம்மா சைவக்காரி. அவ இண்டைக்கு மச்சச் சட்டியைத் தொடமாட்டா, நீ ரெண்டு முட்டை அவிச்சுக் கொண்ணனுக்குக் குடு. நான் உதிலை ஒருக்காத் தோட்டப் பக்கம் போட்டு வாறன். பொழுதுபடேக்கை பெருவரம்புக் கரையிலை அகிழான் புத்தொண்டு கண்டனான். அது எக்கணம் கிழங்குகளை நறுக்கித் தள்ளப்போகுது!" என்று சொல்லிக்கொண்டே சூரி மண்வெட்டியையும் எடுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தார். அவர் மண்வெட்டியை எடுத்து விட்டால் அவரின் கூளைவால் நகுலன் நாயும் அவருக்கு முன்னால் ஓடிச் செல்வது வழக்கம்.

நான்கு நாட்களின் பின் மல்லிகாவின் கலியாணப் பதிவும் நடந்து முடிந்தது. அவளுக்குக் கணவனாக வந்தவன் அளவெட்டியைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மனேச்சர்.

கூட்டுறவுச் சங்கத்தின் மனேச்சர்மாருக்குச் சம்பளம் கம்மியாக இருந்தாலும் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் அவ்வேலைக்கு இடைஞ்சல் இல்லாமல் நின்று பிடித்தாலே போதும். சீவிய காலம் வரை போதுமான அளவுக்கு அவர்கள் சம்பாதித்துக் கொள்வார்கள். இந்தச் சூத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரம் தெரியுமளவுக்கு ஆறுமுகத்தார் மன விருத்தி அற்ற வராயினும் ஊரில் உள்ள பலருக்கு இந்த மனேச்சர் சம் பாத்தியம் பற்றிய சூத்திரம் தெரிந்திருந்தது. அதனால் பலர் அந்த மாப்பிள்ளையை எடுப்பதற்குப் போட்டி போட்டார்கள். ஆனால் அந்த மாப்பிள்ளை மல்லிகா வைப் பெண் பார்த்த அன்றே ''முடித்தால் மல்லிகாவை அல்லது இல்லை'' என்ற முடிவுக்கு வந்துவிட்டதும், சாதகப் பொருத்தம் பிரமாதமாக அமைந்து விட்டதும் வசதியாகி விட்டது.

எல்லாம் முடிந்து மூத்தவன் பிரயாணத்துக்குத் தயாரானபோது, ''எட, தம்பி அந்த மனிசனும் உன்னை நம்பிக் காசு அள்ளித் தந்து போட்டுது. அந்தாளின்ரை நம்பிக்கையைக் கெடுத்துப் போடாதை!'' வள்ளிப்பிள்ளை இதைக் கூறியபோது,

''எணையம்மா! நான் அங்கை ரெண்டு மூண்டு பேரிட்டை அடுக்குப் பண்ணி வைச்சிருக்கிறன். ஒரு பதி னைஞ்சு தேறும். மிச்சத்தையும் பாத்துப் பிரட்டி அவை யின்ரை காசை ஐஞ்சாறு நாளையில் குடுத்திடுவன்'' இப்படி மூத்தவன் பதில் கூறினான்.

''அதுக்குச் சொல்லேல்லையடா தம்பி. அந்தாளும் ரெண்டு குமருகளை வைச்சிருக்கு. அதை மனசிலை வைச்சுக் கொண்டுதான் காசு தந்திருக்கிறார் எண்டு நினைக்கிறன். கொய்யாவும் சொன்னவர். அதுதான்...'' தாயாரின் இந்தப் பேச்சு முடிவதற்கிடையில்,

''அதெல்லாத்தையும் குழந்தைப் பிள்ளைக்குச் சொல் லுற மாதிரிச் சொல்லிக் கொண்டிருக்கிறதேயடியாத்தை! றெயிலுக்கு நேரம் செண்டுபோச்சு! எக்கணம் அந்தாளும் மனிசியும் வாறதெண்டும் சொன்னவை வருவினந்தானே! வரட்டுக்கன். பேசி முடிவெடுப்பம்! சாதகங்களும் பொருந் துதோ எண்டு பாக்கவல்லே வேணும். அதுகளைப் பேந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாப்பம் வெளிக்கிடு தம்பி...!'' என்ற ஆறுமுகத்தாரின் குரல் அடுக்களை வரை கேட்டது.

மூத்தவன் றயில் ஏறிவிட்டான். அப்போதுதான் அவன் மூளை சுழன்று சுழன்று வேலை செய்யத் தொடங்கியது.

வீரசிங்கத்தார் வலியப் பணம் கொடுத்ததும் ''எல்லாம் நாங்கள் வந்து ஐயா அம்மாவோடை கதைக்கிறம்'' என்று சொன்னதும் தாயும் தகப்பனும் இதற்கு முன் கூட்டியே இன்று சம்மதம் தெரிவித்து விட்டதுபோல் பேசியதும்,

''நிலைமை இப்படித்தான் என்பதை வேளையோடு தெரிந்திருந்தால் அந்தப் பண உதவியைப் பெறாமலேயே விட்டிருப்பேன்'' என்ற விதத்தில் அவன் எண்ணினான்.

அந்த வீட்டில் வாழ்ந்துவிட்ட இந்த நாலாண்டு கால வாழ்க்கையில் என்றாவது ஒருநாள், அல்லது ஒரு கணப்பொழுது தன்னும் இப்படி ஓர் உறவுக்கான ஒரு சிந்தனை மின்னல் அவனுக்குத் தோன்றியதில்லை. அந்தப் பெண்களில் யாருக்காவது ஒருத்திக்குக் கூட அப்படித் தோன்றியிருக்க முடியாது என்பது அவனின் நம்பிக்கை!

வீரசிங்கத்தாரினதும், மனைவியினதும் அந்தப் பெண்களினதும் குணங்கள் எதிலும் கறை கண்டுபிடிக்க முடியாதுதான்.

''எது எப்படியிருந்தாலும் கொழும்புபோன உடனேயே முன்னையவர்களின் உதவியோடு மிகுதிப் பத்துக்கும் வழி தேடி இந்தக் கடனை அழித்து விட வேணும்'' என்ற உறுதியான முடிவுக்கு அவன் வந்தான். அத்தோடு வேறு எங்காவது தங்குவதற்கான இடமும் பார்த்துவிட வேண்டும் என்றும் யோசித்தான்.

www.tamilarangam.net



ட்றெயின் குறிப்பிட்ட நேரத்திற்கு கொழும்பு கோட்டை நிலையத்திற்கு வந்து சேர்ந்து விட்டது. மூத்தவன் ஸ்ரேசனை விட்டு வெளியே காலடி எடுத்து வைத்த போது "தொரே!" என்ற ஒரு பழகிய குரல் கேட்டது. வீரசிங்கத்தாரின் கார் டிரைவர் சில்வாவின் குரல்.

"ஐயா, அனுப்பியிருக்குத் தொரே!" என்றும் கூறி அவனின் கைப்பையை வாங்கியபடி காருக்குள் ஏறினான்.

கார் சுற்றி வந்து நேராக மணிக்கூண்டு வீதியைத் தாண்டி, கொச்சிக்கடை வீதியை அண்மித்துக் கொண்டிருந்தபோது... "நான் இண்டைக்கு வருவேன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்" என சிங்களத்தில் மூத்தவன் கேட்டான்.

"இன்றைக்குத் திங்கட்கிழமையல்லவா வேலைக்குக் கட்டாயம் வருவீர்களென்று ஐயாவுக்குத் தெரியும்" என அவனும் சிங்களத்தில் கூறினான்.

வர, வர நிலைமை மோசப்பட்டுக்கொண்டு வருவதாக மூத்தவனின் உள்மனம் கூறியது.

சில நாட்கள் கழிந்து விட்டன. அன்று அவன் வேலையில் இருந்து திரும்ப நேரம் சற்று ஆகிவிட்டது. இப்படி அவன் நேரம் கழித்து வந்ததில்லை. அப்படி நேரம் கழித்து வருவதாக இருந்தாலும்கூட வீரசிங்கத்தாரிடம் வேளையோடு சொல்லி வைத்திருப்பான்! இப்போது அவன் வீட்டுக்கு வந்த நேரம் 'ரீ' குடிக்கும் நேரமல்ல; இரவு உணவு அருந்தும் நேரத்திற்கு மேல். வழமையாக எப்போதாவது நேரம் கழித்து வர நேர்ந்துவிட்டால் அவனின் அறை மேசையில் அவனுக்காக உணவு வட்டக்கூடையால் மூடி வைக்கப்பட்டிருக்கும்.

இன்று அம்மாளே அவனிற்காக கோலில் காத்திருந்தாள். "தம்பி இப்பதான் வாறீரோ? வேலை முடிய செண்டு போச்சுப் போலை கிடக்கு...!" இப்படி அம்மாள் கேட்டாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''வேலை நேரத்துக்கு முடிஞ்சு போச்சு. வேறை ஒரு அலுவலாய் போனாப்போலை சுணங்கிப் போச்சுது அம்மா...'' என்று கூறி அறைக்குச் சென்று, உடுப்பு மாற்றி பாத்றூம் சென்று உடம்பைக் கழுவிக்கொண்டு வந்தபோது அம்மாள் உணவை மேசையில் நிரைப்படுத்திக் கொண்டிருந்தாள்.

''வையுங்கோ, அம்மா நான் எடுத்துச் சாப்பிடு கிறன்.'' என்று அவன் வெட்கத்தோடு சொன்னபோது... ''ஏன் தம்பி நான் போட்டுத் தரக்கூடாதோ? வீட்டிலை அம்மா போட்டுத் தாறேல்லையா?'' என்றும் அம்மாள் கேட்டாள். அதற்குப் பின் பேச்சில்லை.

பெரும் மன அழுத்தத்தோடு மூத்தவன் உணவருந் தினான். உணவுப் பாத்திரங்களை எடுத்துச் சென்ற சிறிது வேளையில் இளம் சூடான பால் கிளாசுடன் அம்மாள் வந்தாள்.

''அம்மா இதை எண்ணிப் பாத்திட்டு உள்ளுக்குக் கொண்டு போய் வையுங்கோ!'' என்று கூறிக்கொண்டே காசுக் கட்டொன்றை எடுத்து இரண்டு கைகளாலும் அவளிடம் நீட்டினான் மூத்தவன்.

அம்மா திடுக்கிட்டு விட்டாள்!

இதை அவள் எதிர்பார்க்கவில்லை.

இருந்தாலும் அவள் ஏதாவது சொல்ல வேண்டும். ''இப்ப, ஏன் தம்பி அவசரப்பட்டனீர்? உதுக்கு இப்ப என்ன அவசரம்?'' என்றாள்.

''இல்லையம்மா நான் கேக்கிறதுக்கு முந்தியே, நீங்கள் பெரிய மனதோடை தந்தனீங்கள்! இப்ப நீங்கள் கேக்கிற துக்கு முந்தியே நான் தந்திட வேணுமெண்டுதான்... நீங்கள் செய்த உதவியை நானும் என்ரை குடும்பமும் ஒருநாளும் மறக்க மாட்டோம்'' இதற்குமேல் அவனும் பேசவில்லை. அம்மாளும் பேசவில்லை. அவனோடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதற்கு மேல் பேசுவது நாகரிகமற்றது என்பது அவள் உள் நினைப்பு.

மூத்தவன் படுக்கைக்குப் போய் விட்டான். அவனுக்கு இப்போதுதான் மனம் சற்று நிம்மதியடைந்திருந்தது. இனி அவர்களின் மனம் நோகாத மாதிரி மெதுவாக வேறு இடத்தையும் பார்த்துவிட வேண்டும் என நினைத்துக் கொண்டான்.

அம்மாளும் வீரசிங்கத்தாரும் இரவு வெகு நேரம் குசுகுசுப்பதைப் போல அவன் செவிப்புலனுக்கு ஓர் உணர்வு! அப்படியே அவன் தூங்கிவிட்டான்.

## 8

''ஏனப்பா, மூத்தவனை இனியும் வைச்சிருக்கிறதே? வயதும் வாற பங்குனியோடை இருவத்தெட்டு முடியப் போகுது...கொழும்பிலை இருக்கிறவன் எல்லாம் சொல்லிக் கொண்டே? அவனை ஒரு கட்டையிலை கட்டிப்போட வேணும். வாறம் எண்டு சொன்ன வீரசிங்கத்தாரிட்டை இருந்து இரண்டு வரியிலை ஒரு மறுமொழியையும் காணேல்லை. அவன்ரை காயிதத்திலும் ஒண்டையும் எழுதக் காணேல்லை...'' என மெதுவாகக் கதையைத் தொடங்கி வைத்தாள் வள்ளிப்பிள்ளை.

''இஞ்சைபார் இவளின்ரை கதையை... மூத்தவன் காயிதத்திலை எழுதுவானெண்டு விசர் நினைப்பெல்லே நினைக்கிறாள். இரண்டு தங்கச்சிமாரையும் கரைசேர்க்கு மட்டும் சட்டுப் பெட்டிபோல இருந்தவனை இவள் என்னெண்டு நினைச்சுப்போட்டாள். வீரசிங்கத்தார் ஆறுதலாய் எழுதட்டன். இப்ப என்ன அவசரம்? அவரும் அவசரப்படுத்தினாரெண்டா இப்ப செய்யிரதுக்கு எங்களிட்டை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காசு சனங்க கிடக்கே? முந்தின கோசுகளைப் போல போயிலையும் வாய்க்கேல்லை. தாலி கூறைக்கெண்டாலும் வேண்டாமே? தாலி கூறைக்கும் பணம்தா எண்டு வீரசிங்கத்தாரைக் கேக்கிறது மரியாதையே?'' ஆறுமுகத்தாரும் பதில் சொல்லிவிட்டு மருதனாமடச் சந்திக்குக் குழை பார்க்கப் புறப்பட்டபோது மூத்தவனின் கடிதமும் வந்தது.

''தம்பியின்ரை காயிதமும் வந்திட்டுது!'' என்றுகூறிக் கொண்டு வள்ளிப்பிள்ளை கடிதத்தை எடுத்து மல்லிகாவிடம் படிக்கக் கொடுத்தாள். கடிதத்தின் புதினத்தை அறிந்துகொண்டு போகும் நோக்குடன் ஆறுமுகத்தார் முற்றத்திலேநின்றார்.

மல்லிகா கடிதத்தைத் திறந்தபோது அதற்குள்ளிருந்து புகைப்படமொன்று கீழே விழுந்தது. அதை வள்ளிப்பிள்ளை கண்டாள். இரண்டு உருவங்கள் இருப்பதைப் போன்று கண்களுக்குத் தெரிந்தது.

''இஞ்சை பாரம்மா அண்ணையும் ஆரோ ஒரு பெட்டையும்...'' மல்லிகா சொல்லி முடிக்கவில்லை. ஆறுமுகத்தாரின் உடல் நடுங்கியது. தலையைச் சுற்றிக் கொண்டு வருவதைப் போல இருந்தது. வள்ளிப்பிள்ளை அவளின் கைகளில் இருந்த படத்தைப் பிடுங்கிப் பார்த்தாள்.

''எடி காயிதத்தைப் படியெடி!'' என்று பலமாகக் கத்தினாள். மல்லிகா வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே படித்தாள்.

''எனது அன்பான அம்மா, ஐயா ஆகியோருக்கு... உங்கள் மகன் எழுதிக்கொள்வது. எனக்கும் இருபத்தொன்பது வயதாகப் போகிறது. இன்றுவரை உங்களுடைய விருப்பமின்றி, உங்கள் சம்மதம் பெறாமல் நான் ஒரு காரியமும் செய்ததில்லை. ஆனால் இப்போது அந்த

www.tamilarangam.net



விரதத்தை மீறிவிட்டேன். உங்களைக் கேட்டால் நிச்சய மாக நீங்கள் சம்மதிக்கமாட்டீர்கள் என்ற பயத்தில் நான் இங்கு 'சுனித்ரா' என்ற சிங்களப் பெண்ணைப் பதிவுத் திருமணம் செய்துவிட்டேன். என்னை மன்னித்துக்கொள் ளுங்கள். உங்கள் சம்மதம் கிடைத்தால் நான் அவளையும் அழைத்துக் கொண்டு வருவேன். இப்போது திருமணப் பதிவு மாத்திரந்தான் நடந்திருக்கிறது. உங்கள் சம்மதம் கிடைக்காதவரையில் நான் முறைப்படி கல்யாணம்செய்து கொள்ள மாட்டேன். இது சத்தியம்; முனியப்பசாமிமேல் சத்தியம். எங்கள் கிராமம் போன்ற ஒரு கிராமத்துப் பெண்தான் அவள். தந்தை ஒரு விவசாயி. எல்லாவகை யிலும் மிக நல்லவர்கள்.''

மல்லிகா ஒருவாறு கடிதத்தைப் படித்து முடித்து விட்டாள். ஆறுமுகத்தார் முற்றத்தில் அப்படியே நிலை குத்தி நின்று அரையில் கட்டியிருந்த சவுக்கத்தைக் கழற்றி முகத்தை மூடிக்கொண்டு அழுதார்.

காலைதான் மல்லிகா முருக்கமிலைச்சாறு கலந்து மெழுகிவிட்ட திண்ணையில் வள்ளிப்பிள்ளை சுருண்டு படுத்துவிட்டாள்.

கடிதத்தைப் படித்து முடித்து விட்டு, மல்லிகா அடிக் களைக் குந்தில் குந்திய படி வெளி முற்றத்தை முறைத்துப் பார்த்தபடி இருந்தாள். கடைக்குட்டி சந்திரன் மட்டும் எதைப் பற்றியும் கவலை அற்றவனாக முதல்நாள் மல்லிகா செய்துகாட்டிய மாங்கொட்டை விளையாட்டை ஒத்திகை பார்த்துக் கொண்டு நின்றான்.

வெயில் ஏறிக்கொண்டிருந்தது.

வீட்டில் மூச்சுப் பேச்சே இல்லை. ஆறுமுகத்தாரும் நின்ற நிலை கலைந்து அப்படியே குந்திவிட்டார்.

நீண்ட நேரமாயிற்று!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆறுமுகத்தார் எழுந்து சவுக்கத்தை உதறிப் பெருமூச்சு விட்டபடி வெளியே போனார். நேராக ராமசாமி வாத்தியார் வீட்டிற்குத்தான் போய்ச் சேர்ந்தார். வாத்தியார் வீட்டு விறாந்தையில் நான்கு ஐந்து பையன்களுக்கு ஆங்கிலப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

"ஆறுமுகத்தார் ஏதும் அவசரமோ?" என்ற வாத்தியாரின் கேள்விக்கு, "அவசரம் ஒண்டுமில்லை வாத்தியார். நீங்கள் பாடத்தை முடிச்சுக் கொண்டு வாருங்கோ" என்று சொல்லிவிட்டு வெளிவிறாந்தை வாசலில் இருந்துவிட்டார் ஆறுமுகத்தார்.

பாடம் முடிய வெகு நேரம் எடுக்கவில்லை. பாடத்தை முடித்துக்கொண்டு மாணவர்கள் கலைந்து போக, வாத்தியார் ஆறுமுகத்தாரிடம் வந்தார்.

வாத்தியாரின் முகத்தை நேருக்கு நேர் பார்த்ததும் ஆறுமுகத்தாருக்கு அழுகை வந்துவிட்டது. வாத்தியார் தடுமாறிவிட்டார் "என்ன, ஆறுமுகத்தார் என்ன நடந்தது?" என அவசரமாகக் கேட்டார். ஆறுமுகத்தாருக்கு உடனே பேச்சு வரவில்லை. அவர் விக்கிக் கொண்டிருந்தார். ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டதாகவே அவர் எண்ணினார். அதனால் ஆறுமுகத்தாரின் சலிப்புத் தீருமட்டும் அவரை அழவிட்டார். வாத்தியார் பெண்சாதி வெளியே எட்டி எட்டிப் பார்த்தாள்.

நல்ல வேளையாக வாத்தியார் வீட்டில் பிள்ளைகள் ஒன்றும் இல்லை. இருந்தால் அவர்கள் ஆறுமுகத்தாரைச் சூழ்ந்து கொண்டிருப்பார்கள்.

ஆறுமுகத்தாரின் விம்மல் ஓய்ந்தது.

"வாத்தியார்...... நான் என்னத்தைச் சொல்ல...... மூத்தவன் எங்கள் எல்லாரரையும் ஏமாத்திப் போட்டான் வாத்தியார்!"

www.tamilarangam.net



ஆறுமுகத்தாரின் இந்த வார்த்தைத் தொடர் வாத்தியாருக்கு ஓரளவு விஷயத்தை விளங்க வைத்திருக்க வேண்டும்.

''ஏமாத்திப் போட்டு எங்கையன் வெளிநாட்டுக்குப் போட்டானோ...?'' என்று வாத்தியார் கேட்டார்.

ஆறுமுகத்தார் சவுக்கத்தால் கண்களைத் துடைத்துக் கொண்டு ''அவன் ஒரு சிங்களப் பெட்டையைக் கட்டி யிட்டான் வாத்தியார்!'' ஆறுமுகத்தார் பேசிமுடிக்க வில்லை ''எட, உதுதானே...?'' என வாத்தியார் சாதா ரணமாகக் கேட்டார்.

''ஆறுமுகத்தார் உம்மை நான் தெரியாமல் கேக்கிறன். அவனுக்கு இப்ப வயது எத்தினை? முப்பதுக்குக் கிட்டத் தட்ட இருக்குமெல்லே? தங்கச்சிமார் ரெண்டுபேரையும் கட்டிக் குடுத்துப் போட்டுத்தானே அவன் கட்டியிருக் கிறான். நான் கேக்கிறன் எண்டு குறை நினைக்காதையும்; அவனைப் பற்றி இத்தினை காலமும் ஏதும் கூடாத கதை கிதை கேள்விப்பட்டிருக்கிறீரே? முப்பது வயது மட்டும் கட்டுப்பாடாய் இருந்த பெடியன் இப்ப தனக்கெண்டு ஒண்டைத் தேடிப்போட்டான். இதிலை என்ன பிழை?''

வாத்தியார் பேசி முடிக்கும்வரை காத்திருந்த ஆறு முகத்தார் ''அவன் கட்டினதிலை ஒரு பிழையும் இல்லை வாத்தியார். சிங்களப்பெட்டையையெல்லே கட்டிப்போட் டான். இந்தமாதிரிக் கோழி இறகுக்கை வைச்சுக்காத்த மாதிரிக் காத்த எனக்கு ஒருகதை சொன்னானே?'' என்று அவசரப்பட்டுப் பேசினார்.

''இஞ்சேரும் முகத்தார், நான் கேக்கிறன். ஒளியாமல் சொல்லும். நான் சிங்களப் பெட்டை யைக் கட்டப்போற னெண்டு உம்மைக் கேட்டிருந்தா நீர் சம்மதிச்சிருப்பீரே? என்ரை முகத்தைப் பாத்துச் சொல்லும்பாப்பம்.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாத்தியாரின் இந்தப்பேச்சு ஆறுமுகத்தாரின் வாயை அடைத்து விட்டது. அவர் எதுவும் பேச முடியாமல் இருந்தார். அதன் பின்பு வாத்தியாருடன் ஆறுமுகத்தார் பேசி முடித்துப் புறப்பட மதியம் திரும்பிவிட்டது. இடையே வாத்தியாரின் மனைவி இருவருக்கும் இரண்டு கோப்பியைக் கலக்கி வந்து கொடுத்தாள். காலையும் ஆறுமுகத்தார் எதுவும் சாப்பிடவில்லை; எனினும் பசி வரவில்லை.

தெளிந்த முகத்தோடு ஆறுமுகத்தார் வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது வள்ளிப்பிள்ளை இன்னும் அந்த இடத்தி லேயே சுருண்டு கிடந்தாள், மல்லிகாவும் அடுக்களை முன் குந்தில் தான் இருந்தாள். இளையவன் சந்திரன் தாய்க்குப் பக்கமாக வெறும் திண்ணையில் கால்களை இடாப்பி, கைகளை ஒன்றுக்கு மேல் ஒன்றாக இலேசாக முட்ட வைத்து மெய்யுறக்கம் செய்து கொண்டிருந்தான்.

''கொம்மா இன்னும் கிடந்த இடத்தை விட்டு எழும் பேல்லையே?'' என்று கேட்டுக் கொண்டே ஆறுமுகத்தார் வந்தார். அந்தக் குரலுக்குச் செவிசாய்த்தாளோ இல்லை யோ வள்ளிப்பிள்ளை கண்விழித்தபடி அசையாமல் கிடந் தாள். அழுதழுது அவள் முகம் உப்பிப்போய் இருந்தது.

''எழும்பப்பா! சும்மா இனி அழுதென்ன செய்யிறது? எழும்பி உலையக்கிலையை வை! பிள்ளை, பேனையை யும் கடுதாசியையும் எடுத்துக் கொண்டு இப்பிடி வா! கொண்ணனுக்கு ஒரு காயிதம் எழுதிப்போடு. அங்கை வைச்சுக் கலியாணத்தைக் கட்டாதை இஞ்சை வைச்சுத் தான் தாலி கட்ட வேணும்; சந்நிதியில் முறைப்படிதான் கட்ட வேணும் பெட்டையையும் கூட்டிக்கொண்டு உடனை வரச்சொல்லி எழுது'' ஆறுமுகத்தாரின் இந்தப் பேச்சு வள்ளிப்பிள்ளையை அதிரவைத்திருக்க வேண்டும். அவள் எழுந்து முன்றானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"உண்ணாணை உண்மையாத்தான் சொல்லுறி யோப்பா?" என்று கேட்டாள். "நான் என்ன பகிடிக்கே சொல்லுறன். அந்தப் பெட்டையும் ஒரு பொம்பிளை தானே! அவனும் ஆசைப்பட்டிட்டான். அவள் பெட்டையும் விரும்பியிட்டாள். தமிழ்சிங்களத்திலை என்ன இருக்கு?"

ஆறுமுகத்தார் பேசி முடிக்குமுன் மல்லிகா கொப்பி பேனையுடன் வந்து விட்டாள்.

"எங்கை நான் சொல்லச் சொல்ல எழுது பாப்பம். முனியப்பசாமி கிருபை முன்னிட்டு வாழும்..."

ஆறுமுகத்தார் சொல்லிக்கொண்டே போனார். மல்லிகா ஆசையுடன் எழுதிக் கொண்டிருந்தாள். கடிதம் இங்ஙனம் என்று முடிக்கப்பட்ட போதுதான், ஆறுமுகத் தார் சரியே; முடிக்கவோ என்று கேட்பதற்காக வள்ளிப் பிள்ளையைப் பார்த்தார்.

வள்ளிப்பிள்ளை மகனினதும் மருமகளினதும் படத் தைக் கையில் வைத்து உற்றுப் பார்த்துக் கொண்டிருந் தாள். "சிங்களத்தி எண்டாலும் லெட்சுமிகரமான பெட்டை" என்று கூறிக்கொண்டே அந்தப் படத்தை ஆறுமுகத்தார் பார்க்கும்படி நீட்டினாள்.

"பார், பார் இவள் விழுந்த பாட்டுக்கு குறிசுடு கிறதை. காலமை முழுக்க அழுதுகொண்டிருந்தவள் இப்ப மருமோளை லெச்சுமி எண்டு புளுகுகிறாள்!"

ஆறுமுகத்தார் நகைச்சுவையுடன் பேசினார். மல்லிகா கடிதத்தை முடித்து விட்டுத் தந்தையின் கை ஒப்பத்திற் காகப் பேனையை அவரிடம் கொடுத்தாள்,

ஆறுமுகத்தார் கை ஒப்பம் இடத் தொடங்கிவிட்டார்

"ஐயா, மெல்லமா கடுதாசி கிழிஞ்சுபோம். மெல் லமா" என எச்சரிக்கை செய்தாள் மல்லிகா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருமாதிரி ஒப்பம் இடப்பட்டு முடிந்தது. அதற்கு ஏறக்குறைய இரண்டு நிமிடங்கள் எடுத்தன. □

## 9

பத்திரிகைச் செய்திகள் பரபரப்பாக இருந்தன! தென்னிலங்கைப் பகுதியில் வகுப்புக் கலவரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்திருப்பதாக வானொலிச் செய்தியும் கூறியது.

சிறிது சிறிதாக வடபகுதியை நோக்கித் தென்னிலங்கைத் தமிழர் ஓடி வந்து கொண்டிருந்தனர். இங்கிருந்தும் சிங்களக் குடிகள் இடம் பெயர்ந்து சென்றுகொண்டிருந்தன. உறவினர்களின் வரவை நோக்கி வடபகுதி எங்குமுள்ள ரெயில் நிலையங்களில் மக்கள் கூட்டம்கூட்டமாகத் திரண்டனர். ரெயிலின் வருகை குறைந்து விட்டது. அகதிகளாக்கப்பட்டவர்களுக்காகக் கப்பல் ஏற்பாடு நடந்து கொண்டிருப்பதாகவும் ஒரு தகவல்.

ஆறுமுகத்தார் அங்குமிங்குமாக ஓடி, ஓடி மகனைக் கண்டதாக யாராவது கூறமாட்டார்களா என்று ஏங்கித் திரிந்தும் மகன் பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. வீரசிங்கத்திற்குத் தந்திகொடுத்துப் பார்த்தார்; பதில் இல்லை. வீரசிங்கத்தார்தான் அங்கிருப்பது என்ன நிச்சயம்?

முதலாவது சப்பல் காங்கேசன்துறைக்கு வருவதான செய்தி ஊர்ஜிதமாகிவிடவே, ஆறுமுகத்தார் துறைமுகத்திற்குச் சென்று பார்த்தார். மூத்தவன் இல்லை.

இரண்டாவது கப்பல்நாளில் சென்றபோது மூத்தவனைக் கண்டு விட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவனின் கோலம்!

அவன் பிரமை பிடித்தவனாக இருந்தான். யாருடனும் அதிகம் பேச அவனுக்கு முடியவில்லை. ஏங்கி, ஏங்கி விழிகளைப் புரட்டினான். அவனிடமிருந்து உடனடியாக நடந்தவை பற்றிய விவரங்களை அறிய முடியவில்லை.

மருமகளைப் பற்றிக் கேட்கும் நேரமல்ல இது. அவனை வீட்டுக்குக் கூட்டிவந்தபோது வீடே அவனைப் பார்த்துக் கதறியது.

ஊரில் பலரும் அவனைப் பார்க்க வந்திருந்தனர். இணுவில் கிராமத்தில் இருந்து அகதிகளாக வந்த பலரில் மூத்தவனும் ஒருவன். இராமசாமி வாத்தியாரும் வந்து போனார்.

ஆறுமுகத்தாரைத் தனியாக அழைத்து இப்போ தைக்குப் பெட்டையின் விவரம் ஒன்றையும் அவனிடம் கேட்கக் கூடாது என்று கூறிவிட்டுச் சென்றார்.

மூத்தவன் நன்றாக உண்பதில்லை, குளிப்பதில்லை, முழுகுவதில்லை. யாருடனும் அதிகமாகப் பேசுவதில்லை. போதுமான நித்திரை கொள்வதில்லை. தன்னாலேயே இடைக் கிடை கண்ணீர் சிந்துவான், விம்முவான், அழுவான்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து பொறுமையை இழந்தவளாக வள்ளிப்பிள்ளை "தம்பி, பெட்டை எங்கை? தேப்பன் தாயோடை சுகமாய் இருக்கிறாளே?" என்று ஒருநாள் கேட்டு விட்டாள். எந்தவித வெட்கமுமின்றி அவனின் கோவென்ற அழுகைதான் அவளுக்குப் பதிலாகக் கிடைத்தது.

இரண்டு நாட்கள் கழித்து தாயானவள் மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டாள். இப்போது கதறாம லேயே கண்ணீர் சிந்தினான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மீண்டும் ஒருநாள் கேட்டாள். இப்போது அவன் அவளைப் பற்றிச் சொல்லத் தொடங்கி விட்டான்.

தந்தையின் கடிதம் கிடைத்த மறுநாளே இத் தகவலைச் சொல்வதற்காக அவன் கம்பஹாப் பகுதியில் உள்ள நித்தம்புவ என்ற கிராமத்தில் உள்ள அவளது வீட்டுக்குச் சென்றிருந்தான். அன்று விடுதலைநாள். சுனித்திரா வீட்டோடு இருந்தாள். தந்தையின் கடிதத்தைப் பற்றிய விவரத்தை அவளுக்கும் அவள் பெற்றோருக்கும் அவன் சொன்னபோது அவர்கள் கண்களில் மகிழ்ச்சியால் கண்ணீர் மல்கியது. நாளைக்கு மறுநாள் இருவரும் இரண்டு வார லீவு போட்டு விட்டு யாழ்ப்பாணம் போவ தாகவும் தீர்மானமாயிற்று. குறிப்பிட்ட நாளும் வந்தது. இரண்டு வார லீவும் போட்டாயிற்று.

கம்பஹா ஸ்ரேசனில் யாழ்ப்பாண ட்றெயினைப் பிடிக்க வேண்டும். அன்று காலையிலேயே அந்தப் பிர தேசத்தின் சில பகுதிகளில் கலவரம் நடந்திருப்பதாகத் தகவல் ஒன்று இருந்தது. ஆயினும் திட்டமிட்டபடி ட்றெ யினைப் பிடிப்பதற்காக மாலை ஏழு மணிக்கே அவர்கள் கிராமத்தை விட்டுப் புறப்படும்வேளை!

வீட்டுக்கு வெளியே ஆரவாரங்கள் கேட்டன. பலர் உள்ளே ஓடிவருவதைப் போன்ற அதிர்ச்சி ஓசைகள்!

''கொல்லடா அவனை!'' என்ற ஒரு சிங்களப் பெரும் குரல்! முற்றத்தில் மூத்தவன் பலரால் சூழப்பட்டு விட்டான். சுனித்திரா கத்தினாள். அவளின் தாயும் தந்தையும் அவர்களுக்கு நடுவே வந்து மூத்தவனை விலக்கி விட வந்தனர்...

அதற்கிடையில்...

உயர்ந்து வந்த தடியொன்று மூத்தவன் தலையை அணுகியபோது சுனித்திரா முன்னே பாய்ந்தது மட்டும்,

www.tamilarangam.net



அவள் மண்டையில் அடிவிழுந்தது மட்டும்,

அவள் தலை சிதறியது மட்டும்,

அவனுக்கு ஞாபகம்!

அதன்பின் அவனுக்கு நடந்தது ஒன்றும் நினைவில் இல்லை. நான்கு நாட்கள் ஒரு வைத்திய விடுதியில் இருந்து விட்டு அகதி முகாமுக்குச் சென்று, அதிலிருந்து கப்பலேறி வந்தவரையில் நினைவில் பட்டதை அவன் சொல்லி முடித்து விட்டான். அதற்குப்பின் அழுதான்!

வள்ளிப்பிள்ளை அழுதாள். அழாமல் இருக்க அவளால் முடியவில்லை. கண்காணாத அந்த சுனித்திரா வுக்காக அவள் அழுதாள்! அவள் அழுவதைப் பார்த்து மல்லிகாவும் அழுதாள். எல்லோரும் அழுவதைப் பார்த்து கடைக்குட்டி சந்திரனும் அழுதான். ஆனால் ஆறுமுகத் தாருக்கு மட்டும் அழுகை இப்போது வரவில்லை. பதிலுக்குப் பற்களை நறுநறுத்தார்.

எவ்வளவு விரைவில் வகுப்புக் கலவரம் தொடங்கி யதோ அவ்வளவு விரைவாக அது அடங்கிவிட்டது. நாட்டுக்கு அது இரண்டாவது கலவரம். நாடு சகஜ நிலைக்குத் திரும்பி விட்டது. ஆனால் அந்த மூன்று நான்கு நாட்களுக்கிடையில் தலைவிரித்தாடிய வெறி தருவித்த ஞாபகச் சின்னங்கள் ஓர் இனத்தின் நடுவே நிரந்தரமாகப் பொறிக்கப்பட்டு விட்டன.

மூத்தவன் இன்னும் வேலைக்குத் திரும்ப வில்லை. அவன் சந்நியாசக் கோலம் கலைக்கப்படவில்லை; அதற் கான தென்பும் அவனிடம் இல்லை.

ஒருநாள் வாத்தியாரிடமிருந்து மிகவும் வலியதான ஒரு கடிதத்தை வாங்கிக்கொண்டு ஆறுமுகத்தார் எம். பீ, யைப் பார்க்கப் போயிருந்தார். மூத்தவனின் வேலையைக் காங்கேசன் துறைக்கு மாற்றுவது பற்றித்தான் கடிதத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வற்புறுத்தப்பட்டிருந்தது. எப்படியும் அதை விரைவில் செய்து தருவதாக எம்.பீ. வாக்குக் கொடுத்திருந்தார். அதன்படி நிறைவேற்றியும் விட்டார்.

மூத்தவனுக்கு இப்போது இங்குதான் வேலை! நாளாந்தக் கடமை ஒன்றைச் செய்வது போல இயந்திர மாக மூத்தவன் செயல்பட்டான்.

காலை ஏழுமணிக்கு இணுவில் சந்தியில் நின்று பஸ்ஸைப் பிடிப்பான். கையிலே உணவுப் பாத்திரம் ஒன்று இருக்கும். மாலை ஆறுமணிக்கு பஸ்ஸில் மறுபடி யும் வந்திறங்குவான். குனிந்த தலை நிமிராது வீட்டிற்குள் செல்வான். நீட்டி நிமிர்ந்து படுப்பான். இரவுச் சாப் பாட்டுக்கு எழும்புவான். உணவருந்துவான். மறுபடி படுப்பான். அதிகாலை வந்து விடும். மறுபடியும் இணுவில் சந்தியில் பஸ்! இடையில் ஒரு சினிமாவோ நண்பர்களுடன் அரட்டையோ... ஒரு வேடிக்கைவினோதமோ... குறைந்த பட்சம் ஏதாவது ஒரு களியாட்டமோ எதுவும் இல்லை.

ஆறுமுகத்தாரின் குலதெய்வமாகிய முனியப்பசாமி யின் திருவிழாத் தொடங்கியது. எட்டு நாட்கள் நடந்தது. அடிப்படலைக்குள் நடந்த இந்த விழாக்களைப் பற்றிய எந்தவித உசுப்பனவும் அவனுக்கு வரவில்லை.

ஆறுமுகத்தார் கலவரத்தின் தேதியை நன்றாக மனதில் வைத்திருந்தார். மருமகள் சுனித்திரா உச்சந் தலையில் அடிபட்டு இறந்துபோன அந்தத் தேதி அவருக்கு மனப்பாடம். அதைச் சரியாகக் கணக்கிட்டுப் பார்த்ததில், ஆறு மாதத்திற்கு இன்னும் பத்து நாள்தான் இருந்தது.

இம்முறை புகையிலை ஆறுவடை வாய்க்கவில்லை. பாணிப் புகையிலைக்காகப் போட்டி போட்டுக்கொண்டு வரும் வியாபாரிகள் இம்முறை ஊருக்குள் காலடி எடுத்து வைக்கவில்லை. காரணத்தை அறிவதில் ஆறுமுகத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாருக்குச் சிரமம் ஏற்படவில்லை. தென்னிலங்கையில் அவர்களுக்கு இருந்த கடைகள் அழிக்கப்பட்டு விட்டன.

தாவடி, இணுவில் அடங்க இம்முறை புகையிலை உற்பத்திக்குப் பதிலாகச் சகல தரைகளிலும் உருளைக் கிழங்குச்செய்கைதான் நடைபெற்றது. ஊருக்கு உருளைக் கிழங்குச் செய்கை புதிதுதான். ஆயினும், அது குறுகிய காலப்பயிராகவும், கிழங்கு கிளறிய உடனேயே அதைக் காசாக்கும் சந்தர்ப்பம் இருந்ததாலும், தோட்டத் தரைகள் இப்படி மாற்றம் அடைந்து விட்டன.

ஆறுமுகத்தாரின் தரைதரிசாகவே இருந்தது. பல்லைக் கடித்துக்கொண்டே இம்முறை இருந்து பார்க்கத்தான் அவர் முடிவு செய்தார்.

"இஞ்சரப்பா! வாற வெள்ளிக்கிழமை மருமோனின்ரை அந்திரட்டி செய்யவேணும். மாதமும் சரியா ஆறாச்சு. எல்லாத்தையும் வடிவாய் அடுக்குப்பண்ணுங்கோ" ஆறுமுகத்தார் மனைவியிடம் இப்படிக் கூறினார். அவளுக்கு இந்த வார்த்தை தேனாக இனித்தது. அகால மரணமடைபவர்களுக்கு ஆறு மாதத்தில்தான் அந்திரட்டி செய்வது வழக்கம். அந்த ஆறு மாத எல்லை கிட்டக் கிட்ட இவள் மனம் துடித்துக்கொண்டே தான் இருந்தது. ஆறுமுகத்தாரிடம் வாய்விட்டுக் கேட்க அவள் பயந்தாள். அன்று ஆறுமுகத்தார் கேட்டுவிட்டார்.

"ஐயா, அந்திரட்டியிலண்டு அண்ணியின்ரை படத்தைப் பெரிசாக்கி வாசல் படியிலை வைக்க வேணும். அண்ணையிட்டை சொல்லி படத்தைப் பெரிசாக்கட்டே...?" மல்லிகா ஆறுமுகத்தாரைக் கேட்டாள்.

அன்றிரவு மல்லிகா அண்ணனிடம் இதைச் சொன்னாள். தந்தை,தாய் சகோதரியின் ஒப்புதலை மூத்தவனால் நம்ப முடியவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்கள இனத்தின்மேல் தமிழர் அடங்கா வெறுப்புக் கொண்டிருக்கும் இவ்வேளை இப்படியொரு காரியத்தைச் செய்வதற்கு முன்வந்த தகப்பனின் பெரிய குணத்தை நினைத்து அவன் மனம் விம்மினான்.

வெள்ளிக்கிழமை வந்தது

மூத்தமகள் சரசுவும் கணவனும் இளையமகளின் கணவனாகப் பதிவு செய்யப்பட்ட சங்கக்கடை மனேச்சர் மற்றும் மிக நெருங்கிய உறவினர்களின் குடும்பங்கள் ஆகியவர்களுடன் மட்டுமட்டாக அந்தியேட்டி கிரியை தொடங்கி விட்டது.

''கீரிமலையில் ஐயரைக் கொன்றாய்க்காப் பிடிச்சா என்ன?'' இப்படி ஒருவரின் அபிப்பிராயம்.

''செய்தா எல்லாம் திருப்தியாய் செய்து முடிக்க வேணும். பிறகு வீட்டுக் கிருத்தியம் செய்ய வேறை ஐயரைப் பிடிக்கிறதோ? இஞ்சை இருந்துதான் ஐயரைக் கொண்டு போக வேணும்.''

ஆறுமுகத்தார் முடிவாகச் சொல்லிவிட்டார். அதிகாலையோடு சகல அடுக்குகளோடும் இரண்டு கார்களில் கீரிமலைப் பிரயாணம் தொடங்கிவிட்டது. இணுவில் கிருத்திய ஐயர் சாமிநாதர் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து சேர நடுமுற்றத்தில் சாணிமெழுக்குச் செய்து, சாணி உருண்டை பிடித்து அதில் அறுகம்புல்லுச் சொருகிப் பிள்ளையாராக்கி, வாழை இலை போட்டு புதிர் நெல்லுப் பரவி கும்பம் வைத்ததில் இருந்து அந்தியேட்டிக்கிரியை தொடங்கிவிட்டது.

'சுனித்திரா'' என்ற பெயரை உச்சரித்துக்கொண்டே ஐயர் தொடங்கி வைத்தார். கார்கள் கீரிமலையை அதிகாலையோடேயே அடைந்துவிட்டன. நாற்சதுரமாக நான்கு மூலைகளிலும் பன்னிரண்டு நூல் சுற்றிய கும்பங்கள். நட்டநடுவே ஒரு கும்பம். நாற்சதுரக் கும்பங்களை

www.tamilarangam.net



இணைத்து நூல்தொடர்பு. மூத்தவன் கைவிரலில் தருப்பை! தோளில் பூணூல்! சூரிய நமஸ்காரத்துடன் கிரிகை தொடங்கிவிட்டது.

சுனித்திராவை உருவகப்படுத்திய தருப்பைக் கட்டு; அதை எடுத்துச் செல்லும் பாடை, சுடலையில் எரித்தல், சாம்பல் எடுத்தல், சுட்ட இடத்தில் கலப்பை கட்டி உழுதல், மறுத்தல், நவதானியம் விதைத்தல், சாம்பலை எடுதது்ச் செல்லல், கங்கையில் கரைத்தல்; சுனித்திராவின் ஆத்மாவுக்கான சகல கிரிகைகளையும் முடித்துச் சாம்பலைக் கங்கையில் கரைத்துவிட்டு, தலை முழுகி மூத்தவன் கரையில் காலடி எடுத்து வைத்தபோது கரையில் ஒருவன் கத்தியை வைத்துக் கொண்டு வழிமறித்தான்.

அவன் பரியாரி வல்லியன்!

''எங்கை போட்டு வாறாய்?''

இது வல்லியனின் கேள்வி.

''எனது மனைவியான சுனித்திராவுக்கு காசி கதிர்காமம் சென்று தானம் குடுத்திட்டு வாறன்,'' இப்படி மூத்தவன் சொல்லவேண்டும். ஐயர் அவனைக்கொண்டு இதைச் சொல்ல வைத்தார். கிளிப்பிள்ளைபோல மூத்தவன் இதைச் சொன்னான். கையில் இருந்த கொடுவாக்கத்தியால் நிலத்தில் குறுக்காகக் கோடு இழுத்தான் வல்லியன். கடற்கரை மணலில் கோடு தெளிவாக இருந்தது.

''அப்படியானால் எனக்கும் தானதருமம் செய்து போட்டுப்போ!'' வல்லியன் நாக்குத் தெறிக்க இப்படிக் கேட்டான்.

இப்படி ஆயிரம் பேர்களிடம் அவனுக்குக் கேட்டுப் பழக்கம். தனக்கு மேல்பட்டவர்களிடம் நசிந்து நசிந்து பேசும் வழக்கத்தை உடைய அவனுக்கு இந்த ஒரு சந்தர்ப்பம் தான். 'றாங்கி'யாக ''எனக்கும் தான தருமம் தந்திட்டுப் போ!'' என்று ''போ'' போட்டுப் பேச உரிமையானது. இந்த உரிமையை அவன் விடுவானா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்டியிருந்த கோவணத்தை மட்டும் விட்டு விட்டு உடுத்த வேட்டியை அப்படியே தானமாக வல்லியனுக்குக் கொடுக்கவும் தீர்த்தக்கரை அந்தியேட்டி நிறைவுக்கு வந்து கொண்டிருந்தது.

இனி வீட்டுக் கிருத்தியம்.

வந்தவர்கள் எல்லோரும் கேணிக்குள் பாய்ந்து தீர்த்த மாடினர்.

தீர்த்தக்கரைக் கோவிலுக்குச் சென்றனர். வட்டக் கல்லில் இருந்த சந்தனக்கட்டையை உரைத்தனர். பொட்டிட்டுக் குறியிட்டனர். முன் தேநீர்க் கடையில் ஆளுக்கு இவ்விரண்டு வடைகளைக் கடித்து தேநீர் அருந்தினர். வீடு நோக்கிக் கிளம்பிவிட்டனர்.

கார்கள் வீட்டுக்கு வந்துசேர மணி பத்துக்கு மேலாகி விட்டது.

## 10

சுனித்திராவின் படத்தின் கீழ் அணையாத விளக்கொன்று எரிந்துகொண்டே இருக்கும். அந்தியேட்டியன்று ஆறுமுகத்தார் வாங்கி வைத்த சின்னஞ் சிறு தூங்கா மணி விளக்கு அது. அந்த விளக்கு வருடங்கள் மூன்றுக்கு மேலாகியும் இன்றுவரை நூர்ந்ததில்லை. கிழமைக்கு இரண்டு நாட்களோ மூன்று நாட்களோ அதன் எண்ணெய் குறைந்து விடாமல் பார்த்துக் கொள்வது வள்ளிப் பிள்ளையினுடைய பொறுப்பு.

இளையவள் மல்லிகாவுக்கு திருமணம் நடந்து அவள் அளவெட்டிக்குப் போய்விட்டாள். இடை இடையே இரு சகோதரிகளும் வந்துபோவர். வரும்போது அவர்கள்

www.tamilarangam.net



வீட்டில் இருந்தே மலர்கள் கொய்துவந்து அண்ணியின் படத்திற்குச் சாத்துவதற்குத் தவறுவதில்லை.

இந்த ஏற்பாடுகளை மூத்தவன் சொல்லிச் செய்ய வில்லை. அவர்களாகவே செய்தார்கள்

ஆறுமுகத்தார் ஏதாவது நாள் காரியம் செய்யப் போகும்போது அந்தப் படத்தில் சாற்றப்பட்டுள்ள புதிய பூவையோ, அல்லது வாடிவதங்கிவிட்ட பூவையோ எடுத்து, வலக் காதில் செருகிக் கொண்டு செல்லும் அளவுக்கு சுனித்திரா உயர்ந்து விட்டாள்.

வருடத்தில் ஒரு தடவை சுனித்திராவின் அப்பாவும் அம்மாவும் இணுவிலுக்கு வந்து மருமகனைப் பார்த்துக் குசலம் விசாரித்து விட்டுப் போவதும் இந்த வழக்கங்களுடன் சேர்ந்துபோய்விட்டது.

மகளின் படத்திற்கு அந்த வீட்டில் செய்யப்படும் மரியாதை அந்த மனிதக்கூடுகளின் உணர்ச்சி நரம்புகளைத் தட்டி எழுப்பிய சந்தர்ப்பங்களும் இருந்திருக்கின்றன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் வந்து போகும் போது, மூத்தவன் அவர்கள் கால்களில் முழந்தாள் படியிட்டு குனிந்து வளைந்து பௌத்த கலாசார முறைப்படி வணக்கம் செலுத்திக் கொள்வதை அவனைவிட இங்கு யாருமே உயர்ச்சியாக கருதவில்லை.

ஒவ்வொரு தடவையும் அவர்கள் வரும்போது சோட்டைப் பண்டங்களாக கித்துள்கட்டி, கஜுக் கொட்டை, கொண்டப் பணியாரம், சம்பிரதாயபூர்வமான ஆனை வாழைப்பழம் அத்துடன் அவனுக்கென இரண்டு 'கிரிபத்' கட்டிகளையும் கொண்டுவரத் தவறுவதில்லை.

அதேபோல ஒவ்வொரு தடவையும் பாணிப் பனாட்டு, புழுக் கொடியல், செம்பாட்டான் மாம்பழம், கூவில்பனங் கட்டி, முருங்கைக்காய்க்கட்டு ஆகியவைகளை சம்பந்தி

www.tamilarangam.net



களுக்குக் கொடுத்தனுப்ப ஆறுமுகத்தாரும் தவறிய தில்லை.

இவர்கள் வந்துபோவதுபோல் ஆறுமுகத்தாரும் மனைவி வள்ளிப்பிள்ளையும் கதிர்காம யாத்திரை போகும் போது அவர்களின் தடிகளால் கட்டப்பட்டு, களிமண் அப்பி உயர்த்தி எழுப்பப்பட்டு, அதன்மேல் வைக்கோலால் வேயப்பட்ட சிறு குடிசைக்குப் போகும்போது அவர்கள் சம்பிரதாய பூர்வமாக இவர்களை வெற்றிலைச் சுருள் கொடுத்து வரவேற்கத் தவறியதில்லை. அப்போதெல்லாம் அவர்கள் மண் சுவரில் மருமகளின் படம் தொங்குவதையும் கண்டனர்.

மூத்தவனுக்குப் பல இடங்களில் இருந்தும் சம்பந்தங் கள் பேசி வந்தனர். தரகர்மார் பலர் படாதபாடுபட்டனர். மூத்த மைத்துனர், இளைய மைத்துனர் பகுதிகளில் இருந்தும் பல சம்பந்தங்கள் இவர்கள் செல்வாக்கைப் பிரயோகித்துப் பேசி வந்தனர்.

இவைகளுக்கெல்லாம் மூத்தவன் கொடுத்த ஒரே ஒரு பதில் ''நான் கலியாணம் கட்டமாட்டன்,'' என்பதாகும். இந்த விஷயத்தில் ஆறுமுகத்தார் படாத பாடுபட்டுவிட்டு முடிவில் ''எல்லாத்துக்கும் முதல்லை அவன்ரை முடிவைக் கேளுங்கோ?'' என வருபவர்களுக்கு மொட்டையாகச் சொல்லி அனுப்பி விடுவார்.

தாயானவள் எப்போதாவது இருந்துவிட்டு கல்யாணப் பேச்சை எடுத்துவிட்டால் மூத்தவனுக்கு அழுவதைத்தவிர வேறு வழிகிடைப்பதில்லை. ஓய்வு கிடைக்கும் நேரங்களில் எல்லாம் தோட்டத்தரைக் குள்ளேயே காலத்தைக் கடத்தி விடுவான். அவனின் கருந் தாடியும் தாடிமயிரும் தோட்டப் புழுதியில் அலையுண்டு அலையுண்டு செம்பாட்டு நிறம் சேர்ந்து விட்டன. வேலைக்குப் போகும் போது மட்டும் அவைகளைக்

www.tamilarangam.net



கழுவித் துடைப்பான். மற்றப்படி ஊத்தையனாகவே இருப்பான்.

''என்னப்பா, மூத்தவன்ரை கோலம்? சாமியாப் போறவயதே? எப்பிடியெண்டாலும் ஒரு கட்டையிலை தெண்டிச்சுக் கட்டிப் போட்டமெண்டா பிறகு திருந்தி யிடுவான்!'' என்று வள்ளிப்பிள்ளை ஆறுமுகத்தாரை நச்சரிக்கும் போதெல்லாம் ''அதுக்கு என்னை என்னடி யப்பா செய்யச் சொல்லுறாய்! கட்டிறது நானோ. அவனோ, எனக்கேட்டுச் சினந்து கொள்வார்.

''சன்னிதியானுக்கு ஒரு நேத்தி வைச்சு பிறதட்டைக் காவடி எடுத்துப் பாரனப்பா.''

''எடி, எடி, விசரி பேசாமல் இரடி! சன்னிதியானுக்கு இப்ப வேலை பொம்புளை தேடுறதோ?''

''மோனெண்டும் பாக்காமல் வெக்கத்தை விட்டுச் சொல்லுறன். உவனை ஒரு ஆமான தமிழ்ப் பரியாரி யிட்டை காட்டினா என்னப்பா? கள்ளியங்காட்டு ராமசாமிப்பரியாரி உதுகளுக்கு ஒரு லேகியம் குடுக்கிறவ ரெண்டு கேள்வி!''

''எடி, அறுந்தவளே, சும்மா அலட்டாதையடி! பொடியனுக்கு லேகியம் வாங்கிக்குடுத்து சாகச் சொல்லி றியேடி? எனக்குத் தெரிஞ்சமட்டிலை சொல்லுறன். அந்தச் சிங்களப் பெட்டை உயிரோடை வந்தாலொழிய அவன்ரை பிடிவாதம் தீராது.

சும்மா வீண்தனமாகக் கதைக்கிறாள் இவள்.''

''ஆரிட்டையெண்டாலும் நரம்பு டாக்குத்தரிட்டை காட்டச் சொல்லி கன பேர் சொல்லுகினம்!''

''அவனுக்கு நரம்பு வருத்தம் இல்லையடி சும்மா கிடவடி!''

www.tamilarangam.net



''ஏக்கத்துக்குப் பார்வை பார்த்து கழிப்புக் கழிச்சு நூல் கட்டவும் சொல்லுகினம்!''

''ஆரோ. ஒரு விசரி உவளுக்குச் சொல்லிப் போட்டாள்!''

கணவனுக்கும் மனைவிக்குமிடையே நடந்த இந்தச் சம்பாஷணை அவர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

''இஞ்சேரும் முகத்தார், அவள் சிங்களத்தியின்ரை படத்தை வாசல் படியிலை தூக்கிப்போட்டு, நீர் அதுக்குத் தூண்டாமணி விளக்கும் வைச்சு பூவும் சாத்திறியள், அது தான் பெடியன் அவளைத் தெய்வமாய் நினைச்சு கலியாணம் கட்ட மாட்டன் எண்டு நிக்கிறான். ஒரு அஞ்சாறு நாளைக்கு அந்தப் படத்தைக் கழற்றிவிடும். சில வேளை பெடியன் சரிவந்தாலும் வருவான்!''

மருதனாமடம் குழைத்தரகர் தாடிக் கந்தப்பர் இப்படி அபிப்பிராயம் சொன்னார்.

ஆறுமுகத்தாருக்கு மனப்போராட்டம் தொடங்கி விட்டது லெட்சுமிகரமான அந்தப் பெண்ணின் படத்தை இருப்பைவிட்டு அகற்ற, அவர் மனது கொஞ்சம் கூட சம்மதிக்கவில்லை. ஆனால் உள்மனதுக்கு இது பிரச்சினை யாகி விட்டது. அந்தப் பிரச்சினையைச் சுமந்து கொண்டு அவர் வீட்டுக்குப் போனார்.

மதியவேளை வள்ளிப்பிள்ளை அவருக்கு உணவு கொடுத்துக் கொண்டிருந்தபோது, ''இஞ்சை கேள் பெட்டையின்ரை படத்தை ஐஞ்சாறுநாளைக்கு கழற்றி அவன்ரை கண்ணிலை படாமல் மறைச்சு வைச்சா மூத்தவன் கலியாணம் கட்டச் சம்மதிப்பான் எண்டு குழைத்தரகர் தாடிக் கந்தப்பர் சொல்லுறாரப்பா?''என்று ஆறுமுகத்தார் மெதுவாகக் கதைவிட்டுப் பார்த்தார்.

www.tamilarangam.net



''இதுகுமொரு கண்டறியாத கதையெண்டு கேட்டுக் கொண்டு வந்து என்னட்டைச் சொல்லுறியோ... அவன் இரணியன்! தோட்டக்காரரிட்டையும், குழைக்காரரிட்டையும் துடிக்கப் பதைக்கக் காசு புடுங்கிறவன்ரை கதையக் கேட்டுக் கொண்டு வந்து எனக்குச் சொல்லுறியோ? நான் சொல்லிப் போட்டன், செத்தாலும் அந்த லெச்சுமியின்ரை படத்திலை கைவைக்க விடன்.''

வள்ளிப்பிள்ளை ஆவேசமாகப் பேசிவிட்டு நேராக சுனித்திராவின் படம்வரை சென்று அதன் முன் வைக்கப் பட்ட குங்குமச் சிமிழைத் தொட்டு கண்ணாடிக்கு மேல் வைக்கப்பட்ட சந்தனப் பொட்டின்மேல் விரலால்தொட்டு வைத்தாள். அந்தப் பொட்டு மிகவும் தடித்திருந்தது. அந்தியேட்டி நாளிலிருந்து சந்தனக் குழம்பினால் வைக்கப் பட்ட அப்பொட்டுக்கு மேல் மீண்டும் மீண்டும் பொட்டு வைத்ததால் அது தடித்திருந்தது.

''எடி, ஆரடியப்பா சொன்னது படத்தைக் கழற்றிற னெண்டு? ஏனடியாத்தை ஊரைக் கூட்டிற மாதிரி கத்து றாய்?'' இப்படி சமாளித்துக் கொண்டார் ஆறுமுகத்தார்.

''பின்னை என்ன... உதுகுமொரு கதையெண்டு கதைச்சா மனிசருக்குப்பத்தாமல் என்ன செய்யும்?'' என்று குரலைக் குறைத்துக் கொண்டாள் வள்ளிப்பிள்ளை.

அப்போதுதான் கொளுத்தும் வெயிலில் சிலேற்றைத் தலையில் பிடித்துக் கொண்டு பாடசாலையிலிருந்து வந்து சேர்ந்தான் இளையவன் சந்திரன்.

உணவருந்தி முடிந்து திண்ணையில் சற்றுவேளை சரிந்து பொய்யுறக்கம் செய்து, மண்வெட்டியையும் தூக்கிக் கொண்டு தோட்டத்திற்குப் போன ஆறுமுகத்தார் பொழுது கருகிவிட்டபோதுதான் வீட்டுக்கு வந்தார்.

வந்ததும் வராததுமாக கிணற்றடி சென்று மேலைக் கழுவிக் கொண்டு ''இஞ்சரப்பா வாத்தியாருக்கு ஏதோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுகமில்லையாம். நான் ஒருக்காப் போட்டு வாறன்'' என்று கூறிக் கொண்டே வேட்டியை மாற்றியபடியே புறப்பட்டு விட்டார்.

## 11

படத்திற்குப் பூ வைக்கும் நேரம் வந்துவிட்டது. வள்ளிப்பிள்ளை கிணற்றடிப் பக்கம் சென்று, வழமையாக ஒரிரு பூக்களைப் பிடுங்குபவள், இன்று கைநிறையப் பூக்களைப் பிடுங்கிக்கொண்டு வந்தாள். இன்று அவள் மனம் அப்படி இருந்தது.

ஆறுமுகத்தார் வாத்தியார் வீட்டுக்குச் சென்றபோது வீடு நிறையச் சனக் கூட்டமாக இருந்தது.

வாத்தியார் அறிவு நினைவற்றவராகக் கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தார். உள்ளே போகும்போதே ஆறுமுகத்தாரின் நெஞ்சு அடிக்கத் தொடங்கிவிட்டது.

மத்தியானம் போல் அவருக்குத் தலை சுற்று வந்தது. தன்னைப் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும்படி அவரே சொன்னார். அதன்படி அங்கு கொண்டு சென்றனர்,

அவரிடம் ஆங்கிலம் கற்றுத் தேறிய டாக்டர் ஒருவர் அவரைப் பார்வை இடும்போது மனம் தாளமாட்டாமல் அழுதுவிட்டதை அவர் கண்டுவிட்டார். உடனடியாகத் தன்னை வீட்டுக்குக் கொண்டு செல்லும்படி கூறவே அவர்கள் வாத்தியாரை மாலைக்கிடையில் வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டனர்.

இப்போது அவர் யாருடனும் பேசச் சக்தியற்று பிரணத்தறுவாய்க்கு வந்துவிட்டார். மூச்சுக் குறைந்து வந்தது. நாடித் துடிப்பும் குறைந்து வந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரவு எட்டு மணிபோல் அவர் உயிர் பிரிந்துவிட்டது.

கூடவே நின்ற ஆறுமுகத்தார் 'கோ...' எனக் குரல் வைத்து அழுதார்.

''வாத்தியார், ஐயா... இனி நான் ஆரிட்டைப் போய் என்ரை குறை நிறையைச் சொல்ல!'' என்று ஆறுமுகத்தார் புலம்பினார்.

மூத்தவன் நான்கு நாட்களாக வீட்டுக்கு வரவில்லை.

''என்னப்பா, மூத்தவனை நாலு நாளாக் காணேல்லை... வேலைத்தலத்திலை ஏதும் வில்லங்கமோ, தெரியேல்லை. ஒருக்காப் போய் பாத்துக்கொண்டு வாவனப்பா.''

வள்ளிப்பிள்ளை அழாக் குறையாக ஆறுமுகத்தாரைக் கேட்டாள்.

''ஏதெண்டாலும் அவசரமான கணக்குக் கிணக்கு எழுதிற வேலை இருந்தாலும் இருக்கும். வருஷம் முடியிற காலமெல்லே...வருவான் நீ, பேசாமல் இரு!''

இப்படிப் பதில் சொல்லிவிட்டு, ஆறுமுகத்தார் சூரி மண்வெட்டியையும் கைப்பாரையையும் தூக்கிக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

சூரி மண்வெட்டியையும் பாரையையும் எடுத்தாரானால் அது நிச்சயமாக அகிழான் வேட்டைக்காகத்தான் இருக்குமென நகுலன் நாய்க்கு விளங்கிவிடும். அது தன் கூழை வாலையும் ஆட்டிக்கொண்டு ஆறுமுகத்தாருக்கு முன்னால் கிளம்பிவிடும்.

''இஞ்சாரப்பா, கிழக்கிப் பக்கத்தில் உள்ள பாத்தியிக்கை நேத்து அகிழான் புத்தொண்டைக் கண்டனான்'' என்று மனைவிக்குக் கேட்கக் கூறிக் கொண்டே ஆறுமுகத்தார் தோட்டம் நோக்கிக் கிளம்பிவிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர் தோட்டத்திலிருந்து திரும்ப நடுப்பகல் ஆகி விடும் என்பது வள்ளிப்பிள்ளைக்குத் தெரியும். அவர் அகிழான் வெட்டத் தொடங்கிவிட்டால் தோட்டத்தரை எங்கும் வகிர்ந்து, வகிர்ந்து, எங்காவது அகிழான் புற்றுக் கண் இருக்கிறதா என ஒரு விரிந்த அளவு ஆய்வு நடத்தி விட்டுத்தான் புறப்படுவார். சில சமயங்களில் தன்னையும் மறந்து நடுப்பகல் உணவையும் மறந்து, மாலைவரையும் அவர் நின்றுவிடுவதும் உண்டு.

வள்ளிப்பிள்ளைக்கு இன்று பகல் உணவுக்குக் குரக்கன் பிட்டு அவிக்க வேண்டுமென மனதுக்குப் படவே, குடுவை உரலை நிமிர்த்தி, சிறு பெட்டியளவு குரக்கனை அதில் கொட்டி, சுணை உலக்கையால் நான்கு பத்துக் குத்துக் குத்தி சுளகில் அதைப் பரவி அசடுகளைப் புடைத்துத் தள்ளி விட்டு திருகைக் கல்லை எடுத்து, அதன் குழியில் நான்கைந்து பிடியளவு நிரப்பி, திருகையை ஆட்டத் தொடங்கிவிட்டாள். எப்படியும் இரண்டு மணி நேர மாவது ஆகலாம் ஒருபடி குரக்கன் அரைக்க என்பதைத் தெரிந்து கொண்டு வெற்றிலைத் தட்டத்தையும் அருகில் வைத்துக் கொண்டு தான் தொடங்கினாள்.

படலையைத் திறந்து கொண்டு ஆஸ்பத்திரியடி அன்னமுத்து வந்தாள்.

'அன்னமுத்து இந்த நேரத்திலை ஏன் வாறாள் தெரி யேல்லை. வாற அவசரத்தைப் பார்க்க ஏதோ சொல்ல வாறாள் போலை கிடக்கு...' என நினைத்தபடி "வா அன்னமுத்தக்கா!" என்று அவளை முகமன் கூறி வரவேற் றாள்.

அன்னமுத்து வந்து பக்கத்தே இருந்த சாக்குக் கட்டி லில் உட்கார்ந்து கொண்டாள். அவள் பக்கமாக வெற்றி லைத் தட்டத்தைத் தள்ளிவிட்டு விட்டு,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''குரக்கன் பிட்டுத் திண்டு கனநாளாப் போச்சு. அவன் தம்பிக்கும் இண்டைக்கு பட்டினிப் பண்டம் ஏதும் தேடேல்லை. அவனும் நாலைஞ்சு நாளாய் வரேல்லை. அதுதான் வீவான நாளையிலை சோட்டைப் பண்டம் சரிக் கட்டுவம் எண்டு நினைச்சாப்போலை...'' வள்ளிப் பிள்ளை பேசி முடிக்கவில்லை.

''ஓமடி பிள்ளை, பொடியனைப் பத்தித்தான் கேக்க வந்தனான்... ஆசுப்பத் திரியடி எல்லாம் கதையாக் கிடக்கு அவன் ஆரோ... அவன் ஆரோ... ஒரு... உனக்கு சொல்லத்தானே வேணும் எப்பிடியெண்டாலும் நீ தாயேல்லே...''

அன்னமுத்து மேலே பேச முடியாமல் விக்கி, விக்கிக் கொண்டிருந்தாள்.

வள்ளிப்பிள்ளைக்கு நெஞ்செல்லாம் கொதித்தெழும்பி யது ஈரல் குலையில் இருந்து ஒரு நடுக்க உணர்வு மேலோங்கி உடலெல்லாம் பரவி...

அவளுக்குத் தலை சுற்றியது.

ஏதோ மூத்தவனுக்கு நடக்கக் கூடாதது நடந்து விட்டதாக...

கடந்த மாதமும் சீமெந்துப் பக்ரரியிலை ஒருவன் மெசினுக்குள் அகப்பட்டு...

''வள்ளிப்பிள்ளை! ஆரோ ஒரு பெட்டையோடை அவனைக் காரைதீவுக் கடற் கரையிலை கண்டவையாம். தாடியையும் வெட்டிப் போட்டானாம்...''

வள்ளிப்பிள்ளையின் நெஞ்சுக்குள் ஒரு கஷ்டம் நீங்கி விட்டது போன்ற ஓய்வு.

''வீண்ணாணக்கதை கதைச்சவனுக்கு மங்களம் குடுத் திட்டுத் தான் வாறன். அதுக்கென்ன அவன் ஆம்பிளை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்டிலைப் பறிகுடுத்திட்டு எத்தினை காலத்துக்குத் தான் ஒண்டிக் கட்டையாக இருக்கிறது? முந்திப் பிந்தி வாழாதவன் எண்டாலும் பரவாயில்லை. வாழ்ந்து கெட்டவன்...இது பெரிய விண்ணாணம் எண்டு கதைக்கிறியள் ...எண்டு கிழிச்சுப்போட்டுத்தான் வாறன். ஏதோ தங்கடை பிள்ளையளெல்லாம் சுத்தமெண்டு வெள்ளைச் சீலையிலை கையெழுத்து வைக்கினம்.''

அன்னமுத்து தன் மனதில் உள்ளதைக் கொட்டிவிட்டாள்.

வள்ளிப்பிள்ளை எழுந்தாள். ''அன்னமுத்தக்கா எப்பன் இரணை வாறன்...'' என்று கூறிக்கொண்டே தோட்டத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றாள்.

அப்போதுதான் அகிழான் எலியின் வெடிப்புத்தை வகிர்ந்து பிடித்து வெட்டும் போது அகிழான் வெடிப்புத் தாவ ஓடாமல் தோளால் சவுக்கததை எடுத்து மவடிப் புத்தின் வாயில் பரவி விரித்து விட்டு, அரிவாய்ப் புத்தை சூரி மண்வெட்டியால் வெட்டத் தொடங்கினார் ஆறுமுகத்தார்.

நகுலன் நாய் வேட்டையைப் பிடிப்பதற்குத் தயார் நிலையில் செவிகளை உயர்த்தியும் கூழைவால் முனையைத் தாழப்பதித்தும் கண்களால் வெருண்டும் கொண்டிருந்தது.

வள்ளிப்பிள்ளை அவருக்குப் பின்பக்கமாகவே வந்தாள். ஏற்கெனவே அவளைக் காண அவரால் முடியவில்லை.

''இஞ்சேரப்பா!'' மனைவியின் இந்த அழைப்புக் குரல் கேட்டு, அவர் திடுக்குற்றுவிட்டார்.

அவள் கண்ணீரும் கம்பலையுமாக அவர் முன் வந்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''என்னடியப்பா அது? ஏன் இப்படி ஆத்துப் பறந்து வாறாய்...என்னடி?'' ஆறுமுகத்தார் அவசரமாகக் கேட்டார்.

''மூத்தவன்...மூத்தவன்...''

மேலே பேசமுடியாமல் விக்கித்தாள். ஆறுமுகத்தாருக்கு நெஞ்சு துடித்தே விட்டது போன்ற ஒரு ஏக்கம்!

''என்னடி...மூத்தவனுக்கு என்னடி?...'' என அவர் மீண்டும் அதட்டிக் கேட்டார்.

''அவன் ஆரோ ஒரு பெட்டையையும் கூட்டிக்கொண்டு காரைதீவுக் கடற்கரையிலே நிற்கின்றானாம்.''

வள்ளிப்பிள்ளை ஒரு மாதிரி சொல்லி முடித்துவிட்டாள்.

''எடி, அறுந்தவளே! இதைச் சொல்லத்தானேயடி இவ்வளவு வில்லங்கப்பட்டனீ? நான் அவனுக்கு ஏதோ என்னவோ எண்டு பயந்து போனேன்!

ஆறுமுகத்தார் இப்போது நிதானமாகிவிட்டார்.

''தாடியையும் வெட்டி போட்டானாம்!''

வள்ளிப்பிள்ளையின் இந்தப் பேச்சை அவர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. சூரிமண்வெட்டியையும் பாரையையும் எடுத்துக் கொண்டு அவர் வீட்டை நோக்கி நடந்தார். நகுலன் நாய் அவரின் காலடியை முகத்தால் தொட்டுத் தொட்டு நடந்தது. பின்னே வள்ளிப்பிள்ளை நடந்தாள். அவர்கள் வீட்டுககு வரும்வரை அன்னமுத்து குரக்கன் திருகைக்குக் காவலாக இருந்தாள்.

ஆறுமுகத்தார் வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை.

கிணற்றடிக்குச் சென்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேல் கழுவினார்.

வேட்டியை மாற்றினார்.

சவுக்கத்தைத் தோளில் போட்டார்.

சுனித்திராவின் படத்துக்கு நேரே சென்றார். படத்துப் பாதத்தில் கிடந்த பூவில் ஒன்றை எடுத்தார்.

வலக் காதில் செருகினார்.

ரத்தம் கொட்டிக் கொண்டேதான் இருந்தது.

வெளியே சென்றுவிட்டார்.

முனியப்பர் கோவில் சந்திவரை வந்து காங்கேசன் துறைக்குப் போகும் பஸ்ஸைப் பிடித்துக் கொண்டு பக்ரறி வாயிலில் வந்திறங்கி வாயில் காப்போனிடம் எதை எதையோ கேட்டார்.

அவன் பக்ரறிக்கு முன் பக்கமாக இருந்த அலுவல கங்களைக் காட்டினான்.

நிரையில் சீமெந்துக்காக லொறிகள் அடுக்கி விடப்பட் டிருந்தன.

நேராக ஆறுமுகத்தார் ஓர் ஆடுகதவை தள்ளிக் கொண்டு உள்ளே சென்று மூத்தவனாகிய முகுந்தனை விசாரித்தார். தான் அவனின் தந்தை என்றார்.

முகுந்தன் நான்கு நாட்களுக்கு முன் லீவு போட்டுக் கொண்டு போய்விட்டதாகத் தகவல் கிடைத்தது. பொழுது சருச்சலுக்குள் அவர் வீட்டுக்கு வந்துவிட்டார்.

காலையில் இருந்து தண்ணீரில்லை. வெந்நீரில்லை. வள்ளிப்பிள்ளை முன்றானையால் மூடிக்கொண்டு திண்ணையில் சுருண்டு போய்க் கிடந்தாள்.

டே—6

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இளையவனைக் காணவில்லை. கூழைவால் நகுலன் அவரை அணுகி வரவேற்றது. ''இஞ்சாரப்பா... இஞ்சார்! எழும்பன்.''

ஆறுமுகத்தாரின் இந்தப் பரிவான குரல் கேட்டு வள்ளிப்பிள்ளை எழுந்திருந்து ஏக்கத்துடன் ''என்ன வாமாப்பா... மூத்தவனைக் கண்டியே...?'' என்ற கேள்வியை அவசரமாகக் கேட்டாள்.

''ஏனடியப்பா இப்ப வில்லங்கப்படுகிறாய்? இப்ப, என்னடி நடந்துபோச்சு? நாலைஞ்சு வருசமாக்கலியாணம் கட்டமாட்டன் எண்டு நாண்டு கொண்டு நிண்டவனை முனியப்பசாமி மனம் மாத்திப் போட்டார்! இதுக்குச் சந்தோஷப்படாமல் ஏனடி அழுவான்?''

ஆறுமுகத்தாரின் இந்தக் கேள்விகளுக்கு வள்ளிப் பிள்ளையிடமிருந்து எந்தப்பதிலும் வரவில்லை.

சற்று வேளைக்குப் பின் வள்ளிப்பிள்ளை எழுந்து அடுக்களைக்குச் சென்றாள்.

இருட்டிக் கொண்டு வந்தது.

இன்று தூங்காமணி விளக்கிற்கு எண்ணெய் விடும் முறை.

எண்ணெய்ப் போத்தலுடன் அவள் வெளியே வந்தாள்.

தூங்காமணி விளக்கிற்கு எண்ணெய் வார்த்தாள்.

கிணற்றடிக்குப் போனாள்.

செம்பரத்தம் பூ ஒன்றை பறித்து வந்தாள்.

சுனித்திராவின் பாதங்களில் வைத்தாள்.

மீண்டும் அடுக்களைக்குள் போய்விட்டாள்.

ஆறுமுகத்தார் வள்ளிப்பிள்ளை படுத்திருந்த இடத்தில் சரிந்துவிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இளையவன் விளையாடிவிட்டு வந்து புத்தகமும் விளக்குமாக வீட்டுக்குள் செல்வதைக் கண்டார். பின்பு கண் அயர்ந்துவிட்டார்.

''இஞ்சை கேளனப்பா—!'' அடுக்களைக்குள் இருந்து வள்ளிப்பிள்ளையின் குரல் கேட்டது.

''வாவன் சோத்தைத் தின்னன். இண்டு முழுக்கப் பட்டினி!''

மறுபடியும் வள்ளிப்பிள்ளையின் குரல்.

''இளையவன் திண்டிட்டானே?'' என்று கேட்டுக் கொண்டே குடத்தடிக்குச் சென்று பொச்சு மட்டைமேல் குந்தி இருந்த குடத்தைச் சரித்து கையலம்பிக் கொப்புளித் தபடி சாப்பிட வந்துவிட்டார்.

''நீ சொல்லுறது ஒரு முறைக்குப் பாத்தா சரி தானப்பா! அந்தப் பெட்டை ஆரெண்டல்லோ அறிய வேணும்.

ஆறுமுகத்தார் ஒரு கோப்பைச் சாப்பாட்டை முடிக்கும்வரை காத்திருந்துவிட்டு, வள்ளிப்பிள்ளை இதைக் கேட்டாள்.

ஆறுமுகத்தார் வாய் திறக்கவில்லை.

காலையைப் போன்று மீண்டும் மௌனம்!

சாப்பாடு முடிந்தது.

சாப்பிட்ட கையோடு சுருட்டைப்பற்றி முடித்து பாயை விரித்தாய் விட்டது. இனி அவர் படுத்து உறங்க வேண்டியதுதான்.

அவர் படுத்தார்.

தூங்குவதற்காகத்தான்.

ஆனால் விடியும்வரை அவரால் தூங்க முடியவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதிகாலையோடு வயிரவன் வந்தான்.

இன்று வெள்ளிக்கிழமை. கிழங்கு கிளறுவதற்கு உதவியாக அவர் அவனை ஏற்கெனவே வரச் சொல்லியிருந்தார்.

வயிரவன்தான் இன்று அவருக்கு முழுவியளம். அவனையும் அழைத்துக் கொண்டு பாரைகளையும் எடுத்துக் கொண்டு அவர் தோட்டப் பக்கம் போய் விட்டார்.

''நயினாருக்குச் சொன்னா என்ன... கதை மலிஞ்சாச் சந்தைக்கு வரும்தானே... எங்கடை மச்சாளின்ரை பொட்டை—அதுதானாக்கும் சிமெந்துக் கொம்பனியிலை வேலை செய்யிற பொட்டை— அவளை ஐஞ்சாறு நாளாய்க் காணவில்லையாம். ஓடித்திரியினமாக்கும்.''

ஆறுமுகத்தாருக்குத் தரையில் கால் வைத்து நடப்பதைப் போன்ற உணர்வே இல்லை.

''வயிரவன் நீ வீட்டை போ, நாளைக்கு வா, கிழங்கு கிண்டுவம்'' என்று மட்டும் சொன்னதாக ஞாபகம்.

ஆறுமுகத்தார் தோட்டத்திற்குப் போன கையோடேயே திரும்பிவிட்டது வள்ளிப்பிள்ளைக்கு என்னவோ மாதிரி இருந்தது.

ஆறுமுகத்தார் திண்ணையில் படுத்துக் கொண்டார்.

''என்னப்பா ஏதெண்டாலும் செய்யுதே?... கொத்த மல்லி போட்டுக் கோப்பி கலந்து தரட்டே'' வள்ளிப் பிள்ளை இப்படிக் கேட்டாள்.

''எனக்கொண்டும் வேண்டாம்.''

இப்படி மொட்டையாகவே ஆறுமுகத்தார் பதில் சொன்னார்.

வள்ளிப்பிள்ளை எதுவும் பேசவில்லை.

www.tamilarangam.net



சற்றுவேளை நிசப்தம்.

"இண்டைக்கு எப்பன் புளிக்கஞ்சி வையப்பா குடிக்க வேணும்போலை கிடக்கு."

ஆறுமுகத்தார் திடீரென்று சொன்னார்.

புளிக்கஞ்சி காய்ச்சுவதற்கு இப்படி அவசரப்பட்டு என்றும் அவர் சொன்னதில்லை. இரண்டு நாட்களுக்கு முன்னேயே அதற்கான தினை, கிழங்குவகை, கீரை வகை சேகரித்து, கடைசியாகச் சேகரிக்கும் இரு இலையும் போட்டு புளிக் கஞ்சி காய்ச்சுவதுதான் வழக்கம்.

"தினை அரிசி இல்லையப்பா."

வள்ளிப்பிள்ளை மெதுவாகச் சொன்னாள்.

"ஏன் புழுங்கல் அரிசி இல்லையே."

ஆறுமுகத்தார் விடவில்லை.

"என்ன இண்டைக்கு இருந்தாப் போலை இந்த மனிசனுக்கு வந்திட்டுதாக்கும்," என்று உள் மனதுக்குள் சொல்லிக் கொண்டே அவள் எழுந்து கஞ்சி காய்ச்சுவதற்கான அடுக்குகளைச் செய்தாள்.

ஆறுமுகத்தார் கண்களை மூடிக்கொண்டு பொய்யுறக்கம் செய்தார்.

சற்று வேளையாயிற்று. அன்று வெள்ளிக்கிழமை; ஆரதக்கறி ஆக்க வைத்திருந்த கீரை, கிழங்கு ஆகியவைகளை ஒடித்தும் அறுத்தும்விட்டு வள்ளிப்பிள்ளை உலை வைப்பதற்காகப் பானையை உரசிக் கழுவிக் கொண்டிருந்தாள்.

"அடுக்களையிக்கை வையாதை! மூண்டு கல்லை வைச்சு உலையை முத்தத்திலை வையப்பா."

ஆறுமுகத்தார், கிடந்த படியே கூறினார். வள்ளிப் பிள்ளைக்கு ஒன்றும் புரியவில்லை.

www.tamilarangam.net



"முத்தத்திலை வெய்யிலாக் கிடக்கு...'' என்று அவள் கூறி முடிக்கு முன்,

''முத்தத்திலை வையெண்டு நான் சொல்லுறன்...'' எனச் சற்று உரத்தகுரலில் கூறினார் ஆறுமுகத்தார்.

இதற்கு மேல் அவருடன் வாதாட முடியாது. அவரின் சுபாவம் அப்படி.

வள்ளிப்பிள்ளை முற்றத்தில் மூன்று கற்களைத் தூக்கி வைத்து, அடுப்பை மூட்டி உலையை ஏற்றினாள்.

அடுப்பு முளாசி எரிந்து கொண்டிருந்தது. புளிக்கஞ்சிக்கு முறைப்படி அம்மியில் மிளகாய் அரைத்துத் தான் கலக்க வேண்டும். அதற்கு நேரமில்லை. பழம் மிளகாயை பனம் ஈக்கில் கோர்த்து உலைப் பானையில் அவியவிட்டு. அதைக் கஞ்சிக்குள் கலப்பதுவும் ஒரு முறை.

வள்ளிப்பிள்ளை மிளகாய்ப் பழங்களை அளவான பனம் ஈர்க்கில் கோத்து, உலைப் பானைக்குள் போட்டாள்.

பின்பு கிழங்குகளையும் கீரைகளையும் கொட்டினாள்.

உப்பை விட்டாள்.

மிளகாய்க் கோவையை வெளியே எடுத்துப் பிசைந்து கரைத்து கஞ்சிப் பானைக்குள் விட்டாள்.

இனிப் புளிவிட்டு இறக்குவதுதான் பாக்கி.

இளையவன் சந்திரனும் பாடசாலையிலிருந்து வந்து விட்டான்.

''என்னடியப்பா புளிவிட ஆயித்தமே.''

ஆறுமுகத்தார் கேட்டார்.

''விடப்போறன்.''

என்றாள் வள்ளிப்பிள்ளை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''எப்பன் பொறு வாறன்.''

என்று கூறிக்கொண்டே ஆறுமுகத்தார் எழுந்தார். தாழ்வாரத்தில் பூவும் பிஞ்சுமாக நின்ற முருங்கைக் கொப்பொன்றைப் பிடித்து வளைத்தார்.

ஒரு பிடி இலையை உருவினார்.

புளிச்சஞ்சி உலையடிக்குக் கொண்டு சென்றார்.

உலை மூடியை எடுத்தார்.

அந்த ஒரு பிடி முருக்கமிலையைப் பானைக்குள் பொத்தி வீசி, உலையை மூடி விட்டார்.

வள்ளிப்பிள்ளை ஏங்கிப் போனாள்.

அவள் சின்ன வயசில் இருக்கும்போது அவளின் அண்ணன் யாரோ ஒரு பெட்டையைக் கூட்டிக்கொண்டு ஓடிவிட்டதற்காக அவளின் அப்பன் இப்படிக் கஞ்சியைப் பிடிச்சு ஒரு பிடி முருக்கமிலையை அதில் உருவிப்போட்டு

''என்ரை மோனின்ரை உரிமைக் கஞ்சியடி' குடியுங்கோ...'' என்று கூறியதும், அன்றிலிருந்து அவள் அண்ணன் சாவுக்கும் இல்லாமல் வாழ்வுக்குமில்லாமல் இருப்பது அவள் ஞாபகத்துக்கு வந்தது.

''ஐயோ, இதென்ன நாசமறுந்த வேலை!'' என்று அவள் வாய்விட்டுக் கத்திவிட்டாள்.

நிதானமாக வாயிற்படி வரை சென்ற ஆறுமுகத்தார், மருமகளின் படத்தின் பாதத்தில் இருந்த துவண்ட மலர் ஒன்றை எடுத்து, வலது காதுக்குள் வைத்துக் கொண்டு,

''மூத்தவன்ரை உரிமைக் கஞ்சியைக் குடிக்க தொன்னை கோலவேணும். பிலாவிலை பொறுக்கிக் கொண்டு வாறன்'' என்று கூறிவிட்டு கோடிப்புற பிலா வடியை நோக்கிப் போனார்.

www.tamilarangam.net



காலையில் தனக்குத்தேறுதல் சொன்னவர், இப்போது ஏன் இப்படிச் செய்தாரென்று வள்ளிப்பிள்ளைக்குப் புரிய வில்லை.

வயிரவன் அவரிடம் சொல்லிவிட்டுப் போன தகவல் அவளுக்குத் தெரிய நியாயம் இல்லை.

அவள் கஞ்சி உலைக்கு முன்னால் முகத்தைப் பொத்தியபடி அழுது கொண்டிருந்தாள்.

இளையவன் சந்திரன் என்ன நினைத்துக் கொண் டானோ ''ஏனணை அம்மா அழுகிறாய்? அண்ணை எங்கையணை... என்று கேட்டுவிட்டு விக்கி, விக்கி அழு தான்.

கோடிப்புறப் பிலாவடியில் இருந்து தொன்னை கோலிக் கொண்டே ஆறுமுகத்தார் வந்தார்.

இலைக்கஞ்சிப் பானையடிக்கு வரும்போது அவர் முகத்தில் எந்தவித கலக்கமும் இருக்கவில்லை.

(முற்றும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மையக்குறி

## 1

கூட்டம் பார்க்க வந்திருந்த சண்முகம் மணிக்கூட்டுக் கோபுரத்தை அண்ணாந்து பார்த்தான். மணி சரியாக மூன்று ஐம்பது காட்டியது. தலையை நிமிர்த்தி திறந்த வெளி அரங்கையும் பார்த்தான்; திடுக்குற்றுப்போய் விட்டான்; அத்தனை கூட்டம்!

''மாலை ஐந்தரை மணிபோல'' என்றுதான் கூட்ட விளம்பரச் சுவரொட்டிகள் கூறியிருந்தன. இங்கு என்னடா என்றால் நான்குமணி சரியாகத் தொடங்குவதற்கு முன்னாலேயே கூட்டம் இத்தனை பெருமளவில் கூடிவிட்டதை எண்ணியபோது அவனுக்குத் திடுக்காட்டமாகதான் இருந்தது.

அன்று காலையிலிருந்து மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மதியவேளையிலிருந்து பொழுதே மூடத்துள் புதைந்துவிட்டது. இதனால்தான், தான் சரியான கணக்கெடுப்பின்றி வந்ததைப்போல, திரண்டிருந்தோர் எல்லோருமே முன்னதாகவே வந்துவிட்டதாகச் சண்முகம் எண்ணித் திருப்திப் பட்டுக்கொண்டான்.

யாழ்ப்பாணத்தில் ''நானே யாழ்ப்பாணத்து முதல்வன்'' என்று தலைநிமிர்ந்து நிற்கும் அந்தக் கோபுரத்தின் மணிக்கூடு கடந்த எட்டுப்பத்து மாதங்களாக இந்த மூன்று ஐம்பதில்தான் அடம்பிடித்துக் கொண்டு நிற்கிறது என்ற தகவல் சண்முகத்திற்கு முன்னமே தெரியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''யாழ்ப்பாணத்து முற்றவெளி மணிக்கூடு நீண்டநித்திரை செய்கிறது'' என்று உள்ளூர்த் தினசரிப் பத்திரிகை ஒன்று முதலில் எழுத, ''யாழ்ப்பாண மணிக்கூட்டின் அநந்தசயனம் எப்போது கலையும்?'' என்ற கேள்வியை வெளியூர்த் தினசரி ஒன்று எழுப்பியிருந்ததையும் சண்முகம் படிக்கவில்லை. அதனால் மணிக்கூட்டின் 'மூன்று ஐம்பது' பற்றி எந்தவிதக் கவலையும் படாமல் அவன் கூட்டத்தடிக்கு வந்து சேர்ந்து விட்டான்.

ஒலிபரப்பிக் குழாய்கள் நாலாபுறமும் கணீர்கணீரென ஒலியை விழுங்கிக் கக்கிக்கொண்டிருந்தன. வடக்குப் புறமாகத் திருப்பி விடப்பட்டிருந்த ஒலிபெருக்கி ஓசை புல்லுக்குளத்து, உலகத்திற்கே புதுமையான பச்சை நிறத் தண்ணீர்ப் பரப்பில் பட்டுத்தெறித்து எதிரொலித்துக் கொண்டிருந்தது. இந்தப் பச்சைக்குளத்து எதிரொலிக்குப் 'பறாக்' செய்வதைப்போல சீருடைதரித்த ஊர்க்காவலர்கள் குளக்கரையில் பத்தடிக்கு ஒருவராக நிரைக்கு நின்று கொண்டிருந்தனர்.

சண்முகம் வசதியான ஒரு இடம் பார்த்து புல் தரவையில் குந்திக் கொண்டான்.

அபேட்சகரின் சின்னம் பொறித்த கொடிகள் கூட்டத்தின் அரங்கிலிருந்து நலாபுறமும் விரிந்து பரவி 'சேக்கஸ்' கூடாரம்போல ஆக்கிவிட்டிருந்த அழகு சண்முகத்திற்கு நன்றாகப் பிடித்துவிட்டிருந்தது.

குளிர்க் காற்று வீசிக்கொண்டிருந்தது.

மழைக்காலமல்ல, ஆனாலும் பகல் முழுதாகப் போட்டிருக்கும் புகார் மூடத்தினால் காற்றுக் குளிராகவே வந்தது.

இருட்டிக்கொண்டு வந்தது.

வெகுவிரைவிலேயே இருட்டிக் கொண்டு விட்டதாக சண்முகத்தின் நினைப்பு, அவன் இன்னும் மணிக்கூட்டுக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோபுரம் காட்டிய அந்த 'மூன்று ஐம்பதி'லேயே இருக்கிறான்.

சற்றுத்தொலைவில் மோட்டார் ஒன்று இரையத் தொடங்கியதும் கூட்டத்து மேடை ஜெகஜ்ஜோதியாகி விட்டது. இந்தச் ஜெகஜ்ஜோதிப் பிறப்புக்கே ஜனக் கூட்டம் கைகொட்டி ஓயச் சில நிமிடங்கள் ஆகிவிட்டன.

ஒருவர்பின் ஒருவராகப் பலர் பேசினர். இப்பொழுது பேச இருப்பது அபேட்சகர்!

அபேட்சகர் மேடையில் எழுந்துவிட்டார்.

அவிட்டுவாணம் ஒன்று கீழ் வெடிவைத்து வானத்தை நோக்கி மின்னிமின்னிச் சென்று, வானத்தில் மறுவெடி வெடிக்க வர்ணக்குளம்புகள் சிறுசிறு கட்டிகளாகி, குடை பரப்பிக்கீழ் வந்து மங்கிமங்கி மறைந்து போயின.

மேடையை நோக்கி மாலைபோடுபவர்களின் படையெடுப்பு!

"நண்பர்களே, எங்கள் அபேட்சகருக்கு மாலைபோடுபவர்கள் தயவு செய்து வரிசைக்கிரமத்தில் வாருங்கள்! சகல அன்பர்களுக்கும் மாலைபோடும் சந்தர்ப்பம் நிச்சயமாக அளிக்கப்படும்" என்ற தலைவரின் வேண்டுகோள் எழுவே மாலைபோடும் வைபவம் மிகவும் நிதானமாக நடைபெறத் தொடங்கி முடிய கால்மணி நேரத்துக்குமேல் ஆகிவிட்டது.

அபேட்சகர் மாலைச் சுமையால் முக்குளித்துப் போனார்.

மாலைகளின் முக்குளிப்பிலிருந்து விடுவிக்க ஓர் அன்பர் அவர் கழுத்தின் மாலைச் சுமையை நீக்கி மேசைமேல் குவித்துக் கொண்டிருந்தார்.

படப்பிடிப்பாளர்களின் ஒளிகள் மின்னி மின்னிக் கொண்டிருந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடையிடையே வெடிச்சத்தங்கள் எழுந்தன. கடைசியாக அபேட்சகர் பேசத்தொடங்கிவிட்டார்.

மறுபடியும் கரகோசங்கள், மறுபடியும் மறுபடியும் அவை நீண்டன.

அபேட்சகர் கூட்டத்தை நோக்கிக் கையமர்த்தியதன் மேல்தான் கரவொலி ஓசை ஓய்ந்தது. பின்பு அபேட்சகர் கூட்டத்தை முன்புறமும் பின் புறமும் குவித்த கரத்தை சிரசின்மேல் வைத்துக் கும்பிட்டுவிட்டு பேசத் தொடங்கி விட்டார்.

நாட்டின் பசி பட்டினி பற்றி.

நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டம்பற்றி.

நாட்டின் தேசிய ஒற்றுமையைப் பற்றி.

நாட்டின் இன மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதுபற்றி.

பாராளுமன்றம் பற்றி...இவைகளையெல்லாம் பேசிவிட்டு இறுதியாக அபேட்சகர் சொன்னாரே ஒரு சொற்றொடர்.

''அன்பானவர்களே! இன்றைய இந்த இறுதிக் கூட்டத்தில் நாளைக்கு நடக்கப் போகும் தேர்தல் முடிவு பற்றிய ஒரு கணக்கெடுப்பை நான் நடத்திவிட்டேன். இக்கூட்டத்தில் எனக்கு உங்கள் திருக்கரங்கள் அணிவித்த மாலைகளை கணக்குத் தப்பாமல் கணக்கெடுத்தேன். முப்பத்தி ஆறு மாலைகள் தேறின. ஒரு மாலைக்குச் சராசரி ஆயிரம் வாக்குப்படி கணக்கிட்டு நான் முப்பத்தி ஆறாயிரம் வாக்குகளைப் பெறுவேன் என்று உறுதிசெய்து கொண்டேன். வேண்டுமானால் நாளை இரவு கச்சேரி வாசலில் கேட்கும் முடிவை அறிந்து பாருங்கள். அப்போது தான் எனது அரசியல் கணிப்பீட்டினை நீங்கள் உணர்வீர்கள்.''

www.tamilarangam.net



அப்பாடா! எத்தனை விவேகத்துடன் அபேட்சகர் இந்த வார்த்தைத் தொடரை அள்ளி வீசிவிட்டார்.

கூட்டம் மங்களகரமாக முடிந்துவிட்டது.

ஜனக்கூட்டம், கார்கள், வண்டிகள் யாவும் கலையத் தொடங்கி விட்டன.

கூட்டத்தின் முடிவு தறுவாயில் எழுந்து சென்று கடலைக்காரியிடம் வாங்கிய கடலை இன்னும் தீரவில்லை. அதைக் கொறித்துக் கொண்டு சண்முகம் மணிக்கூட்டுக் கோபுரத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

பட்டாணிக்கடலை வாய்க்கு ருசியாக இருந்தது பட்டாணிக்கடலை என்றால் அவனுக்கு மிகவும் விருப்பம்.

மணிக்கூட்டுக் கோபுரத்தை அவன் கண்கள் நோக்கின.

இப்போதும் மணி மூன்று ஐம்பதுதான்!

அவனுக்கு விஷயம் புரிந்து விட்டது!

முன்பு யாரோ ஒருத்தர் இந்த மணிக்கூட்டு கோபுரத்தின் அநந்த சயனத்தைப் பற்றி பத்திரிகையில் வந்திருப்பதாகச் சொன்னது இப்போதுதான் அவன் மனதிற்பட்டது.

சில மணிகளுக்கு முன்தான் ஏமாந்து விட்டதை அவன் எண்ணி வெட்கப்பட்டான்.

அந்த மணிக்கூட்டைச் சுற்றி பகல் போல இருந்த ஒளி வெள்ளத்தில் வந்துகொண்டிருந்த 'றிச்சோ' வண்டி அவன் கண்களில் பட்டது.

ஏறக்குறைய பத்துவருடங்களுக்கு முன்புதான் றிச்சோ வண்டியை அவன் யாழ்ப்பாணப் பட்டணத்தில் பார்த்திருக்கிறான். இப்போது எதிரேவரும் வண்டியைப் பார்த்த போது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனுக்கு மட்டுமல்ல கூட்டம் முடிந்து வந்த சகலருக்குமே அது

www.tamilarangam.net



ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும்! கேலிச்சிரிப்புடனும், நையாண்டிச் சீழ்க்கையுடனும் அவர்கள் எல்லோரும் ஒதுங்கி றிச்சோவுக்கு வழிவிட்டு விட்டு அதையே பார்த்துக் கொண்டு நின்றனர்.

குள்ளமான கறுப்பான ஒரு கிழவன் அதை இழுத்துக் கொண்டு வந்தான்.

தலையைப் பாதியாக மூடி முன்குஞ்சம் விட்டு, சவுக்கத் துண்டினால் அவன் கட்டியிருந்தான்.

வண்டியின் கூடாரம் சுருக்கி விடப்பட்டிருந்தது. அதனுள்ளே ஒரு வெண்தாடிக் கிழவன்.

வெள்ளை வெளேரென்ற உடை உடம்பையெல்லாம் மறைத்திருக்க,

நிரந்தரமாகக் கட்டப்பட்டு அதன் மேல் பொன்னிறக் கோடுகள் பதித்த தலைப்பாகு தலையிலே கொலு வீற்றிருக்க,

றிச்சோவின் பக்கத்துத் திரணை துவாளிப்புக் கப்பிகளில் கைகளைக் கொலுவிருத்திக்கொண்டு அந்தக் கிழவன் ராஜ கோலத்தில் இருந்தான்.

வெளிச்சத்தில் நன்கு தெரிந்த முகத்தை சண்முகம் குறி வைத்துப் பார்த்தான்.

எங்கோ கண்டிருப்பது போன்ற ஞாபகம்! ஆனாலும் அந்த வெண்தாடிக்குள் இருந்த மனிதனை அவனால் இனங்காண முடியவில்லை. அந்த இராஜக் கொலுவிருப்பிலிருந்து இருமலும், முக்கலும், முனகலும், இழுப்பும், மூச்சும் கலந்த ஓசைகள் சண்முகத்தின் செவிவரை கேட்டன.

''ஐயா, ஐயா! இது என்ன மொடல் காரையா, நான் முந்தி ஒருநாளும் காணேல்லை?''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படி ஒரு சிறுவன் தன் தந்தையானவனை வினவிய குரல் கேட்டது.

''இது காரில்லைத் தம்பி. றிச்சோ எண்டு இதைச் சொல்லுறது. இது இஞ்சை இல்லாமப்போய் பத்துப் பதினைஞ்சு வருசத்துக்கு மேலை இருக்கும்! இது இல்லாமற் போகேக்கை நீ பிறந்தும் இருக்காய்!''

இப்படித் தந்தையானவன் மகனுக்கு விளக்கம் கொடுப்பதும் கேட்டது.

றிச்சோ எல்லோரையும் ஊடறுத்துக்கொண்டு மணிக் கூட்டு வீதியால் மேற்கே திரும்பி, திறந்தவெளி அரங்குப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தது.

இந்த வெண்தாடி முகத்தை நினைவுபடுத்த சண்முகம் முயன்று முயன்று கொண்டே நடந்தான்.

நன்றாகப் பழகிய முகம் போன்ற ஒரு எண்ணம் உள் மனதை அரிக்கிறது.

ஆனால்...

ஆனாலும் அது இனங்காண முடியாத ஒரு அவஸ்தை தான்.

## 2

சண்முகம் பஸ்நிலையத்திற்கு வந்து சேர்ந்து விட்டான்.

இப்போது, அந்த றிச்சோவும், அந்த வெண்தாடிக் கிழ உருவமும் அவன் மனதிலிருந்து விடுபட்டுவிட்டன. கூட்டத்தில் பேசிய பேச்சாளர்களின் பேச்சுக்கள் பற்றி யும், குறிப்பாக எதுவும் அவன் மனத்தில் இல்லை ஆயினும், அபேட்சகருக்கு முன்னதாக மனமாற்றத்தைப்

www.tamilarangam.net



பற்றிப்பேசிய காசிப்பிள்ளை என்பவரின் பேச்சுத்தான் அவன் மனக்குழிக்குள் சற்று இடம்பிடித்து நின்றது எனலாம்.

பஸ்நிலையம் கலகலப்பாய் இருந்தது.

விடிந்தால் தேர்தல் திருநாள்!

அத்துடன் கூட்டமும் முடிந்து பஸ்ஸைப் பிடிப்பவர்களின் பரபரப்பு!

பஸ்நிலையத்திற்கு முன்னால் இருந்த புத்தகக் கடையைச் சூழ்ந்து கொண்டு ஒரு கூட்டம் சனம்.

சிவப்புச்சட்டை அணிந்தவர்கள், மூவர்ணக் கொடித் துண்டுகளைக் கழுத்திலும் தலையிலும் கட்டியவர்கள் இப்படிப் பலர். அந்தப் புத்தகக்கடையில் எப்போதும் இப்படித்தான்.

வழமையாக ஓசியில் புதினப் பத்திரிகை படிப்போர், உலக அரசியல் பேசுவோர், அரசியல் தர்க்கம் நடத்துவோர், சினிமாப்பற்றிய விமர்சனம் செய்வோர், அன்றாடம் சகல பத்திரிகைப் புதினங்களையும் கரைத்துக் குடித்துவிட்டு புதினங்களாகவே ஏவறைவிடுவோர், கடைவாயிலில் தொங்கவிடப்பட்டிருக்கும் குமரிப்பெண்களின் படங்களைப் பார்த்து மெய்மறந்து நிற்போர், அங்குமிங்கும் பார்த்துவிட்டு இரகசியமாக பகிரங்கமாகக் கையில் கொண்டு செல்ல முடியாத புத்தகங்களை-கைப் பைகளில் மடக்கி வைக்கும் பெண்பாலர், இளம்பாலர். இப்படிப் பலரும் அன்றாடம் சுற்றிச்சுழரும் சந்திப்பு அது.

அந்தக் கடைக்காரரர் ஒரு சாந்த சொரூபி!

என்ன நடந்தாலும், எது நடந்தாலும் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு முன் பற்களைப் பளிச்சிட அவர் சிரிக்கும் சர்க்கரைச் சிரிப்புக் காட்சியைக் காணுவதற்காக பென்னம்பெரிய ஓசையில் இலக்கிய உலகைப் பித்துக்

www.tamilarangam.net



குதறுபவர்களும் நான் தவறாமல் வந்துபோகும் இலக்கிய சந்திப்புங்கூட அதுதான், அந்தச் சந்திப்புத்தான்!

சண்முகமும் பட்டணத்துக்கு வந்தால் அந்தப் புனித ஸ்தலத்தைத் தரிசிக்காமல் என்றும் போனதில்லை. ஏதாவது ஒன்று அதில் விலைகொள்ளாமல் சென்றதுமில்லை.

கூட்டத்தோடு கூட்டமாகச் சண்முகம் நின்றான்.

பலவிதமான பேச்சுக்கள்!

நாளை வெற்றியீட்டப் போகும் அபேட்சகரைப்பற்றிய ஆருடங்கள்; கட்டுக்காசு இழக்கப் போபவர்களின வரிசைக் கிரமங்கள்; வெற்றி கொள்வோர் எடுக்கப்போகும் அதிகப்படியான எண்ணிக்கைகள் பற்றிய குறிப்புக்கள், இப்படிப் பல.

''இண்டைக்குச் சோமர் கூட்டத்திலை பேசேல்லை. என்ன சங்கதி? ஆள் ஏதும் மாறோ? நொமினேசனில் அண்டைக்கு மேடையை ஒரு கலக்குக் கலக்கின மனிசன் ஏன் இண்டைக்குக் காணேல்லை? நோட்டீசிலையும் பேர் போடேல்லை!''

இப்படி ஒரு குரல்!

''அந்தாள் கிடக்கிற கிடையிலை கூட்டத்திலைகிட்டத் திலை பேசேலுமே? ஆள் படுக்கையிலை விழுந்து ரெண்டு மாசமாப் போச்சு! அண்டைக்குக் கூடக் காரிலை ஏத்திக் கொண்டு வந்தெல்லே பேசவிட்டவை!''

இப்படி வேறோர் குரல்!

இப்போதுதான் சண்முகத்திற்குச் சோமரின் நினைப்பு வந்தது. சோமரை அவன் பல மேடைகளில் சந்தித்திருக்கிறான். அவரின் கேலிகலந்த சாதுரியமான பேச்சுக்களுக்குக் கை தட்டியிருக்கிறான்; வாய்விட்டுச் சிரித்திருக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிறான்; அவரின் பரந்துபட்ட உலக ஞானத்தை வியந்திருக்கிறான்.

''அவருக்கென்னண்ணை வலுகடுமையாமோ? இப்படி மனம்தாங்க மாட்டாமல் சண்முகம் அவர் சுகயீனம்பற்றிய விபரத்தைச் சொன்னவனிடம் கேட்டுவிட்டான்.

''ஓமோம், வலுகடுமை எண்டுதான்கேள்வி. நாங்களும் ஐஞ்சு பத்து நாளாக ஆளைப் போய்ப்பாக்கேல்லை; நளைக்கு நேரம் வராது ஆறெண்டாலும் வாற நீங்கள் வாருங்கோ. உதிலை தெண்டாயுதபாணி வீட்டுக்கு அங்காலை தானே ஒருக்கா போய்ப்பாத்துக் கொண்டு வந்திடுவம்!'' என்று சண்முகத்துக்கும் பதில் சொல்லி விட்டே பொதுவில் எல்லோரையும் பார்த்துக் கேட்டான் வேறொருவன்.

''ஓமோம், உதிலை கிடக்கு! புதுக்கப் புதுக்கக் கட்டுப் படுற லேலன் கொம்பனிக்குப் பக்கத்திலைதானே!'' என்று கூறிக்கொண்டே இன்னொருத்தன் தயாராகிவிட்டான்.

''அதிலைதான் என்ரை வீடும் கிடக்கு; அந்தச் சந்திக் குப் பக்கத்திலை! அந்தாளும் சாகிற நேரத்திலை; போற நீங்கள் போட்டு வாருங்கோ!'' இப்படிப் புத்தகக் கடைக் காரர் தனது வழமையான சர்க்கரைச் சிரிப்பைக்காட்டவே அதை அவரின் வேண்டுகோளாக ஏற்றுப் பலர் புறப்பட்டு விட்டனர்.

சண்முகம் தாவடிக்குப் போக வேண்டும்.

சுன்னாகம் பஸ்ஸைப் பிடித்தால்தான் அவன் தாவடிக் குப் போய்ச்சேர முடியும். அதனால் அவனுக்கு இரட்டை மனம்! சோமரை ஒரு தடவை பார்த்துவிடத்தான் அவன் எண்ணினான். ஆனாலும் கொட்டடி போய்த் திரும்பும் வரை கடைசி பஸ் அவனுக்காகக் காத்திருக்க வேண்டுமே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சினிமாத் தியேட்டர்களில் இரண்டாவது படக்காட்சிகள் முடிய இன்னும் ஒரு மணி நேரம்தான் இருக்கிறது. படக்காட்சி முடிந்ததும் பஸ்கள் புறப்பட்டுவிடும். அதற்கிடையில் சோமரைப் பார்த்துவிட்டு வந்துவிடலாம் என்றுதான் அவன் முடிவுக்கு வந்தான்.

சண்முகம் ஒண்டிக்கட்டை!

தாய்க்கிழவி மட்டும்தான் வீட்டோடு!

தம்பி என்று ஒருத்தன்.

அவன் ஒரு ஊர்ப்பறவை, எப்போதாவது வருவான்; போவான். போகும்போதும் வரும்போதும் அவன் கரங்களைச் சிறு புத்தகங்களும் பத்திரிகைகளும் தான் தாங்கிப் பிடிக்கும்.

அவனுக்கு இப்போது முப்பது வயதுவரை ஆகிறது. சண்முகத்தைவிட அவன் நான்கு வயது இளையவன்,

நான்கு ஆண்டுகளுக்குமுன் கமச் செய்கைக்கென வவுனிக்குளப் பகுதிக்குப் போனவன் அங்கேயே கமக்காரர் இயக்கம், விவசாயிகள் சங்கம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு திரிகிறான். அவன் சுபாவம் அப்படியாகி விட்டது. அவன் வீட்டுக்கு வந்தும் நீண்ட நாட்களாகி விட்டன. தாய்க்கிழவி இரவுச் சாப்பாட்டை உறியில் வைத்துவிட்டுப் படுத்திருப்பாள். எப்படியும் எந்நேரமானாலும் இவன் வீட்டுக்குப் போய்ச்சேர வேண்டும். அவ்வளவுதான்.

சோமரைப் பார்க்கச்சென்ற கூட்டத்தோடு ஒருவனாகச் சண்முகமும் சேர்ந்துவிட்டான். கூட்டத்தோடு வந்து கொண்டிருந்தவர்கள் ஆளுக்கு ஒவ்வொரு கோப்பி குடித்து இரண்டு வடையும் கடிக்கும் நோக்கத்துடன் சத்திரத்துச் சந்திப்பில் புதிதாகத் திறக்கப்பட்ட விடுகடைக்குள் புகுந்து கொண்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சண்முகத்திற்கு நிலைமை சங்கடமாகிவிட்டது.

கையிலிருப்பது, கூட்டத்தில் கடலை வாங்கியது போக மிகுதி ஐம்பது சதந்தான். தாவடிச் சந்திப்புவரை பஸ்ஸில் போக இருபதுசதம் ஆகும். ஒரு சிறு வேளைதான் சண்முகம் யோசித்தான். வயிறும் இலேசாக உள்ளே சொறிவதுபோல இருந்தது. ஐம்பது சதத்தோடு உள்ளே போய்விட்டான். ஒரு வடை, ஒரு கோப்பி, ஒரு பழம்! நாற்பது சதம் தீர்ந்தது.

கையில் மிஞ்சியது ஒரு பத்து சதக்குத்திமட்டுந்தான்.

மறுபடியும் சோமர் வீடு நோக்கிய பிரயாணம்.

முதலில் வந்த வெள்ளாந் தெருச் சந்திப்பைத் தாண்டி "சாம் புறக்ரர்" வீட்டைத் தாண்டி தெண்டாயுதபாணி வீட்டைத்தாண்டி புதிய கட்டிடச் சந்திப்புக்கு வந்த போது...

எங்கோ கூக்குரல்கள் கேட்டன.

கூக்குரல் வந்த திக்கில் எல்லோரும் திகைத்து நோக்கினர்.

அது சோமர் வீடுதான்!

ஐயோ! எல்லோரினதும் அபிமானத்திற்குரிய சோமர் செத்துப்போனார்!

அகலத் திறந்திருந்த கேற்றைத் தாண்டிக் கொண்டு வந்தவர்கள் உள்ளே சென்றனர். சோமரின் முகத்தைச் சூட்டோடு பார்த்துவிடத்தான் எல்லோரும் துடித்தனர்.

நெஞ்சு துடியாய்த் துடிக்க சண்முகம் கூட்டத்தை ஊடறுத்துக் கொண்டு தலையை நீட்டிச் சோமரைப் பார்த்தவன், திடுக்குற்றுவிட்டான்.

கூட்டம் முடிந்து மணிக்கூட்டு வீதிக்கு வந்தபோது றிச்சோ வண்டியில் பார்த்த அதே உருவம்!

www.tamilarangam.net



அதே வெண்தாடி!

அதே வெள்ளை உடை!

ஒரேஒரு வித்தியாசம்; தலையின் சருகைத் தலைப் பாகை மட்டும் அவர் தலைமாட்டில் தனியாகக் குத்தி இருக்கிறது!

வந்த கூட்டத்தின் பெருமூச்சும், விசும்பலும் ஓயச் சற்றுநேரம் எடுத்துவிட்டது.

சண்முகத்திற்கு விசும்பவோ, பெருமூச்சுவிடவோ முடியவில்லை.

அவன் அந்த வெண்தாடி மனிதனைப் பார்த்துக் கொண்டு அசையாமல் நின்றான்.

''சாகும் தறுவாயிலும், இந்த றிச்சோவில் ராஜ கோலத்தில் கொலுவிருக்க எப்படி அவரால் முடிந்தது?'' என்பதுதான் சண்முகத்தின் நெஞ்சுக்குள் நின்ற கேள்வி யாகும்.

போனவர்கள் ஒவ்வொருவராக வெளியே வந்தனர்.

கடைசி ஆளாகத்தான் சண்முகம் வந்தான்.

அகலத் திறந்து கிடந்த வேல்கேற்றின் வலப்புறக் கிடுகுவேலியோடு றிச்சோ ஒன்று நின்றது.

யாரும் அதை அக்கறையோடு பார்க்கவில்லை.

சண்முகம் மட்டும் அதை அக்கறையோடு பார்த்தான்.

அந்த றிச்சோ ஏறுபடி வக்குக்குள் ஒருவன் குறண்டிய படி கிடப்பது போன்ற ஒரு தோற்றம்.

முன் குஞ்சம்விட்டு ஏறக் கட்டிய அதே சவுக்கக் கட்டு!

''சோமர் ஏறிவந்த றிச்சோ!'' என்று மட்டுந்தான் சண்முகம் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

www.tamilarangam.net



## 3

சண்முகம் பஸ் நிலையத்திற்கு வந்தபோது அது வெறிச்சோடிக் கிடந்தது.

நான்கைந்து மாதங்களுக்கு முன்தான் நகரமெங்கும் ''மேக்குரி'' வெளிச்சங்களைப் போட்டிருந்தார்கள். தேர்தல் சமீபித்து வரும்போது இம்முறையும் தேர்தலுக்கு நிற்பதாக முடிவுசெய்த எம்.பியின் தாராள சிந்தையினால் அந்த ''மேக்குரி'' வெளிச்சங்கள் நகரத்தைப் பால்மய மாக ஆக்கி வைத்திருக்கின்றன.

சண்முகத்தோடு வந்தவர்கள் அங்குமிங்குமாகக் கலைந்து விட்டனர்.

பஸ் நிலையத்தின் அந்த அமைதியிலும், பால் வெளிச்சத்திலும்தான் அபேட்சகர்கள் பட்டிருக்கும் பாடுகள் தெட்டத் தெளிவாகத் தெரிந்தன.

ஒவ்வொரு அபேட்சகரின் படங்களின் மேலெல்லாம் வெவ்வேறு விதமான சித்திரவதைகள்.

மழுங்கச் சிறைக்கப்பட்ட மட்டசுத்தமான ஒரு அபேட்சகரின் முகத்தில் இராவணன் மீசை!

வழுக்கைத் தலையை உடைய ஒரு அபேட்சகர். அந்த வழுக்கைத் தலைமீது முடிபோலக் குந்தி இருக்கும் சாணிக்கும்பம்!

கண்ணாடி அணிந்திருந்த ஒரு அபேட்சகரின் திரு முகத்தை சினிமாப்படங்களில் வரும் முகமூடிக்கள்ளன் போன்று கறுப்பினால் மூடி அதன் கீழே ''பக்காத் திருடன்'' என்ற மைஎழுத்து!

இப்படி எத்தனையோ விதங்களில்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்டுப்பணம் கட்டிய நாளில் தொங்கவிடப்பட்ட சின்னங்கள் பொறிக்கப்பட்ட கொடிகள் வெளிறி, காற்றுக்கு அடியுண்டு சிலும்பலாகித் தூங்கும் பரிதாபக் கோலங்கள்!

சண்முகம் சற்றுவேளை ஓய்ந்து நின்று எல்லாவற்றையும் மாறி மாறிப்பார்த்தான்.

நான்கைந்து சொறிநாய்கள் ஒன்றை ஒன்று தாவிப் பிடித்து, பிய்த்துப்பிறாண்டிப் பெருங் குரல்வைத்துக் கொண்டு உருண்டு புரண்டு கொண்டிருந்தன.

செம்மா தெருப்பெருங்குளத்தை நோக்கிப் பெரிதாகக் கட்டப்பட்ட வாய்க்காலை மூடிக் கொண்டிருந்த பிரயாணிகள் தங்குவதற்கான மடத்துள் இரண்டுமூன்று தெரு நாம்பன்கள் மடத்துக் குந்துகளில் உரசி உரசித் தினவெடுத்துக் கொண்டிருந்தன.

பக்கத்தே இருந்த கறிக்கடை மண்டபத்துள் நூறு நாய்களுக்குமேல் சேர்ந்து பிரளயப்படுத்திக் கொண்டிருப்பது போன்ற பேரோசை எழுந்து சண்முகத்தைத் திடுக்குற வைத்துவிட்டது.

கறிக்கடைப் பொதுக் கக்கூசின் நாற்றம் பால்வெளிச்சத்தில் ஆடிப்பாடிச் சுதந்திரமாகவந்து அவன் மூக்கைத் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது.

சற்றுவேளைதான்! அதற்குள் சண்முகம் கிளம்பிவிட்டான்.

அவன் இனித் தாவடிக்குப் போகவேண்டும்; உறியில் தனக்காகத் தொங்கும் உணவை உண்ணவேண்டும்; படுத்துத் தூங்கவேண்டும்; விடிவதற்கிடையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வேலைசெய்யும் புடைவைக் கடைக்கு வந்து முதலாளி வருவதற்கு முன் காத்திருக்கவேண்டும்!

www.tamilarangam.net



சண்முகம் இப்போது மனோகராத் தியேட்டர்ச் சந்திப்புக்கு வந்துவிட்டான். சந்திப்புக்குச் சற்றுத் தொலைவில் வந்தபோதே அங்கு நான்கைந்து பேர்களின் நடமாட்டம் தெரிந்தது.

சந்திப்புக்குப் பக்கமாக உள்ள நாவலர் பாடசாலையும் நாளையின் வாக்களிப்பு நிலையத்தில் ஒன்று என்பது அவனுக்குத் தெரியாது.

சந்திக்குச் சற்று முன்பாக இருந்த ஒரு கடையைத் திறந்து ஒரு அபேட்சகரின் படங்களை ஒட்டி அதை அழகு படுத்திக் கொண்டிருந்தார்கள் சிலர்.

சந்திக்கு அப்பால் இருந்த தேநீர்க்கடை விறாந்தையை ஒருபுறம் அடைத்து கிடுகுகளால் மறைத்து அதை வேறோர் அபேட்சகரின் படங்களால் அழகுபடுத்திக் கொண்டிருந்தார்கள் இன்னும் சிலர்.

மேற்குப்புறம் போகும் றோட்டில், தியேட்டரின் கலரி டிக்கற் விற்கும் இடத்திற்கு நேராக இருந்த வெறுந் துண்டுக்காணியில் பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள் சிலர். அது மூன்றாவது அபேட்சகரின் பந்தலாகத் தான் இருக்க வேண்டும்!

எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டே சண்முகம் வந்து கொண்டிருந்தான். அவன் தாவடிக்குப் போய்ச் சேரவேண்டும்!

அவன் தட்டாதெருச் சந்திக்கு வந்து விட்டான்.

சந்திப்பில் ஜனக்கூட்டமாக இருந்தது. சொல்லிவைத்தாற் போன்று சண்முகம் சந்திப்புக்கு வரும்போதே கல்லுகள் அங்குமிங்குமாகப் பறக்கத்தொடங்கின.

ஒரு கூட்டம் வடக்காகவும், மறு கூட்டம் தெற்காகவும் பின்வாங்கிப் பின்வாங்கிக் கொண்டே கற்களை வீசிக் கொண்டிருந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடுவீதியில் நான்கைந்து கொடிகள் கிழிந்து கிடந்தன. அவைகளுக்குக் கட்டியிருந்த கயிறுகளும் கொடிகளும் இழுபட்டுக் கிடந்தன.

சண்முகம் கணத்தில் விஷயத்தை அனுமானித்துக் கொண்டு விட்டான்.

"அபேட்சகர்களின் கொடிகள் அறுப்புத் திருவிழா" என்று அவன் அடிமனதுக்குள் சொல்லிக்கொண்டான். அதற்குப்பின் கல்லுக்கு அவன் தப்பியாக வேண்டும்! அவன் போகவேண்டியது வடக்குப்புறம்! அந்தப்பக்கம் சென்றால் "தெற்குப்புறத்துக் கோஷ்டியால வாறான்" என்று கொன்று விடுவார்கள்.

அவனுக்கு ஒரு யோசனை வந்தது.

நல்லூருக்குப் போகும் கிழக்குப்புற றோட்டால் திரும்பி நீராவியடிச் சந்திக்குச் சென்று விட்டால் பின்பு வடக்காகத் திரும்பி கொக்குவில் ஸ்ரேசன் றோட்டில் மிதந்து அன்னங்கை வீதியால் கோண்டாவிலுக்குச் சென்று திரும்பி மீண்டும் கே. கே. எஸ். றோட்டைப் பிடித்து விடலாம் என்ற எண்ணம்.

சண்முகத்திற்கு நெஞ்சு இடித்தது. அன்னங்கை றோட்டில் வெளிச்சம் இல்லை என்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும் பரவாயில்லை. அவன் துணிந்து விட்டான்.

அவன் அன்னங்கை வீதிக்கு வந்த போது இருட்டுத் தான் மிஞ்சி நின்றது.

சற்று வேளை இருட்டுக்குள் நடந்தான்.

பின்பு நேராகத் தொலைவில் வெளிச்சம் தெரிந்தது.

அது "பெற்றோமாக்ஸ்" வெளிச்சம்.

அன்னங்கை சைவப் பள்ளிக் கூடத்திற்கு முன்னால் நாளைய தேர்தல் திருவிழாவுக்காகப் பந்தல் அமைக்

www.tamilarangam.net



கிறார்கள்; வேறு அபேட்சகரின் படங்களை ஒட்டு கிறார்கள்!

இப்போது சண்முகம் தனது தொகுதிக்குள் வந்து விட்டான்.

தனது தொகுதி அபேட்சகர்கள் இம்முறை அதிகம் இல்லை.

பழைய எம். பி. ஒருவர், அவருக்கெதிராகப் புதிதாக இன்னொருவர், அவ்வளவு தான்! அந்த இன்னொருவர் முன்பு மூன்று தடவைகள் கேட்டுத் தோற்றுப் போனவ ராக இருந்தாலும் அவர் பாராளுமன்றத்திற்குப்புதிதாகப் போவதற்குத்தான் இம்முறையும் கங்கணம் கட்டி நிற்கி றார்.

இந்த இருவரில் யாருக்கு இம்முறை புள்ளடி போடுவ தென்று சண்முகம் தீர்மானிக்கவில்லை.

''எட தம்பி, அவன் பாவி நெடுகக் கேட்டுக் கேட்டு நொந்து போனான் மோனை! அவனுக்குத்தானடா போட வேணும்.''

இப்படித் தாயானவள் பல தடவைகள் அவனுக்குச் சொல்லி விட்டாள்.

''சும்மா உந்தப் பேய் வேலையிலை ஈடுபடாமை உங்கடை உங்கடை அலுவல்களைப் பாருங்கோ''

இப்படி அவனின் தம்பி கந்தசாமி கடந்த மாதம் இராமநாதபுரத்திலிருந்து வந்திருந்தபோது கூறிச் சென்றிருக்கிறான்.

சண்முகத்திற்கு தம்பி கந்தசாமி சொன்னதுதான் சரி யெனப் பட்டிருக்கவேண்டும்! இன்று வரை அவன் புள்ளடி போடப் போவதில்லை என்றுதான் தீர்மானித்திருக் கிறான். ஆயினும் முடிந்த வரை தேர்தல் கூட்டங்களை அவதானிக்க அவன் தவறவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எப்படியோ சண்முகம் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டான். வரிச்சுமட்டை ஊடாகக் கொட்டிலுக்குள் அரிக்கன்லாம்பு பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. நேரம் மணி இரண்டுக்கு மேலிருக்கும்!

இந்த வேளையில் தாய் என்றுமே லாம்பை இப்படி வெளிச்சமாக வைத்திருந்ததில்லை!

வெளிப் படலையைத் திறந்து கொண்டு முற்றத்திற்கு வரும் போதே 'அம்மா'! என்று குரல் வைத்தான்.

''அம்மா நித்திரை அண்ணை!''

இப்படி உள்ளேயிருந்து ஒரு குரல் எழுந்தது.

அது அவன் தம்பி கந்தசாமியின் குரல்.

''கந்தசாமியே? எப்படாம்பி வந்தனீ?''

சண்முகம் மொட்டையாகவே வழமையான கேள்வியைக் கேட்டான்.

''நான் கிளிநொச்சி வசுவிலை பட்டணத்துக்கை வந்திறங்கி இஞ்சாலை பத்து மணி வஸ்சிலை வாறன்; நீ எங்கையண்ணை இவ்வளவு நேரமும் போட்டு வாறாய்?''

கந்தசாமி கேட்டான்.

''பட்டணத்துக்கை முனியப்ப கோயிலடியிலை கூட்டமொண்டு நடந்தது அதுதான்......''

சண்முகம் பேசி முடிக்கவில்லை.

''உனக்கும் இன்னும் உந்தப் புள்ளடி போடுற ஆசை விட்டுப் போனதில்லை. இஞ்சை அம்மா, அந்தாள் நெடுகக்கேட்டுத் தோத்துப் போச்சாம். தான் ஒரு துண்டு போட்டுத் தன்ரை துண்டாலை வெல்ல வைக்கப் போறாவாம்! ம். என்னெண்டாலும் செய்து முடியுங்கோ! முந்தி முந்தி துண்டு எடுத்துக் கொண்டு போனவையெல்லாம் படைச்சுப் போட்டினம்! நீ பின்னை சாமஞ்சாமு-

www.tamilarangam.net



மாய்த் துண்டெடுக்கிற வேலை பார்க்கேக்கை அவ அம்மா அப்பிடிச் சொல்லுறத்திலை என்ன பிழை?''

கந்தசாமி அலுத்துக் கொண்டே கூறி முடித்துவிட்டு மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

''எட தம்பி, நீ கதைக்க விடுறாயில்லை! அவர் சோமர் அதுதான் கொட்டடிச் சோமர் செத்துப் போனார். அது தான் அதிலை ஒருக்காப் போட்டு வாறன் எண்டு சொல்லிறத்துக்கிடையிலை...''

''ஆரண்ணை சோமரே? எந்தச் சோமரைச் சொல்லுறியள்? உங்கினைக்கை கூட்டம் வளிய பேசிக்கொண்டு திரியிற சோமரோ? நான் இப்ப ஆளைக் கண்டுகொண்டு வாறன்! பத்து மணி வசுவுக்கு நான் பஸ் ஸ்ராண்டிலை நிக்கேக்கை பாவம் ஆரோ ஒரு கிழட்டு றிச்சோக்காறனை கொண்டு றிச்சோ இழுப்பிச்சுக் கொண்டு போனதை தான் கண்டனான். தலையிலை பரவணித் தலைப்பாவும் வைத்துக் கொண்டு ராசாமாதிரிப் போனதை நான் கண்டனான்! அந்தச் சோமரைச் சொல்லிறியளோ? முந்தினது மாதிரி இல்லாமல் தாடியும் வைச்சுக்கொண்டு போனவர் முதல்ல நான் ஆளை மட்டுக் கட்டேல்லை. அந்தச் சோமரையே செத்ததெண்டு சொல்லிறியள்?''

அண்ணன் சண்முகம் வேறை யாரோ ஒருவரைத் தான் சோமர் என்று கண்டிருக்கிறார் என்ற எண்ணத்தோடு கந்தசாமி இப்படிப் பல கேள்விகளைக் கேட்டான்.

## 4

மாதம் ஒன்று எப்படியோ ஓடி மறைந்து விட்டது.

தேர்தல் திருவிழா முடிந்து மொட்டை அடிப்பவன் அடித்து, மசை வழிப்பவன் வழித்து, வெப்பிசாரத்தில் அடிபிடிப்பட்டவன் அடிபட்டு, கள்ளத் துண்டு போட்டுக் கோடேறியவன் கோடேறி, வென்ற அபேட்சகர்களுக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரவேற்புகள் என்ற விதத்திலான வரவேற்புபசாரக் கூட்டங்களைத் தவிர மற்ற எல்லாமே ஒய்ந்து போய் விட்டன.

தம்பி கந்தசாமியின் எண்ணப்படி சண்முகம் துண்டு போடப்போகவில்லை. ஆனாலும் நடப்பவைகளைக் கவனித்து தனக்குள் அவன் சிரித்துக் கொண்டான். கடைசியாக இரண்டு நாட்களுக்கு முன் பட்டணத்தில் நடந்த வரவேற்புக் கூட்டம் ஒன்றில் நடந்ததைப் பார்த்து அவனுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது.

முனியப்பர் கோவில் முன் வீதியில் கூட்ட ஏற்பாடு! கோவிலடியிலிருந்து அரை மைல் தூரம் வரை மகர தோரணங்கள்!

புதிய எம். பி.யின் வீட்டு வாயிலில் இருந்து மேள தாளங்களுடனும், மலர் மாலைகளுடனும் வரும் கார்ப் பவனி! ஒரு சந்திப்பிலிருந்து அவரைக் கால் நடையிலேயே அழைத்து வரும் ஏற்பாடு!

சண்முகம் சந்திப்புக்குப் போயிருந்தான்.

எம். பி. கார்ப் பவனியில் வந்து சந்திப்பில் இறங்கினார்.

சந்திப்பில் முதல் முதலில் அவருக்கு ஒரு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

அந்த மாலையை அணிவித்தவரைப் பார்த்துச் சண்முகம் திகைத்துப் போனான்.

அவர் எம்.பி. யுடன் போட்டியிட்டுத் தோற்றுப் போன அபேட்சகரில் ஒருவர்.

இதை சண்முகம் நம்பித்தான் ஆக வேண்டும்.

அவன் கண்கள் மிகத் தெளிவானவை; நோய் தொடி இல்லாதவை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கர கோஷங்கள் மேலெழுந்து மடிந்தன.

"எப்பிடி இருந்தாலும் பெரிய மனிசன் பெரிய மனிசன் தான்!"

"ஓமோமப்பா தன்னோடை போட்டி போட்டு வெண்டு போட்டார் எண்டும் பாக்காமல் அந்தாள் தானாய் வந்து மாலை போட்டுது. இது ஆருஞ் செய்யக் கூடியதே?"

இப்படிப் பக்கத்தே இருந்து வந்த இருவரின் குரல்கள் சண்முகத்திற்குக் கேட்டன.

அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"தேர்தல் எண்டது ஒரு ஒற்றுமையான கிரிக்கற் விளையாட்டு" என்று தம்பி கந்தசாமி ஒரு தடவை சொன்னது அவன் நினைவுக்கு வந்தது.

"அவங்கள் சந்தோசம், இந்தச் சனங்கள்தான் ஒருத்தனுக்கொருத்தன் இன்று அடிபடுகுதுகள்!"

இப்படி அவன் அடி மனது சொல்லிக் கொண்டது.

ஊர்வலம் கோவிலடிக்கு வந்து விட்டது. இடையிடையே வழி நெடுகிலும் பூரண கும்பம்; மாலைபோட்டு மஞ்சள் தண்ணீர் காட்டி நாலூறு கழித்த ஆலாத்தல்!

சம்பிரதாயபூர்வமான இவைகள் முடிந்தன. இனிக் கூட்டம் தொடங்க வேண்டியதுதான்!

தலைவர் எழுந்தார்.

"சகோதர சகோதரிகளே, வாலிப நண்பர்களே! நாம் இந்த வரவேற்புக் கூட்டத்தைத் தொடங்குவதற்கு முன் சமீபத்தில் எம்மை விட்டு அமரராகி விட்ட சோமசுந்தரம் ஐயாவின் ஞாபகமாக இரண்டு நிமிட நேரம் அஞ்சலி செலுத்துவோமாக!"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படிக் கூறியதுதான் தாமதம். கூட்டத்தில் இருந்த வர்கள் எல்லோரும் எழுந்து நின்று இரண்டு நிமிடவேளை மெளன அஞ்சலி செலுத்தினர்.

எள் விழுந்தால் வெளியே சத்தம் கேட்டு விடுமளவுக்கு பூரண அமைதி!

இந்த மெளன அஞ்சலியில் சண்முகமும் தன்னையறி யாமலே கலந்து கொண்டான்.

சண்முகத்திற்குச் சோமரை கூட்டங்களிற் கண்டது வரையிலாவது தெரியும். ஆனால் அந்த அஞ்சலியில் பங் கெடுத்தவர்களில் பெரும்பான்மையோருக்குச் சோமசுந்த ரத்தார் பற்றிப் பெரிய அளவில் எதுவும் தெரிந்திருக்க நியாயமில்லை.

சண்முகத்தின் கண்கள் நிறைய அந்தத் தாடி உருவம்; அந்த றிக்சோ; அந்தத் தாடி உருவத்தின் கெப்பீரம். கொட்டடி வீட்டில் அவர் அமைதியான நித்திய உறக்கத் தில் கிடந்த கோலம்......... இவைகளுடன் முன்பு பல மேடைகளில் அவர் பேசிய நகைச்சுவைப்பேச்சுகள் ஆகிய னவும் நினைவுக்கு வந்தன.

சோமரைப் பற்றிய இந்தச் சிந்தனையில் கூட்டம் தொடங்கியது, பேசியது எதுவுமே சண்முகத்தின் நினைவில் நிற்கவில்லை.

ஒரு பென்னம் பெரிய கூட்டத்தில் அஞ்சலி செலுத்து மளவுக்குச் சோமர் செய்து விட்டவைகளைப் பற்றி அவனுக்கு எதுவுமே தெரியவில்லை. கூட்டத்தில் பேசியவர்கள் அவரைப் பற்றிக் குறிப்பிடவும் இல்லை. இது அவனுக்கு சற்று மனப்புழுக்கத்தை உண்டாக்கியிருக்க வேண்டும்! அவன் மிகவும் அதிருப்தி யுடையவனாகக் காணப்பட்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''ஏனண்ணை சோமரை நினைச்சு மவுனம் சாதிக்கினம்! அவரைப்பற்றி ஒருத்தரும் ஒண்டும் சொல்லுகினமில்லை! இவருக்கெதிராயெல்லோ அவர் பேசினவர்.''

இப்படிப் பக்கத்தே இருந்த ஒருவனைச் சண்முகம் கேட்டான்.

''அதுதான் எனக்கு ஒண்டுமா விளங்கேலை!'' என்று முன்னே இருந்தவன் பதில் சொன்னான்.

''அது எங்கடை கொட்டடிச் சோமசுந்தரத்தார்! அவரைப் பற்றிப் புறம்பாக விளங்கப்படுத்த வேணுமே?'' என்று சண்முகத்திற்குப் பின்னால் இருந்த ஒருத்தன் சற்று அதட்டிக் கூறினான்.

அவனின் இந்த அதட்டல் சண்முகத்துக்குப் பிடிக்கவில்லை. ''உமக்கு விளங்கினாப் போதுமே? மற்றவைக்கும் விளங்கவேண்டாமே?'' என்று அவன் பதில் கூறினான்.

பின்னே இருந்தவன் அதற்குப்பின்பு பேசவில்லை.

''ஏன் சண்டைபிடிக்கிறியள். நொமினேசனில் அண்டையக் கூட்டத்திலை சோமர் பேசிய பேச்சுத்தான் இந்த எம்.பியை வெல்லவைச்சிருக்கு. அதுக்காகத்தான் எதிர் எண்டாலும் அவருக்கு மரியாதை செய்யினமாக்கும்! தமிழன்ரை பண்பும் இதுதான் தம்பியவை! இது விளங்கேல்லையே!''

என்று அப்பால் இருந்த ஒருத்தன் இப்படிக் கூறிப் பிரச்சனையைத் தீர்த்துவைத்துவிட்டான்.

இதற்குமேல் சண்முகமும் ஒன்றும் பேசவில்லை அவனுக்கு அது சரிபோலவும் பட்டிருக்கவேண்டும்! இருந்தும் அவனின் உள் மனது திருப்தியடையவில்லை.

கடைசி பஸ் பத்தரை மணிக்கு!

அதற்கிடையில் புத்திசாலித்தனமாகக் கூட்டத்தை முடித்துவிட்டார்கள்.

www.tamilarangam.net



நேரத்திற்கு பஸ்சைப் பிடித்து விட வேண்டும்! சண்முகம் அவசரமாக மணிக்கூட்டு வீதிக்கு வந்துவிட்டான்.

எதையோ நினைத்துக் கொண்டு அவன் கண்கள் மணிக்கூட்டுக் கோபுரத்தை நோக்கின.

இப்போது மணி மூன்று ஐம்பதுதான்!

"எட அறுவாங்கள் இன்னும் இந்த மணிக் கூட்டைத் திருத்தாமல் இருக்கிறாங்கள்!" என்று சண்முகம் வாய் விட்டுக் கூறினான்.

"புது எம். பி. வந்திட்டார் இனித் திருத்தினாலும் திருத்துவார்" என்று சண்முகத்தை வழி விலத்திக் கொண்டு முன்னே சென்ற ஒருவன் கூறிக் கொண்டே சென்றான்.

சண்முகம் ஆஸ்பத்திரி வீதிக்கு வந்து விட்டான்.

"இஞ்சை பார் சும்மா கிடந்த மரவள்ளித் தோட்டத்தை அளிச்சுப்போட்டு, பக்கத்திலை கிடந்த கண் வாட்டையும் இடிச்சுப்போட்டு அத்திவாரமும் போட்டிட்டு ரெண்டு வருசமா விட்டிருக்கிறாங்கள்! ஆசுப்பத்திரிக்குப் பக்கத்திலை லையிற்றுக் கொம்பனியையும் வைச்சிருக்கிறாங்கள்! அதின்ரை சத்தத்திலை வருத்தக்காரருக்கு வருத்தம் கூடும். எம். பியெட்டைச் சொல்லி உதுகளைக் கவனிக்க வேணும்!"

இப்படி அவனுக்கு முன்னே பஸ் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தஒரு கூட்டத்திலிருந்து குரலொன்று எழுந்தது.

பஸ் நிலையத்திற்கு வந்த சண்முகம் பஸ்ஸைப் பிடித்துக்கொண்டு வீடு போய்ச்சேர மணி பதினொன்றுக்கு மேலாகி விட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடத்தடிக்குச் சென்று வாய் அலம்பி விட்டு அடுக்களைக்குள் புகுந்து தணித்து வைத்திருந்த சிமிலி லாம்பைத் தூண்டி உறியில் கிடந்த புட்டையும் கிழங்குக் கறியையும் பிரட்டித் தின்று முடிந்து படுக்கைக்கு வந்த சண்முகம் அப்போதுதான் பார்த்தான். கந்தசாமி மெய்யுறக்கத்தில் கிடந்தது அவன் கண்களுக்குத் தெரிந்தது.

அவன் தலைமாட்டில் விரித்தபடி ஒரு அகன்ற புத்தக உருவத்திலான பத்திரிகை ஒன்று கிடந்தது.

சண்முகம் அதை எடுத்து லாம்பு வெளிச்சத்தில் பிடித்து குனிந்தபடி அதன் ஒற்றைகளைத் தட்டினான்.

அதன் எட்டாம் பக்கத்தில்

மணிக் கூட்டுக் கோபுரம்!

அதன் கீழ் ஒருவன் றிக்சோவை இழுத்து வருகிறான்!

றிக்சோவில் வெண்தாடிக்கார உருவத்தின் தலைப் பாகைக் கொலு!

ஏறக்குறையச் சோமரின் சாயல்!

இந்தச் சித்திரத்தின் நடுவே 'மையக்குறி' என்ற மகுடம்!

அதே மணிக்கூட்டுக் கோபுரம், அதே றிச்சோ, அதே சோமர், அதே றிச்சோக்காரன்!

சண்முகம் மிக ஆவலாக அதை எடுத்தான்.

படுக்கையில் சரிந்து லாம்பைச் சற்றுத் தூண்டித் தலைமாட்டடியில் வைத்து விட்டு அவசரமாகப் படிக்கத் தொடங்கி விட்டான்,

அது சோமசுந்தரத்தார் பற்றிய வரலாறாய் இருக்க வேண்டும் என்பது அவனின் எண்ணம்!

அதனால்தான் அத்தனை அவசரம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 5

அரண்மனை போன்ற பென்னம்பெரிய வீடு வாசல், காணி பூமி, எடுபிடி ஆட்கள், சொத்துச் சுதந்திரம் ஆகிய சகல ஐஸ்வரியங்களும் கொண்ட கொட்டடி இராசரத்தினத்தாருக்குத் தலைச்சனாக மட்டுமல்ல ஏக புதல்வனாகவும் பிறந்தவர் இராசசுந்தரத்தார்.

இராசரத்தினம் என்றால் யாழ்ப்பாணப் பகுதிக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்குமே பிரசித்தம். கொட்டடியில் பாதிப்பகுதிக் காணியும் ஒருகாலத்தில் இவருக்கும் இவரது மூதாதையருக்குமாகத்தான் இருந்திருக்க வேண்டும். அந்தப் பக்கத்துக் காணி உறுதிகளைக் கந்தோரில் எடுத்துப் பதிவு பார்த்தால் பெரும்பான்மையும் 'இராச தோட்டம்' என்றுதான் இருக்கும்.

அலுப்பாந்தியைச் சுற்றியுள்ள பல கிட்டங்கிகளுக்கு இன்றும் 'இராச கிட்டங்கி' என்றுதான் பெயர் வழங்கி வருகிறது.

கிட்டங்கிகளில் இன்றுவரை முக்கந்தர்களாக இருந்தவர்கள் பலருக்கு 'இராசமுக்கந்தர்" என்றுதான் பெயர் வழங்கி வருகிறது. ஒரு காலத்தில் முக்கந்தர் முறைக்கு முன்னுரிமையாக அதிகாரம் வகுத்த குடும்பம் இராசர் குடும்பமாகத்தான் இருந்திருக்கவேண்டும். முன்பு இங்கு ஆட்சி செய்த வெள்ளைத் தோலர்கள் சகலரும் இந்த முக்கந்த அதிகாரத்தை இவர் குடும்பத்துச் சொத்தாகக் கொடுத்துச் சென்றதாகவும் கதை.

பரம்பரையாக வந்த இந்த முக்கந்தர் அதிகாரத்துடன் சோமசுந்தரத்தாரின் தந்தை காலத்திலேயே 'நாடகக் கொட்டகை ஆசான்" என்ற கௌரவமும் சேர்ந்து கொண்டது.

www.tamilarangam.net



இந்தக் கௌரவ குடும்பத்தில் வந்த சோமசுந்தரத்தார் "யாழ்ப்பாணக் கல்லூரி" என்ற வட்டுக்கோட்டைக் கல்லூரியில் இருபதாவது வயதில் விடுதி மாணவனாக இருந்தபோது இடம்பெற்ற ஒரு சம்பவம் அவர் வாழ்க்கையையே திசைதிருப்பி விட்டது. ஏன் தான் அவருக்கு இந்தப் புத்தி வந்ததோ?

இவர் விட்ட தவறுக்காக ஆசிரியர் ஒருவர் இவரைப் பிரம்பினால் அடித்த போது ஆசிரியரின் பிரம்பையே மடக்கிப் பறித்து ஆசிரியரை அடித்து விட்டார்! அவ்வளவு தான். அடித்த சூட்டோடு பாடசாலையை விட்டுவெளியே வந்த சோமசுந்தரத்தார் பின்பு பாடசாலைக்குத் திரும்பவேயில்லை.

நேராக வீட்டுக்கு வந்தார்.

பென்னம் பெரிய கொப்பர் பெட்டியை முக்கித்தக்கித் திறந்தார். தாய் இராசாத்தி அம்மாள் விட்டுச் சென்ற காதோலையையும், தந்தை இராசர் சுப காரியங்களுக்கு மட்டும் அணிவதற்காகச் செய்து வைத்திருந்த இருபுறம் முத்தமைந்த குவளைக் கடுக்கன்களையும், கையில் அகப்பட்ட இரண்டொரு பண நோட்டுக்களையும் எடுத்தார்.

தந்தை வீட்டில் இருக்கவில்லை.

வேலைக்காரி சிவக்கொழுந்தியும் எங்கேயோ போய் விட்டாள்.

சோமசுந்தரத்தார் புறப்பட்டு விட்டார்.

படலைத் தலைவாயில் ஓரமாக றிச்சோவை நிறுத்தி விட்டு அதன் ஆசனத் தட்டின் கீழ் வக்குக்குள் கொலுவிருந்த பண்டாரி திடுக்குற்றுக் கொண்டே தலைத் துண்டைத் தளர்த்தி "எங்கை நயினார் போகலாக்கும்? என்ன அவசரமாக்கும்?" என்று கேட்டுக் கொண்டே எழுந்து நின்றான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''பண்டாரி எடடா றிச்சோவை றெயிலுக்கு நேர மாச்சு எடடா'' என்றார் சோமசுந்தரத்தார்.

மேலே கதை ஒன்றுமில்லை.

றிச்சோ யாழ்ப்பாண றெயில் நிலையத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

தார் ஊற்றப்படாமல் கல்லும் முடக்குமாக இருந்த றோட்டில் பண்டாரி மிக வேகத்தில் றிச்சோவை ஓட்டிச் சென்றான்.

சோமரை எங்கே எதுக்கு என்று கேட்டு விடும் துணிச்சல் பண்டாரிக்கு வரவில்லை.

றெயில் நிலையத்தில் றெயில் வந்து நிற்கவும் றிக்சோ வந்து நிற்கவும் நேரம் சரியாக இருந்தது.

''பண்டாரி! என்னை றெயில்லை வழியனுப்பின தெண்டு ஐயாவுக்குச் சொல்லிக்கில்லிப் போடாதை கண்டியோ? நான் இந்தியாவுக்குப் போறன்ரா!''

தலைமன்னார்ப் பெட்டிக்கு ஏறச் செல்லும் போது தான் சோமர் பண்டாரிக்குச் சொன்னார்.

''நான் ஏன் சொல்லுறனாக்கும் நம்மாணைச் சொல்ல மாட்டனாக்கும்'' என்று பண்டாரி சோமருக்கு வாக்களித்து விட்டான்.

றெயில் புகையை அள்ளி இறைத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டது. அது இருளுக்குள் மறையும்வரை பண்டாரி அதையே பார்த்துக் கொண்டு நின்றான்.

அங்குமிங்குமாக எரிந்த நான்கைந்து ஒளிப் பந்தங்களில் ஒன்றே ஒன்றைத் தவிர மற்றவை அணைந்து போயின. றெயிலுக்கு ஆட்களை எடுத்து வந்த குதிரை வண்டிகள், றிக்சோக்கள் யாவும் முடிவுவரை கலைந்து செல்லு மட்டும் பண்டாரி ஸ்ரேசனிலேயே நின்றான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சோமரின் போக்கு அவனுக்கு ஒன்றுமாக விளங்காதது ஒரு புறம். அத்தோடு பாடசாலைக் காலங்கள் தவிர்ந்த ஏனைய பொழுதெல்லாம் தன்னோடே ஊடாடிற ஒரு ஜீவன் எங்கோ தொலை தூரத்திற்குத் தன்னை விட்டுப் போவதான ஒரு ஏக்கம்; ஒரு துடிப்பு மற்றொரு புறம்!

இருளில் மூழ்கி விட்ட வீதிகளால் பண்டாரி தாராக் குளத்தடிப் பள்ளத்துள் இருந்த தனது வீட்டுக்கு வந்து சேர்ந்த பொழுது மணி எட்டுக்கு மேலிருக்கும். இராசரத் தினத்தார் ஆள் அனுப்பியதாகவும் வந்த உடனேயே வரச் சொல்லிச் சொல்லி விட்டதாகவும் அவன் தாய் சொன்னாள்.

பண்டாரிக்கு நெஞ்சு இடித்தது.

தான் தான் சோமரை ரெயிலடிக்குக் கொண்டு சென்று ரெயில் அனுப்பி வைத்ததை அவர் அறிந்து கொண்டு விட்டார் என்றே அவன் பயந்தான். ஆனாலும் என்ன செய்வது? போகாமல் இருப்பது முடிந்த காரியமா?

இராசர் வீட்டுக்கு என்றுமே பண்டாரி றிக்சோ இன்றிப் போனதில்லை. றிக்சோ தேவைப்படும் அந்தச் சந்தர்ப்பங்களில் தான் அவர் ஆள் அனுப்புவார். ஆனால் இன்று அப்படித் தேவைப்பட்டுத்தான் ஆள் அனுப்பியிருக் கிறார் என்று அவனால் எண்ணமுடியவில்லை.

''ஏனெணை றிக்சோவையும் கொண்டேவரச் சொன்னவராம்?'' என்று அவன் தாயைக் கேட்டான்.

''பின்னை என்ன, உன்னைப் பார்க்க ஆசையிலையே வரச் சொன்னவர்? கண்டறியாத கேள்வி கேக்கிறாய்'' என்று தாய் காரமாகப் பேசியதன்மேல் பண்டாரி றிக்சோ வுடன் புறப்பட்டு விட்டான்.

''எக்கணம் சேவுகன்மார் வெளிச்சமில்லாமல் போகப் புடிச்சல்லையடா போடப்போறாங்கள். லாம்பைக் கொழு விக் கொண்டுபோ'' என்றாள் தாய்.

www.tamilarangam.net



அது அவனுக்கு எரிச்சலாக இருந்தது. "மனிசன் ஏங்கிற ஏக்கத்துக்குள்ளை இவ சேவுகள் மாரைப் பற்றிச் சொல்லவந்திட்டா" என்று மனதுக்குள் எண்ணினானே தவிர வெளியே சொல்லவில்லை.

லாம்புக்குள் எண்ணை இல்லை, லாம்பைக் குலுக்கிப் பார்த்தான், எண்ணை துளிகூட இல்லை.

வழக்கப்படி றிக்சோ லாம்புக்கு மண்ணெண்ணையும் தேங்காய் எண்ணையும் கலந்து தான் விடவேண்டும். நேற்றே தேங்காய் எண்ணை தீர்ந்து போயிருந்தது. இன்று வாங்க வேண்டுமென்றுதான் நினைத்திருந்தான். பல தொல்லைகளால் மறந்து போனான்.

தாய் மண்ணெண்ணைப் போத்தலை மட்டும் கொடுத்தாள். அதை விளக்கிலிட்டுக் கொளுத்தியபோது அது மூளாசி எரிந்தது. அளவாகத் திரிதூண்டியால் தணித்துப் பார்த்தான். அது மூளாசித்தான் எரிந்தது! இப்போது அவனுக்கு எரிச்சல் அதிகரித்து விட்டது. லாம்பைக் கழற்றிப் பக்கத்தே போட்டுவிட்டுப் புறப்பட்டுவிட்டான்.

றிக்சோ சற்றுத்தூரந்தான் போயிருக்கும். எதிராக நான்கைந்து பேர் ஓட்டமும் நடையுமாக வருவது பண்டாரியின் கூர்மையான கண்குறிப்புக்குத் தெரிந்தது.

"ஆர் பண்டாரியே போறது? உதாலை போகாதை வேடாமோனை! கறிக்கடைக்கு முன்னாலை ஆரோ ஒருத்தனை வெட்டிப் போட்டிருக்கிறாங்கள்!" இப்படிக்குரல் கொடுத்துக் கொண்டே கூட்டம் அவனை விலத்திக் கொண்டு விரைவில், போய்விட்டது.

அந்தக் குரல் பண்டாரிக்கு மிகவும் தெரிந்த குரல்!

முலைவைச்சந்திப்பில் சில்லலைக் கடை வைத்திருக்கும் ஆறுமுகத்தாரின் குரல்! தன் மீது அனுதாபங் கொண்டு எச்சரித்துப் போய்க்கொண்டிருந்த ஆறுமுகத்தாரைத்

www.tamilarangam.net



தூக்கி எறிந்துவிட்டுப்போகும் துணிவு பண்டாரிக்கு இல்லை. இருந்தும் இராசரின் அழைப்புக்கு அவன் போய்த் தான் ஆகவேண்டும்!

றிச்சோவைத் திருப்பிவந்து வீட்டு முற்றத்தில் விடும் போது ''என்னடா தம்பி திரும்பி வந்திட்டாய்? எக்கணம் அந்தாளெல்லே காத்துக் கொண்டிருக்கப் போகுது!'' என்றாள் தாய்.

''நான் என்னெணை ஆச்சிசெய்ய? கறிக்கடையயிலை ஆரையோ வெட்டிப்போட்டுக்கிடக்காம். கடைக்கார ஆறுமுகத்தார் போகாதை எண்டு சொல்லிப்போட்டுப் போறார்!'' என்றான் பண்டாரி.

தாய் ஒன்றும் பேசவில்லை.

றிக்சோவை விட்டு விட்டுப் பண்டாரி புறப்பட்டு விட்டான்.

''எட பேந்தெங்கையெடா போறாய்?''

''சும்மா நச்சுப்பல்லி மாதிரி ஏனெணை சுத்திறாய்?'' என்று சினந்துவிட்டுப் பண்டாரி போய்விட்டான்.

அவன் நினைத்ததைத்தான் செய்வான். அவன் சுபாவம் அப்படி. இது தாய்க்குந் தெரியும். அதனால் அவள் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. ஆனாலும் ''இந்தக் குத்தியனைக் கட்டிப்போட என்னாலை ஏலுமே!'' என்று மனதுக்குள் கறுவிக்கொண்டே இருந்து விட்டாள்.

பண்டாரி மணிக்கூட்டுக்கு நேர்ச்சந்திப்பு வரையில் வந்து விட்டான்.

மேற்குப்புறம் தொலைவில் தெரிந்த கறிக்கடைக் கோபுரலாம்பு வெளிச்சத்தில் நான்கைந்துபேர் சுற்றி நிற்பது தெரிந்தது. அதற்குமேல் அடி எடுத்து வைக்க அவனுக்குத் துணிவு இல்லை.

www.tamilarangam.net



ஒரு யோசனை வந்தது.

மணிக்கூட்டடியால் போய், நேராகக் கோட்டை வரை சென்று, தரவையால் இறங்கிப் பண்ணைத் துறை முகந்தாண்டி, அம்மை ஆஸ்பத்திரியடி வெளியால் வந்து விட்டால் தெண்டாயுதபாணி வீட்டடியில் மிதிக்கலாம். அதுக்கங்காலை இராசர் வீட்டடிக்கு நாலு சுவடுகள்!''

மனம் இந்த முடிவை எடுத்து விட்டது.

மணிக்கூட்டடி தாண்டி விட்டபோது வானத்து வெளுப்பு ஓரளவுக்கு வெளிச்சத்தைத் தந்தது. அடுத்துப் பொலிஸ் ஸ்ரேசனைத் தாண்டும்போது பொலிஸ் ஸ்ரேசன் முன்னால் எரிந்த தேங்காய் எண்ணைக் கோபுர வெளிச்சத்தின் வெளுப்புச் சற்றுத்தூரத்திற்குத் தெரிந்தது.

பொலிஸ் ஸ்ரேசனில் மனித ஓசைகள் எதுவுமே கேட்கவில்லை. மிஞ்சி மிஞ்சிப் போனாலும் பன்னிரண்டு பொலிசார்தான் உள்ளே இருப்பார்கள். அவர்களைத் தவிர மனித சஞ்சாரமற்ற சூனியப்பிரதேசம் அது. பொலிசாரும் நன்கு படுத்து உறங்கியிருப்பார்கள். மனித ஓசை எங்கிருந்துவரும்? அடுத்து இருக்கும் கோட்டைக்குள் உள்ள மறியல்காரர்களின் மூச்சுக் கூட வெளியே வராத அளவுக்கு முருகைக் கல்லு மூடுகட்டிடம் இருக்கிறது.

அம்மை ஆஸ்பத்திரித் தரவை வெளியைத் தாண்டித் தெண்டாயுதபாணி வீட்டடியில் மிதந்தபோது மட்டும் இரண்டொரு நாய்கள் குரைத்து ஊளையிட்டன.

பண்டாரி இராசர் வீட்டுக்கு முன்னால் வந்துவிட்டான், அவன் நெஞ்சு படக்படக்கென இடித்தது!

சோமரை ஸ்ரேசனுக்குக் கொண்டு சென்று பயண மனுப்பிவைத்தது பற்றிக் கேட்டு விட்டால்...''

மரக்கேற்றுக்கு மேலாகப் பண்டாரி உள்ளே நோக்கினான்.

www.tamilarangam.net



வீட்டின் முன்விறாந்தையில் வேலைக்காரி சிவக்கொழுந்தி குந்தியிருந்து, சுளகில் எதையோ வைத்து வகிர்ந்து பொறுக்கிக்கொண்டிருந்தது பண்டாரிக்குத் தெரிந்தது.

பெரியவரின் சிலமன் தெரிகிறதா என்று அவன் கண்களைவிட்டுத் துளாவினான்.

சிலமன் எதுவும் இல்லை! □

## 6

பண்டாரி மரப் படலைக்கு வெளியே நின்று "ஐயா" என்று குரல வைத்தான்.

"அவக் அவக்" கெனக்குரல் வைத்துக் கொண்டு படலை வரை ஓடி வந்த நாய்க்குடுவன் பண்டாரியின் வாடையை முகர்ந்துவிட்டு வாலை ஆட்டி முகமன்செய்து கொண்டது.

சிவக்கொழுந்தி படலைக்கு வந்து கதவைத் திறந்து "ஆர் பண்டாரியே? ஐயா தேடிக் கொண்டு நிண்டவர் இப்பான் ஆரோ வந்து கூட்டிக் கொண்டு போகினம். இஞ்சை வா, உதிலை இரு வந்திடுவார்" என்று பண்டாரியை உள்ளே அழைத்துச் சென்று பண்டாரி வழக்கமாகக் குந்தியிருந்து கோப்பி குடிக்கும் முற்றத்து மாமரப் பெரு வேரடியில் விட்டாள்.

"ஐயா ஏதெண்டாலும் கதைச்சவரே பிள்ளை?"

சிவக்கொழுந்திக்கு ஊடாக விஷயத்தை முன்கூட்டியே அறிந்து விடும் நோக்கத்தோடு அவன் கேட்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெரியவர் வீட்டு அடிமைப் பெண்ணானாலும் சிவக்கொழுந்தி சீதேவி அம்மா உயிரோடு இருந்த காலத்திலிருந்து இன்று வரை வீட்டின் சகலதுமாக இருந்ததால் பண்டாரி அவளுக்கு மரியாதை கொடுத்துப் பேசுவது வழக்கமாயிருந்தது. ''பிள்ளை'' என்றே அவன் அவளை அழைப்பான். இந்த அழைப்பு பெரியவருக்கு மிகவும் விருப்பமானது என்பது அவனுக்குத் தெரியும்.

''ஏனெண்டு தெரியேல்லைப் பண்டாரி, எங்கையோ போறத்துக்கு றிச்சோவைக் காணேல்லை எண்டும் கதைச்சவர். அதுக்குத்தானாக்கும்'' என்று சிவக்கொழுந்தியின் வாயிலிருந்து பதில் வந்த போதுதான் பண்டாரிக்கு நெஞ்சிடி நின்றது.

அவன் அமைதியுடன் மரவேரில் உட்கார்ந்து கொண்டான்.

விறாந்தையில் எரிந்த சிங்கப்பூர் மான்ரில் லைற்றின் வெளிச்சம் மாமர வேர் வரை தெளிவாக விழுந்து கொண்டிருந்தது.

நாய்க்கடுவன் அவன் பாதத்தடியில் கிடந்து குடங்கிக் கொண்டது. அது அப்படி நடந்து கொண்டது ஒன்றே பண்டாரிக்கும் அந்த வீட்டுக்கும் இருந்த இறுக்கத்தினை முரசு கொட்டுவதாக அமைந்தது.

உள்ளே போன சிவக்கொழுந்தி சற்று வேளையில் கோப்பிப் பேணியுடன் திரும்பி வந்து ''எடமபாடி பண்டாரி உன்ரை பேணி உங்கினைக்கை கவிட்டிருக்கும் எடு எப்பன் கோப்பி தாறன் குடி!'' என்றாள்.

பண்டாரி தனது வழக்கமான மூக்குப் பேணியைத் தேடினான். அது விறாந்தையின் கிழக்குப்புற சலவைக் கல் கீழ் ஒட்டில் கவிழ்க்கப்பட்டிருந்தது. அதை எடுத்துத் தூசு தட்டி ஊதி விட்டு அவன் நீட்டிய போது ஒரு சிறங்கை அளவு கோப்பியை அதற்குள் ஊற்றி ''எப்பன் கழுவிப்

www.tamilarangam.net



போட்டுப் பிடி, அட்டைகிட்டை உள்ளுக்கு ஏறி உலாவி யிருக்கும்'' என்று சிவக்கொழுந்தி கூறவே பண்டாரி அதைச் சிலாவி வெளியே ஊற்றி விட்டு மறுபடி கோப்பி யைப் பெறுவதற்காக நீட்டினான். அந்த மூக்குப் பேணி நிறையக் கோப்பியை ஊற்றி விட்டு அவள் உள்ளே போய் விட்டாள்.

சிவக்கொழுந்திக்கு வயது முப்பத்தைந்துக்கும் நாற்ப துக்கும் இடைப்பட்டதாக இருக்கும்.

பெயருக்கேற்றாற்போல அவள் சிவக்கொழுந்திதான்!

வீட்டு எஜமானி சீதேவி அம்மாள் உயிரோடு இருக்கும் போதே பரம்பரைச் சிறைக்குட்டி குடும்பத்தைச் சேர்ந்த அவளை வீட்டு வேலைக்கென நிரந்தரமாக அமர்த்தி விட்டாள்.

சிவக்கொழுந்திக்கும் தாய் இல்லை. அவளுக்கு இருபது வயது வரை இருக்கும் போது அவளது தந்தை யாரோ ஒருத்தியை இரண்டாந்தாரமாகக் கட்டிக் கொண்டு இவளையும் அந்தரத்தில் விட்டு விட்டு எங்கோ போய் விட்டான். அதன் பின்பு அவளின் சிறிய தகப்ப னார் அவளுக்கு அடைக்கலம் கொடுத்தார். சிலநாட் களுக்குள் இவளை ஒரு வயதானவனுக்கு மூன்றாம் தார மாகக் கொடுத்துச் சிறிய தகப்பனார் தனது பொறுப்பை நீக்கிக் கொண்டார்.

சிவக்கொழுந்தி அவனோடு நீண்ட நாட்கள் வாழ வில்லை. இவளை அவன் கண்ட நேரமெல்லாம் உதைத் தான். இவளின் அளவுக்கு மீறிய அழகும் இளமையும் அவனை இப்படி இவளை உதைக்கவைத்தது! அதற்குப் பின் சீதேவி அம்மாள் வீட்டுக்கு அவள் வந்து சேர்ந்து விட்டாள்.

சீதேவி அம்மாளுக்கு இழுப்பு நோய், சிவக்கொழுந்தி யின் துணை அவளுக்குப் பேருதவியாகி விட்டது.

www.tamilarangam.net



ஒரு நாள் நல்ல மத்தியான நேரம்.

இராசரத்தினத்தார் எண்ணெய் முழுக்குக்காக உடம்பையெல்லாம் எண்ணெயால் குளிப்பாட்டி வெய்யில் காய்ந்து கொண்டிருந்த வேளை.

சிவக்கொழுந்தியின் கணவன் வந்தான்.

அவனுக்குச் சிறிது "தண்ணி!" பெரியவர் இராசரத்தினத்தாருக்கோ அதைவிடத் தண்ணி! எண்ணெய் முழுக்கு நாளல்லவா.

"ஐயா, என்ரைமனிசியை என்னோடை விட்டிட வேணும்!"

வந்தவன் கேட்டான்.

"விடாட்டில் என்ன செய்வீர்?"

பெரியவர் கருகலாகக் கேட்டார்.

"மேடர் தான் விழும்!"

"என்னடா சொன்னனீ?" என்று கேட்டுக் கொண்டே பெரியவர் அவன் மேல் பாய்ந்தார்.

அவனும் விடவில்லை.

இருவருக்கும் ஒத்த வயசு.

சனக் கூட்டம் வந்து கூடுவதற்கிடையில் முடிந்தளவு இவரை உதைத்து விட்டுப் புத்திசாலித்தனமாக வெளியேறி விட்டான் அவன். போகும் போது கூறினானே ஒரு வார்த்தை!

"டேய், என்ரைபெண்டிலைக் கொண்டு வந்து உன்ரை வீட்டிலை வைச்சிட்டியோ. உன்னை என்ன செய்யிறன் பார்......"

அவன் போய்விட்டான்.

www.tamilarangam.net



இராசரத்தினத்தாரின் எண்ணெய் ஊறவைத்த உடம்பில் முற்றத்துப்புழுதி யெல்லாம் அப்பியிருந்தது.

சிவக்கொழுந்தி ஏங்கியபடி முற்றத்தில் நின்றாள்.

சீதேவி அம்மாள் இழுப்புடன் நடுக்கதவுவரை வந்து நின்று ஏங்கினாள்.

இராசசுந்திரத்திற்கு அப்போது வயது எட்டு இருக்கும். சிறுவன் இராசசுந்தரம் எங்கோ நண்பர்களுடன் வெளியே போயிருந்தான்.

பின்பு ஒருநாள் சிவக்கொழுந்தியின் கணவன் காக்கைதீவுச் சுடலைப் பூவரச மரத்தில் தொங்கியபடி செத்துப் போய்க்கிடந்தான்.

அன்றையிலிருந்து அந்தச் சுடலைக்குத் ''தூக்குமரக் காட்டுச்சுடலை'' என்றே பெயர் வழங்கிவருகிறது.

அவன் தூக்குப் போட்டுக் கொண்டுதான் செத்துப் போனான் என்றுதான் முடிவாயிற்று.

அவனது சடலம் வீட்டுக்கு எடுத்தவரப் பட்டபோது அன்று காலையிலேயே அவன் வீட்டுக்குவந்து அவன் பிரேதத்தில் விழுந்து புரள்வதற்காகக் காத்திருந்தாள் சிவக்கொழுந்தி.

எட்டுச் செலவும், அந்தியேட்டியும் முடியும்வரை வீட்டோடு இருந்த சிவக்கொழுந்தி அந்தியேட்டி முடிந்த மறுநாளே பெரியவர் இராசரத்தினத்தார் வீட்டுக்குவந்தவள் இன்றுவரை உறவினர்கள் வீட்டு நன்மைதீமைகளுக்கென்று ஒரு எட்டோ பத்தோ தடவைகள்தான் போய் வந்திருக்கிறாள்! இராசரத்தினத்தார் அவளை அதிகம் வெளியே போகவிடுவதில்லை.

இடையே சீதேவி அம்மாளும் செத்துப்போனாள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இராசசுந்தரமும் தனிக்காட்டுராஜாவாக வளர்ந்து வட்டுக்கோட்டைப் பாடசாலைப் போடீங்குவரை போய் விட்டார்.

சிவக்கொழுந்திதான் அந்த வீட்டு வேலைக்காரி, அடிமை உட்படச் சகலதும்!

இன்றுவரை அப்படித்தான்!

நேரம் நடுராத்திரிக்குக் கிட்டவாக வந்திருக்க வேண்டும்.

சத்திரத்துச் சந்திப் பொன்னம்மா மில்லின் காவல்காரன் தொங்கக் கட்டப்பட்டிருந்த பெரும் அகலச் சேமக் கலத்தில் அடிக்கும் ஓசை கணீரெனக் கேட்டது.

பண்டாரி ஒவ்வொரு அடிக்கும் விரல்களை மடக்கிப் பார்த்தான். பத்துவிரலும் மடக்கப்பட்டு கால்விரலில் ஒன்று வரையில் வந்து முடிந்தது.

பெரியவரை இன்னும் காணவில்லை.

பண்டாரிக்குக் கண்ணைச் சுழற்றியது.

மடித்த முழங்காலில் தலையைப் புதைத்துக் கொண்டே அவன் தூங்கிப் போனான்.

எவ்வளவு நேரந்தான் அவன் அப்படித் தூங்கினானோ?

வெளியே குதிரைகளின் பெருஞ்சதங்கைச் சத்தங்கள் கேட்டன.

பண்டாரி திடுக்குற்று முழங்கால் மடிப்புக்குள் இருந்து தலையை நிமிர்த்தினான்.

மரப்படலை திறக்கப்பட்டது. நான்கைந்து பேர் நடந்து வந்தனர். அவர்களில் ஒருவன் வெள்ளை வெளேரென்ற பொலிஸ் அதிகாரி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவன் கையில் சற்றுக்கட்டையான வழுவழுப்பான தடி ஒன்றிருந்தது.

அவன் அநாயாசமாக அதைச் சுழற்றிக்கொண்டே வந்தான்.

பண்டாரி பயந்து போனான். 'சின்னவரைக்கொண்டு போய் றெயிலில் ஏத்தினத்துக்கு என்னைப் பிடிக்க வாறானாக்கும்!''

இப்படி மனதுள் எண்ணி ஏங்கினான்.

வந்தவர்கள் எல்லோருமே இராசரத்தினத்தார் முன் செல்ல வாயில்படியேறி உள்கூடம்வரை போயினர்.

பண்டாரி இருப்பதைக் கடைக்கண்ணால் கவனித்தும் இராசரத்தினத்தார் ஒன்றுமே பேசாமலே உள்ளே போனார்.

விறாந்தையில் இருந்த சிங்கப்பூர் மான்றில் லாம்பினைச் சிவக்கொழுந்தி எடுத்துச் சென்றாள்.

இப்போது பண்டாரி இருளுக்குள் இருந்தான்!

சற்றுவேளைக்குள் சிவக்கொழுந்தி, சிறிய சிமிளி லாம்புடன் வெளியே வந்தாள். வந்தவள், ''பண்டாரி! உன்னை ஐயா இருக்கட்டாம். போக வேண்டாமாம்! போகிடாதை!'' என்று பண்டாரியிடம் கூறிவிட்டுச் சென்றாள்.

கடைசியாக அவள் ''போகிடாதை!'' என்று கூறிய அந்த வார்த்தை மறுபடியும் பண்டாரியின் நெஞ்சுக்குள் புயலைக் கிளப்பிவிட்டது. □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 7

பொன்னம்மா மில் பெரும் சேமக்கல ஓசை பன்னிரண்டுதரம் அடித்து, பின்பு ஒன்றடித்துச் சிறிது நேரத்தின் பின்தான் உள்ளே சென்றவர்கள் வெளியே வந்தார்கள்.

பண்டாரி முளிசிக்கொண்டு பயபக்தியுடன் எழுந்து நின்றான்.

அவனைப்பற்றிய எந்தவித அக்கறையும் இன்றிப் பொலிஸ் அதிகாரியும் மற்றவர்களும் மரப்படலை வரை சென்று குதிரை வண்டியில் ஏறிக் கொண்டனர்.

இராசரத்தினத்தார் அவர்களை முற்றம் கழியும்வரை வந்து வழி அனுப்பிவிட்டுப் பண்டாரியிடம் வந்துவிட்டார்.

"பண்டாரி, பொழுதுபட்டாப் போலையெல்லையடா ஆள் அனுப்பினனான், இப்பதானையடா வாறது?"

இராசர் கேட்டார்.

"நான் எப்பன் வெளியிலை போட்டு வந்தனான்; வந்தோடனை ஆச்சி சொன்னவ. ஐயா ஆளை அனுப்பின வரெண்டு! நான் கையோடை வந்திட்டன். பிள்ளையைக் கேட்டுப்பாருங்கோ!"

"சரி, சரி. இப்ப ஏன் நீ வில்லங்கப்படுகிறாய், உதிலை ஓட்டுமடத்தடிக்கு ஒருக்காப் போக வேண்டியிருந்தது. அதுதான் றிக்சோவுக்கு ஆளை அனுப்பினனான். கொஞ்ச நேரம் நிண்டுபார்த்தன் உன்னைக் காணேல்லை. அதுக்கிடையிலை எங்கடை முக்கந்தப் பொடியள் வந்து குதிரை வண்டில்லை கூட்டிக்கொண்டு போட்டாங்கள்!" என்று

டே—9

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அத்துடன் அப்பேச்சை நிற்பாட்டி விட்டு "அப்ப பண்டாரி நீபோட்டு நாளைக்கு வாவன்" என்றார்.

பண்டாரிக்கு ஒன்றும்விளங்கவில்லை. சிவக்கொழுந்தி யிடம் பண்டாரியை நிற்பாட்டச் சொல்லிச் சொன்னவர் இப்போது திடீரென்று அவனைப் போகும்படி சொல்லு றார்.

ஒன்றும் பேசாமல் அவன் மரப்படலைவரை வந்து விட்டபோது "பண்டாரி நிண்டுகொள்" என்று இராசர் அழைக்கவே அவன் நின்று விட்டான்.

இராசர் அவனுக்குக் கிட்டவாக வந்தார். "பண்டாரி, இப்ப நீ இஞ்சை நிக்கையுக்கை பொலிசிஞ்சுப்பெற்றரும் முக்கந்தர்ப் பொடியளும் இஞ்சை வந்த தெண்டு ஆருக்கும் சொல்லிப் போடாதை கண்டியோ. பிறகு இதுவெளியிலை தெரிஞ்சுதெண்டா......" என்று மேலே சொல்ல முடியா மல் நிறுத்திக் கொண்டார்.

"எனக்கேன் உந்தக்கதையளை? நான் ஏன் வெளி யிலை சொல்லப்போறேன்!" என்று சொல்லிக்கொண்டே பண்டாரி படலைக்கு வெளியே வந்துவிட்டான்.

பண்டாரிக்குத் தன்னைப் பற்றிய பயம் போய் இப்போது பொலிஸ் இன்ஸ்பெக்டரும முக்கந்தர் பொடி யளும் இராசர் வீட்டுக்கு வந்து போனதற்கான காரணம் பற்றிய சிந்தனைதான் இடம் பெற்றது.

கறிக்கடைக்கு முன்னால் யாரோ வெட்டப்பட்டுக் கிடப்பதாக அறிந்தது, பொலிசும் முக்கந்தர்மாரும் இராசர் வீட்டுக்கு வந்தது, இராசர் தன்னை அவசிய மில்லாமல் எச்சரித்தது எல்லாவற்றுக்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்பிருப்பதாக அவன் சின்ன மனசுக்குள் ஒரு எண்ணம் ஓடி நெளிந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவன் கால்கள், வந்தபாதைக்கு அவனை இட்டுச் செல்வதற்குப்பதில் நேர்பாதைக்கே இட்டு வந்துவிட்டன,

அவன் கறிக்கடைவரையில் வந்து விட்டான்.

சனம் கூட்டமாக நின்றது.

கூட்டத்தை ஊடறுத்துக் கொண்டு அவன் உள்ளே பார்த்தான்.

பிணம் ஒன்று அலங்கோலமாகக் கிடந்தது.

கழுத்து, கைமூட்டு, இடுப்பு ஆகிய இடங்களின் வெட்டுக் காயங்கள் ''வாயைப்பிழந்து'' நின்றன.

காயங்களிலிருந்து வழிந்தோடிய இரத்தம் கல்றோட்டில் பரவி ஆங்காங்கே உறைந்துபோய்க் கிடந்தது, கழுத்திலிருந்து வழிந்தோடிய இரத்தம் அவனின் கலைந்த குடுமிக் கூந்தலையும் சேர்த்துக் கொண்டு உறைந்து கிடந்தது.

''எட, ஆள் அஞ்சனந்தாழ்வு மாணிக்கன் போலை கிடக்கு''

இப்படி ஒரு குரல் எழுந்தது.

''அப்பிடித்தான் நினைக்கிறன்; முகங்குப்பறக் கிடக்கிறத்தாலை சரியாச் சொல்லேலாமக்கிடக்கு'' இன்னொரு குரல்.

''ஆரெண்டாலும் கிடக்கட்டுக்கு உங்களுக்கேன் ராப்பா வீண் கதையளை? புங்கை பொலிசுக்காறரும் வந்திட்டாங்கள் எப்பன் தள்ளி நில்லுங்கோ''

இப்படி வேறொரு குரல்.

பொலிசார் மூவர் வந்து சேர்ந்துவிட்டனர், அவர்கள் அரைக் காற்சட்டை அணிந்திருந்தனர்.

www.tamilarangam.net



ஒவ்வொருத்தர் கைகளிலும் தோல் இணைத்த குமிழ்தடி. வந்தவர்கள் சற்றுச் சிவப்பு நிறத்தவர்களாக இருந்தனர்.

''எட மூண்டு பேரும் யாகுவரெடா; பொல்லாதவங்களெடா; எட்ட நில்லுங்கோடா''

இது நான்காவது ஒருவனின் நகல் குரல்.

பொலிசார் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னே வந்து விட்டனர்.

கூட்டம் நகர்ந்து பரவியது.

பண்டாரி பிணமாகக் குப்புறக் கிடப்பவனை இனங்காணத்தான் முற்பட்டான். ஆனால் அவனாலும் இது முடியவில்லை.

பண்டாரிக்கு விஷயம் எல்லாம் இலேசாக விளங்குவது போலிருந்தது.

அஞ்சனந்தாழ்வு மாணிக்கனுக்கும் அலுப்பாந்தியில் வேலை செய்யும் யாரோ ஒரு இராசர் முக்கந்தருக்கும் சோற்றுக்கடை நாகலிங்கத்தாரின் கடையில் ஏதோ கொழுவல் நடந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறான்.

மாணிக்கனும் ஒரு வேண்டாத் தலையன் என்பதும் அவனுக்குத் தெரியும். இவைகளினால் எல்லாம் செத்துப் போய்க் கிடப்பவன் மாணிக்கன்தான் என்ற முடிவுக்குத்தான் அவனை வரச் செய்தது.

அப்போதுதான் பஸ் நிலைய வெளிக்கூடாக ஆண்கள் பெண்களாகப் பலர் கூக்குரலிட்டுக் கொண்டு வந்து சேர்ந்தனர்.

எல்லோரையும் பண்டாரி அடையாளம் கண்டு விட்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்தவர்கள் எல்லோரும் மாணிக்கனின் அக்கா" தங்கை, அண்ணன், மாமன், மச்சான் ஆகிய உறவினர்கள்தான்.

பண்டாரிக்கு அவர்கள் தூரத்து உறவினர்களாகவும் இருந்தார்கள்.

குளறிக் கூத்தாடிக் கொண்டு சடலத்தை அடைந்து விட முற்பட்டவர்களைப் பொலிசார் பயமுறுத்தித் தடுத்து நிறுத்திவிட்டனர்.

பண்டாரிக்கு ஒன்றுமே செய்யமுடியவில்லை.

இந்தக் கொலைக்கும் தனது இராசருக்கும் தொடர்பு இருந்திருக்கிறது என்றோ, அல்லது கொலை நடந்த பின் கொலையாளிகளுக்கு இராசர் பொலிஸ் மூலம் ஒத்தாசை செய்திருக்கிறார் என்றோ இரண்டத்தொரு உண்மை அவனுக்குத்தான் தெரிந்திருந்தது.

இதை அவன் யாருக்குமே வாய் விட்டுச் சொல்லி விட முடியாது. அந்த இடத்தில் நின்றால் அதனைச் சொல்லி விட வேண்டி வந்து விடும் என்பதற்காக எல்லா வற்றையும் மிண்டி விழுங்கிக் கொண்டே அவன் வீட்டுக்கு வந்து விட்டான்.

பண்டாரியின் தாய்க்கு இது ஒன்றுமே தெரியாது. அவள் மெய்யுறக்கத்தில் கிடந்தாள்.

அடுக்களைக் கொட்டிலுக்குள் அவனுக்கான இரவுச் சாப்பாட்டை அவள் வைத்துக் கரப்பினால் மூடியிருப்பாள் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அவன் அதைப் பற்றிய கவலை எதுவுமின்றி சாக்கை உதறிப் போட்டுக் கொண்டு படுத்து விட்டான்.

வயிற்றிலும் பசி எடுத்ததாக இல்லை!

மேற்குப் பக்கத்திலிருந்து சற்று நாதமுள்ள கனங் குறைந்த மூன்று மணி ஓசைகள் கேட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்துச் சற்றுச் சமீபமாக அதே மூன்று ஓசைகள்.

அதை அடுத்துக் கிழக்குப் பக்கத்திலிருந்து அதே மணி ஓசைகள்!

நாளாந்த வழக்கம் அப்படித்தான்.

ஆரிய குளத்தடி முதலாம் றெயில் கேற்றிலிருந்து ஒருவன் நேரத்திற்கு கட்டித் தொங்க விடப்பட்ட தண்ட வாளத் துண்டில் மணி அடிக்க அடுத்து ஸ்ரேசனிலிருந்து மற்ற மணி அடித்து கடைசியாகக் கச்சேரியடிப் பாது காப்பில் மற்றவன் அடித்து மணி ஓசைகள் ஒய்ந்து போய் விடும்.

இப்போது மணி சரியாக மூன்று!

விடிவதற்கு இன்னும் மூன்று மணி நேரம்தான் மிகுதி இருந்தது.

இந்தச் சிறு இடைவேளைக்கு இடையில் கலைந்து கலைந்து வந்த சிறு தூக்கக்கனவுகளில் அவன் கண்டதெல் லாம் இராசரின் மாறுபட்ட உருவங்களைத்தான். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் சவுக்கால் "சொல்லுவியா! சொல்லு வியா?" என்று கேட்டுக் கேட்டுத் தன்னை அடிப்பது போலவும்...

ஒருக்கால் தனது றிச்சோவை மடக்கி முறித்து திமூட்டி எரிப்பதுபோலவும்...

நன்றாக விடிந்து அவன் வீட்டுக்கு வெளியே வந்த போது பலர் அங்குமிங்குமாகக் கூடிக் கூடிப் பேசினர். எதையும் அறியாதவன் போலப் பேச்சுகளை அவன் அவதானித்தான்.

அவையாவும் அஞ்சனந்தாழ்வு மாணிக்கனையும், சோமர் மூக்கந்தர்மார்களையும், சோற்றுக்கடை நாகலிங்கத்தாரையுமே சுற்றிச் சுற்றி வந்தன.

www.tamilarangam.net



தன்னைப் பற்றியும் ஏதாவது வருகிறதா என்பதுதான் அவன் அவதானிப்பெல்லாம்!

## 8

நான்கு நாட்களாகியும் பண்டாரி பெரியவர் வீட்டுப் பக்கம் போகவில்லை.

இரண்டு நாட்கள் அஞ்சனந்தாழ்வில் மாணிக்கனின் சாவீட்டுக் காரியங்களோடு மினைக்கெட்டான். மிகுதி இரண்டு நாட்களும் வீட்டோடு நிலைத்து நிற்காமல அங்கு மிங்குமாகத் திரிந்தான்.

இந்த நான்கு நாட்களும் பெரியவர் வீட்டிலிருந்து நான்கு தடவைக்கு மேல் ஆள் சொல்லி வந்தது.

"அவன் செத்த வீட்டுக் காரியங்களோட மினக்கெடு றான், எட்டுச் சிலவு முடியுமட்டும் அந்தப் பக்கம் வரான் போலை கிடக்கு" என்று பண்டாரியின் தாயார் வந்தவர் களுக்குச் சொல்லி அனுப்பி விட்டாள்.

இப்படிச் சொல்லி அனுப்பும்படி பண்டாரி தாயாரி டம் சொல்லி வைக்கவில்லை; மகன் பெரியவர் வீட்டுக்குப் போகக் கடத்துவதிலிருந்து எதையோ அனுமானித்துக் கொண்டுதான் அவள் இப்படிச் சொல்லி அனுப்பியிருக்க வேண்டும்.

ஐந்தாவது நாள் பண்டாரி அங்கே போனான். போன போது அவர் வீட்டில் இல்லை. சிவக்கொழுந்தியிடம் தான் பண்டாரி பேசினான்.

சின்ன ஐயா பற்றிய புதினத்தை அவள் வாய்க்கூடா கவே மறந்து போன்ற பாவனையில் பண்டாரி அறிந்து கொண்டான்.

www.tamilarangam.net



இன்று காலை பாடசாலையில் இருந்து அவரைத்தேடி அதிபர் ஆளை அனுப்பியிருந்ததாகவும் சின்னவர் படிப்பித்த வாத்தியாருக்கு அடித்துவிட்டு வெளிக்கிட்டதாகவும் வீட்டுக்குத்தான் போயிருப்பார் வந்து விடுவார் என்று பொறுத்திருந்து பார்த்ததாகவும், சேதி கேட்ட நேரந் தொட்டுப் பெரியவர் அங்குமிங்குமாக அலைந்து கொண்டு திரிவதாகவும், காலை தொடக்கம் அன்னந்தண்ணி எதுவும் இல்லை என்றும் அவள் சொன்னாள்.

அவளின் பேச்சு முடிவதற்கிடையில் பெரியவர் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்; பண்டாரியைக் கண்டதும் அவருக்கு அழுகையாய் வந்தது.

''பண்டாரி நாளைஞ்சு நாளாய் சுந்தரன் பள்ளிக் குடத்திலை இல்லையாமடா. நீ எங்கையெண்டாலும் கண்டனியே?'' என்று தளதளத்த குரலில் அவர் கேட்டார்.

பண்டாரியின் நெஞ்சு துணுக்குற்றது.

''பண்டாரிக்குத் தெரிஞ்சிருக்கு; இதுவரையிலை சொல்லேல்லையெண்டு ஐயா நினைக்குமாப்போலை கிடக்கு?'' என்று பண்டாரி அவரையே கேள்வி கேட்டான்.

''இல்லையெடா பண்டாரி, சும்மா கதைக்குக் கேட்ட னான், இண்டைக்கு முழுக்க முக்கந்தர்ப் பொடியளைப் பிடிச்சு ஊர் ஊராப் பாக்க விட்டிருக்கிறன்'' என்று அழுத்துக் கொண்டே சொல்லிவிட்டு அவர் உள்ளே போனார்.

''எட பொடி, நீ சொன்னா ஐயா ஏதும் சாப்பிடுவார் சாடையாச் சொல்லிப்பார்'' என்று பண்டாரியின் காதுக் குள் சிவக்கொழுந்தி கூறினாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ஐயா, நானெல்லோ நாளைக்கிடையிலை சின்னை யாவைப் பிடிச்சுக் கொண்டு வந்து தாறன். பட்டினி கிடக்காமை..."

பண்டாரி பேசி முடிக்கவில்லை.

"எப்பிடியெண்டாலும் பெத்தமனமெல்லேயடா" என்று அவர் பதில் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டார்.

"பிள்ளை, அவர் திம்பார் போய் ஏதும் அடுக்குப் பண்ணிக் குடும்" என்று சிவக்கொழுந்தியின் காதுக்குள் பண்டாரி சொன்னான்.

சிவக்கொழுந்தியும் உள்ளே போய் விட்டாள்.

பண்டாரி எவருடைய பதிலுக்கும் காத்திராமல் வெளியே வந்து விட்டான்.

எப்படியும் சோமசுந்தரத்தாருக்குக் கொடுத்தவாக்கை காப்பாற்றி விட்டதான திருப்தி அவனுக்கு.

நான்கு நாட்களுக்கு முன் சோமசுந்தரத்தாரைத் தலை மன்னாரில் ஒருவன் கண்டதாக முக்கந்தன் ஒருவன் தகவல் கொண்டு வந்தான்.

இராசரத்தினத்தார் பல விதமாகவும் யோசித்துப் பார்த்தார். அவன் இந்தியாவுக்குத்தான் போயிருக்க வேண்டும் என்ற முடிவுக்குத்தான் அவரால் வரமுடிந்தது. கையில் ஐந்து ரூபாய் பணமிருந்தால் எந்தவித தடங்கலு மின்றி மூன்று நான்கு மணி நேரத்துள் இராமேஸ்வரம் கரையை அடைந்துவிடமுடியும் என்பது அவருக்குத் தெரியும். அத்துடன் தென்னிந்தியாவில் தனக்கு நாடகக் கொம்பனிகள் மூலமும் தனிப்பட்ட வாழ்க்கை மூலமும் இருந்த தொடர்புகளும் மகனுக்குத் தெரிந்திருந்தவென்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது. இவைகளினால் எல்லாம் நிச்சயமாக அங்குதான் போயிருக்க வேண்டுமென்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடிவுக்கு அவர் வருவது சுலபமாக இருந்தது. முன்பு ஒரு தடவை மகன் இவருடன் இந்தியா போயும் வந்திருக்கிறான்.

பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பின் ஒரு நாள் இராசரத்தினத்தாருக்கு இந்தியாவிலிருந்து கடிதம் ஒன்று வந்திருந்தது.

ருக்மணிதேவி என்பவள் அக்கடிதத்தை எழுதியிருந்தாள்.

''மகன் சுந்தரன் என்னுடனேயே இருக்கிறான். அவன் உங்கள் மகனென்றால் எனக்கும் மகன்தானே'' என்று கொஞ்சலாகவும் எழுதியிருந்தாள். கடைசியில் ''நீங்கள் அவனைத் தேடி இங்கு வர வேண்டியதில்லை. நானே அவனை இரண்டொரு மாதம் ஆசைக்கு என்னோடு வைத்திருந்து விட்டு தக்க துணையோடு அனுப்பி வைப்பேன்'' என்றும் எழுதி, ''உங்களைப் பார்க்கவும், விருப்பமாயிருப்பதால் மகனோடு நான் வந்தாலும் வருவேன்'' என்று தனது வரவுக்கு முன்னறிவித்தலும் கொடுத்திருந்தாள்.

ரத்தினத்தார் மனதால் அப்படியே இக்கடிதத்தில் சொக்கிப் போனார்.

தென்னிந்தியாவில் சில குறிப்பிட்ட இடங்களில் ரத்தினத்தாரின் பெயரைச் சொன்னாலே போதும். இராச மரியாதை நடக்கும். அத்தனை தூரத்திற்கு அவர் செல்வாக்கு அங்கு. அதுவும் ருக்மணிதேவி இருக்கும் தஞ்சாவூரென்றால் அவர் புகழ் இரட்டிப்பு!

அவர் அங்கு தங்கியிருக்கும் காலங்களில் கிழமைக்கு இரு தடவைகள் தஞ்சைப் பெருங்கோயிலைத் தரிசிப்பது வழக்கம். அந்த இரு தடவைகளிலும் அவரைப் பின்பற்றிச் செல்லும் அடியார் கூட்டத்தைக் கொண்டே அங்கு அவருக்குள்ள செல்வாக்கினை சுலபத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அளவிட்டுக் கொள்ளலாம். இதை வைத்துக் கொண்டு மகனுக்கு அங்கு எந்தவித குறையும் இருக்காது என்று இவர் நிம்மதி அடைந்து கொண்டார்.

மூன்று நான்கு மாதங்கள் போய்விட்டன.

ஒருநாள் ருக்மணிதேவி உட்படப் புதிதான ஒரு நாடகக் கோஷ்டியுடன் சோமசுந்தரத்தார் வந்து சேர்ந்து விட்டார்.

ரத்தினத்தாருக்கு உள்ளூரப் பெருமகிழ்ச்சி.

இத்தனை அளவுக்குச் செய்து முடிக்க, மகன் சோம சுந்தரம் கடுக்கண்டுவிட்டது; ருக்மணி தேவியைப் பார்க்க முடிந்தது; கிராமங்களில் எழுந்த நாடகமேடையேற்றங் களின் போட்டிகளினால் தொய்யவிட்டிருந்த நாடகக் கொட்டகைத் தொழிலுக்கு மகன் கொண்டு வந்தகோஷ்ட் டியுடன் புத்துயிர் பிறக்க வழி பிறந்தது; இவை எல்லாம் சேர்ந்துதான் பொதுவில் அவருக்குப் பெருமகிழ்ச்சியை உண்டாக்கியிருந்தன.

இந்த மகிழ்ச்சிச் சுமையைத் தாங்கமாட்டாத அவ ரின் நெஞ்சுத்துடிப்பு ஒரு நாள் எந்தவித முன்னறிவித் தலும் இல்லாமலே நின்று போய்விட்டது.

இராசசுந்தரத்தாரின் மரணம் எல்லோருக்கும் அதிர்ச்சியைத் தந்தது. நோய் நொடி உள்ள உடம்பு டனா அவர் இருந்தார்?

சிவப்பு நிறமேனியில் நெஞ்சு நிறைந்த சுருள் ரோம மும் ஆளுமாக...

ஆங்காங்கே உருண்டு திரண்ட தேகக்கட்டும் நிமிர்ந்த நடையுமாக...

நீண்டமூக்கும், விரிந்த கண்களும், அகன்ட தாடை யும், வீறு நடையுமாக...

www.tamilarangam.net



ஊரெல்லாம் இன்றுவரை உற்சாகத்துடன் திரிந்தவர் இப்போது செத்துப்போய்விட்டதை பலராலும் நம்ப முடியவில்லை.

செய்தி கேள்விப்பட்டவுடனேயே முக்கந்தர் கூட்டம் அவரைச் சூழ்ந்துவிட்டது.

நாடகங்களில் நெஞ்சில் புரண்டு அழுவது போன்றல் லாமல் ருக்மணிதேவி அடக்கமாக ஒருபுறத்தே ஒதுங்கி யிருந்து அழுதாள்.

சிவக்கொழுந்தி நெஞ்சில் அடித்துக்கொண்டு கத்தி னாள்.

ஏதோ முக்கியகாரியமாக வெளியே போயிருந்த மகன் சோமசுந்தரத்தார் தகவல் அறிந்து ஓடோடிவந்து தந்தை யின் மேல் விழுந்து புரண்டார்.

சேதிகேட்டு வெறும் றிக்சோவுடனேயே ஓடோடி வந்த பண்டாரி சூழ்ந்திருந்த கூட்டத்தைப் பிரித்துக் கொண்டு உள்ளே போய் அவரின் முகத்தைத் தரிசிக்க முடியாமல் தலைத் துண்டினால் முகத்தை மூடிக் கொண்டே விம்மி விம்மி அழுதான்.

"என்ரை நயினார், இந்த விஷயத்தை ஒருத்தருக்கும் சொல்லக்குடாதெடா பண்டாரி எண்டு சொன்னியள் நயினார். பண்டாரி கடைசி மட்டும் அதைக் காப்பாத்திப் போட்டான் நயினார்...'" என்று அவன் கத்தினான்.

அங்கு கூடிநின்றவர்கள் எல்லோருடையசெவிகளிலும் தான் பண்டாரியின் இந்த வார்த்தைத் தொடர் விழுந்தி ருக்க வேண்டும்.

சிலர் பண்டாரியையும் பார்த்து தங்களுக்குள் ஒவ் வொருவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண் டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாவீட்டுக் காரியங்களுக்கான ஒழுங்குகள் நடந்தன—

பந்தல் போடுபவன் பந்தல் போட -

கடைகண்ணிக்கு போபவன் கடைகண்ணிக்குப் போக—

குடிமக்களுக்கு இழவு சொல்லிப் போபவன் இழவு சொல்லிப்போக-

துடக்கு உருத்துக்காரருக்குப் பிரத்தியேகமாக இழவு சொல்லும் வழக்கக்காரன் அதைச் செய்ய-

சாவீடு அமர்க்களப் படத் தொடங்கிவிட்டது...

மறுநாள் விட்டு மறுநாள் வரை பிரேதம் வீட்டோ டேயே கிடந்தது. அது பழுதுபட்டுப் போய்விடாமல் பல கருமங்கள் செய்யப்பட்டன.

உப்புப் பொட்டணி அணைப்பு—

சீல்சாராயத் தெளிப்பு—

தோட்ட மண்வெட்டி வைப்பு—

இப்படிப் பல முறைகள் கையாளப்பட்டன. ஆயினும் மறுநாள் மாலை சற்று துர்வாடை வீசத்தொடங்கி விட்ட தனால் அடுத்த நாள் அதிகாலையிலேயே சவக்கிருத்திய வேலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவாயிற்று.

இந்த இடைவேளைகளில் எல்லாம் பண்டாரியும் சாவீட்டோடேயே நின்றான்.

பலர் அவனைச் சுற்றிவளைத்து "என்ர நயினார் இந்த விஷயத்தை ஒருவருக்கும் சொல்லக்குடாதெடா பண்டாரி......" என்று சொல்லிப் பண்டாரி அழுததன் அர்த்தத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்வதற்குப் படாத பாடுபட்டனர்.

"அதை ஏன் உங்களுக்கு. அது எனக்கும் பெரிய நயினாருக்கும் உள்ள விஷயம். நான் சொல்லமாட்டன்

www.tamilarangam.net



எண்டா சொல்ல மாட்டன்'' என்னைக் கொண்டாலும் சொல்ல மாட்டன்''

இப்படி முறைப்பாகவே பண்டாரி எல்லோருக்கும் பதில் சொல்லிவிட்டான்.

அஞ்சனந்தாழ்வு மாணிக்கன் வெட்டிக்கொல்லப்பட்ட அந்த இரவு...

சிவக்கொழுந்தி கொடுத்த கோப்பியைக் குடித்து விட்டு மாமரத்தடியில் ஐயாவுக்காக காத்திருந்த அந்த இரவு...

பொலீஸ் அதிகாரியும் ஐயாவும் மற்றும் சிலரும் வந்து வாயில் படிதாண்டி உள்ளே போன அந்த இரவு...

இதை ஆரட்டையும் சொல்லிப் போடாதை என்று பண்டாரியை ஐயா எச்சரித்த அந்த இரவு...

இவை எல்லாமே முதல் நாள் இரவு போலத்தான் பண்டாரியின் மனதுக்குத் தெரிந்தன! □

## 9

தந்தை இராசரத்தினத்தாரின் மறைவின் பின் சோம சுந்தரத்தாரே சகலத்திற்கும் அதிகாரம் படைத்தவராகி விட்டார்.

தந்தையைவிட மேடை நாடக உலகையே ஒரு கலக்கு கலக்கி விடவேண்டும் என்பது அவரின் ஆசைகளில் பிரதானமானது.

நாடகக் கொட்டகையைச் சீர்செய்து முடித்தார்.

''தந்தையின் உரித்துக்காரி'' என்று ஊகத்திற்குட் பட்ட ருக்மணிதேவியை முதன்மைப்படுத்தி உடனடி

www.tamilarangam.net



யாகவே நான்கைந்து நாடகங்களை மேடையேற்றிவிட்டார்

பவளக்கொடி, அல்லி அருச்சுனா, வள்ளித்திருமணம், ஆகிய சிருங்கார ரசம் மிக்க நாடகங்களை மேடையேற்றவே அவர் பெரிதும் விரும்பினார்.

ரசிகர்களின் நாடிபிடித்துப் பார்ப்பதில் இந்த வயதிலேயே அவருக்கு இத்தனை அனுபவம் வந்துவிட்டது.

இத்தனைக்கும் அவரின் பிரதான ஆலோசகன் பண்டாரி ஒருத்தன் தான்!

பண்டாரியை நம்புவதுபோல அவர் யாரையும் நம்புவதில்லை.

பண்டாரியின் ரிக்சோ வீதியால் வருவதாக இருந்தால் அதில் நிச்சயமாக சோமசுந்தரத்தார் மட்டுமே தான் இருப்பார்.

''சோமசுந்தரம் ஐயாவைத் தவிரப் பண்டாரியின் றிக்சோ வேறு யாரையுமே ஏற்றி ஓடாது'' என்று பண்டாரியும் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டான்.

சோமரைவிடப் பண்டாரிக்கு ஒரு பத்து வயதுதான் கூட இருக்கும்.

நாடகக் கொட்டகையிலும் பெரும் பொறுப்பொன்று பண்டாரியைக் காத்திருக்கும்.

''பஞ்சமர்'' என்று பெயர்ப் பலகை கட்டப்பட்டுள்ள பகுதிக்குள் வரும் நெளிவு சுழிவுகளைக் கவனிக்கும் பொறுப்பு அவனுடையது தான்!

அடிக்கடி அங்குமிங்குமாக இராசநடை போட்டு அந்தப் பகுதிக்குள் வரும் பிரச்சனைகளை மிகப் பக்குவமாகத் தீர்த்து வெற்றி காண்பதில் பண்டாரிக்குப் பெருமை! அதனால் அந்த கூட்டத்தாரின் மத்தியிலும்

www.tamilarangam.net



பண்டாரிக்குப் பெரும் செல்வாக்கு! இது ஏறக்குறைய சோமசுந்தரத்தாரின் மதிப்புக்குச்சமம்!

சோமசுந்தரத்தார் நடந்து சென்றால் தோளில் சால்வை அகற்றிப் பலரும் மரியாதை செய்வர். அதே போலத்தான் இந்தக் கூட்டத்தினர் அரையிற் சால்வையை கழற்றிப் பண்டாரிக்கும் மரியாதை செய்வர். தங்களுக்குள் பண்டாரிக்குச் 'சின்னச்சோமர்' என்று பட்டமும் சூட்டிக் கொண்டிருந்தனர். இவர்கள் கொடுக்கும் இந்த நல் மதிப்பை வைத்துக் கொண்டு பண்டாரி நாடகமேடையில் இஷ்டம்போல் ஏறிஇறங்கி உலாவுவதைப் பொறுக்க மாட்டாத சிலர் பண்டாரியின் தன்னிச்சையான செயலைப் பற்றி சோமரிடம் முறையிட்டதுமுண்டு. அதற்கெல்லாம் மறுமொழியாக "பண்டாரி என்ரை ஆள்" என்று மட்டுந் தான் சோமசுந்தரத்தார் சொல்வார். அத்துடன் 'கொதிப்புக்கள்' அடங்கிப்போய்விடும்!

பதினைந்தாவது வயதில் றிக்சோவைப் பிடித்திழுக்கத் தொடங்கிய பண்டாரிக்கு சோமசுந்தரத்தார் கடுக்கண்ட பின்புதான் புதிய புதிய அனுபவங்கள் பிறக்கத் தொடங்கின. இருட்டிய வேளையில் எவருக்குமே தெரியாமல் சோமசுந்தரத்தாரை ஏற்றிச் சென்று, இந்தியாவுக்கு வழியனுப்பிவைத்து, இன்று வரை அதைப்பற்றி மூச்சுக் கூட விடாமல் இருக்கிறானே அதற்காக சோமசுந்தரத்தார் தனது நன்றிக்கடனையெல்லாம் அவன்மீது சுமத்திக் கொண்டே இருந்தார்.

சோமசுந்தரத்தாருக்கு எந்தெந்தப் பெரிய மனிதர்களிடம் தொடர்பு உண்டோ அந்தந்தப் பெரியமனிதர்களிடமெல்லாம் பண்டாரிக்கும் தொடர்புகள் உண்டு!

பண்டாரிக்கும் எல்லாமே சோமசுந்தரத்தார் தான்!

பார்த்தும் பாராமலும் தேவைப்பட்ட போதெல்லாம் பண்டாரிக்குப் பணத்தை விட்டெறிவார் சோமசுந்தரத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்பு இராசரின் அடிமையாகவும் மெய்ப்பாதுகாப்பாளனாகவும் மட்டும் இருந்த பண்டாரி இப்போது சோமசுந்தரத்தாருக்கு அடிமையாகவும், மெய்ப்பாதுகாப்பாளனாகவும் ஆலோசகனாகவும், தோழனாகவும், அந்தரங்கக் காரியதரிசியாகவும், உத்தியோகப்பற்றற்ற சகலதுமாகவுமே ஆகிவிட்டான்.

சமீபத்தில் நவாலி வேலக்கைப் பிள்ளையார்கோவில் ஐந்தாம் திருவிழா உபயகாரர்கள் தங்கள் திருவிழாவுக்கு இந்தியாவிலிருந்து தவில்நாயனக் கூட்டம் ஒன்றைத் தருவிப்பதற்காகச் சோமசுந்தரத்தாரை அணுகியிருந்தனர்.

தஞ்சை வெண்ணாற்றெடி ராமபூபதி செற்றை அவர் ஏற்பாடுசெய்து கொடுத்ததனால் அந்த கெளரவத்தோடு ஐந்தாம்திருவிழா உபயகாரர்கள் சோமசுந்தரத்தாரையும் கெளரவ விருந்தினராக அழைத்திருந்தனர்.

பண்டாரியின் றிக்சோ வேலக்கைப் பிள்ளையார் கோவிலடிக்குச் சோமசுந்தரத்தாரை இட்டுச்சென்றது.

உபயகாரரின் பிரதான அமைப்பாளர் காசிப்பிள்ளை முதலியார் வீட்டில் சோமசுந்தரத்தாருக்குப் பகல் விருந்துக்கு ஏற்பாடு இருந்ததால் ஆனிமாதத்துக் கடுகடுத்த வெய்யிலில் பண்டாரி சோமசுந்தரத்தாரை முதலியார் வீட்டு உள்முற்றம் வரை இழுத்துச் சென்று இறக்கி விட்டான்.

சகலவித உபதேவை வஸ்துக்களுடன் சோமசுந்தரத்தாருக்கு நடு வீட்டுக்குள் விருந்து நடந்தது.

பண்டாரிக்கும் சகலவித உபவஸ்துக்களுடனும் தாழ்வாரப்பக்கத்தில் விருந்து நடந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விருந்து முடிந்து உள்புறப் பஞ்சுப்படுக்கையில் சோம சுந்தரத்தாரும், தாழ்வாரத்துச் சாக்குப்படுக்கையில் பண்டாரியும் விழுந்துவிட்டனர்.

ஏறக்குறைய ஏககாலத்தில் இருவரும் கண்திறந்த போது வேலக்கைப் பிள்ளையார் கோவில் ஐந்தாம் திருவிழா தொடங்கி நீண்டநேரம் ஆகிவிட்டிருந்தது.

திருவிழாவும் முடிந்து நாட்கள் ஆகிவிட்டன.

''பண்டாரி றிக்சோவை எடு, காசிப்பிள்ளையரைக் கண்டு மேளகாறற்றை கணக்குப் பார்த்து முடிக்க வேணும்'' என்று சோமசுந்தரத்தார் பண்டாரிக்குக் கட்டளையிட்டார்.

யாருடைய கொடுக்கல் வாங்கலுக்கும் இப்படி வீடு தேடிப்போய்க் கணக்கு முடித்த வரலாறு அவருக்கு இல்லை. இது பண்டாரிக்கும் தெரியும். ஆனாலும் பண்டாரி மறுகதை எதுவும் பேசவில்லை.

றிக்சோ காலை பத்து மணிக்கெல்லாம் காசிப்பிள்ளை முதலியார் வீட்டு வாயிலைச் சென்றடைந்து விட்டது.

காசிப்பிள்ளை முதலியார் வீட்டில் இல்லை. அவருக்குக் கச்சேரியில் வேலை என்பதும் காலையே அவர் வேலைக்குப் போய்விடுவார் என்பதும் சோமசுந்தரத் தாருக்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை.

அவரை உள்ளே அனுப்பி விட்டுப் பண்டாரி றிக்சோப் படியில் உட்கார்ந்து கொண்டான்.

உள்ளே சில பெண்களின் பேச்சுக்குரல்கள் கேட்டன.

காசிப்பிள்ளையருக்கு இரண்டு பெண்பிள்ளை மட்டுந்தான் என்பதை இரண்டு நாட்களுக்குமுன் விருந்துக்கு வந்திருந்த போதே பண்டாரி அனுமானித் திருந்தான். இப்போது சோமசுந்தரத்தார் உள்ளே பேசிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டிருப்பதையும் கணக்குப் பார்க்கும் சாக்கில் அவர் இங்கே வந்திருப்பதையும், இரண்டு நாட்களுக்குமுன் நடந்த விருந்தையும் சேர்த்துக் கணக்கிட்டதில் பண்டாரிக்கு ''அவருக்கு ஒருத்தி தேவைப்படுகிறாள்'' என்ற முடிவுதான் தேறியது.

மதிய போசனம் அங்கேதான்!

பண்டாரிக்கும் அது கிடைத்தது.

சம்பாச்சோறு, கோழிக்கறி, முட்டை அவியல், முட்டை வருவல் என்ற விதத்தில் பண்டாரிக்குக் கிடைத்ததென்றால்...

வயிறு புடைக்க உண்ட மயக்கத்தில் பண்டாரி றிக்சோவுக்குப் பக்கமாக இருந்த இலுப்பை மரநிழலில் படுத்துப் புரண்டு விட்டான்.

ஏறக்குறைய மூன்று மணிக்குச் சோமசுந்தரத்தார் வெளியே வந்தார். பண்டாரியை அருட்டி எழுப்பினார்.

றிக்சோ புறப்பட்டு விட்டது.

இதற்குப் பின் நான்கைந்து நாட்கள் போய்விட்டன.

''பண்டாரி!''

''என்னவாக்கும்?''

''அண்டைக்கு விருந்து சாப்பிட்ட வீட்டுப் பெட்டை எப்படி?''

''நல்ல வடிவான சுவத்தப் பொட்டையாக்கும்.''

''அட விசரா! சுவப்பியில்லையடா அந்தப் பொது நிறக் கறுப்பியடா!''

''முக வெட்டுப் பறுவாயில்லாமக் கிடந்தது. எண்டாலும் கறுப்பி ஐயாவின்ர நிறத்துக்கு எப்பனும் ஒத்து வராது''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"முதல்லை அதை எடுப்பமடா பேந்து பாப்பம்!"

அந்தப் "பேந்து பாப்பம்" என்பதில் இருந்த அடக்கத்தைப் பண்டாரி புரிந்து கொண்டான்.

"அப்ப பேச்சுக்காலை வைப்பம் ஐயா எண்டால் அவை மாட்டன் எண்டே சொல்லப் போகினம்"

"அதுதானடா யோசிக்கிறன். காசிப்பிள்ளை முதலியும் ஒரு மாதிரி ஆள். சின்னப் பாம்பெண்டாலும் பெரிய தலையடிதான் அடிக்க வேணும். பின்னேரம் ஒருக்கா ஆனைக்கோட்டை மூங்கிலடி மணியகாறனட்டைப் போக வேணும். அவன் என்ரை சிநேகிதம்"

"பின்னை அப்படித்தான் செய்வம்"

அன்று பின்னேரம் பொழுது கருகும் வேளையில் பண்டாரியின் றிக்சோ மூங்கிலடி மணியகாரன் வீட்டு வாயிலில் நின்றது.

பண்டாரியின் றிக்சோ அங்கு நின்றதென்றால் சோமசுந்தரத்தாரும் அங்கேதான் நிற்கிறார் என்பதுதான் அர்த்தம்.

மணியகாரன் வைரமுத்தர், சோமசுந்தரத்தாருக்கு இடைநேரத்தில் ஒரு பெரு விருந்தையே வைத்துக் கௌரவித்தார். எந்தக் கௌரவ விருந்தும் பண்டாரி வரை வந்துதான் முடிவது வழக்கம்!

முன்னிலவு காலம்!

சோமசுந்தரத்தார் திரும்பி வந்து றிக்சோவில் ஏறிக்கொள்ள எந்தவிதமான அவசரமுமின்றி தேர் அசைவு வீச்சில் பண்டாரி றிக்சோவை நகர்த்தி வந்தான்.

காக்கைதீவு வெளிப்பரப்பை றிக்சோ அடைந்த போது சோளகக்காற்று மெதுவாக வீசியது.

மணியகாரன் வீட்டுச் சாயந்தர விருந்து—

www.tamilarangam.net



முன்னிரவு—

றிக்சோவின் தேர் அசைவு—

சோளகக் காற்றின் மென்மைத் தழுவல் —

இவையெல்லாமே சோமசுந்தரத்தாரை மயக்கிக் கொண்டிருந்தது. போதாதென்று காசிப்பிள்ளை முதலியின் மூத்தவள், அந்த நல்லெண்ணைக் கறுப்பி முத்துப்பல் வரிசையையும், தொங்கு கொண்டையையும் வைத்து அழகு காட்டிக் கொண்டே அவர் நெஞ்சில் ஏறிக்கொண்டு கூத்தாடுகிறாள்!

''நயினார் ஒரு வியளமாக்கும்!''

''என்னடா பண்டாரி?''

''பண்டாரியும் ஒரு பொம்பிளை எடுக்கப் போறானாக்கும்''

''என்னடா, பொம்பிளையோ! ஆரடா அவள்?''

''சொல்லப் பயமாய்க் கிடக்குதாக்கும்!''

''எட சும்மா சொல்லடா, பயப்பிடாமைச் சொல்லடா!''

''எங்கடை மணிக்கூட்டடிக்கு வடக்குப் பக்க மேற்காலை இருக்கிற தென்னம்பிள்ளை வளவுக்கை இருக்கிற...''

''அது சிவக்கொழுந்தியின்ரை அக்காள் வீடெல்லோடா பண்டாரி!''

''ஓமாக்கும்! சிவக்கொழுந்திப் பிள்ளையின்ரை ஆக்கள் தானாக்கும்! நானும் அதாலை காலமை பின்னேரம் வந்து போறனான். பொட்டை நெடுகக் கை காட்டிக் காட்டிச் சிரிக்கிறவள்''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"எட பண்டாரி! பேய் வேலை பாக்காதை!"

"........................"

"பண்டாரி நீ பொம்பிளை கிடைக்காமைச் சிறைக் குடிபகுதியிலை பொம்பிளை எடுக்கப் போறியேடா? மடையா?"

"...................."

"உன்ரை சொம்மான்ரை பெட்டையளிலை ஒண்டை எடன்ரா"

"அவளவை என்னைக் கண்டோடனை சிங்கம் போல நிக்கிறாளவை"

"ஏனடா சிங்கம் போலையோ? மடப் பயலே! நீயும் ஒரு ஆம்பிளையே? உன்னைக் கண்டோடனை சிங்கம் போல நிக்கிறவளவையிலை ஒருத்தியைத்தான்ரா நீ எடுக்கவேணும்! அப்பதான் நீ ஆம்பிளை!"

"...................."

"பண்டாரி என்னடா யோசிக்கிறாய்? அவளவையிலை ஒருத்தியைத் தூக்கியா! எல்லாத்துக்கும் நானிருக்கிறன்!"

"...................."

## 10

சோமர் சொல்லிவிட்டார்; பண்டாரி அமுல் நடத்திவிட்டான்.

பண்டாரக் குளத்தடிக்கு அப்பச்சட்டி கந்தையாவின் குதிரைவண்டியைக் கொண்டு சென்று மாமன் பொன்னன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மகள் முத்தியைப் பண்டாரி சிறைப்பிடித்து வந்து சோமர் முன் ஆஜராகிவிட்டான்.

எட்டுப்பத்து நாட்களாகப் பண்டாரியைப் பிடித்து விடுவதற்குப் பொன்னன் தன்னால் ஆன கரணமெல்லாம் அடித்துப்பார்த்து விட்டான். சோமரின் பரந்துபட்ட செல்வாக்கின் முன் பொன்னனாவது, அவனின் கரண மாவது! கடைசியாக ஒருநாள் முத்தியையும் பண்டாரியை யும் தலைமைக்காரன் வீட்டுக்குக் கொண்டு சென்று இரு வரிடமும் ஒப்புதல் வாக்குமூலத்தைச் சொல்ல வைத்து விட்டு, வில்லூண்டிப் பிள்ளையார் கோவிலுக்குச் சற்று அப்பால் இருந்த தனது தென்னந்தோப்புக்குள் அவனைக் குடியுங் குடித்தனமுமாகக் குத்தவைத்து விட்டார் சோமசுந்தரத்தார்.

இந்த கலேபரங்களுக்குள்ளும் பண்டாரியின் எண்ண மெல்லாம் சோமசுந்தரத்தாரின் திருமணக்காரியத்தில் தான்.

மூங்கிலடி மணியகாரன் வைரமுத்தரை அருட்டி விட்டுச் சோமசுந்தரத்தரர் வந்துவிட்டதன் பின்பு- பண்டாரியின் காரியங்களும் முடிந்துவிட்ட பின்பு - வைர முத்தர் சோமரைத் தேடிவந்தார்.

அந்த நல்லெண்ணைக் கறுப்பியின் தந்தையான காசிப்பிள்ளை முதலிக்கு சோமருக்குப் பெண் கொடுப் பதில் துளிகூட விருப்பமில்லை என்பதைக்கூறி, தான் முடிந்தவரை தன் செல்வாக்கைப் பயன்படுத்திப் பார்த்துத் தோல்வி கண்டுவிட்டதாகவும் சொல்லி, அந்தச் சம்மந் தத்தை விட்டுவிடச் சொல்லியும் வற்புறுத்தினார் வைரமுத்தர்.

"இஞ்சேரும் வைரமுத்தர், இந்த சோமன் ஒண்டிலை ஆசை வைக்க மாட்டான். அப்படி ஆசைவைச்சிட்டான் எண்டால் தலைபோனாலுஞ் செய்யாமல் விடமாட்டான்!

www.tamilarangam.net



நீர் இருந்து பாரும், சோமன் அந்த வீட்டிலை கட்டு கிறானோ இல்லையோ எண்டு.''

இப்படிச் சபதமெடுக்கும் தோரணையில் சோமர் வைர முத்தரிடம் பேசிவிட்டார்.

இதன் பின்பு இந்தக் காரியமாகச் சோமர் பண்டாரி யுடன் தான் முதலில் பேசினார்.

பெண்ணைத் தூக்கி வருவதற்காகப் பண்டாரி ஒற்றைக் காலில் நின்றான்.

சமீபத்தில்தான் அவன் ஒரு வீர சூரத்தனம் செய்திருக் கிறான் — முத்தியைக் கொண்டு வந்திருக்கிறான். அதை விடவும் முத்தியைப் போல, பண்டாரியைக் கண்டு சிங்கம் போல நிற்கும் நிலையில் காசிப்பிள்ளை முதலியின் நல்லெண்ணைக் கறுப்பி இருக்கவில்லை. அவள் தன்னில் மனப்பட்டிருப்பதாகத்தான் சோமர் சொல்லியிருக்கிறார். இதனால் தன் காரியத்தையும் விட இது மிகவும் சுலபமான வேலை என்பதுதான் பண்டாரியின் எண்ணம்.

அப்போதுதான் சில்லாலை முருகேசு போட் கார் ஒன்றை எடுத்து வைத்திருந்தான்.

இதுதான் யாழ்ப்பாணத்திற்கு எட்டாவது கார்.

இதைப்பிடித்து இதிலேயே பெண்ணைந் தூக்கி வந்து விடவேண்டும் என்பது பண்டாரியின் யோசனை.

இந்த யோசனையைச் சோமர் ஏற்கவில்லை. ''காரைக் காணாத ஊருக்குக் கார் போனால் சனம் காரைப் பார்க்க கூடிவிடும். போகும் வேலைக்கு இது இடைஞ்சலாகிவிடும்'' என்பதுதான் சோமரின் அபிப்பி ராயம்.

கடைசியில் அப்பச்சட்டியின் குதிரைவண்டியும், கறுத்தார் வீட்டுக் குதிரைவண்டியுமதான் இதற்கு உகந்தன என்று முடிவாயிற்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாளும் குறிப்பிடப்பட்டு விட்டது.

ஒவ்வொரு வெள்ளியும் காசிப்பிள்ளை முதலியும் மனைவியும் மருதடிப் பிள்ளையார் கோவிலுக்குப் போவது வழக்கம் என்பதை சோமர் முன்கூட்டியே தெரிந்து வைத்துக் கொண்டிருந்ததால் அந்த நாளையும், அந்த மம்மல் பொழுதையுமே தெரிவு செய்துவிட்டார்.

வண்டி ஓட்டிகளைவிட மொத்தமாகப் பத்துப்பேர். அதில் சோமரும் பண்டாரியும் அடக்கம்!

முக்கந்தர்கள் மூவர் சோமரின் வெளியூர் கைக்காய்கள் மூவர் பண்டாரியால் தெரிவு செய்து கொண்டு வரப் பட்டவர்கள் இருவர். சோமரையும் பண்டாரியையும் சேர்த்து மொத்தம் பத்துப்பேர்.

ஐந்து ஐந்தரைமணிக்கெல்லாம் வண்டிகள் ஆனைக் கோட்டை மூத்தநயினார் கோவில் குளத்தடிச் சந்திப்பால் திரும்பிவிட்டன.

வண்டி செல்லமுத்து வெட்டையடிக்குவர மைம்மல் பொழுது வந்துவிட்டது.

வண்டிகள் வேலக்கைப்பிள்ளையார் கோவிலுக்குத் தெற்கால் உள்ள மகிழ மரக்கூடலில் நுழைய இருட்டி விட்டது.

ஆளை ஆள்தெரியாத இருட்டு.

ஏற்கனவே குதிரைகளின் நாதச் சதங்கைகள் நீக்கப் பட்டிருந்ததால் எந்தவிதப் பெரு ஆரவாரமும் இல்லை.

வண்டியில் இருந்து இறங்கிய பண்டாரி வெளிக்கத வண்டை மெதுவாகச் சென்றான்.

வெளிக்கதவு சங்கிலிப்போட்டுப் பூட்டியிருந்தது.

பண்டாரி எட்டிப் பார்த்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ளே இருள்தான் தெரிந்தது.

காதைக் கூர்மையாக்கிக் கொண்டு ஆள் அரவம் ஏதாவது கேட்கிறதா என்பதை அநுமானித்தான்.

பேச்சு மூச்சு ஒன்றுமில்லை.

சற்றுவேளை அப்படியே நின்றான்.

எங்கும் சூனியம்!

பண்டாரி வண்டிலடிக்கு அடிமேல் அடிவைத்துத் திரும்பி வந்து "உள்ளுக்கு ஒருதரும் இல்லைப் போலை கிடக்கு. கதவுச் சங்கிலியும் பூட்டிக் கிடக்கு" என்று சோமரின் காதுக்குள் கூறினான்.

சோமர் ஒன்றுமே பேசவில்லை.

வந்தகாரியம் சித்திக்காது போலக் காணவே அவருக்கு வாய் அடைத்துவிட்டது.

"அப்ப என்ன செய்யிறது? போவமோ நிப்பமோ?" வண்டிக்குள் இருந்து ஒரு இரகசியக் குரல் கேட்டது.

சோமருக்கு இதற்கும் பதில் கூற வரவில்லை.

"பெட்டையளையும் கூட்டிக் கொண்டு கோயிலுக்குக் கீயிலுக்குப் போயிருப்பினம். பொறுத்துப் பாப்பம்!" பண்டாரிதான் பதில் சொன்னான்.

சற்றுத் தொலைவில் யாரோ வருவது போன்ற அசுகை தெரிந்தது.

"ஆரோ வாறாங்கள் போல கிடக்குது!"

முன்னே நின்ற மறுவண்டிக்குள்ளிருந்து ஒரு குரல் கேட்டது.

"எணை அப்பு அதிலை ரெண்டு குதிரை வண்டியள் நிக்குமாப் போலை கிடக்கணை!"

www.tamilarangam.net



இப்படி ஒரு குரல் வந்தது.

"எடை அது, முதலியாரெட்டை ஆரோ வந்திருக்கினம் போலை கிடக்கு! வீட்டிலை அவை இல்லையாக்கும். அதுதான் நிக்கினமாக்கும்."

இப்படி வேறோர் குரல்.

இரண்டு மாடுகளின் குளம்படிக்கும் ஓசை.

இரண்டு காளை மாடுகள் முன்னே செல்ல, ஏர் கலப்பையைத் தோளில் சுமந்து கொண்டு பின்னேவா, அவனுக்குப் பின்னால் சிறுபொடியன் ஒருவன் செல்கிறான்.

பிள்ளையார் கோயிலின் உள்ளே ஏற்றிவைக்கப்பட்டிருந்த விளக்கின் ஒளிக்கீறொன்று நீளமாக வெளியே தெரிந்து கொண்டிருந்தது.

வானத்திலே வக்காப் பறவைகள் குரல்வைத்துப் பறந்து சென்றன.

எங்கோ தொலைவில் ஆட்காட்டிக் குருவிகள் குரல் வைத்துச் சென்று கொண்டிருந்தது. தெளிவாகக்கேட்டது.

களங்கமற்றுக் கிடந்த வானத்தில் வெள்ளித்துகள்கள் அடிவானம்வரை சிதறிக்கிடந்தன.

சற்றுத் தொலைவில் காளை மாடுகளின் சதங்கை நாதம் எழுந்தது!

"பண்டாரி கோயிலாலை வண்டில் வருகுதுபோலை கிடக்கடா; உதிலைதான்ரா ஆக்கள் வருகினம்!"

சோமர் மெதுவாகக் கூறினார்.

சற்றுவேளைக்குள் எல்லோருமே நிலத்தில் குதித்துத் தயாராகிவிட்டனர்.

இரட்டை வில்லுவண்டி வெளிக் கதவடிக்கு வந்து விட்டபோது, ஒரு உருவம் வண்டியிலிருந்து இறங்கிச் சங்கிலிப்பூட்டைத் திறந்தது.

www.tamilarangam.net



அது காசிப்பிள்ளை முதலியாகத்தான் இருக்க வேண்டும்!

நான்கைந்துபேர் தாவி ஓடினர்.

அவர்கள் ஓடிச்சென்ற அதிர்ச்சியைக் காசிப்பிள்ளை யர் அவதானிப்பதற்கிடையில் ஓடிச் சென்றவர்கள் அவரை இறுகச் சுற்றிப்பிடித்து அவர் மோவாய்க் கட்டையைத் துணியினால் அமுக்கி விட்டனர்.

வண்டிச்சாரதி படபடத்துப் போனான்.

சோமரும் பண்டாரியும் வில்லுவண்டிக்குள் தாவி ஏறினர்.

''ஐயோ என்ரை பிள்ளையள்!'' இப்படியொரு பெண் குரல் கீச்சிட்டு எழுந்தது.

''ஐயோ அம்மா, ஐயோ என்ரை ஐயோ!'' இது இரு பெண்களின் அவலக் குரல்கள்!

அப்புறம்......

அப்புறம்......

கணவேளைக்குள் இரு குதிரை வண்டிகளும் மின்ன லாகப் பறந்துவிட்டன.

தாயும் ஒரு மகளும் கத்தியதுதான் கேட்டது.

அடுத்த மகளின் குரல் ஓடிச் சென்ற குதிரை வண்டிக் குள் இருந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

சோமருக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

பண்டாரி பெருமிதத்தோடு அப்பச்சட்டியருக்குச் சோடியாக ஆசனத்தில் தாவிஏறி அப்பச்சட்டியரின் சவுக் கைப் பறித்துக் குதிரைகளுக்கு மாறிமாறிச் சாற்றினான்.

சற்று வேளைக்குப்பின் பெண்ணின் கூக்குரல் எதுவும் கேட்கவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவள் மயங்கி இருக்க வேண்டும், இல்லாவிட்டால் சோமரை அறிந்துவிட்டுச் சமாதானப்பட்டிருக்க வேண்டும்.

மூத்தநயினார் கோவிலடிக் குளத்தைத் தாண்டி ஆனைக்கோட்டைச் சந்திப்பைத் தாண்டி, காக்கைதீவுத் துறைமுகத்தைத்தாண்டி, நாவாந்துறையைத் தாண்டி வண்டிகள் சோமசுந்தரத்தார் வீட்டுப் படலைவரை வர ஆக மிஞ்சி மிஞ்சியும் மணி எட்டுக்குமேல் ஆகவில்லை.

சோமரைத்தவிர எல்லோருமே வண்டிகளைவிட்டு ஆரவாரப்பட்டனர்.

பண்டாரிக்குத்தான், நிலத்திலேயே இல்லைப்போன்ற உணர்வு!

விறாந்தையில் சிங்கப்பூர் மான்ரில் லைற்று எரிந்து கொண்டிருந்தது.

சிவக்கொழுந்தி விறாந்தையில் இல்லை.

அவள் குசினிக்குள் ஏதோ வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும்!

வண்டிக்குள் இருந்து சோமர் மயக்க நிலையில் இருந்த பெண்ணைத் தூக்கி வந்தார்.

வெளிச்சத்திற்கு வந்தார்.

அவள் முகத்தை அப்போதுதான் பார்த்தார்!

அவள் மூத்தவள் நல்லெண்ணெய்க் கறுப்பியில்லை. இளையவள் சிவப்பி. □

www.tamilarangam.net



# 11

பெண் தூக்கல் விவகாரம் நினைத்தது போலநடக்க வில்லை என்பது சோமருக்கும் பண்டாரிக்கும் மட்டும் தான் தெரியும்.

"ஐயா ரெண்டிலையும்தான் கண்ணைப் போட்டிருந் தார். ரெண்டத்த ஒண்டு ஆப்பிட்டுது" என்று பண்டாரி மனத்தினுள்ளே சொல்லிக் கொண்டான்.

சோமருக்கு மனதுக்குள் சற்று வெட்கமாகத்தான் இருந்தது. "அக்காள் என்று நினைச்சு உன்னைத் தூக்கிக் கொண்டு வந்திட்டன்!" என்று இளையவளிடம் எப்படிக் கூறுவது?

சிவக்கொழுந்திக்கும் கூட அவர் உள் இரகசியத்தைச் சொல்லவில்லை.

"சின்னையா இலந்தைப்பழப் புழுப்போலை ஒரு பொம்பிளையைக் கொண்டுவந்து விட்டார்" என்று மனத்திருப்தி அடைந்துவிட்டதுடன் நில்லாமல் அந்த இலந்தைப் பழப் புழு ஐயாவைக் கடித்துத் தொல்லை பண்ணாமல் இருக்க வேண்டும் என்பதற்காக ஐந்து பத்து நாளாகப் படாத பாடுபட்டு அவளைச் சுயநிலைக்குக் கொண்டு வந்து விட்டாள் சிவக்கொழுந்தி.

காசிப்பிள்ளைமுதலி இலேசுப் பட்டவரல்ல, கச்சேரிக் குள் தனக்கிருந்த செல்வாக்கு அத்தனையையும் பயன் படுத்திச் சோமர் வீட்டுக்குள் புகுந்து மகளைச் சிறை மீட்டு, சோமரையும் கைதியாக்கிவிட முயற்சிகள் எடுத் தார். ஆனால் பொலீஸ் நிலையத்தில் இருந்த பரந்த செல்வாக்கினால் முதலியின் முயற்சிகளைச் சோமர் முறிய டித்துவிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின்பு ஒரு நாள் மிகவும் கோலாகலமாக இராசரத்தி னத்தாரின் ஏக புதல்வன் சோமசுந்தரத்திற்கும் காசிப் பிள்ளை முதலியாரின் கனிஷ்ட புத்திரி ராசாத்தி அம்மா ளுக்கும் திருமணம் பகிரங்கமாக நடந்தேறிவிட்டது.

''என்னடாப்பா, மூத்தவளுக்குக் கலியாணம் பேசச் சொல்லி என்னட்டைச் சொல்லிப் போட்டு இளைய வளைக் கட்டியிருக்கிறாய் என்ன?'' என்று மணவறையில் வைத்து ஆலைக்கோட்டை மணியகாரன் மூங்கிலடி வைரமுத்தர் சோமரின் காதுக்குள் கேட்டார்.

''நான் என்ன காணும் உமக்குச் சொன்னனான்? நினைச்சதைக் செய்து காட்டிறன் எண்டுதானே சொன்ன னான்!'' என்று சோமரும் பதிலை வைரமுத்தரின் காதுக் குள் சொல்லிவிட்டார்.

கல்யாணம் செய்துகொண்டதிலிருந்து சோமர் முழு மனிதன் ஆகிவிட்டார். கடுக்கண்ட பருவத்திலிருந்து வளர்ந்து வந்த மிடுக்குகள் யாவும் முற்றிப் பழுத்துப் பக்குவம் அடைந்து விட்டன.

வெள்ளைத்தோல் துரைமாரை, அதிகாரிகளை, மனிதர்களை வீட்டுக்கு வலிந்து அழைத்துவந்து கேளிக்கை கள் விருந்துகள் நடத்துவது, தனக்கு இன்பமெனக் கண்டவற்றைப்பெற்று முடிப்பதற்காக எதையும் செய் வது, எதிரிகள் எனக் காண்பவர்களின் 'தலை' விதிகளை நிர்ணயிப்பது ஆகியவை உட்படச் சகலத்தையுமே செய்து முடிப்பதற்குப் பல தலை முறையினர் திரட்டி வைத்துச் சென்ற செல்வம் இருக்கிறது. போதாதென்று முக்கந்தர் முறை வடிவத்திலும், கலை வடிவத்திலும், வேறு பல வடி வங்களிலும், செல்வம் ஊற்றெடுக்கிறதே!

அன்றாட வாழ்வுக்காக அவரின் கையை எதிர்பார்ப் பவர்கள் அனேகர்.

www.tamilarangam.net



வயல், வாய்க்கால், குடியிருப்புக் காணிகள், தென்னந் தோட்டங்கள், நாடகக்கொட்டகைக் கணக்கு வழக்கு என்ற விதத்தில் குற்றேவல் புரிவோர் ஐம்பதுக்கும் அதிக மானோர். முக்கந்தர் வரிசையில், இருபதுக்கும் மேலா னோர். அன்றாடம் கை நீட்டி யாசகம் கேட்போர் சராசரி பத்துக்கு மேல்! அவரின் மாமிச உணர்வின் பெண்கள் வரிசையில் நிரந்தரமாக நான்கோ ஐந்தோ!

சோமசுந்தரத்தாருக்குச் சட்டப்படி மனைவியாகி விட்ட ராசாத்தியம்மாள் இத்தனைக்கும் மனைவியென்ற அந்தஸ்த்திலைப் பக்குவமாகப் பாதுகாத்தே வந்தாள்.

நாடகக் கொம்பனிகளை ஒழுங்கு செய்வதற்காகச் சோமசுந்தரத்தார் அடிக்கடி தென் இந்தியாவுக்குப் போய் வந்தார். ''அங்கேயும் அவருக்குக் குடும்பங்கள் உண்டு'' என்று மற்றவர்களால் பேசப்படும்போது மனைவியான ராசாத்தியம்மாள் ஆத்திரமோ அசூயையோ பட்ட தில்லை. ''இந்த மட்டிலாவது நின்றுவிட்டால் போதா தா?'' என்பதுதான் அவள் ஏக்கமெல்லாம்!

சோமசுந்தரத்தாரின் இந்த வளர்ச்சிக் கெல்லாம் பண்டாரியும் ஒட்டு!

எந்த வேளை அவர் ''பண்டாரி'' என்று குரல் வைக்கி றாரோ அந்த வேளையில் பண்டாரி ஆஜராக வேண்டும். குறைந்த பட்சம் ''ஓமோம் ஐயா'' என்று குரலாவது கொடுக்க வேண்டும் இல்லாவிட்டால் அவருக்குக் கெட்ட கோபம் வரும்!

கடைசியாக ஒரு தடவை அவர் பண்டாரியையும் இந்தியாவுக்கு அழைத்துச் செல்வதாக முடிவெடுத்தார்'

முடிவாகிய நாளிலிருந்து பண்டாரியின் முகத்தில் உடம்பில் புத்தம் புதிய சோபை வந்துவிட்டது.

அவன் மனைவி முத்தி அப்போதுதான் நான்காவது மகனைப் பிரசவித்திருந்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன்னை இந்தியாவுக்கு வரச் சொல்லிச் சோமர் படாதபாடு படுவதாகப் பண்டாரி பெருமையோடு அவளிடம் சொன்னபோது "இங்கினேக்கை தான் நடத்திற நாடகங்களுக்கு உன்னை விடுகாயாய்ப் பாவிச்சது போதாதெண்டு இந்தியாவிலையும் பாவிக்கப் போறாராக்கும்!" என்று முத்தி எதையும் எதிர்பார்க் காமலே பட்டென்று பேசி விட்டாள்.

பண்டாரிக்கு வந்ததே ஒரு வரத்து!

பெத்த வீடென்றும் பார்க்காமல், அவன் அவளை மோது மோதென்று மோதிவிட்டான்.

முத்தி மயங்கிப் போனாள்.

மயக்கம் தெளிய அதிக நேரம் ஆகவில்லை.

அவளுக்கு இது பழக்கம்!

பாதத்திற்கு ஒரு தடவையேனும் சோமசுந்தரத்தா ரைப்பற்றி ஏதாவது சொல்லி இப்படி உதை வாங்காவிட் டால் அவளுக்குத் திருப்திப்படுவதில்லை.

இன்று பச்சை உடம்புக்காரியாக இருந்ததால் சற்று மயக்கம் வந்து விட்டது! அவ்வளவுதான்!

"இந்தாடா பண்டாரி. இதைக் கொண்டு போய் உனக்குத்தேவையான உடுதுணியளையும் எடுத்துப் போட்டு மிச்சத்தை முத்தியெட்டைக் குடு!" என்று சொல்லிக் கொண்டே சோமசுந்தரத்தார் நூறுரூபாய் நோட்டு ஒன்றினைப் பண்டாரியிடம் கொடுத்தார்.

அந்த நூறு ரூபாய் நோட்டைப் பெற்றபோது பண்டாரியின் கை நடுங்கியது.

இந்த நாள் வரை நூறு ரூபாய் நோட்டினை அவன் கரம் தொட்டதில்லை. ஏதோ அப்போதைக்கப்போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறிய நோட்டுக்களாகவும் நாணயக் குத்திகளாகவுந்தான் அவன் கையில் பணம்பட்டதுண்டு. இப்போது அந்த நூறு ரூபாய் நோட்டு அவன் அங்கமெல்லாவற்றையும் புல்லரிக்க வைத்துவிட்டது.

சோமர் சாதாரண வேளையில் அணிந்து கொள்ளும் உடை விஷயங்கள் அவனுக்குத் தெரியும்.

ஆயிரத்து எழுநூற்று மூன்று வேட்டி -

ஆரணியன் சால்வை-

அணில் மார்க்கு பெனியன்!

இவைகளைத்தான் வாங்க வேண்டும் என்பது அவன் ஆசை!

நேராக முட்டாஸ் கடைச்சந்திச் செட்டியார் புடவைக் கடைக்கே ஓடினான் றிக்சோவுடன்!

அவன் சோமருடன் அந்தக் கடைக்குப் போயிருக் கிறான்.

''என்ன பண்டாரி, இண்டைக்கு ஐயாவுக்காக நீ வந்திட்டாய் போலைகிடக்கு? ஐயா என்ன வாங்கியரச் சொன்னவர்?'' இப்படிச் செட்டியார் கேட்டார்.

''ஐயாவுக்கில்லை எனக்குத்தான் எடுக்க வந்தனான்!''

இப்படிப் பண்டாரி மிடுக்காகப் பதில் சொன்னான்.

''ஒரு ஆயிரத்தெழுநூத்து மூண்டு வேட்டி, ஒரு ஆரணி யன் சால்வை, ஒரு அணில் மார்க் பெனியன்'' என்று பண்டாரி சொன்ன போது செட்டியாருக்கு ஆச்சரியமாக இருந்தது. சொல்லப்பட்ட பெரிய மனிதர்களைத் தவிர இவைகளை வேறு யாரும் எடுப்பதில்லை என்பது செட்டி யாருக்குத் தெரியும்.

''என்ன பண்டாரி உனக்கு?''

www.tamilarangam.net



செட்டியார் இழுத்தார்.

''எனக்குத்தான். ஏன் நான் உதுகளை உடுக்கப் படாதே? சோமர்விட்டாலும் நீர் விடீர்போல கிடக்கு!''

பண்டாரி குத்தலாகப் பேசினான்.

செட்டியார் இதற்குமேல் பேசவில்லை. அவைகளை எடுத்துப்போட்டார்.

பண்டாரி கணக்குக் கேட்டான்.

''பதினாறு றூபா நாலு பணம்'' என்று செட்டியார் கணக்குச் சொன்னார்.

பண்டாரி மடிக்குள் இருந்து நான்காக மடிக்கப்பட்ட நூறு ரூபாய் நோட்டை எடுத்து விரித்தான். அதன் மட மடென்ற ஓசை செட்டியாரைத் திடுக்குற வைத்தது.

பண்டாரியிடமிருந்து அவர் இந்த நோட்டை எதிர் பார்க்கவில்லை.

இப்படி நோட்டுகள் அவரிடம் வருடத்தில் இரண்டோ மூன்றோதான் வருவது வழக்கம்!

மனைவி முத்திக்கென ஒரு நார்ப்பட்டுச்சேலையும் எடுத்தான். அதன் கணக்கும் எட்டுருபாய் எட்டுப்பணம் ஆயிற்று.

செட்டியாருக்கு இன்று நல்ல வியாபாரம்!

றிக்சோ ஆசனத்தட்டில் உடுப்புப் பொதியைக் கொலுவிருத்திக் கொண்டு பண்டாரி புறப்பட்டு விட்டான்!

மனம் பொறுக்கமாட்டாமல் செட்டியார் கடைக்கு வெளியே வந்து, பண்டாரி போகும் எடுப்பைப் பார்த்து விட்டு உள்ளே சென்றார்.

''சனிக்கிழமை பின்னேர றெயிலுக்குப் பிரயாணம்'' என்று முடிவாயிற்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரண்டுநாட்களுக்கு முன்பாகவே பண்டாரி உறவினர்களுக்குப் பயணம் சொல்லத் தொடங்கிவிட்டான்.

சனிக்கிழமையும் வந்தது.

றெயில் சரியாக ஆறுமுப்பதுக்குத்தான் நிலையத்திலிருந்து புறப்படும்.

ஐந்தரைமணியிருக்கும்!

பண்டாரி றிக்சோவை இழுத்துக் கொண்டு வந்து சேர்ந்தான்.

வழக்கமில்லா வழக்கமாக அவன் றிக்சோ இழுத்து வரும் கொலுவை வீதியால் போவோர் வருவோர் ஆச்சரியத்துடன் திரும்பிப்பார்த்துக் கொண்டு சென்றனர்.

ஆயிரத்து எழுநூற்றுமூன்று வேட்டிக்கட்டு!

அணில்மார்க்கு பெனியன்!

ஆரணியன் சால்வைத் தலைப்பா!

சோமர் வெளியே வந்து பார்த்தார், திடுக்குற்றுப் போய் விட்டார்.

"இதென்னடா கோலம் பண்டாரி?"

கேலியாகக் கேட்டார் சோமர்.

பண்டாரிக்கு வெட்கம் வந்தது. பயம் வரவில்லை.

தான் எது செய்தாலும் சோமர் அதுக்கு ஒட்டு என்பது அவன் துணிவு!

அவன் பேசாமல் நின்றான்!

"சரிசரி, றிக்சோவை ஏன்ரா கொண்டு வந்தனி? உதையும் கொண்டேயடா இந்தியாவுக்குப் போறது?"

சோமர் மீண்டும் கேலியாகவே கேட்டார்.

www.tamilarangam.net



"ஸ்டேசனடிக்கு மூத்தமோனை வரச் சொல்லிப் போட்டு வந்தனான். அவனட்டை றிக்சோவைக் குடுத்து விடலாம்!"

பண்டாரி மொட்டையாகச் சொன்னான்.

சோமருக்கு விஷயம் விளங்கிவிட்டது.

அவர் உள்ளே சென்றார்.

சிறு பெட்டியுடன் வெளியே வந்தார்.

மனைவி ராசாத்தியம்மாள் வெளிப்படலை வரை வந்து வழி அனுப்பினாள்.

விறாந்தைப் படியில் சிவக்கொழுந்தி ஊத்தை உடுப்புடன் நின்று பார்த்துக் கொண்டிருக்க, சோமரின் மூத்த பெட்டை "ஐயா போட்டுவாருங்கோ!" என்று கைகாட்டிக்கொண்டிருந்தாள்.

சோமர் றிக்சோவில் ஏறிவிட்டார்.

ஆயிரத்து எழுநூற்றுமூன்று வேட்டி, ஆரணியன் சால்வை, அணில்மார்க்கு பெனியன் ஆகியவைகளினால் மூடப்பட்ட பண்டாரி றிக்சோவை இழுத்துச் சென்று கொண்டிருந்தான். □

## 12

யாழ்ப்பாணத்து நகர மத்தியிலிருந்து நாற்புறமும் ஐவைந்துமைல் இடப்பரப்புக்குள் இதுகாலவரை வேறெந்த நாடகங்களுமே வருவாயை நோக்கி மேடை ஏறாமல் தனது பரந்த செல்வாக்கினால் தடுத்து வந்த சோமசுந்தரத்தாருக்குச் சோதனைக்காலந் தொடங்கி விட்டது.

www.tamilarangam.net



செம்மாதெருக்குளத்தடியில் ஒன்று, நல்லூரில் ஒன்று, நாவலர் பாடசாலையடியில் ஒன்றாகப் பட்டண எல்லைக்குள் மூன்றும் பட்டணத்தை அடுத்துள்ள பகுதிகளில் ஒன்று ரெண்டுமாகப் போட்டிக் கொட்டகைகள் அதிகமாகிவிட்டன.

ஒரு மாதம் சோமசுந்தரத்தாருக்கு இந்தியாவிலிருந்து ஒரு நாடகக்குழு வந்துவிட்டால் அடுத்த அடுத்த மாதங்களில் மற்றவர்களின் கொட்டகைகளுக்குச் சிறப்பான வேறு வேறு குழுக்கள் வந்து சேர்ந்து விடுவது மல்லாமல், உள்ளூர் நாடகக்காரர்களும் இந்திய நாடகக்காரர்களோடு சேர்ந்து நடித்ததால் பொதுவான செல்வாக்கு மற்றக் கொட்டகைகாரர்களுக்கு ஏற்பட்டுவந்ததைத் தடுக்கச் சோமசுந்தரத்தாரால் முடியவில்லை.

மற்றகொட்டகைக்காரர்களுக்கு நாடகத்தைப் பற்றிய படிப்புவாசனை இருந்ததால் அப்போதைக்கப் போது புதிய புதிய நாடகங்களை எழுதி உள்ளூர் நாடக நடிகர்களையும் ஒரிரு வெளியூர் நடிகர்களையும் கலந்து பயிற்றுவித்து அதிக முற்பண விரயமின்றியே நாடகங்களை மேடை ஏற்றி விடுவார்கள்.

சோமசுந்தரத்தாருக்கோ ஒரு மண்ணும் தெரியாது. இது இரண்டு தலைமுறைத் தொழில்; அவ்வளவுதான்!

''சோமருக்கு மங்குசனி'' என்ற பேச்சு ஊரெல்லாம் அடிபடத் தொடங்கிவிட்டது. இது போதாதென்று பொதுவில் நாடகக் கொட்டகைக்காரர்களுக்கெல்லாம் மங்குசனி பிடித்ததுபோல வாய்பேசாத சினிமாப்படமும் வேறு வந்து தொலைத்துவிட்டது. இது மட்டும் இல்லாமல் வாய்பேசும் படமே வந்துவிட்டது.

வாரத்திற்கு இரு தடவைகள் என்றிருந்த நாடகங்கள், வாரம் ஒன்றாகி, இருவாரம் ஒன்றாகி, மாதம் ஒன்றாகி, முடிவில் அதுவும் நடத்துவது கஷ்டமாகிவிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சனங்கள் சினிமாக்கொட்டகைகளை நோக்கிப் படை எடுத்தனர்.

நாடகக் கொட்டகைகளைத் தேடுவார் இல்லை.

ஆரம்பத்தில் புதிதாகத் தோன்றிய நாடகக்கொட்டகைகளுக்கு எதிராகவும், பிற்பகுதியில் சினிமாக் கொட்டகைக்கெதிராகவும் தனது அடியார் கூட்டத்தை ஏவிச் செய்யாத வேலையெல்லாம் செய்து பார்த்த சோமசுந்தரத்தார் கடைசியில் ஓய்ந்தே போனார்.

பண்டாரிக்குத் தன்னாலேயே மவிசு குறைந்து விட்டது. ''சோமரைத்தவிர வேறுயாரையும் பண்டாரியின் றிக்சோ ஏற்றாது'' என்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட தனக்கு இப்போது வயிற்றுக்காக ''யாரையேனும் ஏற்றலாம்'' என்ற நிலை வந்துவிட்டதாயினும், எடுத்துக் கொண்ட பிரமாணத்தைக் கடைசி வரை காப்பாற்றிவிடவே அவன் முயன்று வந்தான்.

மூத்தவன் ஒரு லோக்கடாக்காரரை வைத்து யாழ்ப்பாண ஸ்ரேசன் சவாரியைப் பிடித்துக்கொண்டு உழைக்கத் தொடங்கி விட்டான்.

மகளைக்கட்டிய மருமகன் கட்டிட வேலைக்காரனாக இருந்ததால் சுதந்தரமாகத் தொழில் செய்யத் தொடங்கி விட்டான்.

இரண்டாவது மகன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியடியில் அப்போதைக்கப்போது ஈரொட்டு பழக்கடை போட்டுக் கணிசமாக உழைக்கிறான்.

கடைக்குட்டியன் சரியான வாயாடி, எப்படியோ நாளொன்றுக்கு வீட்டுத் தேவைக்கு மேலாகச் சம்பாதித்து விடுவான்.

இந்நிலையில் பண்டாரி உழைத்துத்தான் குடும்பத்தைக் கொண்டுபோகவேண்டும் என்ற எந்த நிர்ப்பந்தமும் இல்லை.

www.tamilarangam.net



சோமசுந்தரத்தாரும் இரண்டு பெட்டைகளுக்கும் இரண்டு பெடியன்களுக்கும் தந்தையாகி, பேரன் பேத்தி களையும் கண்டுவிட்டார். பேரன் பேத்திகளைக் கண்டு விட்ட சிந்தனை ஏதும் இல்லாமல்தான் சோமசுந்தரத்தார் நடைமுறையை அமைத்துக்கொள்ள விரும்பினார். ஆனால் உடம்பு இடந்தரவில்லை.

வாலைவயதின் எண்ணங்கள் சில வேளைகளில் அவரைப் பிடித்து உலைக்கும், கடைசியில் ''காலைக் காலையாவது ஆட்டினால் என்ன'' என்று சிந்திப்பது போன்று, ''புதிதாக ஒரு கொட்டகைகட்டி, நவீனமான நாடகங்களைப் போட்டால்'' என்று ஒரு எண்ணம் ஒரு தடவை தலை எடுத்தபோது முற்றவெளியில் திறந்தவெளி அரங்கு ஒன்றை அமைத்து கவுன்சில் சிலவில் இலவசமாகப் பறுவத்துக்குப் பறுவமும், சில வேளைகளில் இடை இடையேயும் நாடகங்களைப் போடத் தொடங்கிவிட்டார்கள்.

சோமசுந்தரத்தாரின் நவீன எண்ணம் இதனால் முளையிலேயே கருகவேண்டியதாயிற்று.

கண்களை மூடிக்கொண்டு மேலும் பத்தாண்டுகாலம் ஓடித்தீர்ந்து விட்டது.

இந்தப் பத்தாண்டு காலத்தில் நகரத்தில் எத்தனையோ மாற்றங்கள்! நகரத்தில் மட்டுமல்ல கிராமங்களில் கூடத் தான்!

சோமர் சந்ததியினரின் நாடகக்கொட்டகை இருந்த இடமே சுவடற்றுப் போய்விட்டது.

சோமருக்கும் வயது எழுபத்தைந்துக்கு மேல் ஆகிவிட் டது.

சோமசுந்தரத்தார் வீட்டோடும் சாய்மனைக் கட்டி லோடுந்தான் கிடந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் குறைவின்றிப் பார்த்தனர். பெருமளவு இந்த வயதில் பிரத்தியேகமாக வேறென்ன சிலவு வரப்போகிறது!

பண்டாரிக்கும் அப்படித்தான்.

பட்டணப்பிரதேசம் மாறி கிராமங்களும் மாற்றமடையத் தொடங்கியபோது ஆங்காங்கே சாதிமுறைக்கு எதிரான இயக்கங்கள், இழப்புக்கள், வெற்றிகள் என்ற விதத்தில் பலதும் நடந்து கொண்டிருந்தன.

இவைகளைப்பற்றி எல்லாம் கவலைப்படாத மனிதனாக, வீட்டின் கோடிப்புறத்துமாலுக்குள் தள்ளப்பட்டுக் கிடக்கும் றிக்சோவைப் பார்த்துப்பார்த்துப் பெருமூச்சு விடுவதை மட்டுமே ஒரு தொழிலாகக் கொண்டு ஏங்கிப் போய் கிடந்தான் பண்டாரி.

சோமசுந்தரத்தாரும் அவர் ஆடிய ஆட்டங்களும், அதில் தான் எடுத்துக்கொண்ட பங்குகளும், அவர் தனது றிக்சோவில் இராசகொலுவிருக்கும் காட்சிகளும் அவன் கண்களுக்கு முன்னால் அணிவகுத்து வராத நாட்களே இல்லை.

வீட்டோடும் கட்டிலோடும் ஒட்டிக் கிடந்த சோமசுந்தரத்தாருக்கு ஒரு பொற்காலம் பிறந்தது.

பாராளுமன்றத் தேர்தலுக்கு நின்ற ஒரு புத்திசாலி ஒரு பொதுக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கச் சோமசுந்தரத்தாரைப் போட்டுவிட்டான். சோமசுந்தரத்தாருக்கு வந்ததே மவிசு! தலைமை உரையில் அவர் பேசினாரே ஒரு பேச்சு! மனிதனுக்கு எங்கிருந்துதான் சிந்தனைகள் வந்தனவோ?

அன்றையிலிருந்து சோமசுந்தரத்தார் ஒரு நவீன சோசலிஸ்ட் ஆகிவிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உலக அனுபவங்கள் நிறைந்த அவரின் சொற் பெருக்குகள் எல்லோருக்கும் பிடித்திருந்தன.

அந்தத் தேர்தல் காலத்தில் தொடர்ந்து அவர் பல கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினார். கௌரவப் பேச்சாளராகவும் பேசினார்.

இந்தத் தள்ளாத வயசுக் கிழவனை வைத்து வாக்குச் சேகரிக்கும் அபேட்சகரின் முயற்சி நீண்டுகொண்டே போயிற்று. கேலியும் கிண்டலுமாக சோமசுந்தரத்தார் மற்றைய அபேட்சகர்களைத் தாக்கும் பாணி அபாரம்! அதற்காகவே சனம் திரண்டது.

சோமசுந்தரத்தார் பேசிய எந்தக் கூட்டத்திலும் பண்டாரியும் கலக்கத் தவறியதில்லை! கலந்ததாவது? கூட்டத்தின் முன் வரிசையில் இருந்து அவரின் ஒவ்வொரு நகைச்சுவைக்கும் வெடித்துச் சிரித்து, கைகொட்டி ஆரவாரித்து அமர்க்களமே செய்து கொண்டிருப்பான்!

வாக்களிப்பு முடிந்தது. சோமசுந்தரத்தாரின் அபேட்சகர் தோற்றுப்போனார். "சோமசுந்தரத்தார் இல்லாட்டி உவர் கட்டுக்காசும் எடுத்திரார்!" என்ற பேச்சு தேர்தல் முடிந்ததும் அடிபட்டது சோமசுந்தரத்தார் காதுவரை விழவே செய்தது.

சோமசுந்தரத்தாருக்குப் புதிய உற்சாகந்தான் பிறந்தது.

அபேட்சகர் தோற்றுப்போனாலும் அவர் தோற்சுவில்லை.

தேர்தலைத் தொடர்ந்து ஆங்காங்கே நடந்த பல வேறு பட்ட கூட்டங்களில் பேசுவதற்காகச் சோமசுந்தரத்தார் அழைக்கப்பட்டார்.

அவருக்கென்று தனியாக ஒரு கட்சி இருக்கவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்கு போனாலும் சோசலிச வாழ்க்கையைப் பற்றித் தான் பேசுவார்.

இப்போது அவர் கட்சிப் பற்றற்ற ஜனநாயக சோசலிசவாதி! அதிலும் காந்திய சோசலிசம் என்றாலே அவருக்கு உயிர்.

அவர் புகழ் நாடெங்கும் பரவிவிட்டது!

பத்திரிகைகள் பல அவரது பேட்டிகளை போட்டி போட்டுக்கொண்டு பிரசுரித்தன. வெளியூர்களில் இருந்து வருபவர்கள் மந்திரிமார்களாயினும், அரசியல் கட்சிப் பிரமுகர்களாயினும் சோமசுந்தரத்தாரைச் தரிசிக்காமல் போனதில்லை. □

## 13

புதிய உத்வேகத்தினால் உடலில் எழுந்த பரபரப்பை அவரின் வயோதிபத்தால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

இலேசான காய்ச்சல் இருமலுடன் தோன்றிய நோய் அவரைப் படுக்கையில் வீழ்த்திவிட்டது.

இன்று குணமாகும் நாளை குணமாகும் என்றுதான் அவரின் குடும்பத்தினர் எதிர்பார்த்தனர். ஆனால் அப்படி நடக்கவில்லை.

முதலில் உப்புமாவடி டாக்குத்தர் பார்த்தார். முடிய வில்லை.

அடுத்து இன்னொரு பெரிய டாக்குத்தர் பார்த்தார் முடியவில்லை.

தரும ஆசுட்பத்திரி என்றும் பார்க்காமல் அதில் இருந்த சிங்கள டாக்குத்தர் ஒருவரிடம் தனியாகக் காட்டி

www.tamilarangam.net



னார். அவராலும் முடியவில்லை. ஆங்கில வைத்தியர்கள் கைவிட்டுவிட ''தமிழ்வைத்தியம் செய்தால் சரிவரும்'' என்று துறவி ஒருவர் சொல்லவே சுதுமலைப் பரியாரி யாரிடமும் காட்டியாயிற்று. இதற்கும் நோய் குணமாக வில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சொல்லப்பட்ட ஆங்கில, தமிழ்வைத்தியர்கள் எல்லாரும் பார்த்து முடிந் தது. கொழும்பிலிருந்து விசேஷமாகத் தருவிக்கப் பட்ட வைத்தியர்களும் பார்த்தாய்விட்டது. நோய் ''சோமரை விட்டுப் போகமாட்டேன்'' என்று முடிவாகவே சொல்லி விட்டது.

இடையிலே இடைத்தேர்தலும் ஒன்று வந்தது.

அவரின் அரசியல் நண்பர்கள் சிலர் அவரை வெளி நாட்டுக்கு அனுப்பிவிட ஆவன செய்தனர். ஆனாலும் விமானத்தில் வெளிநாடு சென்றுவர உடல்நிலைக்குத் தெம்பு இருக்கவில்லை; விட்டுவிட்டனர். ஆனால் நோமி னேசன் அன்று அவரை மேடையில் ஏற்றியே விட்டனர். தன்னை நோக்கிச் சாவு விரைத்து வருவதாகச் சோமசுந்த ரத்தார் உணர்ந்து கொண்டார்.

விடிந்ததும் விடியாததுமாக ஒருநாள் சோமசுந்தரத் தாரின் பேரப்பெடியன் பண்டாரி வீட்டுத் தகரப் படலை யைத் தட்டிக்கொண்டிருந்தான்.

வெள்ளாப்போடு எழுந்து வீட்டுக்குடிசைக்கு முன் திண்ணையிலே இருந்து வெற்றிலை துவைத்துக் கொண் டிருந்த பண்டாரி போர்த்து மூடிக்கொண்டு எழுந்து வந்து படலைக்கட்டை அவிழ்த்துத் திறந்தபோது வெளியே நின்று படலையைத் தட்டிய இளைஞனை அவனுக்கு அடையாளந் தெரியவில்லை.

வந்தவனோ சோமசுந்தரத்தார் உடனடியாகப் பண்டாரியை வரச்சொன்ன தகவலைச் சொல்லிவிட்டு, சயிக்கிளில் பறந்துவிட்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போர்வையை நீக்கி உடலை நிமிர்த்திப் புதிய உற்சாகத்தோடு பண்டாரி சோமசுந்தரத்தார் வீட்டுக்குச் சென்றான்.

சோமசுந்தரத்தாரின் இருமலும் இழுப்பும் வெளிக்கேற்றுவரை கேட்டது.

வெளிவிறாந்தை ஓரம்வரை வந்த பண்டாரி படியோரம் நின்று விக்கிக்கொண்டிருந்தான். அவனுக்கு அடக்க முடியாத துயரம் வந்து விட்டது.

சோமசுந்தரத்தாரைச் சூழ்ந்துகொண்டு கிழடும் கட்டைகளுமாகப் பல பெண்கள் இருந்தனர்.

'பண்டாரிக்கு வெத்திலை குடுங்கோ!' என்று சோமசுந்தரத்தாரின் மனைவி ராசாத்தி அம்மாளின் குரல் கேட்டது.

வேறொரு கிழவி வெற்றிலைத் தாம்பாளத்தை எடுத்து வந்து, அதிலிருந்த வெற்றிலை ஒன்றினையும், அது நிறைந்த பாக்குச்சீவலையும் எடுத்துச் சுருட்டி பண்டாரியின் கையில் வைத்தாள். எங்கே வெற்றிலைத் தாம்பாளத்தில் பண்டாரியின் கை பட்டுவிடுமோ என்ற பயம் அவளுக்கு!

''மாமா கடைசியிலை பண்டாரியைப் பார்க்கத்தான் ஆசைப் பட்டார்! மாமா மாமா! இஞ்சை பண்டாரியெல்லே வந்திருக்கிறான். கண்ணை முளிச்சுப்பாருங்கோ மாமா'' என்று சோமசுந்தரத்தாரின் மூத்த மருமகள் கூறினாள்.

சோமசுந்தரத்தார் தலையைச் சற்று உயர்த்திப் பண்டாரி பக்கமாகச் சரிந்து, மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கிக் கொண்டே மேலிருந்து கீழ்வரை பண்டாரியைக் கண்களால் அளந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பண்டாரியும் விம்மலுடன் சோமசுந்தரத்தாரைப் படுக்கையில் வைத்தே கண்களால் அளவெடுத்தான்.

சோமசுந்தரத்தாரின் கண்கள் பஞ்சடைந்து கிடந்தன. தாடி நீண்டு வளர்ந்து வெண் துகிலாகிக் கிடந்தது.

மரணக்குறி முகத்தில் ஒட்டிக் கிடந்தது.

திண்ணை ஒட்டுக்கு வெளியே நின்றிருந்த பண்டாரி யைச் சோமசுந்தரத்தார் கையசைத்துச் சமீபத்துக்கு அழைத்தார்.

கூனிக்குறுகி விம்மிக்கொண்டே பண்டாரி அவருக்குப் பக்கத்தே போனான்.

''சுகமாயிருக்கிறியே பண்டாரி?'' என்று மெதுவாகக் குசலம் விசாரித்தார் சோமசுந்தரத்தார்.

பண்டாரி மௌனமாகவே 'ஓம்' என்ற பாவனையில் தலையை அசைத்தான்.

சோமசுந்தரத்தார் சற்று வேளை கண்களை மூடிக் கொண்டார்.

நோய் கடுமையாகிய நாளிலிருந்து அவர் இப்படி ஒரு நாளைக்கு நான்கைந்து தடவைகள் வேண்டுமென்றே கண்களை மூடிக்கொண்டு பின்பு திறக்கும்போது யாரும் எதிர்பார்க்காத புதிதான ஏதாவதைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார். அதிலிருந்து வேண்டுமென்றே கண்களை மூடி, நெற்றிச் சுருக்கத்தைப் புடைப்பாராயின் ஏதோ அதிகமாகச் சிந்திக்கிறார் என்றுதான் கொள்ள வேண்டும்!

பண்டாரி நட்ட கட்டையாக நின்றான்.

சோமசுந்தரத்தார் கண்களைத் திறந்தார்.

www.tamilarangam.net



''பண்டாரி, இண்டைக்கொருக்கா நீ என்னை உன்ரை றிக்சோவிலை வைச்சு இழுக்க வேணும்; எனக்கு ஆசையாக் கிடக்கு! போய் றிக்சோவைக் கொண்டோடியா!''

இதுவரை அனுங்கி முனகிக் கொண்டிருந்தவருக்கு எங்கிருந்துதான் இந்த அதிகாரத்தொனி வந்ததோ?

சற்று வேலைக்குப்பின் ''போ போ'' என்ற பாவனையில் கையை அசைத்துக் காட்டினார்.

''ஓம் இப்ப கொண்டு வாறன்!'' என்று மட்டும்தான் பண்டாரி பேசினான்; திரும்பிவிட்டான்.

ஒதுக்குப்புற மாலுக்குள் நின்ற றிக்சோவைப் பண்டாரி வெளியே எடுத்தபோது அதன் சில்லுச் சிலைக் கம்புகள் சில இணைப்பிலிருந்து விடுபடத் தொடங்கின.

நீண்டகாலமாக இருப்பில் இருந்ததால் அவை உக்கி நெகிழ்ந்திருக்க வேண்டும்!

சில்லுகள் எண்கோணமாக நின்றன.

இழுக்க முடியாது போல இருந்தது.

பண்டாரிக்கு மனது திடுக்குற்றுவிட்டது.

''ஏனெணை அப்பா உதை எடுக்கிறாய்?''

இப்படிப் பண்டாரியின் பேரப்பெடியன் ஒருவன் கேட்டான்.

''அது ஒரு தேவைக்குத் தானடா எடுக்கிறன்!''

பண்டாரி பல்லுப்போன பொக்குவாய் குரலில் பேரனின் கேள்விக்குப் பதில் சொன்னான்.

ஒரு மாதிரி சில்லுகள் குடக்கடிக்க, றிக்சோவை இழுத்து முற்றத்தில் விட்டுவிட்ட பண்டாரி அதன் அங்கமெல்லாவற்றையும் நிதானமாகச் சுற்றிவந்துவந்து, பிடித்துப் பிடித்து, ஆட்டிஆட்டிப் பரிசோதித்துப் பார்த்தான். சில்லுகளைத் தவிர மற்றப்படி பரவாயில்லை!

www.tamilarangam.net



சுருங்கிக்கிடந்த கூடாரத்தை இழுத்துப் பரப்பினான். அதில் பல இடங்களைப் பூச்சி அரித்து ஓட்டைகளை உண்டாக்கி இருந்தன.

தோளில் சவுக்கத்தை எடுத்துத் தூசுதட்டி எல்லாவற்றையும் சுத்தப்செய்து வீட்டுக் கிணற்றடிக்குச் சென்றவன் பேரப்பிள்ளைகளின் உதவியுடன் இரண்டுவாளி தண்ணீரை இழுத்துவந்து றிக்சோவைக் கழுவத்தொடங்கி விட்டான்.

பேரக்குழந்தைகள் யாவும் அவனையும், றிக்சோவையும் சுற்றிச் சுற்றி நின்றன.

அப்போதுதான் வெளியே புறப்படத் தயாரான இளையவன் ''ஏனப்பு இப்ப இதெல்லாஞ் செய்கிறாய்?'' என்று கேட்டான்.

பண்டாரி எதுவும் பேசவில்லை.

தான் றிக்சோ இழுக்க இளையவன் சம்மதிக்க மாட்டான் என்று அவனுக்குத் தெரியும்.

இளையவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அதைப்பற்றி மேலும் எதுவும் விசாரிக்காமல் அவன் வெளியே போய் விட்டான்.

''ஏனெணை அப்பா, கழுவிறாய்?''

இப்படிப் பேரப்பெட்டை கேட்டாள்.

பண்டாரி இதற்கும் ஒன்றும் பேசவில்லை.

தகப்பனின் போக்கைச் சற்று அவதானித்து விட்டு ஏதோ நடக்கப் போகிறது என்ற நினைப்பில் ''என்னெத்துக்கெணை உந்த அவசரமில்லாத வேலையை மினக்கெட்டுச் செய்கிறாய்?'' என்று சற்று அச்சுறுத்தல் தொனியில் கேட்டாள் மூத்தமகள்.

www.tamilarangam.net



''தேவைக்குத்தான் செய்யிறன். நீ அங்காலை போ!'' என்று பண்டாரி பதில் சொல்லிவிட்டான்.

மருமகன் சயிக்கிளில் கல்லரியும் அச்சொன்றினையுங் கட்டிக்கொண்டு வந்து சேர்ந்தான். மாமன் றிக்சோவைக் கழுவிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு ''உதென்னத் துக்காம் கொப்பர் றிக்சோவைக் கழுவுறார்?'' என்று மனைவியைக் கேட்டான்.

''ஏனென்டு மனிசன் சொல்லமாட்டடன் என்னுது'' என்று அலுத்துக்கொண்டே அவன் மனைவி பதில் சொன்னாள்.

தன்னோடு மருமகன் நல்ல அன்பென்றும், தான் சொல்பவைகளுக்கு எப்போதும் மதிப்பளிப்பவன் என்றும் பண்டாரிக்கு நன்கு தெரியும். சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு ''எங்கடை கொட்டடிச் சோமர் தன்னை ஒருக்கா நான் றிக்சோவிலை வைச்சு இழுக்க வேணுமெண்டு ஆசைப்படுறார் தம்பி, அதுதான்...''

பண்டாரி இழுத்தபடியே பேச்சை நிறுத்திக் கொண்டான்.

''இதென்ன பரிசுகேடு! உதை விட்டு இப்ப எத்தினை வருசமாச்சு! உதை இப்ப இவர் இழுத்தா நாங்கள் மற்றவையின்ரை முகத்திலை முளிக்கிறேல்லையே!'' என்று மாமன் முகத்தைப் பார்க்க முடியாமல் மனைவியின் முகத்தைப் பார்த்தே கூறினான் மருமகன்.

''நீங்கள் ஆர் மறிச்சாலும் சரி, என்னைக் கொண்டாலும் சரி, நான் இண்டைக்கு அவரை வைச்சு இழுத்துப் போட்டுத்தான் மற்றவேலை பாப்பன்.''

இப்படி இரைந்துகொண்டே பண்டாரி படலையைத் திறந்து கொண்டு வெளியே போய்விட்டான்.

டே—12

www.tamilarangam.net



பண்டாரி வீட்டுக்கு வர நேரம் மத்தியானத்திற்கு மேலாகிவிட்டது.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது.

பண்டாரி தனியாக வரவில்லை. யாரோ ஒரு கொல் வேலை செய்பவனுடன் வந்தான்.

ஒரு மணி நேரத்துக்கிடையில் சில்லுச் சிலைக் கம்புகள் சீர் செய்யப்பட்டு விட்டன.

தகடுகள் பொருத்த வேண்டிய இடங்களுக்குத் தகடுகள் பொருத்தி, ஆணிகள் அடிக்க வேண்டிய இடங்களுக்கு ஆணிகள் வைத்து அந்த றிக்சோவை உருப்படியாக்கினான். கூலிக்காக, தனது வல்லுவத்தை எடுத்து, சுற்றுக் கயிறு அவிழ்த்துப் பொக்கணைக்குள் கையைவைத்துப் பணத்தை எண்ணிக் கொடுத்துக், கூடவந்தவனை வழியனுப்பி வைத்து விட்டுத்தான் பண்டாரி திண்ணையில் அமர்ந்து சற்று ஓய்வெடுத்துக் கொண்டான்.

''அம்மான்! காலமை துவங்கி ஒண்டும் தின்னேயில்லை. புளிக் கஞ்சி காச்சிக்கிடக்கு; எப்பன் குடியுங்கோவன்'' என்று மூத்தவனின் மனைவி கேட்டதற்கு, ''எனக்கு பசிக்கேல்லை; கடையிலை திண்டிட்டுத்தான் வாறன்!'' என்று பண்டாரி பதில் சொன்னான்.

சற்று வேளை ஓய்வுக்குப்பின் எழுந்த பண்டாரி றிக்சோ அண்டை போய், அதை ஒரு சுற்றுப் பார்த்துத் திருப்தி கண்டு, ஆசனத் தட்டு மெத்தைக்கு மேல் நேற்றுத் தான் கழுவிக் காயப் போட்டிருந்த வெள்ளைத் துவாலையை எடுத்து மடித்து உயர்த்திப் போட்டு கிணற்றடிக்குச் சென்று மேல் கால் கழுவி போக்குவரத்துக்குக் கட்டுவதற்கான அந்த ஆயிரத்து எழுநூற்று மூன்று வேட்டியை எடுத்து மடித்து உடுத்தி, சண்டிக் கட்டை மடித்து முடிச்சுப் போட்டுக் கொண்டு சவுக்கத் துண்டினால் குஞ்சம் விட்ட தலைப்பாகைக் கட்டி... றிக்சோவைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தூக்கி இடக்கரத்தைப் பின் தள்ளி இடப்பக்க ஏர்காலை இறுகப் பிடித்து வலக்கரத்தை ஏர்காலின் விலாப்புற நடுப்பகுதியில் பலமாக ஊன்றி—

—பண்டாரி றிக்சோவுடன் புறப்பட்டு விட்டான்.

இப்போது அவனின் கூனல் நிமிர்வு கண்டு விட்டது.

## 14

பண்டாரி றிக்சோவுடன் சோமசுந்தரத்தார் வீட்டு வாயிலை அடைந்த போது சோமசுந்தரத்தார் தயார் நிலையில் இருந்தார்.

சூரியன் கண்களுக்குத் தெரியவில்லை.

வீட்டுச் சுவர்க் கடிகாரத்தில் மணி சரியாக ஐந்து!

மாமரத்து வேரில் வைத்து ராசாத்தி அம்மான் பண்டாரிக்குப் பால்கலந்த தடித்த கோப்பியாகக் கொடுத்தாள்.

அதே பித்தளை மூக்குப்பேணி!

எப்படியோ அது அவனுக்காகக் காத்திருந்திருக்கிறது!

நம்பமுடியாத அளவுக்குச் சில காரியங்கள் நடந்து முடிந்து விடுகின்றன. அதில் இந்த மூக்குப் பேணி விவகாரமும் ஒன்று!

அந்த மூக்குப் பேணிக்கு இப்போது வயது அறுபதுக்கு மேலாக இருக்கும். இத்தனை ஆண்டுகாலமும், அது அவனுக்காகவே தொடர்ச்சியாகக் காக்க வைக்கப்பட்டிருப்பது பெரும் சாதனைதானே! ஐயாவை நான்கைந்து பேர் நகர்த்தி வந்து றிக்சோவில் ஏறவைத்து விட்டனர்.

www.tamilarangam.net



பேரப்பையன்கள் இரண்டையும் பார்த்து, "தம்பி யவை நீங்களும் ஐயாவோடை துணைக்குப் போட்டு வாருங்கோடா!" என்று இராசாத்தி அம்மாள் கூறினாள். சோமர் கையசைத்து அதைத்தடுத்து விட்டார்.

"பண்டாரி கவனமடா! போட்டுக் கீட்டடிச்சுப் போடாதை!" என்று மூத்தமருமகள் குரல் கொடுத்தாள்!

"போட்டடிக்கிறதோ? இந்தப் பண்டாரியோ? அதிலை வேலையில்லை நாச்சியார்!"

பண்டாரி இறுமாப்போடு நெஞ்சை நிமிர்த்திச் சொல்லி விட்டான். இனி வழக்கம் போலச் சொன்ன சொல்லை அவன் காப்பாற்ற வேண்டும்!

வெளிக்கேற்றுவரை சுற்றம் சூழ சோமசுந்தரத்தாரின் றிக்சோ பவனி தொடங்கிவிட்டது.

வெள்ளை வெளேரென்ற குழல் பீசுவேட்டி!

வட்டக்கழுத்தில் றோஸ்கோல்ட் பொத்தான் இணைக்கப்பட்ட துகில். வெள்ளை நீள நஷனல், சருகைக் கோடு பதித்த பரம்பரை வெள்ளைத் தலைப்பாகை!

பஞ்சுபோன்ற நீள் வெண்தாடி!

ஏறக்குறைய எல்லாமே சேர்ந்து வெண்தேவதைக் கோலம், இராசகோலம்.

நேராக ஐக்கிய இலாபநிதிச் சந்திவரை, அதிலிருந்து ஓட்டு மடச்சந்திவரை, அதிலிருந்து தட்டாதெருச் சந்திவரை, அதிலிருந்து கந்தர்மடம் சந்திவரை, அதிலிருந்து ஆரிய குளம் சந்திவரை, அதிலிருந்து பஸ்நிலையம் வரை வந்து திரும்பி மணிக்கூட்டடிவரை வந்தபோதுதான் அவரால் ஆதரிக்கப்பட்ட அபேட்சகரின் கடைசிக் கூட்டம் முடிந்த நேரம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வளவு நேரத்திற்கும் ஒவ்வொரு சந்திப்புக்காக றிக்சோ ஏர்க்காலைப் பிடித்தபடியே சற்றுச் சற்று வேளை ஓய்வெடுத்து ஓய்வெடுத்து மூச்சுவிட்டுக்கொண்டு தான் பண்டாரி வந்திருக்கிறான்! இந்த வயதிலும் அவனின் பிடிவாதம்தான் அவனை இத்தனை தூரம் றிக்சோவை இழுக்க வைத்திருக்கிறது.

திறந்த வெளிச்சந்திப்புவரை வந்தாயிற்று.

இன்னும் இருப்பதோ சிறிது தூரந்தான்!

றீகல் தியேட்டர் தாண்டி, அரையுங்குறையுமாகக் கட்டப்பட்டிருக்கும் புதிய தபால் கந்தோரும் தாண்டி, சத்திரத்துச் சந்திப்புக்கு வந்து, மேற்கால் திரும்பி, தகரக்கொட்டகை இருந்த ஒழுங்கையையும் தாண்டிவந்து விட்டால் லேடன் கட்டிடச் சந்திப்பு வந்துவிடும். அப்புறம் என்ன வீடுதான்!

றீகல் தியேட்டர் வந்தது.

அதன் வெளி விளம்பரப் பலகையில் போடப்பட்டிருந்த ''சம்பூரணராமாயணம்'' என்ற பென்னம் பெரிய எழுத்துக்களும் இராவணனின் பத்துத்தலைப் படமும் சோமசுந்தரத்தாரைப் பார்த்துச் சிரித்திருக்க வேண்டும்?

சோமசுந்தரத்தாரின் மனத்திரையில் பழைய நாடகக் கொட்டகை நினைவுகள் சினிமாக்காட்சிகள் போலப் பளிச்சிட்டன.

ஒரு கணப்பொழுதுதான்!

''பண்டாரி நிப்பாட்டடா!'' என்றார்.

பண்டாரி றிக்சோவை நிற்பாட்டுவதற்கிடையில்...

சோமசுந்தரத்தாருக்கு மயக்கங்கண்டு றிக்சோவை விட்டு வீழ்ந்துவிட்டார்.

பண்டாரி திகைத்துப் போனான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டத்திலிருந்து சென்றவர்கள் ஓடோடி வந்து உதவினர்.

சோமசுந்தரத்தாரை எடுக்கி எடுத்து றிக்சோவில் ஏற்றிவிட்டனர்.

சோமசுந்தரத்தாருக்கு நினைவு திரும்பிவிட்டது.

கீழே விழுந்த தலைப்பாகையை ஒருவன் எடுத்துப் பக்குவமாக அவரின் தலை மீது ஏற்றினான்.

சோமசுந்தரத்தார் தனது நிலையை உணர்ந்து றிக்சோவின் பக்கக் கம்பிகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

றிக்சோ மறுபடியும் பயணத்தைத் தொடங்கி விட்டது.

பண்டாரிக்குப் பயம் வந்து விட்டது.

திட்டமிட்டபடி சந்திப்புக்களில் றிக்சோ நிற்கவு மில்லை; மற்றச் சந்திப்புக்களில் கூடியது போல் ஜனக் கூட்டம் கூடவுமில்லை.

பண்டாரி ஓடத்தொடங்கிவிட்டான்.

ஒரே மூச்சில் அவன் சோமர் வீட்டுக் கேற்றடிக்கு வந்து விட்டான்.

கேற்றடியில் சோமரின் வரவைக் காத்துப் பலர் கூடி நின்றனர்.

அவர்கள் எல்லோரையும் ஒருங்கே ஒரே பார்வையில் பார்த்துவிட்ட பெரு மகிழ்ச்சியால் சோமர் பூரித்துப் போனர்ர்.

பக்குவமாக அவரை எடுக்கிப் புதுப் படுக்கை வரை கொண்டு சென்று மெதுவாக வளர்த்திவிட்டனர்.

அவ்வளவுதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மறுபடியும் அவருக்கு மயக்கம்!

அந்த மயக்கம் அதிக நேரம் நீடிக்கவில்லை.

கண்களைப் புரட்டி—

வாயை அகலத் திறந்து—

சற்று வேளைதான் மரண அவஸ்தைதப்பட்டார்.

எல்லாம் முடிந்துவிட்டது.

கூக்குரல்கள் வானைப் பிளந்தன; அவசரக் கூக்குரல்கள் ஓய்ந்து அவைகள் ஒப்பாரிகளாக மாற ஒருமணி வேளைக்கு மேல் சென்று விட்டது.

அந்த நடு இராத்திரிக் காலத்திலும் பலர் வந்தனர்; போயினர்.

வெளியே வெளிச் கேற்றுக்குச் சற்று வெளியே வீதிக் கரையோடு பண்டாரியின் றிக்சோ கிடந்தது.

நன்றாக விடிந்துவிட்டபோது தான் றிக்சோவை எல்லோரும் அவதானித்தனர்.

றிக்சோ ஆசனத்தட்டு வக்குக்குள் பண்டாரி குடங்கிப் போய்க் கிடந்தான்.

அவன் செத்துப் போய்க் கிடந்தான்.

அவன் செத்து நீண்ட நேரம் ஆகியிருக்க வேண்டும்!

அவன் கட்டை நன்றாக விறைத்துப் போய் இருந்தது.

சவுக்கத்தால் கட்டிய குஞ்சம் விட்ட தலைப்பாகை அப்படியே இருந்தது.

படுத்தபடுக்கையில் ஒரே மூச்சில் கதையைச் சண்முகம் படித்து முடித்தபோது விடிந்துவிட்டது.

சண்முகத்தின் கண்களைக் கண்ணீர் மறைத்தது.

அவன் யாருக்காக அழுகிறான்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சோமசுந்தரத்தாருக்காகவா?

பண்டாரிக்காகவா?

கதையின் மையக்குறி அவன் நெஞ்சைத் தொட்டிருக்கவேண்டும்!

தம்பி கந்தசாமி இன்னும் எழுந்திருக்கவில்லை.

சண்முகத்தின் கண்ணீர்த்திரை இன்னும் கலையவுமில்லை.

அடுக்களைக்குள் தாயானவள் இருந்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்த "இருளின் கதிர்கள்" பற்றி

ஒரு காலத்தில் யாழ்ப்பாண நகரப்புற எல்லையோடு வாழ்ந்ததாகக் கருதப்படும் ஒருத்தியின் கதை இது.

சமூகத்தின் சாக்கடையாகக் கருதப்பட்ட அவளின் இருள் மயமான வாழ்வுக்கு நடுவே இருந்து தோன்றிய நெஞ்சைப் பறிக்கும் கதிர்களை முதன்மைப்படுத்துவதே இதன் கருவூலமாகும். படித்துப் பாருங்கள். முடிவில் அந்தக் கதிர்கள் உங்கள் நெஞ்சங்களையும் ஊடுருவ வில்லை என்றால் அதற்குப் பொறுப்பாளி அந்தப் பெண் அல்ல நான்தான்— எனது பேனாதான்— அதன் சித்தரிப்புத் தவறுதான்.

கே. டானியல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

[illegible]

www.tamilarangam.net

# இருளின் கதிர்கள்

## 1

***அப்பாடா, ஊர் எவ்வளவு மாறிப்போய்விட்டது!***

என் மனதிலிருந்து அந்தப் பழைய அமைப்பு இன்னும் அழிந்து போய்விடவில்லை. அது அப்படியே மனதோடு இன்னும் ஒட்டிப் போய்க்கிடக்கிறது. இப்போதிருக்கும் இந்தச் சந்திப்பின் அமைப்போடு எனது மனதோடு ஒட்டிப்போயிருக்கும் சந்திப்பை ஒப்பிட்டுப் பார்க்கவே முடியவில்லை.

சதா அவித்த நெல்மணிகளைப் போட்டுக் கொறித்துக் கொண்டு தூங்கி வழிந்தபடி சாய்ந்திருப்பேனே அந்த அரிசிக் கடைத்தூண்! இலேசாக வயிறு கடித்தபோதெல்லாம் ஐந்து சதக் குத்தியைத் தூக்கி எறிந்து இரண்டு வாழைப்பழ வாய்ப்பனும் பேணி நிறைந்து வழியும் தேநீரும் வாங்கிக் குடிப்பேனே அந்தப் புகைபிடித்த திறாதிக்கடை! அவை எவையுமே இப்போது காணோம்!

ஓட்டுமடம் சந்தி— இப்போது அதை அப்படிச்சொல்வதற்குப் பழைய நினைவில் நிலைத்தபடி ஒரே ஒரு சின்னந்தான் இருந்தபடி இருக்கிறது. நீண்டு உயர்ந்த தபால் பெட்டி! ''ஓட்டு மடம் சந்தி'' என்ற இடுகுறிப் பெயருக்குப் பொருத்தமாக சந்திப்போடு இருந்த ஓடு போட்ட மடம் என்பது இருந்த இடமே சுவடற்றுப் போய்விட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடை மார்க்கு ஓடு இறக்குமதி செய்யப்பட்ட காலத்திலேயே குத்தகைக்காரப் பொன்னையர் என்ற பண்ணைத்துறைமுகக் குத்தகைக்காரன் தனது சொந்தப் பணத்தில் கட்டுவித்தது அந்த மடம் என்றுதான் கேள்வி. யார் என்னவிதத்தில் கட்டியிருந்தாலும் என்ன! இப்ப அது இருந்த இடமே தெரியவில்லையே!

''பொன்னம்மாள்!''

இப்படி ஒருத்தியின் பெயரைச் சொல்லிவிட்டால் ''ஓட்டு மடம் பொன்னம்மாள்'' என்ற சொற்றொடரே நினைவுக்கு வந்து விடாதா என்ன?

சமீபகாலம்வரை இப்படி ஒரு பெயர் நிலைத்து நிற்ப தாக என்னால் துணிந்து கூறி விட முடியவில்லை. அந்தப் பெயர் கொண்டவள் இருந்த இடம் இன்றைக்குப் பத்து ஆண்டுகளுக்குமுன் ஒரு சின்னஞ் சிறிய புல் மேடாகக் கிடந்த ஞாபகம். இப்போது அந்த இடத்தில் பென்னம் பெரியதொரு வீடு இருக்கிறது.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணப் பட்டணத்திலிருந்து நாகலிங்கம் கம்பெனியாரின் பஸ்சில் ஏறிக்குந்தி இரண்டு சதம் காசைக்கொடுத்தால் அந்த இரண்டு சதத்தின் கடைசி எல்லைத் தூரம் காரைதீவு போகும் பாதையில் இருக்கும் ஓட்டுமடம் சந்திப்புத்தான்.

இது ஒரு நாற்சந்தி. திசைக்குறிகளில் அணுவும் விலகாமல், கிழக்கு மேற்கு, வடக்குத் தெற்கான வீதிகளின் சந்திப்புத்தான் இந்தச்சந்திப்பு.

சந்திப்பிலிருந்து நேராக மேற்கு வீதியால் சற்றுத் தூரம் சென்றால் வலப்புறமாக ஒரு குளம் வருகிறது. அதிலிருந்து நேராகப்பார்த்தால் பாம்புபோல நெளிந்து போகும் வீதியும், அகன்ற வயற் பரப்பும், சற்றுத் தொலைவில் வயற்பரப்பும், அதற்கும் அப்பால் முடிதாங்கிய இரு கீற்றுக் கோடுகளும் கண்களுக்குத் தெரியும். அந்த

www.tamilarangam.net



இரு கீற்றுக் கோடுகளையும்தான் "இரட்டைப் பனை" என்பார்கள். இப்போது அப்படி அந்த இரட்டைப் பனைகள் கண்களுக்குப் படவில்லை. அவைகள் நிச்சயமாகச் செத்தழிந்திருக்கவேண்டும்!

அந்த இரட்டைப் பனையடியைச் சுற்றியுள்ள தாளம் பற்றைகளுக்குள் அந்தியேட்டிக் கிரியைகள் செய்யப் போன பலரோடு நானும் போயிருக்கிறேன் அப்பொழுது அந்த இரட்டைப் பனைகளைத் தொட்டுப் பார்த்திருக்கிறேன்; அவைகளோடு சாய்ந்திருக்கிறேன். சனசஞ்சாரமற்ற அந்தக் கடற்கரைத் தாளைக்குள் அந்த இரட்டைப் பனைகள் எப்படி வந்திருக்கும் என்று நான் யோசித்ததுமுண்டு.

பொன்னம்மாள் இருந்த இடத்தில்தான் இப்போது பென்னம் பெரிய வீடொன்று இருக்கிறதே!

பொன்னம்மாளின் சிறு வீடு இருந்தபோது அதற்குப் பக்கமாக ஒரு வேப்பமரம் நிழல் பரப்பி நின்றது நல்ல நினைப்பு! பல நாட்கள் கற்காற்றின் ஆலிங்கனத்தில் அந்த வேப்பமர நிழலில் ஒருபாயைப் போட்டுக்கொண்டு நான் மெய்யுறக்கம் செய்திருக்கிறேன்.

அந்த நாட்களை எல்லாம் இப்போது நினைத்துப் பார்க்க மனது ஆசைப்படுகிறது.

பொன்னம்மாள் வாழ்ந்த அந்த சின்னவீடும், அந்த வேப்பமர நிழலும், அத்தோடு சேர்ந்திருந்த பச்சைப்பசேலென்ற வயற்பரப்பும், அறுவடைகாலங்களில், அரிவிவெட்டுச் சூடடிப்புக்காட்சிகளும், எருதுகளின் சூட்டுமிதிப்பு ஒய்யாரமும், "பொலிபொலி" என்று விவசாயிகள் அடிக்கடி வைக்கும் குரலும், குல்லத்தால் நெல்லுத்தூற்றி, குல்லத்தின் உள்-புறத்தால் மாறி மாறி வீசி 'சப்பி' போக்கும் பக்குவமும் இலேசில் மறக்கக் கூடியவைகளல்ல.

www.tamilarangam.net



அவைகளைச் சுற்றித்தான் இன்னும் மனது வலம் வருகிறது.

பொன்னம்மாளைப் பற்றியும், அவள் வாழ்ந்த சூழலைப்பற்றியும் இப்படியெல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டிருந்த எனக்கு "அந்த வீட்டின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்திருக்குமா?" என்ற கேள்வி நியாயமானது.

"என்ன தெரியுமாவா? நான் தானே அந்த வீட்டின் ஜீவனைச் சில வருடங்கள் பிடித்து வைத்துக் கொண்டிருந் தவன்" என்று சொல்லிக்கொள்கிறேன். போதாதா?

எனக்கு இப்போது வயதாகி விட்டது.

நான் கிழவனாகிவிட்டேன்.

எனக்கு இப்போது வயது என்பதுக்கு மேலாகிறது!

அட, சின்னதிலிருந்து நோஞ்சியாகிவிட்ட நான் வேடிக்கை வேடிக்கையாக இத்தனை ஆண்டு காலம் வாழ்ந்துவிட்டேன். என்னை எலும்பு மாமா" எனப் பழிப்புடன் அழைத்தவர்களில் பெரும்பான்மையினர் செத்துப்போய், சாம்பராகி, இரட்டைப்பனை பொடித் தாளப் பற்றைக்கடலில் கரைந்துவிட்டனர். நான் இன்றுந் தான் வாழ்கிறேன்.

இயல்பாகவே நோஞ்சியாகிய என்னை "இந்தா முடித்து விடுகிறேன்" என்று கட்டியங் கூறிக் கொண்டு பல நோய்கள் வந்ததுண்டு.

பல நோய்கள் நீண்ட காலத் தவணை வைத்து என்னைப் படுக்கையில் சாய்த்து விட்டதும் உண்டு. "அவைகளையெல்லாம் அப்போதைக்கப்போது குறுகிய காலப்போராட்டத்திலும். நீண்ட காலப்போராட்டத் திலும் முறியடித்து விட்டு நான் தலை நிமிர்ந்து வந்து விட்டேன்" என்று நான் மார்பு தட்டிக்கொள்ளவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சில சந்தர்ப்பத்தில் மானிப்பாய் வைத்திய விடுதியின் தலைமை டாக்குத்தரான மேம்ஸ் ஐயரும், சில சந்தர்ப்பங்களில் அவருக்குப் பின்னால் வந்த தலைமை டாக்குத்தரான ஜாக்கோவும், சில வேளைகளில் கொக்குவில் மயில்வாகனப் பரியாரியாரும், சில சந்தர்ப்பங்களில் பொன்னம்மாள் வீட்டின் குடும்பப் பரியாரியாருமான ஞான முத்தருந்தான் இந்தச் சாதனையை நிறைவேற்றி வைத்தனர்.

ஒரு தடவை நிகழ்வு எனக்கு நன்றாக நினைவிலிருக்கிறது.

மலேரியாக் காய்ச்சல் ஊரெல்லாம் பரவிவந்தபோது...

எனக்குக் கண்டிருந்த காய்ச்சல் முதலில் அப்படியானது என்று கண்டு கொள்ள முடியவில்லை.

இரண்டு நாட்களுக்கொரு தடவை வரும், பத்துப் பதினைந்து நாட்களுக்கு அப்படிக் காய்ந்து விட்டு பின்பு மூன்று நாட்களுக்கொரு தடவை வரும். இப்படியும் பத்துப் பதினைந்து நாட்கள் ஆனதும் பின்பு நான்கு நாட்களுக்கொரு தடவை வரும்.

இப்போது மீன் பிடிச்சந்தை இருக்கும் காக்கைதீவுச் சந்தைக்கு முன்னால் பறங்கித் தெருவில் இருக்கும் 'தம்பு' என்பவர் வைத்திய விடுதி ஒன்றைக் கட்டியிருந்தார்.

"தம்பு டாக்குத்தர், தம்பு டாக்குத்தர்" என்று கிராமங்கள் திரண்டு வந்த காலம்.

"பொன்னம்மாள் வீட்டிலிருந்து ஏன் எனது வீட்டிலிருந்து" என்றுதான் சொல்வோமே! ஏறக்குறைய ஒரு கட்டை தூரத்தில்தான் அந்த வைத்திய விடுதி இருந்தது. அங்கு இரண்டு மாதங்கள் வைத்தியர் பார்த்தாய் விட்டது தம்பு டாக்குத்தரும் தன்னால் ஆனதைச் செய்து பார்த்துவிட்டார்.

ஒரு நாள் பொன்னம்மா வீட்டில் நான் படுக்கையில் இருந்தபோது எனக்கு மயக்கம் வந்தது.

www.tamilarangam.net



அதற்குப்பின் நடந்தது எதுவும் எனக்குத் தெரியாது.

நான் கண் விழித்துப் பார்த்த போது நான் ஒரு மெத்தைக் கட்டிலில் கிடப்பதை அவதானித்தேன்.

பொன்னம்மாள் எனக்கு வேண்டிய பணிவிடை எல்லாம் செய்தாள்.

எனக்கு மயக்கம் வந்து பதினான்கு நாட்களாகிய தன் மேல்தான் கண்விழித்திருப்பதாகவும் அவள் சொன்னாள்.

எனக்குச் சேடம் கூட இழுத்ததாம்!

பாவம் மானிப்பாய் வைத்திய விடுதியில் சேர்த்து என்னை உயிர் பெறச் செய்யும்வரை அந்தப் பொன்னம்மாள் என்ன பாடுபட்டிருப்பாள்!

அதை நினைத்தால் இப்போது கூட என் நெஞ்சில் விறைப்புக் காணுகிறது.

இந்தக் கஷ்டத்திலிருந்து நான் தப்பித்துக் கொண்டதோடு எனது வாழ்க்கையில் ஒரு கிரக மாற்றம் வந்திருக்க வேண்டும்!

''ஒவ்வொரு மனித உருவத்தின் வாழ்க்கையிலும் ஒவ்வொரு பொற்காலம் வந்து போகிறது'' என்று கூறுவார்கள். அப்படியானால் எனது வாழ்க்கையிலும் ஒரு பொற்காலம் வந்து தான் போயிருக்கவேண்டும்.

சிலவேளை இனிக் கூட வரலாமா?

இனியாவது பொற்காலம்வருவதாவது! இன்றைக்கோ நாளைக்கோ என்றிருக்கும் இந்த எலும்புக் கூட்டுக்குப் பொற்காலமாவது; வருவதாவது!

அப்படியானால் எனக்கு வந்த பொற்காலம்...? சில வேளை நான் கிராப்பு வெட்டிக் கொண்டேனே அந்தக் காலமாக இருந்தாலும் இருக்கலாம்! ❑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 2

அப்போது எனக்குக் குடுமி!

ஊரில் எனது குடுமிக்குப் பெருமதிப்பு.

என் குடுமி அளவு ஊரில் பெண்களுக்குமே கிடையாது!

தலையை முழுக்கிட்டு, உலர வைத்து குடுமி வைத்துக் கொள்வேனாகில் தலையின் பாதி அளவுக்குமேல் குடுமி இருக்கும். ஆனால் மயிர் மட்டும் வெண் செம்படை. அது என் உடம்பின் நோஞ்சல் தன்மையால் ஏற்பட்டதல்ல. நான் பிறவி எடுத்த காலத்திலிருந்து அது இதே நிறந்தான். பிறவி நிறம்.

முடமோ, ஓரக்கண்ணோ, மச்சமோ எதுவானாலும் பிறப்பால் வந்துவிட்டதை மாற்ற முடியாது என்பார்கள். எனது செப்படை மயிர் விஷயத்தில் அது உறுதியாகி விட்டது.

''வெடிவால் முளைத்த'' பருவத்தில் எனக்கே அசிங்கமாகப்பட்ட இந்தச் செம்படையைப் போக்கிவிட நான் முயன்றேன்; முயன்றேன்.

''கறுத்தப் பூச்செடிச் சாறெடுத்துத் தப்பி முழுகி வந்தால் மயிர் கறுத்து வரும்'' என்றார்கள்.

''அதிகாலையில் அறுகம் புல்லுத் துவைத்துத் தடவி முழுக்குப் போட்டுவந்தால் செம்படை எடுபடும்'' என்றார்கள்.

''இருட்டிவிட்டதன் பின் கடற்தண்ணீரில் முழுக்குப் போட்டு தலையை உணர்த்தாமலே ஒரு மண்டலம் அதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வது நாற்பது நாட்கள் தொடர்ந்து விட்டு வைத்தால் மயிர் விறைப்பேறின் கறுத்து வரும்'' என்றார்கள்.

''தாமரைத் தண்டின் அடிவேரை எடுத்து அதைப் பிடித்திருக்கும் சேற்றை எடுத்து தலையில் தப்பி முழுகி னால் கட்டாயம் மயிர் கறுப்பாகும்'' என்றார்கள்.

இத்தனையையும் விதிமுறை தவறாமல் செய்து பார்த் துக் களைத்துப்போனேன். கடைசியில் எனது சொந்த மூளையைப் பிரயோகித்து நான்கைந்து தடவைகள் அடுத் தடுத்துப் பரியாரி கணவதியனைக் கொண்டு மொட்டை வழிப்பித்துப் பார்த்தேன். ஊஹூம்! புதிதாக முளைத்து வந்த மயிர்களில் ஒன்று கூட கறுப்பாகவரவில்லை. கடை சியாக எல்லாவற்றையும் கைவிட்டு விட்டுக் குடுமியையே விட்டுவிட்டேன். அந்தப் பருவத்தில் தான்— அதாவது வெடிவால் முளைத்த பருவம்—பதினாறுவயதுவரை! அப் போது எனக்கு எலும்புருக்கிக் காய்ச்சல் ஒன்று வந்திருந்த தால் ஏற்கெனவே நடுங்கலடித்துப் போயிருந்த எனது உடலை அந்த எலும்புருக்கியும் ஒரு கை பார்த்துவிட்டது.

எனக்குச் சரியாகப் பதினெட்டு வயது பூர்த்தியாவ தற்கு முன்னே என் அம்மாள் எனக்கு ஒருத்தியைக் கட்டி வைத்தாள்.

''நரங்கலடித்துப்போன உடம்பைத் தேற்றி எடுப் பதற்கு கல்யாணந்தான் சரியான ஒரு அரு மருந்து'' என் பது கிராமத்து நம்பிக்கை. இதை நம்பிக் கொண்டுதான் அம்மாள் என்னைக் கட்டி வைத்திருக்க வேண்டும்!

புதியவனாகிய நான் புதுப்புனலில் திளைத்து நிமிர்ந்த தால் எனது உடலில் புதிய பொலிவும் தெம்பும் வருவது போல இருந்தது.

என்னதான் உடலில் பொலிவும் தெம்பும் வந்தாலும்

ஆறு மாதங்கள் ஆவதற்கிடையில் என் மனைவி என்னை விட்டுப் போய்விட்டாள். 'போய்விட்டாள்.'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று மொட்டையாகச் சொல்வதைவிட 'இன்னொருத்தனுடன் ஓடிப்போய் விட்டாள்' என்று உண்மையைத்தான் சொல்வோமே! அதனால் என்ன வெட்கம்? மனைவி தான் பகிரங்கமாக ஓடிப் போய் விட்டாளே!

நான் நோஞ்சி. என்னிடம் இருப்பது வெறும் எலும்புக்கூடு மட்டுமே. இந்த எலும்புக்கூட்டினை மஞ்சளான ஒரு தோல் மூடிக்கிடக்கிறது.

ஆண்மையெல்லாம் என்னிடமிருந்து ஓடிப்போய்விட்டது. இதை அறிந்துதானோ என்னவோ ஆண்கள் எல்லாம் என்னைச் சுற்றிச்சுற்றியே வந்தனர். என்னிடம் பெண்மையின் அறிகுறிகள் தோன்றியிருக்க வேண்டும்!

என் ஆத்மாவுக்கு என் உடல் ஒரு பாரமாகிவிட்டதைப் போல எனது அம்மாவுக்கும் நான் பாரமாகவே இருந்தேன். கடைசியில் எனது சுமையைத் தாங்கமுடியாமல் எனது அம்மாவும் என்னை விட்டுப் போய்விட்டாள் நான் ஒரு விடுகாய் ஆகிவிட்டேன்.

எனக்கு வேலை என்று ஒன்றும் இருக்கவில்லை. என் அம்மா இருக்கும்வரை எப்படியோ தன் வயிற்றையும் நிரப்பி எனது வயிற்றையும் நிரப்பிவந்தாள்.

அவள்தான் போய்விட்டாளே!

அவள் இனித்திரும்ப மாட்டாள்.

அவள் போன உலகம் அப்படி!

என் அம்மாள் விட்டுச் சென்ற சின்னஞ்சிறு குடிசையை விட்டுக் காலை வெளிக்கிளம்பினால் மனம்போன போக்கில் எங்கெல்லாமோ சுற்றிவிட்டு, எப்படியோ வயிற்றை நிரப்பி விட்டு இரவுக்கு ஒன்று பாதிக்குமேல் தான் குடிசைக்குத் திரும்புவேன். ''எங்கே போறாய்?'' ''இதுவரை என்ன செய்தாய்?'' என்று என்னை அதட்டிக் கேட்கத்தான் ஒருவருமில்லையே. இதற்காக உத்தரவுப்

www.tamilarangam.net



பத்திரம் பெற்று வந்தவளும் இன்னொருவனை அதட்டிக் கேட்கப் போய்விட்டாளே!

சில சமயங்களில் எக்கச் சக்கமான நேரங்களில் குடிசைக்கு வந்து நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொள்ளும்போது என் மனதுக்குள் ''ஆனை எண்ணம்'' ''குதிரை எண்ணங்கள்'' பல வந்து சுழல்வதும் உண்டு. இவைகளையும் விட எத்தனை எத்தனையோ!

தனிமையில் நான் அவஸ்தைப்பட்டேன். என் தனிமையைப் போக்க என் தாயால் தரப்பட்டவளே என்னை விட்டு ஓடிவிட்டபின்பு என்னை நன்கு புரிந்து கொண்டு என் தனிமையைப் போக்க ஒருத்தி துணியவேண்டுமே!

ஒரு தடவை யாழ்ப்பாணம் கொட்டடிக்குப் போகும் பாதையில் ரேகை சாஸ்திரம் சொன்ன ஒருவனிடம் எனது கையைக் காட்டினேன்.

அவன் எத்தனையோ சொன்னான்.

நல்ல காலம் ஒன்று வந்துகொண்டிருப்பதாகச் சொன்னான்.

''இரண்டு தாரத்திற்கு ரேகையில் இடமிருக்கு'' என்று அடித்துச் சொன்னான்.

''பிள்ளைக்குப் பலன் இல்லை'' என்றும்சொன்னான்.

அதுதான் எனக்குத் தெரியுமே! அவன் என்ன சொல்வது?

அந்தச் சாத்திரி சொன்ன இரண்டு தார எண்ணத்தோடு மூச்சைப் பிடித்துக் கொண்டு காலத்தை ஓட்டினேன்.

கண்ணில் தென்படுபவர்கள் எல்லாம் கலியாணப் புரோக்கர்கள்போல என் கண்களுக்குப்பட்டது. சாஸ்திரியின் கூற்றுப்படி ''பேச்சுக்கால் கல்யாணமாக அது வரலாம்'' என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து போய் விட்ட நான் படலைகளுக்குள் நின்று எனது

www.tamilarangam.net



செம்பட்டைப் பெருங்குடுமியைப் பார்க்கும் பெண்களை யெல்லாம் விடுத்து விடுத்துப் பார்க்க முற்பட்டேன். அந்தப் பெண்களில் தாலிக்காரி யில்லாதவளாகத்தான் தேடினேன். ''காதல் உருவத்தில் கூட இரண்டாந்தாரம் வரலாம்!'' என்று இன்னொரு வித ஆசை!

நான் மேலும் மேலும் நோஞ்சியாகி வந்தேன், அது எனக்குப் புரிந்தது.

கிராமத்தில் ஒருவன் இருந்தான்!

அவனை ஊருக்கெல்லாம் நன்கு தெரியும்.

துரையன் என்பது அவன் பெயர்.

அவனுக்கு வயது அப்போது நாற்பதுக்கு மேல் இருக்கும்.

எனக்கு மூத்த அண்ணன் ஒருத்தன் இருந்து செத்துப் போனான். செத்துப்போன அந்த அண்ணனோடு ஒரு நாளில் தான் இந்தத் துரையன் பிறந்தவன் என்று அம்மா சொல்லியிருக்கிறாள்.

அவனின் உடை நடை பாவனை எல்லாம் ஒருமாதிரி.

ஊரில் பெண்கள் கூட்டத்திற்கு அவன் ஒரு கண்ணன்.

கிராமத்தில் இங்கிலிசு படித்தவன் அவன் ஒருவன் தான்.

நாகரீகமென்றதும் அவன்தான்.

முதலில் கிராமத்தில் கிராப்பு வெட்டிக் கொண்டவனும் அவன்தான்.

சேட்டும் சூட்டும் போட்டுக்கொண்டு பென்னம் பெரிய றெட்இந்தியன் மோட்டார் சயிக்கிள் ஒன்றில் "சடார் படார்" என்று அவன் ஓடிவரும் காட்சி ஒரு கண் கொள்ளாக் காட்சி.

www.tamilarangam.net



என்னை அவன் எப்போதுமே கேலிசெய்வான்.

"இந்தா எலும்பர், பட்டணத்திலை ஒரு வீட்டிலை நிதந்தர மானதாய் ஒரு வேலை கிடக்கு. வா றியோ சேத்து விடுகிறன்!"

இப்படி அவன் ஒருநாள் என்னைக் கேட்டான். முதலில் இதை அவன் கேலிக்குக் கேட்பதாகவே நான் கருதினேன். அவன் அதை மீண்டும் கேட்டான். நான் இணங்கிவிட்டேன்.

இரவு வந்தபோது அவன் தனது மோட்டார் சயிக்கிளில் ஏறும்படி பணித்தான்.

மோட்டார் சயிக்கிளைத் தொட்டே எனக்குப் பழக்கமில்லை. அந்தக் கிராமத்தில் மட்டுமல்ல அந்தப் பிரதேசத்திலேயே அவனிடந்தான் மோட்டார் சயிக்கிள் நின்றது. அதனால் அதைத் தொட்டுப் பார்க்கும் சந்தர்ப்பம் எதுவும் எனக்குக் கிடைத்ததில்லை.

வண்டியை அவன் இயக்கத் தொடங்கியபோது எனக்குக் குளிர் ஜுரம் வந்துவிட்டது போன்ற ஒரு உணர்வுதான் இருந்தது. அவன் வயிற்றுப்பாகத்தை இரு கைகளாலும் வளைத்துப் பிடித்துக் கொண்டு எவ்வளவு நேரந்தான் இருந்தேன் என்பது கணக்குக்கு அப்பாற் பட்டது, எங்கோ ஆகாயத்தில் பறந்து செல்வதைப் போல......

கடைசியில் அந்த வீட்டுக்கு வந்து விட்டோம்.

"வீட்டு வேலைக்காரனாகப் போகிறேன்" என்றதும் நான் ஒரு பெரும் மாளிகையைத் தான் கற்பனை பண்ணி இருந்தேன். வந்திருந்ததுவோ ஒரு சின்னஞ் சிறிய தென்னை ஓலை வேச்சல் வீடு!

சரி வந்துவிட்டேன். கௌரவத்திற்காக 'பெரிய வீடு' என்று தான் சொல்வோமே!

www.tamilarangam.net



மண்ணெண்ணெய்ப் பந்தம்போல ஒரு 'பேணி' விளக்கு வெளித் திண்ணையில் எரிந்து கொண்டிருந்தது.

அந்த விறாந்தையில் ஒரு பெண் இருந்தாள்.

அவளுக்குப் பொக்குவாய்.

அவள் கிழவி!

"அவள்தான் வீட்டு எஜமானியாக இருக்குமோ?" என்ற கேள்வி எனது மனதுக்குள்.

கால்களை நீட்டி, வலப்புறமாக ஒரு சிறு உரலை வைத்து லொக்கு லொக்கென்று வெற்றிலை துவைத்துக் கொண்டிருந்தாள்.

பொக்குவாய் இழித்து, கால்களை முடக்கி அவள் எங்களை வரவேற்றாள்.

வெள்ளை உடுத்தி மூட்டாக்குப் போட்டிருந்தாள்.

பார்ப்பதற்கு அவள் அறுதலிப் பார்ப்பாரப் பெண் போலவும், முஸ்லீம் பெண் போலவும் இருந்தாள் □

## 3

"முஸ்லீம் பெண்ணோ அன்றி பிராமண அறுதலிப் பெண்ணோ" என்பதை அனுமானிக்க முடியாமல் நான் நின்ற போது உள்ளே இருந்து வேறொரு பெண் வந்தாள்.

நெடிய உடல், சிவப்பு நிறம், வட்டக் கண்கள், சுருக்கக் கழுத்து! அவள் நடுவயதுக்காரியாக இருந்தாள்.

முழுகவைத்து உலரவிட்டிருந்த கூந்தலை அப்படியே பின்பக்கமாக வழியவிட்டிருந்தாள். அவனின் முதுகோடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தழுவிவந்து, இடைதாண்டி, பின்னத்துச் சதைமேடு களைத் தொட்டு வளைந்து நின்றது.

நடுவாக வகிடு கிழிக்கப்பட்ட அவளின் தலை நடுவே குங்குமம் கொட்டி வைக்கப்பட்டிருந்தது.

புயங்களிலே பொங்கி நிற்கும் நீலநிறச்சட்டை அணிந்து, இடை மட்டத்தே மட்டும் ஊதாநிறச்சேலை சுற்றிக்கொண்டு ஒய்யாரமாக நடந்து வந்தாள் அவள்.

துரை என்னை அவளுக்கு அறிமுகப்படுத்தினான்.

எனக்கு வெட்கமாக இருந்ததும்; கூச்சம் வந்தது.

உள்ளே இருந்து தாம்பூலத்தட்டைச் சுமந்துகொண்டு ஒரு சின்னப் பெண் வந்தாள்.

வயது ஏறக்குறையப் பன்னிரெண்டுக்கு மேல் இருக் காது. அப்படி முகம் சொல்லிற்று. ஆனால் அவளின் வளர்ச்சி வயதுக்கு மிஞ்சியதாகப்பட்டது. மொத்தத்தில், ''மலர்ந்து பரிணமிக்கப் போகும் அழகான மலர் ஒன்றின் இதழ் வெடித்த மொட்டாக இருந்தாள்'' என்று சொல்லி விடுவோமே! ஆனால் ஒரே ஒரு குறைபாடு. அவளின் முடி செம்புழுதி நிறத்தில் இருந்தது. ஏறக்குறைய எனது தலை முடியைப் போல!

அவள் அந்தச் செம்படைக் கூந்தலுக்குள் கரிய முடி மயிரை வைத்து முடிந்து கொண்டிருந்தது பார்ப்பதற்கு அருவருப்பாய் இருந்தது.

இரவு கரைந்து கொண்டு போயிற்று.

வீட்டில் எங்குமே சந்தடி இல்லை.

சூழலிலும் ஒலிகள் அடங்கிவிட்டன.

கிழவியும் பக்கத்து முடக்கு விறாந்தையில் தூங்கிப் போய்விட்டாள்.

www.tamilarangam.net



விறாந்தையில் பந்தவிளக்கும் அணைந்துபோய் விட்டது.

விறாந்தையின் தென்பக்கமாக வெறும் பலகைத் தடி களால் இணைக்கப்பட்ட ஒரு அறைக்குள் நான் படுத்திருந் தேன். எனது தலைப்புறத்தில் இருந்த ஒரு கள்ளிப் பெட்டி யில் புகைக்கோடே இல்லாத ஒளிக் கட்டியாக மெழுகுதிரி ஒன்று எரிந்துகொண்டிருந்தது.

எனக்குப் பக்கத்து அறைக் கதவுக்குள்ளே ஒரு மெழுகு திரி வெளிச்சத்தில் அந்தச் சின்னப்பெண் இருந்து ஒரு கையை நிலத்தில் ஊன்றி, தலைகவிழ்ந்து மறுகையால் நிலத்தைச் சுரண்டிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவள் எதையோ யோசிக்கிறாள்!

அவள் பரிதாபமான ஒரு ஜீவனாக எனக்குப்பட்டாள்.

அவளின் செம்பட்டைமயிரோடு கூட்டுச்சேர்ந்து நின்ற கரியமுடிமயிர் அவள் மடியின்மேல் பரிதாபமாக விழுந்து கிடந்தது. ஆகக்கூடியது ஆறு அல்லது ஏழு அங்குல நீளத்தில் மட்டும் வளர்ந்திருந்த அவளின் செம்படை மயிர்த்தளிர்கள் அவள் கழுத்துமட்டம் வரைதான் தொங்கி நின்றன.

அந்தச் சின்னப் பெண்ணின் கோலமும், அவளின் ஆழ்ந்த சிந்தனையும், வயிற்றுக்கு மேலான அவளின் மேல் சட்டையும், அதற்குக் கீழான சின்னப் பாவாடையும், நீர் தேங்கி நிற்பது போன்ற கண்குழிகளும், செம்பட்டை மயிரும் அதன் எண்ணெய்ச்சிக்கு மணமும் அவள் மீது எது வென்றறியாத ஒரு பரிவு உணர்வினை வருவித்துவிட்டன.

எனக்குத் தூக்கம் வரவில்லை.

சற்று வேளைக்குப்பின் அந்தச் சின்னப் பெண்ணும் மெழுகுதிரியை அணைத்து விட்டுத் தூங்கிப்போனாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொலைவில் கடல் காற்றின் இரைச்சல் கேட்டது.

அங்குமிங்குமாக வயல்பரப்பெங்கும் பிராப் புள்ளு களும், ஆட்காட்டிக் குருவிகளும் கத்திக் கத்திச் சென்றன.

இப்போதும் "நான் எங்கே வந்திருக்கிறேன்?" என்ற கேள்வி என் மனதில் எழவில்லை.

முன்பின் எந்தவித உறவுமுறையும் இல்லாத "அந்தச் சின்னப் பெண்ணும் அந்தச் சின்னஞ்சிறிய வீட்டின் வேலைக் காரியாக வந்திருக்கிறாளோ?" என்ற கேள்வியில் தான் மனது சுழன்றது.

"பாவம்! இந்தச் சின்னஞ் சிறியவள் யார் பெற்ற மகளோ?" என்று ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டேன்.

நீண்டநேரம் ஆயிற்று. மெழுகுதிரியும் தன்பாட்டி லேயே எரிந்து செத்துப்போய்விட்டது.

மெதுவாக எனது படுக்கை அறைக் கள்ளித் தடிக் கதவின் பிணைச்சல் கீச்சிடும் சத்தம் கேட்டது.

"யாரோ கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருகி றார்கள்?" என்று மட்டும் எண்ணினேன்.

என் உடம்பு சணத்தில் வெயர்த்துவிட்டது.

எனக்குப் பயம்வந்துவிட்டது. ஆனாலும் நான் அசையாது கிடந்தேன்.

கதவின் கீல்முனை ஓசை மீண்டும் எழுந்தது.

இப்போது கதவு உள்ளே மூடப்படுகிறது என்பதை முடிவு செய்துகொள்ள அவ்வளவு சிரமம் இருக்கவில்லை.

ஒரு பெண்ணின் வாசனையை எனது நாசி மோப்பம் பிடித்தது.

சற்று வேளைக்குப் பின்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சற்று வேளைக்குப்பின் நான் புதிதான ஒரு அனுபவத்திற்குட்படுத்தப்பட்டேன்.

நான் திணறிப்போனேன்.

என்னால் முடியவில்லை.

என் அனுமானத்திற்குட்பட்ட அந்தப் பெண்ணானவள் அவசரமாக எழுந்து அவசரமாக வெளியே போகும் சந்தடி கேட்டது.

கதவின் கீல்முனை மீண்டும் அனுங்கியது.

அந்தப் பெண் யார்?

நான் சில மணி நேரத்திற்குமுன் பார்த்த அந்த நடு வயதுப் பெண்ணாகத்தான் இருக்கவேண்டும்!

அவள் கூந்தலின் உலர்ந்த வாசனை என்னை அப்படித் தான் நினைக்கவைத்தது.

சற்று அப்பால் இருந்த அறையில் சிரிப்பொலிகள் கேட்டன.

அது அவளின் குரல்தான்!

கூட ஒரு ஆணின் சிரிப்பொலி கேட்டதே!

அது நிச்சயமாகத் துரையனின் குரலாகத்தான் இருக்கமுடியும்.

ஏனெனில் அந்த அறைக்குள் அவன் அவளுடன் சயனிக்கப்போனதை நான் ஏற்கெனவே கண்டிருக்கிறேன்.

அவனின் அனுமதியுடன், அல்லது அவனின் ஏற்பாட்டுடன் தான் அந்தப் பெண் வந்து போகிறாளா? எதையும் உடனடியாக என்னால் தீர்மானிக்க முடியவில்லை ஒன்று நிச்சயமாகத் தெரிந்தது. நான் ஒரு பிழையான இடத்திற்குத்தான் வேலைக்காக வந்திருக்கிறேன் என்பது.

www.tamilarangam.net



என்னை வேலைக்கார அந்தஸ்தில் வைத்திருந்தால், அந்தப் பெண் வந்ததும் போனதும்-

சிதம்பர சக்கரம் என்பார்களே! அதுபோலத்தான் என் மூளைக்கு எதையுமே முடிவெடுக்க முடியாத நிலை.

மனதுக்குத் தெரிந்த மட்டில் நான் வந்திருக்குமிடத்தை அனுமானித்துக் கொண்டமட்டில் நான் அதற்காகப் பெரிதும் வெட்கப்பட்டேன்.

துரையன் சொன்னானே இங்கே வேலைக்குச் சேர்க்கப்போகிறேன் என்று.

எனக்கு என்ன வேலை தரப்போகிறார்கள்?

சமையல் வேலையா?

நிட்சயமாக அப்படி இருக்காது.

வளவு வாய்க்கால் பார்க்கும் வேலையா?

அப்படி வளவு வாய்க்கால்காரர்களாக அவர்களைத் தெரியவில்லை.

கடைகண்ணிக்குப் போகும் வேலையா?

அப்படியும் இருக்க நியாயம் இல்லை.

மாடு கண்டு பராமரிக்கும் வேலையா?

அப்படி மாடோ கண்டோ இங்கு நிற்பதாக அசுகை இல்லை.

இப்படிப்பட்ட தொழில் நடக்கும் இடங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆயினும் இத்தொழிலின் உள்ள நுணுக்கங்களைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. பெரு வெட்டாக நான் அறிந்தமட்டில்.........

''மாமாவேலை; மாமாவேலை'' என்ம பதத்தினை அடிக்கடி கேள்விப்பட்டிருக்கின்றேன்.

www.tamilarangam.net



ஒருவேளை.........

எனது உருவ அமைப்பினை நான் கண்ணாடிகளில் பார்த்தவாறு மனக்கண்முன்னே கற்பனை பண்ணிப்பார்த்தேன். அது எனக்குப் பொருத்தமானது போலத்தான் உள்மனத்தில் எங்கோ ஒரு இடத்திலிருந்து ஊமை அசரீரி ஒன்று கேட்டது. □

## 4

''இராஜமரியாதை'' என்ற சொல்லினை அடிக்கடி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

என் வாழ்க்கையிலும் அப்படி ஒரு ராஜமரியாதை வந்துதான் என்னை அந்த வார்த்தைக்கான இலக்கணத்தை உணரவைத்திருக்கிறது.

அந்த வீட்டில்தான் இந்த இராஜமரியாதை அனுபவம் எனக்குக் கிடைத்தது.

''தம்பி; தம்பி'' என்று தனது பொக்குவாய் நிறைந்து போக அழைப்பாள் வீட்டின் தலைச்சன் கிழவி செல்லம்மாள்.

''இந்தா பாருங்கோ!'' என்று குரலில் தேன் குழைத்துக் கூப்பிடுவாள் நடுவயதுச் சின்னம்மாள்.

''மாமா; மாமா'' என்று சதா செல்லமாக நச்சரித்துக்கொண்டே இருப்பாள் சின்னப்பெண் பொன்னம்மாள்.

கிழவி செல்லம்மாளுக்கு நடுவயதுப் பெண் சின்னம்மாள் வளர்ப்புப் பெண். சின்னப்பெண் பொன்னம்மாளோ அந்த இருவருக்குமே வளர்ப்புப் பெண்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொன்னம்மாள் தமிழ்ப் பெண்ணே அல்ல. நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் அங்கு வாடிக்கை வைத்துக் கொண்டிருந்த சிங்கள முதலாளி ஒருத்தர் எங்கோ ஒரு சிங்களக் கிராமத்திலிருந்து கொண்டு வந்து வீட்டுவேலைக் காகக் கொடுத்துவிட்டுச் சென்றாராம்.

மழுங்க வழிக்கப்பட்ட மொட்டைச்சியாக அவள் வந்தாளாம்.

''தனக்கு யாருமே இல்லை'' என்று அந்தச் சின்னப் பெண் வேதனையோடு என்னிடம் பலதடவைகள்சொல்லி விட்டாள்.

''தனக்கு யாருமே இல்லை'' என்ற எண்ணம் அவள் மனதை அடிக்கடி குடைந்திருக்க வேண்டும்!

நான் அவள் ஏக்கத்தைக் கேட்ட போதெல்லாம் என் மனது கரைந்தோடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

பல சந்தர்ப்பங்களில் அவளுக்கு எத்தனையோ சொல்லித் தேற்ற நான் முற்பட்டபோதெல்லாம் அவள் விம்மும் ஓசை என் காதுகளுக்குக் கேட்டதும் உண்டு.

இங்கே உத்தியோக பூர்வமற்ற முறையில் நான் 'அத்' தொழிலுக்கு அனுமதிக்கப்பட்டு விட்டேன்.

முதலில் நான் வெட்கப்பட்டேன்; வேதனைப் பட்டேன்.

ஆரம்ப நாட்களில் இப்படித்தான் இருக்கும். பின்பு தொழில் முறையோடு ஒட்டி ஒட்டிப் போய்விட எல்லாம் பழக்கத்திற்கு வந்து விடும்.

என் மனதில் இருந்த நமைச்சல் உணர்ச்சி மறைந்து மறைந்துபோகத் தொழிலோடு நன்றாகவே நான் ஒட்டிப் போய் விட்டேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நாகரீகமாக இருக்க வேண்டும்" என்ற ஆசை எனக்கு வந்தது.

உடலும் சற்று உரப்பட்டு வருவதுபோல இருந்தது.

சின்னப் பெண் பொன்னம்மாள் என் தலை முடியைப் பார்த்துப் பார்த்து ஏங்குவாள்.

தனது தலைக்கு எனது தலைமுடி பொருத்தமானது என்ற விதத்தில், வாயில் ஜலம் ஊறப் பேசுவாள்.

ஒரு நாள் நான் என் தலைமுடியை ஒட்டோடு கத்தரித்து அவளின் கையில் கொடுத்து, நானும் நாகரீக மனிதனாக மாறிவிட்டேன்.

பொன்னம்மாள் கண்ணாடியை எடுத்துவந்து எனக்கு முன்னே பிடித்து எனக்கு வேடிக்கை காட்டுவாள்; நான் வெட்கப்படுவேன்.

பொன்னம்மாள் தன் கட்டைத் தலைமுடியோடு எனது தலைமுடியையும் பங்கு போட்டுச் சேர்த்து இரட்டைப் பின்னல் போட்டுக்கொண்டாள். இது இணைப்பு மயிர்தான் என்று யாருமே அடையாளம் கண்டுவிட முடியாத அளவுக்கு நடுவயதுப்பெண் சின்னம்மாள் அவளுக்குப் பின்னல் போட்டு விடுவாள். எனது தலைமுடி அந்தச் சின்னப் பெண்ணின் தலையில் ஏறி அவளை இத்தனை அழகானவளாக ஆக்கி விட்டதற்காக நானே பெருமைப்பட்டேன்.

எனது தலைமுடி தன்தலைக்கு ஏறிவிட்டதன்பின் பொன்னம்மாள் உற்சாகமாக இருந்தாள்; துள்ளித் திரிந்தாள். தனது மூலப் பிறப்பைப் பற்றிய எந்தவித சிந்தனையும் இதன் பின்பு அவள் நெஞ்சுக்குள் தலைஎடுத்ததை என்னால் காணமுடியவில்லை.

தலைச்சிப் பெண் செல்லம்மாள் உட்பட யாவருமே பொன்னம்மாளிடம் அன்பையே கொட்டியிருந்தோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பருவ வளர்ச்சியால் பொருமி வந்த அவளது சொக்கு களைச் சின்னம்மாள் கிள்ளிக்கிள்ளி மகிழ்ந்ததை நான் என் கண்ணாலேயே கண்டிருக்கிறேன்.

ஒரு நாள் சின்னப் பெண்ணைத் தலைச்சிக் கிழவி செல்லம்மாள் நடுவீட்டுக்குள்ளேயே பிடித்து வைத்து விட்டாள்.

''பொன்னம்மாள் சாமத்தியப்பட்டு விட்டாள்'' என்ற தகவலை சின்னம்மாள் எனது காதுகளுக்குள் சொல்லி வைத்தாள்.

கிழவியின் முகத்தில் மகிழ்ச்சி ஏறிக்குந்திக்கொண்டு கூத்தாடியது.

அந்தச் சிறுக்கியை நடுவீட்டுக்குள் பிடித்து உட்கார வைத்துவிட்டு, அவளுக்கான பத்தியபாகங்களைக் கவனிப் பதில் அவள் மிகக் கவனமாக இருந்தாள்.

என்னைக் கடைகளுக்கு அனுப்பி உயிர்க் கத்தரிக்காய் களாகவும், முட்டைகளாகவும் வாங்குவித்துக் குவித்தாள்.

ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் முட்டையுடன் கத்தரிக்காய்ச்சாற்றையும் கலந்து அவளை பலாத்கார மாகக் குடிக்கவைத்தாள்.

இடையே மூன்று தடவைகள் முட்டையை நல்லெண் ணெயில் அடித்துக் கலக்கிக் குடிக்கச் செய்தாள்.

ஊர் அரிசிக் களிக்கிண்டிக் கொடுத்தாள் பல தடவைகள்.

உழுத்தம்மாக் களிக்கிண்டிக் கொடுக்கவும் அவள் தவறவில்லை.

''சாமத்திய வீட்டுக்குள் ஒரு பெண்ணைப் பாக்கிற பார்வைதான் அவளை திடகாத்திரமான பெண்ணாக

www.tamilarangam.net



நீண்டகாலம் வைத்திருக்கும்" என்று பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

கிழ்வி அந்த திடகாத்திரத்திற்காகத்தான் அப்படி அக்கறையுடன் அந்தச் சின்னப் பெண்ணைப் பார்த்தாளா?

சின்னப் பெண்ணுக்குக் "குப்பைத்தண்ணீர்; தலைக்குத் தண்ணீர்" என்ற முழுக்கு முறைகளும் முடிந்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது.

இப்போது கிழவிக்கு முகத்திலிருந்த மகிழ்ச்சி இறங்கி விட்டது.

நாட்கள் வாரங்களாகிப் போகப் போகக் கிழவியின் உடல் துக்கத்தால் வடிந்துபோய்க் கொண்டே வந்தது.

"என்ன, பெரியவளுக்கு ஏதும் சுகமில்லையே?" என்று நான் சின்னம்மாளை ஒரு நாள் கேட்டேன்.

"சிச்சி! அவவுக்கு ஒண்டும் இல்லை; பொன்னம்மாப் பொட்டையைப் பற்றித்தான் துக்கம்!" என்னைப் பார்த்துக் கண் சிமிட்டிக் கொண்டே சின்னம்மாள் இப்படிக் கூறினாள்.

அவளின் அந்தக் கண் சிமிட்டலில் ஏதோ இருந்தது. அவள் சுபாவம் அப்படித்தான்! எதையோ எண்ணிக் கொண்டு வெளியில் எதையோ சொல்லும்போது, அல்லது ஒரு சொல்லுக்கு இரட்டைக்கருத்து வைத்துப் பேசும் போது அவள் இப்படிக் கண் சிமிட்டுவது வழக்கம். இந்தக் கண் சிமிட்டலில் சின்னப்பெண் பற்றிய ஏதோ ஒரு முக்கிய தகவல் இருப்பதாக நான் நினைத்தேன். அதை அறிய அவசரப்பட்டேன்

"ஏன்; என்ன சங்கதி?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படி நான் அவசரமாகக் கேட்டேன்.

''கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தா விளங்கும்! விளங் காட்டிப் பேந்து சொல்லுறன்''

இப்படிக் கூறிக் கொண்டே சின்னம்மாள் நகர்ந்து போய்விட்டாள்.

அன்று பகலெல்லாம் நான் என் மூளையைப்போட்டு உடைத்துக் கொண்டிருந்தேன்.

சின்னம்மாள் இப்படி வத்திவைத்துவிட்டுப் போனது என்னை அமைதி கொள்ள விடவில்லை.

''வீட்டிலை ஒரு குமர் வந்தாப்பிறகு இந்தத் தொழி லைச் செய்யிறது சரியில்லை எண்டுதான் கிழவி எண்ணு கிறாள் என்பதைச் சொல்ல இப்படி வத்தி வைத்துப் பேசி றாளோ?'' என்று எண்ணினேன்.

எனக்கு ஒரு மண்ணும் விளங்கவில்லை.

''அவளுக்கு ஒரு சாமத்தியச் சீமத்தியச் சடங்கைச் செய்யமுடியாமல் இத்தொழில் தடுக்கிறதே என்று கிழவி துக்கப்படுவதைத்தான் அவள் இப்படிக் கண்சிமிட்டிக் காட்டிறாளோ?'' என்றும் எண்ணினேன்.

எனது இந்த இரண்டாவது நினைப்புச் சரிபோலப் பட்டது.

ஏறக்குறைய அவள் பெரிய பிள்ளையாகி இரண்டு மாதங்கள் ஆகப்போகின்றன. கிழவிக்கு இந்தத் துக்கம் இருக்காதா என்ன?

எதற்கும் சின்னம்மாளை மறுபடியும் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைக்கும் வரை காத்திருந்தேன்.

''நான் அப்போதை சொன்னது விளங்கிச்சுதோ?'' என்று குடத்தடியில் வைத்துச் சின்னம்மாள் கேட்டாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிழவி அப்போது கொல்லைப்புறம் போயிருந்தாள்.

''பொன்னம்மாப் பொட்டைக்கு இன்னும் மறு சாமத்தியம் வரயில்லை; அது தான் அவளுக்கு ஏக்கம்''

இப்படிப் பொன்னம்மாளே முக்கிய புதிரை அவிழ்த்தாள்; என்னைப் பார்த்துச் சொண்டுக்குள் சிரித்தாள்.

எனக்கு விளங்கிவிட்டது.

எல்லாமே விளங்கி விட்டது. □

## 5

வீட்டின் முதல்வீ—பொக்குவாய் 'மொட்டாக்குக் கிழவி—அவள்தான் செல்லம்மாள் ஒரு நாள் செத்துப் போய் விட்டாள்.

அவளுக்கு நோய் கண்டிருந்தபோது பரியாரி ஞானமுத்தார் ''அதெல்லாம் இந்தக் குளிசையுடன் சரிவரும்; இந்தச் சூறணத்துடன் சரிவரும்'' என்று சொல்லிச் சொல்லி அவளைச் சாகவே விட்டு விட்டார்.

அவளின் சாவுக்காக உருகி உருகிக் கதறியவள் பொன்னம்மாள் ஒருத்திதான்.

எனக்குக் கண் கலங்கவே இல்லை.

நடு வயதுக்காரி சின்னம்மாள் ஒப்புக்கு நாலு சொட்டுக் கண்ணீர் சிந்தினாள்; அவ்வளவுதான்.

கிழவியின் சவத்துக்கான கிரியைகள் ஐந்துபத்துப்பேர்களுடன் அடக்கமாக நடந்து இரண்டு கூப்பிடு தொலைவுக்குள் இருந்த தூக்குமரக்காட்டுச் சுடலைக்குள் தகனமும் நடந்தாய் விட்டது.

www.tamilarangam.net



கிழவி உயிருடன் இருந்தபோது எத்தனை பேர்கள் அவள் தயவை வேண்டி வேண்டிச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். அவர்களில் யாருமே அவளின் சாவீட்டிற்கு வந்து சம்பிரதாயத்திற்காயினும் துக்கம் விசாரித்துப் போகவில்லை.

''செல்லம்மாள் வீடு'' என்று அப்பொழுது பெயரெடுத்த அந்த வீட்டுக்கு பகிரங்கத்தில் யாரும் வரமாட்டார்கள்; வரவுங்கூடாது!

நான், சலவை செய்யுங் 'கட்டாடி', இங்கு மயிர் வழிக்க யாரும் இல்லாவிட்டாலும், நான் போனபின் மாதத்தில் ஒரு தடவையோ அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு தடவையோ எனக்காக வந்துபோகும் சவரத்தொழிலாளியான 'பரியாரி', மேளம்தட்டவும் தம்பட்டந்தட்டவும் வந்த மூன்று சாம்பான்கள் ஆகியோர்களுடன் உலக சகோதரத்துவத்தைப் பிரகடனப்படுத்தும் தெற்குப்புற அயல்குடியிருப்பாளர்களான இரண்டு முஸ்லீம்கள், சந்திப்பில் வாய்ப்பன் கடைப் பொன்னையர், இன்னும் அறிமுகமில்லாத இரண்டொரு பேர்களுடன் கிழவியின் தகனக்கிரியைகள் முடிந்து போய்விட்டன.

குடும்பத்தின் பொறுப்பான நிர்வாகி செத்துப்போய் விட்டால் ஆகக் குறைந்தது அந்தியேட்டிக் காலம்வரையாவது குடும்பம் அல்லோலகல்லோலப்படுவதுண்டு. ஆனால் இங்கு மட்டும் அப்படி ஒரு அல்லோல கல்லோலம் நடந்துவிடவில்லை. எந்தவித உத்தியோக ஏற்பு நிகழ்வுகளும் இன்றி நடுவயதுக் காரியாக இருந்து இப்போது சற்றுத் தொய்ந்து—வயதாகிவிட்ட சின்னம்மாள், கிழவியின் இடத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

சின்னப்பெண் பொன்னம்மாள் இப்போது 'பொன்' அம்மாளாகவே ஆகிவிட்டாள்.

''ஒட்டுமடம் பொன்னம்மாள்'' என்ற பெயரை அவள் பிரகடனப்படுத்தி விட்டாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முற்றுந் துறந்த முனிவரான ஒருவர் பொன்னம்மாளுக்கு முன்னால் ஒரு தடவை வந்து வந்த மாதிரியே திருப்பிப் போனால்தான் அவர் முழுமை கொண்ட முனிவராகமுடியும்!

''பொன்னம்மாளின் கண்வீச்சு, பொன்னம்மாளின் உடல்வீச்சு. பொன்னம்மாளின் சொல்வீச்சு ஆகியவைகளுக்குத் தாக்குப்பிடித்துத் திரும்பக்கூடிதாய ஒருவன் நார் நரம்புகளாலும், தசை எலும்புகளாலும் நிறைவு பெற்ற ஒரு மனிதனாக இருக்க முடியாது'' என்பது எனது கருத்து.

என்னிடம் எத்தனையோ மனிதர்கள் தொடர்புவைத்துக் கொண்டார்கள். என்னை அவர்களுக்கெல்லாம் கட்டாயம் வேண்டும்.

வாரத்திற்கு வாரம் வாடிக்கையாக ஒருவன்!

ஊர் தேசம் பார்க்கவந்து ஒரே ஒரு தடவை முகங் காட்டிவிட்டுப் பிரியாவிடை பெறும் வேறொருவன்!

சர்வ சதா என்னையே நச்சரித்து நச்சரித்து எனது கைக்குள்ளேயே 'சந்தோஷம்' தட்சணை வைக்கும் தொந்திகள்!

அரும்பி வரும் மீசைக்குக் கரிபூசிக் கொண்டு மிடுக்காக வரும் மைனர்கள்!

முட்டாக்குடன் வந்து போகும் குல்லாக்கள்; பூணூல் கள்; காக்கிச்சட்டைகள்!

இப்படி எத்தனையோ மனிதத்தலைகளை நான் சந்திக்கிறேன். இவர்களைவிடப் பொதுக்கணிப்பில் மனிதர்களாக யார் இருக்கிறார்கள்?

ஊர் நல்லது; மனிதர்கள் நல்லவர்கள், ஒழுக்கங்கள் நல்லவைகள். ஆனால் பொன்னம்மாளுக்காக வயது

www.tamilarangam.net



வேற்றுமை இன்றி அணிவகுத்து முறைக்காகக் காத்திருக்க எல்லோருமே தயாராக இருக்கிறார்கள்; ஏங்கிச் சாகிறார்கள்!

ஒரு தடவை ஒரு சிரிப்பு நிகழ்ந்தது.

ஒருவன் வந்தான்!

அவனை எனக்கு முன்பின் தெரியாது.

அவன் சேட்டும் சூட்டும் அணிந்திருந்தான்.

அவன் வந்ததும் பட்டப்பகல்; போனதும் பட்டப் பகல்.

அவன் உள்ளே இருக்கும்போது நான் வாய்ப்பன் கடைப் படிக்கட்டில் இருந்தேன். இரவு வாடிக்கை பிடிக்க வேண்டும்.

அவன் திரும்பி வந்தான்.

எனக்கு— என் கைக்குள் சந்தோஷம் வைத்து விட்டுச் சென்றான்.

"உதார் உவன் உனக்குத் தெரியுமோ?"

வாய்ப்பன்கடை நாகமுத்தர் சற்று ஆத்திரத்துடன் கேட்டார்.

"எனக்கு ஆளைத் தெரியேல்லை!" என்று நான் சொன்னேன்.

"உவன் பறையன்; காரை தீவுக்கை இருக்கிற பறையன்; வெளியூருக்குப் போட்டு வந்த பறையன்; உவன்ரை தேப்பன் அங்கை எங்கடை ஆக்கள் வீடுகளுக்கு மோளம் அடிக்கிறவன்"

இப்படி நாகமுத்தர் இறைந்தார்.

நான் வாயடைத்துப் போயிருந்தேன்.

www.tamilarangam.net



"செய்யிறன்பார் வேலை!"" என்று நாகமுத்தர் எதையோ சபதமாக எடுத்துக் கொண்டார்.

மறுநாட்காலை நான் வாய்ப்பன் கடைக்குச் சென்ற போது அரைமட்டம்வரை சந்திப்புவளைவில் இருந்த சீமேந்துக் குந்தின் கீழ்ப்புறமாக "பொன்னம்மாள் வீட்டுக்குப் பறையனும் போனான்" என்ற எழுத்துத் தொடர் என்னைப் பார்த்துக் கண்ணடித்தது.

நான் அசந்து போனேன்!

இந்த விஷயத்திலும் இப்படியும் ஒரு சிக்கல் இருக் கென்பது அப்போதுதான் என் மூளையில் பட்டது.

என்னை நானே நொந்து கொண்டேன்.

வாய்ப்பன் கடை முதலாளி நாகமுத்தர் ஏளனமாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நான்கைந்து நாட்கள் ஆயின.

நான் வழமைபோல வாய்ப்பன் கடைக்குந்தில் இருந்து நெல்லுக்கொறித்து விட்டு ஒவ்வொரு நாளும் வெறுங்கையுடன்தான் திரும்பினேன்.

சின்னம்மாளுக்குத் தொழில் வீழ்ந்ததற்கான காரணம் புரியவில்லை.

அவள் என்னை இலேசாக — வழமையான மூல சூசகமாகக் கேட்டாள்.

பறையன் வந்து போன சம்பவத்தையும், சந்திப்பு வளைவு குந்தில் எழுதியிருந்த சொல் தொடரையும் சின்னம்மாளுக்கு நான் சொல்லித்தான் ஆக வேண்டும்; சொல்லி விட்டேன்.

சின்னம்மாள் ஏங்கிப்போய் விட்டாள்.

அவள் நிலையைக் கண்டு நான் பச்சாதாபப்பட்டேன்

www.tamilarangam.net



எப்படியும் இதற்கான பரிகாரத்தை நான்தான் கண்டு பிடிக்கவேண்டும்.

நான் எப்படியும் வாய்ப்பன்கடை நாகமுத்தரைப் பிடித்தே ஆக வேண்டும்.

ஊரில் ஓரளவு அந்தஸ்தை வகித்த பவளத்தாரை எனக்கு நன்கு தெரியும்.

எனது தாயாருக்கு அவர் தூரத்து உறவுங்கூட.

அவர் பார்ப்பதற்குப் பவளம்போன்றவர் மட்டுமல்ல குணத்திலும் 'பவளம்' என்பது எனக்குத் தெரியும்.

"அவரின் காலைக்கையைப் பிடித்து, அவர் மூலமாக வாய்ப்பன்கடை நாகமுத்தரின் பாதகமலங்களைத் தொட்டு விட்டால்.........."

எனது இந்த நினைப்பு ஒப்பேறி விட்டது.

நாகமுத்தருடன் நான் உறவானது பவளத்தாரின் அறிமுகத்தால்தானாக இருந்தாலும் அதற்கு இன்னோர் நியாயமும் இருந்தது. பவளத்தாரால் நான் அவருடன் அறிமுகமான மறுநாளே அவருக்குச் சற்றுத் 'தண்ணீரை' ஏற்றிவிட்டு ஒரு தடவை பொன்னம்மாள் வீட்டுக்கு அழைத்துச் சென்றேன்.

அவ்வளவுதான்!

மறுநாள் சந்திப்பு வழைவு குந்தில் பொறிக்கப்பட்டிருந்த கறுத்தத்தார் எழுத்துக்களை தார் இழுவை ஒன்று நீளத்துக்குச் சென்று விழுங்கி நின்றது.

அப்பாடா! தாரின் மேல் இழுவைக்குள் மூழ்கிய தார் எழுத்துக்கள் முற்றாகவே மறைந்து போய்விட்டதில் எனக்கு ஒரு பெரு மூச்சுத்தான் வந்தது.

www.tamilarangam.net



பொன்னம்மாளின் பெயர் மீண்டும் பிரசித்தம் அடைந்தபோது ஏற்பட்ட கிராக்கிகளைச் சமாளிக்க, அப்போதைக் கப்போது வெளியிடங்களிலிருந்து தேடிப் பிடித்து வந்ததுகளைக் கொண்டு சின்னம்மாள் வெற்றிகர மாகத் தொழில் நடத்துவதில் பொக்குவாய்க்கிழவி செல்லம்மாளையும் மிஞ்சி விட்டாள்.

இப்போதெல்லாம் சின்னம்மாளுக்கு உடம்பு சரிப் பட்டு வருவதில்லை.

நெருக்கமான கிராக்கிகளுக்கு ஈடுகொடுக்க முடியா மலும் வேறுபல காரணங்களினாலும் இடைநடுவே சிலது கள் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடுவதும் உண்டு. அப்படி கட்டறுத்து ஓடிவிடுவதுகளை சின்னம்மாள் வாய்க்கு வந்தபடி தன்பாட்டிலேயே திட்டிக்கொள்ளும் போது பொன்னம்மாளுக்கு உள்ளுக்குள் சிரிப்புத்தான் வரும். சில வேளைகளில் திட்டுக்களின் இறுதியில் சின்னம் மாள் ஓடிப்போனதுகளைக் கற்பனை செய்து அதுகளின் முகங்களில் படுவது போன்று காறி உமிழும்போது அந்த ஓடிப்போன ஜீவன்களின் மேல் பொன்னம்மாளுக்குப் பச்சாத்தாபம் வரும். □

# 6

சின்னம்மாளுக்குப் பொன்னம்மாள் இராசாத்தி போல்.

பொன்னம்மாள் மட்டும் இல்லா விட்டால் இதுவரை அவள் இருந்த இடமே சுவடற்றுப் போயிருக்கும்.

உணவு, உடை எல்லாம் எனக்கு நிரந்தரம். இதுபோக உருப்படிக்கணக்கில் கமிஷனும் உண்டு. எந்தக் கணக் குக்கும் உட்படாமல் அப்போதைக்கப்போது வரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'சந்தோஷம்' தட்சணை கைச்செலவுக்காக இருக்கும் போது எனக்குந்தான் என்ன குறை!

வீட்டுவிறாந்தையில் பெருவீட்டுவாயலுக்கு நேரே கால்களை நீட்டிக் கொண்டு சின்னம்மாள் இருப்பாள்.

அவளுக்கு இடம் வலமாக இரண்டு சிறு குந்துகள் உண்டு.

ஏதாவது தொழில் நடந்துவிட்டால் வலப்புறக் குந்தில் இருபத்தைந்து சதமும், இடப்புறக்குந்தில் பத்துச் சதமும் இருக்கும். வலப்புறக் குந்தில் இருக்கும் இருபத்தைந்து சதம் எனக்கானது. இடப்புறக்குந்தில் தன்னந்தனியாக இருக்கும் மீன் செதில் போன்ற பத்துச்சதக்குத்தி பொன்னம்மாளுக்கானது.

எனக்கான இருபத்தைந்து சதம், சந்திப்பிலிருக்கும் காத்தானின் கள்ளுக்கொட்டிலில் நான் ஏதும் எடுத்து, அதற்கான 'தொடுவான்' களையும் எடுத்துக்கொள்வதற்காக; பொன்னம்மாளுக்குக் கிடைக்கும் பத்துச்சதம் அவள் ஏதாவது 'சோட்டைப்பண்டம்' வாங்கித் தின்பதற்காகவாம்.

பத்துச் சதத்தை விட்டெறிந்தால் குத்தகைக்காரன் காத்தானிடமிருந்து இரண்டு அளவைகள் கள்ளுக்கிடைக்கும். ரேஸ்ட் கடை அண்ணாச்சியிடம் ஐந்து சதத்தை விட்டெறிந்தால் வாய்க்கு ருசியான ஆட்டு இரத்த வறுவல் கிடைக்கும். எங்கள் சாதிக்கான பெருவால் பிளாவில் கள்களையும் ஊற்றிவைத்து, சக்கப்பணிய இருந்து ரேஸ்ட்டிலும் தொட்டுக்கொண்டு உட்கொள்ளும் அந்தக் கற்பக பானத்திற்கு ஈடேது; இணை ஏது?

இவைகளைவிடவுமா சுகம் வேண்டும்! ஹாயாக வாழ்க்கை கழிந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவசர கால நிலைமைகளைச் சமாளிக்க அப்போதைக்கப்போது தருவிக்கும் எக்ஸ்ராக்களுக்கு மொத்தமாகக் கணக்குகளைத் தீர்த்து விடுவாள் சின்னம்மாள்.

அவளிடம் தொழில் என்றால் தொழில்தான்!

விடிகாலையில் அவர்கள் கணக்குகள் தீர்க்கப்படும் போது சுயமரியாதையை விட்டு நான் எக்ஸ்ராக்களைப் பார்ப்பேன். ''நீ என்ன பண்ணினாய் உனக்குக் கூலி தர?'' என்று வெட்கத்தைவிட்டே அவர்கள் கேட்பார்கள்'

சின்னம்மாளிடம் நான் கேட்கமுடியாது. ஏனெனில் அவர்களிடமிருந்து அவளுக்குக் கிடைப்பதுவோ கமிஷன் தான். அதில் எனக்கும் ஒரு கமிஷன் என்றால் அவளுக்குக் கட்டுபடி ஆக வேண்டுமே!

மொத்தத்தில் சொன்னால் நான் கமிஷனாகப் பெறுவதெல்லாம் பொன்னம்மாள் ஒருத்தியின் உடல் உழைப்பால் தான்!

''யாழ்ப்பாண நகரத்தின் நாலா புறங்களிலுமிருந்து எனக்குப் பலர் அறிமுகமாகிவிட்டார்கள் என்பது மட்டுமல்ல பொன்னம்மாளின் பெயர்போன நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் ''எலும்பு மாமா'' என்ற எனது பெயரும் சேர்ந்துபோயேவிட்டது.

பொன்னம்மாளைத் தெரிந்தவர்களுக்கெல்லாம், என்னைத் தெரிந்துதான் ஆக வேண்டும்! நான் ஏற்றுக்கொண்டிருந்த உத்தியோகத்தின் வரைவிலக்கணம் அது தான்.

எனது பிறந்த கிராமத்திலிருந்து தற்செயலாக யாராவது வந்து சேர்ந்துவிட்டால் ஒன்றும் அறியாதவன்போல நான் தூர 'நெடுகி விடுவேன். அவர்களும் குறிப்பறிந்து —எனது சங்கட நிலை அறிந்து தங்களின் சங்கடத்தையும் புரிந்து கொண்டு தங்கள் கருமங்களைத் தாங்களாகவே முடித்துக் கொண்டு போய்விடுவார்கள்.

www.tamilarangam.net



ஒரு நாள் ஒருவன் வந்தான்.

அவனுக்கு நிறை தண்ணி!

முகம் எல்லாம் பத்தையாக மயிர்விட்டிருந்தான்.

அவன் இருட்டானதும் வந்ததால் அவனைச் சரியாக அடையாளம் காண எனக்கு முடியவில்லை.

முந்திய காரை தீவானுடன் நான் பட்ட அனுபவங்களால் நான் மிகவும் அவதானமாகவே இருந்தேன்.

கதையோடு கதையாக அவனின் சாதியை நான் விசாரித்தேன்.

பலவிதமாக நான் கேள்விக்குமேல் கேள்வியைப் போட்டுப்பார்த்தேன். அவனும் பலவிதமாக எனக்குச் சுழிக்க முற்பட்டான்.

நான் விட வில்லை.

ஊரைச் சொன்னான்.

அந்த ஊரில் கிராமத்தை விசாரித்தேன்.

ஒரு கிராமத்தை அவன் சொன்னான்.

கிராமத்தின் குறிச்சியை விசாரித்தேன்.

ஒரு குறிச்சியைச் சொன்னான்.

குறிச்சியில் குறிப்பாக ஒரு ஒழுங்கையை விசாரித்தேன்.

இப்போது அவன் திணறிக் கொண்டான்.

''அண்ணை, என்னண்ணை என்னைத் தெரியாத மாதிரிக் கேக்கிறியள்?''

இப்படி அவன் அண்ணன்முறை கொண்டாடினான்.

உண்மையிலேயே அவனை எனக்குத் தெரியவில்லை.

www.tamilarangam.net



அவன் நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது. ஆனா லும் நான் விடவில்லை.

கடைசியில் அவன் தன்னைச்சொல்லியே விட்டான்.

அவன் எனது ஓடிப்போன மனைவியின் கணவன்.

அவன் பரிதாபமாகத் தனது கதையைச்சொன்னான்.

அவள் தன்னையும் விட்டுவிட்டு வேறொருத்தனுடன் ஓடிப்போய்விட்ட கதையைச் சொன்னான்.

எனக்குச் செய்துவிட்ட துரோகத்தைத் தான் அனுப விப்பதாக உள்ளுக்குள் வெந்து செத்தான்.

எனக்கு அவன்மீது அனுதாபம் பிறந்தது.

''முன்னமே ஏன் சொல்லவில்லை?'' என்ற விதத்தில் கேட்டேன்.

தன்னுடைய பழைய கதையை அறிந்து எங்கே எனக்கு எதிராக இருந்து விடுவேனோ என்று மறைத்ததாகச் சொன்னான்.

பாவம்!

நட்டாற்றில் நிற்கும் ஒரு ஜீவன்!

அவளாலும் ஏமாற்றப்பட்டவன்!

அவனுக்காகக் கழிவிரக்கப்பட்டேன்!

இதற்குப்பின்!.........

இதற்குப்பின் விடிந்ததும் விடியாததுமாக அவன் என் கண்ணில் படாமலே போய்விட்டான்.

நான்கைந்து நாட்கள் எனக்கு மனது ஒரு மாதிரியாக இருந்தது.

முன்பெல்லாம் வராதகோபம் இப்போது என்மனைவி யாக வந்த அவள் மீது எனக்குவந்தது.

www.tamilarangam.net



நான் நோஞ்சி!

என்னைத்தான் அவளுக்குப் பிடிக்கவில்லை, அது நியாயம்.

இவனைவிட்டு அவள் ஏன் போனாள்?

இவன் குடிகாரனாக இருந்ததினாலா?

இவன் அத்தனை பெருங்குடிகாரனாக இருந்திருக்க முடியாது.

இவன் செய்வது புரோக்கர் தொழில்!

என்னைப்போலப் புரோக்கர் அல்ல.

ஆடு மாடு சயிக்கிள் ஆகியவைகளின் சிறு புரோக்கன்.

இவனுக்குச் சரியான வருமானம் இருந்திருக்காது!

ஒரு ஆடோ மாடோ திர்த்துவிட்டால் ஐந்தோ பத்தோ தான் கிடைக்கும்!

அதுவும் எப்போதும் அப்படித் தீர்வைகள் வரமுடியாது! கிழமைக்கு மிஞ்சி மிஞ்சிப் போனால் இரண்டோ மூன்றோ கிடைத்ததில்லை!

அப்படியானால் அவள் இதற்காகத்தான் இவனை விட்டு விட்டுப் போனாளோ?

நான் என் மனதை அலட்டி முடிப்பதற்கிடையில் மறுபடியும் அவன் ஒரு தடவை வந்தான்.

அடுத்த வாரம் கழித்து மறுவாரமும் வந்தான்.

அவனின்மேல் எனக்குப் பச்சாதாபம் அதிகமாயிற்று.

அவனை இந்தப் பழக்கத்திலிருந்து விடுவித்து விட வேண்டுமென்று நான் எண்ணினேன்.

வாடிக்கை வைத்துக் கொண்டால் இது விடாது!

எனது தொழிலுக்கு இது மாறான எண்ணந்தான்.

ஆயினும் நான் அப்படி எண்ணினேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த எண்ணம் சின்னம்மாளுக்குச் செய்யும் துரோக சிந்தனை என்று துளிகூட நான் எண்ணவில்லை.

இவன் மேல் ஏன் எனக்கு இந்த அனுதாபம்?

என்னிடமிருந்து என் மனைவியை எடுத்துச் சென்றவன் இவன்!

ஆனாலும் நான் அவனுக்காக அனுதாபப்பட்டேன்.

''தம்பி, நீர் உந்தப் பழக்கத்தை விடும்!''

''ஏன் அண்ணை அப்பிடிச் சொல்லுறியள்?''

''உம்மடை நன்மைக்குத்தான் சொல்லுறன் உதை விடும்!''

''உதைக்கேளாதையுங்கோ அண்ணை! உதை என்னாலை விட ஏலாது!''

''ஏன் தம்பி அப்பிடிச் சொல்லுறீர்?''

''அண்ணைக்குச் சொல்லுறத்திலை என்ன வெக்கம்? ஒரு நிமிஷம் தன்னும் உதை விட்டிட்டிருக்க என்னாலை ஏலாது?''

இந்தச் சம்பாஷணைக்குப்பின் நான் திடுக்குற்றுப் போனேன்.

இவனின் இந்தத் தொல்லை தாங்காமல்தான் அவள் இவனை விட்டுவிட்டு ஓடினாளா? □

## 7

கடந்துபோன இரண்டாவது உலக மகாயுத்தத்தைப் பிரத்தியட்சமாகக் காணாது விட்டாலும் அதன் பிரதிபலிப்புகள் நம்மால் பார்க்கப்பட்டவையே!

www.tamilarangam.net



முதல்முதல் பட்டாளக்காரர்களைக் கண்டால் பயந் தான் வருகிறது. நான்கு நாட்கள் கண்டு விட்டாலோ இந்தப் பயம் ஓடிப்போய்விடுகிறது.

ஊரெல்லாம் பட்டாளக்காரர்கள் வருகிறார்கள்; போகிறார்கள், குழந்தைகள் கூடப் பார்க்கிறார்கள்; சிரிக் கிறார்கள்; கைகளைக் காட்டி விடை தருகிறார்கள்; பேசு கிறார்கள். ஆனால் அவர்களைப் பற்றிப் பெண்கள் வட்டாரங்களில் பெரும்பீதி!

எமது வீதியில் பட்டாள வாகனங்கள் இரைச்சல் எடுத்துக்கொண்டு பறந்தோடும். பொன்னம்மாள் பயந்து நடுங்கிப்போவாள். நல்ல காலத்திற்கு அந்தப் பட்டாள காரர்களின் காதுகளில் பொன்னம்மாளின் புகழ் பட வில்லை.

ஊரில் கரன்சி நோட்டுக்கள் காற்றாய் ப்பறந்தன.

பட்டாளக்காரர்களை வைத்துக்கொண்டு பலர் பல விதங்களில் பணம் சம்பாதித்தனர்.

பானை பானையாகச் செய்கைக் கள்ளுகளைத் தயாரித்துப் பணக்காரர்கள் ஆனவர்கள்

தரவைகளுக்குள் மேய்ந்து கொண்டிருக்கும் ஆடுமாடு களைக் சாய்த்து ''காம்பு'' வரைசென்று கரன்சி நோட்டுக் களைப் புத்தகக் கணக்கில் பெருக்கிக் கொண்டவர்கள்.

காய்ம்புகள் அமைப்புப் பகுதிக்கென்று வேலை களுக்குப் போய் கையெழுத்து மட்டும் இட்டுவிட்டு இரண்டு வாரத்திற்கொரு தடவை பண நோட்டுக்களை அள்ளிக் கட்டிக்கொண்டு வருவோர். இப்படிப் பல விதங் களிலும் காசு திரட்டிச் செல்வந்தர்சள் ஆனோர் இன்று வரையும் அந்தச் செல்வந்த அந்தஸ்திலேயே இருக் கின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தப் பண ஊசாட்டத்தின்போது பொன்னம்மாள் வீட்டிற்கும் கிராக்கிகள் அதிகரித்தன.

இந்தக் கிராக்கிக்குள் பொன்னம்மாளுக்கு ஜுரம் வந்துவிட்டது.

முகம் எல்லாம் இரைத்து விட்டது.

''பட்டாளக்காரர்களைப் பார்த்து அவளுக்குப் பயம் வந்து விட்டது'' என்று எண்ணிக்கொண்டு வேப்பிலை வேக்காடு வைத்து முகரக்கொடுத்து, ஏக்கத்திற்கு ஒரு மாந்திரீகனை அழைத்துப் பார்வையும் பார்ப்பித்தாள் சின்னம்மாள்.

நோய் குறையவில்லை.

அவளுக்கு திருஷ்டி பட்டுவிட்டதாகக் கூறி, அவளை திர்வாணமாக நடு வீட்டுக்குள் நிற்கவைத்து, மூன்று செத்தல் மிளகாய்களைப்பிடித்து, உள்ளங்காலிலிருந்து உச்சிவரை தடவி எடுத்து, அவளின் தலையை மூன்று தடவை அதனால் சுற்றி துப்பிக் கழித்து பக்கத்து வட்டக் குளத்தில் மிளகாய்களைத் தானாகவே எடுத்துச் சென்று மிதக்க விட்டும் பார்த்தாள் சின்னம்மாள்.

இப்படிப் பல தடவைகள் பொக்குவாய்க்கிழவி இவளுக்குத் திருஷ்டி கழித்துச் சுகப்படுத்தியதனால் அதைப் பொன்னம்மாளுக்கும் செய்து பார்த்துவிட்டாள் சின்னம்மாள்.

நோய் தீரவில்லை!

கொத்திப்பேயின் குறைபாடு என்று நினைத்து கொத் திப்பேய்க்குப் படையல்பரப்பி, கோழிப்பலியும் கொடுத்து சுடலைக்கழிப்பும் கழிக்கச் செய்தாய் விட்டது.

நோய் தீரவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சின்னம்மாளுக்குத் தெரிந்த வரை ஒரு சிறு நோய் நொடி என்றும் கூனிக்குறுகிக் கொள்ளாமல் இருந்த பொன்னம்மாளை இப்போது 'நோய்' என்ற பெருநோய் பிடித்து விட்டது. இதனால் சின்னம்மாளே பெரும் அவஸ்தைப்பட்டாள்.

வீட்டின் வாடிக்கைக்கார வைத்தியர் ஞான முத்தருக்குக் கூடப் பிடிபடாத நோய்!

ஞானமுத்தர் வைத்தியம் பார்க்கும் நோய் வேறு,

இதற்குமுன் பலதடவைகள் அந்த வீட்டில் வந்தநோய் களுக்கு வைத்தியம் பார்த்திருக்கிறார்.

பச்சிலை உருண்டைகளாகக் கொடுப்பார்.

இரண்டொரு நாட்களுக்குள் எல்லாமே தீர்ந்துபோய் விடும்!

பொன்னம்மாள் உடலாலும் உள்ளத்தாலும் தேய்ந்து கொண்டு வந்தாள்.

அழகான அவள் இமைவட்டங்கள் கருகிச் சுருங்கி வந்தன.

செவ்விதழ்களின் இரு கோடிகளிலும் பருக்கள் படர்ந்து நித்திய வடுக்களாக மாறிவந்தன.

உடலெங்கும் திட்டுத்திட்டாகத் தடிப்புகள்!

நிர்மலமான நீலவானத்தில் அடிப்புறத்தே கருக் கூட்டும் கருமேகக் குவியல்கள் விளிம்பு கட்டி நிற்பது போல உடலெங்கும்...

குறுகிய இரண்டு மாத காலத்துக் கிடையில் பொன்னம்மாள் உருமாறிவிட்டாள். உப்பிட்ட பாண்டம் போல அவள் உடல் உதிர்ந்து தேகம் அற்றுப்போய் விட்டது.

www.tamilarangam.net



பொன்னம்மாள் லொக்கு லொக்கென்று இருமவும் தொடங்கிவிட்டாள். உடலில் எங்கோ ஒரு மூலத்தி லிருந்துதான் அந்த இருமல் தொடங்கி இருப்பதுபோன்று அவள் இருமல் வந்து விட்டால் இழைக்கும் இழைப்பு பரிதாபகரமாக இருக்கும்.

இத்தனை காலமும் கண்ணின் மணிபோலப் பொன்னம்மாளைக் கருதி வந்த சின்னம்மாளுக்கு இப்போது அவள்மேல் நிரந்தர வெறுப்பு வந்துவிட்டது.

காரணகாரியமின்றி அவள்மீது சீறிப் பாய்வான். இதனால் பொன்னம்மாள் எப்போதும் தொழிலுக்குத் தயாராகவே காத்திருப்பாள்.

பொன்னம்மாளுக்காக நான் அனுதாபப்பட்டேன்.

இதைத் தவிர என்னால் என்ன தான் செய்ய முடியும்?

என்னிடம் பொன்னம்மாளுக்காக மோதும் கிராக்கி களுக்கெல்லாம் ஏதோ பல சாக்குப் போக்குகளைச் சொல்லித் தட்டிக் கழித்து வந்தேன். பயல்கள் உத்தியோக பூர்வமான என்னுடனேயே நின்றுவிடும் பண்பைப் பெற்றவர்களா என்ன?

நான் இலேசாகக் கிராக்கிகளைத் தட்டிக் கழிப்பதை அவதானித்து விட்ட சின்னம்மாள் என்மேலுமே சீறிப் பாயத் தொடங்கிவிட்டாள்.

அவள் சீறிப் பாயும்போதெல்லாம் 'கண்டறியாத இந்தத் தொழிலை விட்டு விட்டுப் போய்விட்டால் என்ன?" என்று மனதுக்குள் தோன்றும். ஆனால் மனதுக் குத் தோன்றியபடி நடந்துகொள்ள என்னால் முடிய வில்லை.

பொன்னம்மாளை இந்த நிலையில் விட்டு விட்டுச் செல்ல எனக்கு மனது பிடிவாதமாக மறுத்தது.

www.tamilarangam.net



சின்னம்மாளின் சம்மதத்தைப் பெற்று பொன்னம்மாளை மானிப்பாய் வைத்திய விடுதிக்கு எடுத்துச் சென்றேன்.

அப்போது தலைமை டாக்குத்தராக இருந்த ஜாக்கோவுக்கு என்னையும் பொன்னம்மாளையும் நன்கு தெரியும். என்னைக் கடும் சுகயீனமாகப் பொன்னம்மாள் பல நாட்கள் அங்கு வைத்திருந்ததை அவர் மறக்கவில்லை.

மிகவும் அக்கறையாக அந்த மனிதர் பொன்னம்மாளைப் பரிசோதித்து விட்டு என்னைத் தனது அறைக்கு அழைத்து எதை எதையோ சொன்னார்.

அவரின் வாய்ப்பிறப்பு என் தலையைச் சுற்றவைத்தது.

மற்றும் பரிசோதனைகளுக்காகச் சில நாள் அங்கு இருந்துவிட்டு திருக்கல் வண்டில் ஒன்றில் அவளை திருப்பி அழைத்து வந்தேன்.

''மாமா இந்த வருத்தம் மாறாது; நான் இனிக் கன நாளைக்கு இருக்கமாட்டன்''

வண்டிலுக்குள் சாய்ந்திருந்து பொன்னம்மாள் இதைச் சொன்னாள்.

நெஞ்சைப் பொத்துக்கொண்டு எனக்கு அழுகைதான் வந்தது.

ஆனாலும் நான் அவளுக்கு முன்னால் அழக்கூடாது.

விம்மலுடன் அழுகையைத் தின்று விழுங்கிவிட்டேன்.

வைத்திய விடுதியில் நாங்கள் இருந்த அந்த நான்கைந்து நாட்களிலும் பல பழகிய முகங்கள் அங்கு வந்து போயின.

என்னையும் பொன்னம்மாளையும் நன்கு தெரிந்த முகங்கள்.

www.tamilarangam.net



என்னை மறந்தாலும் பொன்னம்மாளை அவர்கள் மறந்திருக்க நியாயமில்லை. ஆனாலும் ஒருத்தராவது என்னையோ, பொன்னம்மாளையோ தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

''நன்றி கெட்ட நாய்கள்!''

இப்படி நான் மனதால் திட்டினேன்.

எனது திட்டு எத்தனை தூரத்திற்குச் சரியானதோ எனக்குத் தெரியவில்லை!

நான்தான் அற்பப் பயல் இந்தத் தொழிலுக்கு வந்து விட்டேன். அதனால் எல்லோருமே என்னைப்போல்—அல்லது அதற்குக் குறைந்ததான அற்பப்பயல்களாக இருக்க முடியுமா?

என்னைவிட எல்லோருமே பெரிய மனிதர்கள்!

''காயமே இது பொய்யடா,
காற்றடைத்த பையடா''

என்ற சித்தர் பாட்டொன்றுதான் எனது நினைவுக்கு வருகிறது.

பொன்னம்மாளைப் பார்த்தும் பார்க்காதது போலப் போனவர்கள் சகலரும் சித்தர்களுடைய சிஷ்யர்களாக இருக்க வேண்டும்!

பொன்னம்மாளுடன் வீட்டுக்கு வந்து சேர நன்றாக வெய்யில் ஏறிவிட்டது. □

## 8

தொழில் வீழ்ச்சி வந்து விட்டது.
பொன்னம்மாளுக்கும் சுகயீனம்!

www.tamilarangam.net



பட்டாளக்காரரின் வருகையோடு, ஆங்காங்கே சில இடங்களில்போட்டித் தொழிலும் ஆரம்பமாகிவிட்டது. அதனால் எக்ஸ்ராக்களைப் பிடிப்பது சின்னம்மாளுக்கு முடியாமல் போய்விட்டது.

நகரத்தின் நடுவே நாகரீகமான விதத்தில் தொடங்கி விட்ட தொழில் நிலையங்களுடன் போட்டிபோடச் சின்னம்மாளால் முடியவில்லை. போதாக்குறைக்குப் "பொன்னம்மாளுக்குச் சீக்குப் பிடித்து விட்டது" என்ற சத்தமும் எங்கும் பரவி விட்டது.

என்னிலேயே நம்பிக்கையை இழந்து விட்ட சின்னம் மாள் தானே படலைக்கு வந்து முகத்தை வெளியே நீட்டிக் கிராக்கிபிடிக்க இறங்கிவிட்டாள். ஆயினும் தொழில் உசும்பவில்லை.

என்னை அறியாமலே என் கால்கள் என்னை இழுத்து வந்து ஓட்டுமடம் சந்திப்பில் வாய்ப்பன்கடை நாகமுத்தர் கடையில் படிக்கட்டில் இருத்திவிடும்; அது எனக்குப் பழக்கப்பட்டு விட்ட வழக்கம்!

எத்தனையோ பேர்கள் பழக்கதோஷத்தில் என்னிடம் வந்து போனார்கள்.

"என்ன மாமா, ஏதாவது புதிசா.........." இப்படி ஒருவன் கேட்டால் என்ன சொல்லக் கிடக்கிறது? புதிதாக ஏதாவது பொய்யைச் சொல்லி விட்டுப் பின்பு நான் தான் அவஸ்தைப்படவேண்டும்!

"ஏன் மாமா பொன்னம்மாளுக்குச் சீக்குத் தீந்து போச்சா?"

இப்படிக் கேட்கும் முட்டாளுக்கு எப்படிப் பதில் சொல்வது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாடிக்கைக்காரர்களுக்கு இதுவரை எல்லாம் தெரிந்திருந்தது. அதனால் அவர்களை ஏமாற்றிவிட முடியாது. புதிதாகத்தான் வாடிக்கைக்காரர்களைத் தேடிப் பிடிக்க வேண்டும்! அதற்கும் என் மனது இடம் கொடுக்கவில்லை. பாவம் பொன்னம்மாள்!

வீட்டின் மேற்குப் புற வேலிக்கடவையோடு நின்று மேலும் மேற்காகப் பார்த்தால் அடிவானக் குழியின் ஜோதிச்செக்கர் கண்களுக்குச் சமீபமாகத் தெரியும். இந்த ரம்மியத்தை இரசிக்கவும், மென்காற்றின் ஆலிங்கன சுகத்திற்கு ஆசைப்பட்டும் சாய்மனைக் கதிரையை அந்தக் கடவைக்கு நேரே இழுத்துப் போட்டுக்கொண்டு பொன்னம்மாள் உல்லாசமாகப் படுத்திருப்பாள்.

இருட்டிக் கொண்டு வந்தது.

அப்போதுதான் நான் ஒட்டுமடஞ் சந்திப்பிலிருந்து வெற்றுக் கையோடு உள்ளே வந்தேன்.

நீண்ட நாட்களுக்குப்பின் பொன்னம்மாள் அந்தக் கடவைப் பக்கம் சாய்மனைக் கட்டிலில் படுத்திருந்தாள்.

கடலின் கரைக்குச் சமீபமாக நகர்ந்து செல்லும் பாய்மரக்கோடுகளில் மனதைப் புதைய விட்டுக்கொண்டே அவள் படுத்திருந்தாள்.

சற்று வேளைக்கு முன்புதான் அவள் அழுது ஓய்ந்திருக்கவேண்டும். அவள் கண் இமைகளின் ஈரப்பசை தெரிந்தது; அவைகள் சற்று உப்பியும் இருந்தன.

"பொன்னம்மா!"

எனது இந்த அழைப்பைக் கேட்டதும் திடுக்குற்றுக் கொண்ட அவள் எதையோ மறைக்க முயற்சித்ததை நான் அவதானித்தேன்.

"பொன்னம்மா என்ன அழுதிருக்கிறாய் போலை கிடக்கு?"

www.tamilarangam.net



அவள் பேசவில்லை.

''என்ன தங்கச்சி எனக்குச் சொல்லு!''

எனது வேண்டுகோளுக்கு இணங்கியதைப்போல் அவள் கெவ்விக்கெவ்வி விம்மினாள்.

ஒரு தந்தையின் பரிவோடு நான் அவள் நெற்றியைத் தடவிக் கொடுத்தேன்

வீட்டில் சின்னம்மாள் இல்லை என்பது எனக்குத் தெரியும். மத்தியானம்போல் எங்கோ யாரிடமோ புதியவன் ஒருவனை அழைத்து வருவதற்காகப் போனவள் இன்னும் வரவில்லை.

''மாமா, மாமா, சின்னம்மா என்னைத் திட்டித் திட்டிக் கொண்டிருக்கிறா மாமா......!''

மேலே அவளால் பேச முடியவில்லை.

அழுகை அவளைப் பேசவிடவில்லை.

பகல் ஏதோ ஆனைப்புரளி நடந்திருப்பதை நான் அனுமானித்துக்கொண்டேன்.

''அதுக்கென்ன பிள்ளை அம்மாதான் பேசினவ!'' என்று நான் அவளைச் சமாளிக்க முன்றேன்.

''நீ என்னெடி எனக்கு உழைச்சுத் தந்திட்டாய்? நீ துலைஞ்சாத்தானெடி இந்த வீடு உருப்படும்! அறுதலி சாகிறத்துக்கு ஏனெடி கிடந்து இழுபடுறாய், எண்டு பேசியிட்டா மாமா! கடவுளே என்னை ஏன் கொண்டு போகாமை வைச்சிருக்கிறாய்!''

பொன்னம்மாளின் இந்த வார்த்தைகளின் தாக்கத்தை என்னால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. சின்னம்மாளின் வாய்க்கூடாக இந்த வார்த்தைகள் வெடித்து வந்தபோது பொன்னம்மாள் எப்படித்தான் பொறுத்துக் கொண்டாளோ!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காற்று இலேசாகத்தான் வீசி வந்தது. ஆனாலும் என் உடம்பு நடுங்கியது.

வாய் பேசாது நான் நீண்டநேரம் நின்றேன்.

பொன்னம்மாளும் பேசவில்லை.

இந்த ஆத்மாவின் வேக்காட்டைத் தணிக்க எனக்கு வகை தெரியவில்லை.

அவள் சாவை அழைக்கிறாள்!

''என்னெடி உழைத்துத் தந்தாய்?'' என்று சின்னம்மாள் இவளைப் பார்த்துக் கேட்கிறாள்.

நன்றி கெட்ட ''நாய் ஜென்மம்''

பொன்னம்மாளைப் பார்த்து இப்படி அவள் கேட்டு விட்டாளே!

பொக்குவாய் செல்லம்மா கிழவி செத்துப்போவதற்கு முன்பிருந்து......

அந்தப் பொக்குவாய்க் கிழவி ஏங்கி ஏங்கி எதிர் பார்த்த மறுசாமத்தியம் கண்ட நாளிலிருந்து கிழவியும் செத்துப் போய்விட்டாள்!

சின்னம்மாளும் வயோதிபம் அடைந்துவிட்டாள்!

இந்த நாள்வரை.........

கடற்கரைப் பரலோக மாதா கோவில் திருந்ாதி மணி அடித்தது.

சின்னா மைதானப் பள்ளிவாசலில் இருந்து சலவாத் ஒலி வானை நோக்கி எழுந்தது.

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலின் மாலைப் பூசை மணிச்சத்தம் காற்றிலே மிதந்து வந்தது.

நான் நின்ற இடத்திலேயே நிலைகுத்தி நின்றேன்.

www.tamilarangam.net



பொன்னம்மாளும் இயக்கமற்ற ஜீவனாக அப்படியே தான் கிடந்தாள்.

சின்னம்மாள் இன்னும் போன இடத்திலிருந்து திரும்பவில்லை.

போன காரியத்தைச் சாதித்து விட்டுத்தான் திரும்புவதாக சபதமெடுத்துக் கொண்டுதான் சென்றாளோ? யார் கண்டார்!

காத்தானின் கள்ளுக் கடைக்கு நான் போயும் நீண்ட நாட்கள் ஆகிவிட்டன.

முன்பெல்லாம் இந்தநேரம் என்றால் நான் அங்குதான் இருப்பேன்.

காத்தானின் கற்பக ரசம்!

நாயரின் இரத்த வறுவல்!

சமீப நாட்களிலிருந்து வாரம் ஓரிரு தடவை தான் அந்தச் சுகம் எனக்குக் கிட்டியிருக்கிறது. இப்போதோ அந்தச் சுகம் கிடைக்கும் ஊற்றுக்கள் அடைத்துக்கொண்டு விட்டன. அதனால் அந்த நினைப்பே வருவதில்லை.

மாதா கோவிலின் திருந்தாதி கேட்டால்,

பள்ளிவாசல் சலவாத் ஓசை கேட்டால்,

ஐயனார் கோவில் பூசை மணி கேட்டால் என்ன வேலை இருந்தாலும் காத்தானிடம் ஓடுவேன்.

இப்போது.........

எதை நினைத்துக் கொண்டாளோ!

பொன்னம்மாள் எழுந்து சென்றாள்.

எங்கு, ஏன் செல்லுகின்றாள் என்பது எனக்கு விளங்கவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நான் அப்படியேதான் நின்றேன்.

வீட்டுக்குள்ளிருந்து பலகை இடுக்குகளுக்கூடாக வெளிச்சக் கீலங்கள் தெரிந்தன.

அவள் வீட்டுக்கு விளக்கேற்றத்தான் இத்தனை அவசரமாகப் போனாள் என்றுதான் நான் எண்ணினேன்.

"மாமா, இப்பிடி வாருங்கோ"

சற்று வேளைக்குப் பின் பொன்னம்மாளின் தீனக்குரல் கேட்டது.

நான் போனேன்.

என் கையில் மூன்று பத்துச்சத நாணயக் குத்திகளை அவள் தந்தாள்.

"ஏன் தங்கச்சி என்ன வாங்கிவர?" என்றேன்.

"எனக்கு ஒண்டும் வேண்டாம் மாமா! நீங்கள் போட்டு வாங்கோ! காத்தான்ரை கடை பூட்டப்போகுது போட்டுவாங்கோ!" என்றாள் அவள்.

நான் இதை எதிர்பார்க்கவில்லை.

நான் வாய் பேசமுடியாமல் தயங்கி நின்றேன்.

"போட்டுவாங்கோ மாமா, அம்மாவும் இண்டைக்கு வராபோல கிடக்கு, கெதியாய்ப் போட்டு வாங்கோ"

இப்படி அவள் நிலைமையை விளக்கி என்னை அவசரப்படுத்தினாள்.

மௌனமாக நான் வீதியில் இறங்கினேன்.

எனக்கு முன்னால் ஒரு வாகனம் ஒன்று வந்து பிறேக் போட்டு அசைந்து நின்றது.

அது பட்டாளக்காரரின் வாகனம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்ணம் பெரியது!

''மாமா'' என்று வாகனத்துக்குள்ளிருந்து அழைப்புக் குரல் ஒன்று வந்தது.

பழகிய குரல்!

என் மனைவியாக வந்தாளே அவளின் கணவனின் குரல்!

இந்தப் பக்கம் அவன் நீண்ட நாட்களாக வரவில்லை. இன்று வந்திருக்கிறான்.

அவன் வெளியே இறங்கினான்.

அவன் முகத்தில் இப்போது மயிர்க்கத்தை இல்லை. மட்ட சுத்தமாக அவன் முகம் இருந்தது.

அவனுடன் இன்னும் இருவர் இறங்கினர்.

இருவரும் வெள்ளைத் தோலர்கள். □

## 9

என்னைத் தொடர்ந்து என் மனைவியின் அவனும், அவனைத் தொடர்ந்து வெள்ளைத் தோலர்களும் வீட்டு முற்றம் வரை வந்து விட்டோம்.

திண்ணையில் பந்தவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.

வெள்ளைத் தோல்கள் இரண்டும் முற்றத்திலேயே நின்றன.

அவர்களை நிற்க விட்டு விட்டு நான் அவனைச் சுரண்டி அழைத்துக்கொண்டு வீட்டின் உள்புற முற்றத்திற்கு வந்தேன்.

www.tamilarangam.net



''என்னண்ணை அது?''

அவன் இரகசியமாகக் கேட்டான்.

''பொட்டைக்குச் சரியான சுகமில்லைத் தம்பி!''

நானும் இரகசியமாகவே பதில் சொன்னேன்.

''நம்பிக் கூட்டிக் கொண்டந்திட்டன் அண்ணை. என்ன செய்யிறது?''

அவன் மிகவும் இளகிய குரலில் — கீழ்க்குரலில் கேட்டான்.

''அதுக்கு என்ன தம்பி செய்யிறது? அவள் பொட்டைக்குச் சுகமில்லை என்னிறன்!''

நான் சற்று இறுக்கமாகப் பதில் சொன்னேன்.

''அவங்கள் என்னிலை ஏறிப் பாய்வாங்களண்ணை, அவங்களைக் கூட்டிக்கொண்டுவந்த றைவர் பொல்லாதவன்!''

அவன் பயங்காட்டிப் பேசினான்.

எனக்குப் பத்திக்கொண்டு வந்தது.

''ஏலாதெண்டாப் போறத்துக்கு ஏன் வீண் கதையனை?''

இப்படி நான் சற்று பலமாகச் சொல்லிவிட்டேன்.

''மாமா''

உள்ளே இருந்து பொன்னம்மாள் அழைத்தாள்.

நான் உள்ளே போனேன்.

''என்ன மாமா, ஆரது?''

பொன்னம்மாள் கேட்டாள்.

www.tamilarangam.net



'அது ஒண்டுமில்லைப் பிள்ளை — நீ உன்ரை பாட்டிலைகிட.''

நான் காரியத்தை மறைக்கத்தான் முயன்றேன்.

''மாமா, பேய் வேலை செய்யப்பாக்கிறியள். எனக்கு விளங்குது!'' என்றாள் அவள்.

''ஓம் பிள்ளை, ரெண்டு பட்டாளக்காறங்கள் வந்திருக்கிறாங்கள்; அதுதான் நான் முடியாது எண்டு சொல்லிப் போட்டன்!''

''இதென்ன விசர் வேலை மாமா? அம்மா சாப்பாட்டுக்குக் கூட இல்லை எண்டு பேசிறா, நீங்கள் வந்ததையும் விடப்பாக்கிறியள்!''

வீட்டுக்குள் எரிந்த சிறு ஒளி விளக்கின் வெளிச்சத்தில் நான் பொன்னம்மாளின் முகத்தை ஊடறுத்து எதையோ பார்க்க முயன்றேன்.

அந்த முகத்தில், அல்லது அதற்கூடாக நான் தேடும் இடத்தில் எதையும் குறிப்பாக அறிந்துகொள்ள எனக்கு முடியவில்லை. எவ்வளவு நேரம்தான் அப்படி நின்றேனோ?

வெளியே அந்த வெள்ளைத் தோலர்கள் கஸ் முஸ் என்று ஆங்கிலத்தில் பேசிய வார்த்தைகளின் ஓசைகள் எனக்குக் கேட்டுக் கொண்டே இருந்தன.

''அண்ணை'' என்று குரல் கேட்டது.

அது அந்த மனிதனின் குரல்.

நான் இன்னும் அப்படியேதான் நின்றேன்.

''என்னப்பா ஆக்களைக் கூட்டிவந்துவிட்டிட்டு நான் இதிலை நிக்கிறன் நீ உன்ரை பாட்டிலை உள்ளுக்கு என்ன செய்யிறாய்?''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்போது அந்த மனிதன் ''நீ; நான்'' என்று பேசினான்.

அவனுக்குக் கோபம் வந்திருக்க வேண்டும்!

பொன்னம்மாள் கண்ஜாடையாலும் அபிநயத்தாலும் அவர்களை உள்ளே அனுப்பும்படி ஆக்ஞையிட்டாள்.

அதை மீற என்னால் முடியவில்லை.

வெளியே வந்தேன்.

''என்ன எல்லாஞ்சரியே?'' என்று அந்த மனிதன் சற்றுத் திருப்தியுடன் கேட்டான்.

சரியென்ற பாவனையில் தலை அசைத்துவிட்டு நான் முற்றத்திற்கு வெளியே வந்துவிட்டேன்.

எனக்குப் பின்னால் வெள்ளைத் தோலர்களும் அந்த மனிதனும் வந்தனர்.

அந்த மனிதன் தனக்குத் தெரிந்த புரோக்கின் இங்கிலீசில் அவர்களுடன் பேசினான்.

அந்த வெள்ளைத்தோலர்களில் ஒருவன் சில கரன்சி நோட்டுக்களை எடுத்து அந்த மனிதனிடம் கொடுத்தான். டிறக் றைவராக வந்த நீக்குறோ மனிதனிடம் எதையோ சொன்னான்.

என்னையும் அந்த மனிதனையும் ஏற்றிக்கொண்டு டிறக் பறந்தோடியது.

பொன்னம்மாளை நினைத்து எனது ஈரல்குலை விறைத்தது.

என்னையும் அந்த மனிதனையும் சுமந்துகொண்டு அந்த வண்டி எங்கெல்லாமோ சுற்றியது. பின்பு,

பென்னம்பெரிய மேல்மாடிக் கடைக்கு முன்னால் வண்டி நின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்த இடத்திற்கு பவனத்தாருடன் நான் இரண்டொரு தடவை வந்திருக்கிறேன்.

அலுப்பாந்திக்குப் பக்கமாக—

கிறான் ஒட்டல் என்று அதைச் சொல்வார்கள்.

அவன் என்னை உள்ளே அழைத்துச் சென்றான்.

உண்பதற்கும் குடிப்பதற்கும் எதை எதையோ வாங்கித் தந்தான்.

மனம் உவட்டியது, ஆயினும் நான் உண்டேன், குடித்தேன்.

அந்த மனிதனும் மூக்குமுட்டக் குடித்தான், வயிறு புடைக்க உண்டான.

அவனுக்கு மட்டுக்கு மீறியதான வெறியாகிவிட்டது.

அவன் என் தோள்களில் கைபோட்டுத் 'தனகி'க் கொண்டே எதை எதை எல்லாமோ பேசினான்.

தனது பூர்வீகம்பற்றி......

என் மனைவியுடன் தொடர்பு கொண்ட விபரம் பற்றி.........

அவளுடன் தான் அனுபவித்த சுகங்கள் பற்றி......

தனக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் அவள் கெஞ்சிக் கூத்தாடியது பற்றி......

அவளை அடித்து நொறுக்கியது பற்றி......

அவள் மூன்றாவது மனிதனுடன் தொடர்பு கொண்டது பற்றி...

கடைசியில் அவள் அவனுடன் ஓடி விட்டது பற்றிச் சொல்லி முடித்து விட்டு, இப்போது தான் அனுபவிக்கும் வாழ்வு விபரம் பற்றியும் மறக்காமல் சொல்லி விட்டான்.

www.tamilarangam.net



முற்றவெளி மணிக்கூடு பன்னிரண்டு தடவை அடித்து ஓய்ந்து போயும் விட்டது.

இத்தனை காரியங்களுக்குள்ளும் பொன்னம்மாளைப் பற்றிய நினைப்பு எனது மனதை விட்டுப் போகவில்லை.

"பாவம் அவள்!"

இப்படிப் பல தடவைகள் மனதுக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன்.

மறுபடியும் அந்த வாகனம் என்னைச் சுமந்துகொண்டு வந்ததாக......

இரண்டு பேர்களால் அனாயசமாக எக்கில் தாங்கி வரப்பட்டு விறாந்தையில் கிடத்தப்பட்டதாக...

வெள்ளைத் தோலர்களுடன் என்னை எடுத்து வந்தவர்கள் புறப்பட்டுப் போனதாக......

டிறக்வண்டி சீறிக்கொண்டு புறப்பட்டதாக......

நான் கண்விழித்தபோது இவையெல்லாம் ஞாபகத்திற்கு வந்தன.

வெறும் விறாந்தை நிலத்தில் நான் கிடந்தேன்.

பந்த விளக்கு எனக்குப் பக்கத்தே எரிந்துகொண்டிருந்தது.

கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்திருக்க முற்பட்டேன். உடம்பு அசதியாக இருந்தது.

"பொன்னம்மா!" என்று அழைத்தேன்.

என் அழைப்புக்குரல் வெறுமனே மடிந்துபோயிற்று.

மறுபடியும் அழைத்தேன்! அதுவும் அப்படியேதான் மடிந்து போயிற்று.

டே— 16

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மெதுவாக எழுந்துசென்று பொன்னம்மாளின் அறைக்கதவைத் தள்ளினேன். அது தானாகவே திறந்து கொண்டது.

அதன் கீழ்முனையின் கூவல் மட்டும் கேட்டது.

பொன்னம்மாள் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தாள்.

ஏக்கத்துடன் அவளை அணுகினேன்.

கண்கள் செருகிப்போய்......

கடவாயில் நுரை வழிய......

''பொன்னம்மா!''

நான் கத்தினேன்; அவள் பேசவில்லை. □

## 10

பொன்னம்மாளின் உடையைச் சரிப்படுத்திவிட்டு வெளியே வந்த நான் நேராக ஞானமுத்துப் பரியாரியார் வீட்டை நோக்கித்தான் ஓடினேன்.

ஞானமுத்துப் பரியாரியார் காலைக்கடன்களைக் கழிப்பதற்காக எரிக்கலம் பிட்டிப் பக்கம் போயிருப்பதாக அவர் மனைவி சொன்னாள்; வேண்டாவெறுப்பாக முகத்தை 'உம்' என்று வைத்துக் கொண்டு சொன்னாள்.

என்னை அவளுக்குப் பிடிக்காது.

என் கோயில் மகத்துவம் அது!

''ஏதோ இந்த வரையிலாவது சொன்னாளே'' என்று எண்ணிக்கொண்டு எரிக்கலம் பிட்டிப் பக்கம் போனேன்.

காலைக்கடன் முடிந்து, ஆலம் தடி ஒன்றினால் பல் துலக்கிக்கொண்டு அவர் வந்தார்.

www.tamilarangam.net



"என்ன மாமா, என்னெட்டையே? ஏது விடியப் புறத்தோடை இந்தப் பக்கம்?" என்று அவர் ஆலவட்டம் போட்டுப் பேசினார்.

மிகவும், சுருக்கமாக நான் விஷயத்தைக் கூறிவிட்டேன்.

பேச்சு மூச்சில்லாமல் வீட்டுக்கு வந்ததுதான் தாமதம், வாய் அலம்பி, உடையை மாற்றிக் கொண்டு மருந்துச் சீசா ஒன்றையும் இடுப்பில் செருகிக் கொண்டு மனிதன் புறப்பட்டுவிட்டார்.

வரும்போது வழியில் அவர் விசாரணை நடத்தினார்.

என்னால் மறுக்க முடியவில்லை.

வெள்ளைத் தோலர்கள் வந்துபோனதைப் பற்றிச் சொன்னேன்.

"நான் வீட்டில் இல்லை" என்றும் சொன்னேன்.

கிறான் ஒட்டிலிலிருந்து வந்து படுத்துக்கொண்டது வரைக்கும் சொன்னேன்.

"எண்டாலும் மாமா, உந்த மாதிரி, உந்த வருத்தக்காறியோடை......"

ஞானமுத்தர் பேச்சை முடிக்காமலே நிறுத்திக் கொண்டார்.

பின்பும் பேசவில்லை.

சற்றுத்தூரம் போனபோது......

"அந்தப் பெட்டைக்கு ஏதும் நடந்தா அந்தப்பழி உன்னைத்தான் வந்து சேரும்!"

ஞானமுத்தர் இப்படிக் கூறினார்.

எனது தலைக்குமேல் ஒரு சுமை குந்திக் கொண்டது.

www.tamilarangam.net



பொன்னம்மாளின் அறைக் கதவைத் திறந்தபோது நாங்கள் கண்டது பொன்னம்மாளை அல்ல; வெறுங் கட்டையை!

''அழுதேன்; கதறினேன்; துடித்தேன்'' என்று ஒப்புக்குச் சொல்வானேன்; அடக்கமாகக் கண்ணீர் விட்டேன்.

ஞானமுத்துப் பரியாரியாருக்குக் கண்ணீர் வந்ததோ என்னவோ மெய்யாகவே நான் அதைக் காணவில்லை.

பொன்னம்மாளின் பிணத்தின்மேல் விழுந்து புரள யாரும் இல்லை.

அவளுக்காக ஒப்புக்குத் தன்னும் ஒப்பாரி வைக்க யாருமில்லை.

எஜமானி அம்மாள் சின்னம்மாள்கூட ஊரில் இல்லை.

ஞானமுத்துப் பரியாரியாரும் நானும் எவ்வளவுநேரம் தான் அப்படியே நிற்க முடியும்.

ஞானமுத்துப் பரியாரியார் அறைக்கு வெளியே வந்தார்.

''பரியாரியாரும் கழுருகிறார்!'' என்று நான் எண்ணினேன். ஆனாலும் நான் அங்கேயே நீண்டநேரம் நின்றேன். பின்பு வெளியே வந்தேன்.

பரியாரியார் கழன்று போகவில்லை.

விறாந்தையில் இருந்த புட்டுவத்தில் அவர் இருந்தார்.

''நீங்களும் போட்டியள் எண்டுதான் நானும் நினைச்சன்!''

இப்படி நான் கேட்டிருக்கக் கூடாது; ஆனாலும் நான் கேட்டுவிட்டேன்.

எனது இந்தக் கேள்வி ஞானமுத்துப் பரியாரியாரை ஆத்திரம் கொள்ள வைத்திருக்க வேண்டும். ''நான் என்ன

www.tamilarangam.net



மனிசன் இல்லாமல் மரக்கட்டையோ?'' என்று அவர் சற்றுப் பலமாகக் கேட்டார்.

அவரின் இந்தக் கேள்வியை நான் எதிர்பார்க்க வில்லை.

எனது தவறான கேள்விக்காக இப்போதுதான் நான் மனம் வருந்தினேன்; பேசாமல் நின்றேன்.

''இப்ப என்ன பரியாரியார் செய்வம்?''

இப்படி நான் ஒரு கேள்வியைக் கேட்டேன்.

''அதுதான் மாமா நானும் யோசிக்கிறன்!'' என்று யுட்டுவத்தை விட்டு எழுந்தார் ஞானமுத்தர்.

''பரியாரியார் நான்தான் அந்தப் பொட்டையைக் கொண்டு போட்டடன், நீங்கள் வரேக்கை சொன்னியள். உந்தப்பழி என்னைத்தான் பிடிக்குமெண்டு......''

நான் எனது மனக்கிடக்கையை முழுதும் சொல்லி முடிக்கவில்லை.

''இஞ்சை உதைப்பற்றி இப்பப் பேசிறதே? இஞ் சேரும் மாமா, நான் ஒருக்கா வீட்டடிக்குப் போட்டு வாறன்; ஏதெண்டாலும் காசைக்கிசை மாறிக்கொண்டு வாறன். அவள் பரதேசிப்பொட்டையின்ரை அலுவலைப் பார்த்து முடிக்கவேணும்!''

இப்படிக் கூறிக்கொண்டே ஞானமுத்தர் வெளியே போக முற்பட்டார்.

என் மனதில் ஏதோ ஒரு எண்ணம் வந்தது.

''பரியாரியார் எப்பன் நில்லுங்கோ வாறன்!'' என்று கூறிக்கொண்டே அறைக்குள் ஓடினேன்.

www.tamilarangam.net



பொன்னம்மாளின் தலைமாட்டுக்குச் சமீபமாக புழுதி நிறமான எனது செம்பட்டை மயிர்க்கத்தை அநாதரவாகச் சுருண்டு கிடந்தது.

அத்தோடு சேர்ந்தாற்போல இரண்டு கரன்சி நோட்டுக்கள்.

நூறு நூறு ருபா நோட்டுக்கள்!

அது அந்த வெள்ளைத் தோலர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டது என்பதனை ஊகிக்க எனக்கு அதிக கஷ்டம் இருக்கவில்லை.

அதற்கும் அப்பால் ஒரு தகரக்குவளை!

அந்தக் குவளைக்குள் இருந்ததெல்லாம் பத்துச்சத நாணயங்கள்!

குவளையையும் கரன்சி நோட்டுக்களையும் எடுத்துக் கொண்டு பொன்னம்மாளின் முகத்தைப் பார்த்தேன். அவளின் சொத்தைத் திருடுவதாக என் மனதுக்குள் ஒரே அடிப்பு!

எனது தோள் சால்வையை எடுத்து அவளின் நுரைக் கடவாயைத் துடைத்து விட்டேன்.

சரிந்து கிடந்த அவள் சிரசை நிமிர்த்தி வைத்து தலையணைகளை அணைத்துவிட்டேன்.

கால் இரண்டையும் ஒழுங்காக நெருக்கிவிட்டு......

கைகள் இரண்டையும் எடுத்து அவள் நெஞ்சுக்குமேல் வைத்து......

நான் வெளியே வந்தேன்.

ஞானமுத்தர் அங்கில்லை!

அவர் போய்விட்டார்.

www.tamilarangam.net



அவசர அவசரமாக தகரக்குவளையைக் கவிழ்த்து நிலத்தில் கொட்டி......

அவைகளை ஒவ்வொன்றாக எடுத்து எண்ணி வைத்து...

மொத்தம் ஐநூறு பத்துச் சதங்கள்!

''எடி சின்னம்மா! நீ என்னெடி உழைச்சுத் தந்தனி எண்டு, பொன்னம்மாளைக் கேட்டியேடி......... எடி, பொன்னம்மாள் தான் உழைச்சுத் தந்த கணக்கு வைச்சிட்டுப் போயிருக்கிறாளடி!''

வைத்தியக்காரன் போல் இப்படி நான் கத்தினேன்.

ஆத்திரத்தையெல்லாம் தின்று விழுங்கிக் கொண்டு 'எனது கணக்கெடுப்புச் சரிதானா?' என்று மறுபடியும்...

நேற்று மாலைப்பொழுதில் எனக்குத் தந்தாளே அந்த மூன்று பத்துச்சதக் குத்திகள்!

அந்த விடுபட்டுப்போன மூன்றையும்......

எனது கரத்தில் இருக்கும் இரண்டு கரன்சி நோட்டுக்களையும் சேர்த்தால்......

ஐநூற்றி ஐந்து!

என் பற்கள் நற நறுக்கும் ஓசையைக் கேட்க அந்த வீட்டில் அப்போது யாருமில்லை.

பொன்னம்மாள் தான் போய்விட்டாளே!

www.tamilarangam.net



# கே. டானியல்

சமூக அமைப்பு முறையில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படும் வரை சீர்கேடுகள் - சின்னத் தனங்கள் மனித இனத்தைச் சூழ்ந்து கொண்டே நிற்கும். அந்த அடிப்படை மாற்றத்தைத் தோற்று விக்கத் தனித்து எழுத்தாளனால் மட்டும் முடியா தென்பது உலக வியாபகமாகிவிட்ட உண்மையா கும். இந்த உண்மையை ஏற்று எனது பேனா மூலம் எனது சிறு பங்கை மட்டும் செய்ய முற்ப டுகிறேன். இதில் எனது வெற்றி தோல்வியைக் கணித்துக் கொள்வது எனது எஜமானர்களாகிய மக்களேயாவர்!

கே. டானியல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்